# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

செயலக வெளியீடு

தொகுதி-30 எண்-1

D
V2:11,31'N92
N92.30.1
66949

வெளியீடு 24-2-1993

Issued 24-2-1993

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, செப்டம்பர் 24, 1992 - தொகுதி 30 எண். 1

Thursday, the 24th September 1992 - Volume 30 No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

**Legislative Assembly Secretariat, Fort St. George**

**Madras-600 009**

விலை ரூ. 3.00]  [Price Rs. 3-00

## உள்ளடக்கம்.

**24-9-1992**


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii—v |
| Personnel of the Government of Tamil Nadu | vii—x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். | xi—xiiii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி) | xiv—xxiv |
| 1. வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | .. |
| 2. சிறப்புக் குறிப்புகள்— | 1— 40 |
| (அ) ஓர் உறுப்பினர் அவையில் பேசியது பற்றிய செய்தியை வானொலியில் ஒலி பரப்பாதது குறித்து. | 41—42 |
| (ஆ) தென்னாற்காடு, வடாற்காடு மாவட்டங்களில் நடைபெற்ற சில வன்முறைச் சம்பவங்கள் குறித்து. | 43— 47 |
| (இ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ரேஷன் கார்டுகள் பெறுவதிலுள்ள சிரமங்கள் குறித்து. | 47—49 |
| 3. விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கைகள்— | |
| (அ) இலவச வேட்டி, சேலைகள் வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து. | 49—51 |
| (ஆ) மறைமலை நகர் இரயில் நிலையத்திற்கு "மறைமலை நகர் — காமராஜர் இரயில் நிலையம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது குறித்து. | 51—53 |
| 4. கவன ஈர்ப்பு— | |
| சிதம்பரம் வட்டத்தில் காலரா நோய் பரவியுள்ளது குறித்து. | 53—58 |

| | பக்கங்கள் |
|---|---|
| **5. அறிக்கைகள் அளித்தல்—** | |
| (அ) பொது நிறுவனங்கள் குழு | 58—59 |
| (ஆ) அரசு உறுதிமொழிக் குழு | 59 |
| **6. அறிவிப்புகள்—** | |
| (அ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1992 (ஆ.செ.) | 59 |
| (ஆ) நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு, 1992 (ஆ.செ.) | 133 |
| **7. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1992. | 59—60 |
| (ஆ) நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு, 1992. | 133–134 |
| **8. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1992–93—** | |
| **பொது விவாதம்—தொடர்ச்சி.** | |
| திரு. ஆர். சிங்காரம் | 60—71 |
| திரு. செ.கு. தமிழரசன் | 72—77 |
| திரு. சிங்கை கோவிந்தராசு | 77—80 |
| திரு. நா.சா. பழனிசாமி | 80—87 |
| டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் | 87— 90 |
| திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் | 90—113 |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 113—130 |
| **9. அரசினர் தீர்மானங்கள்—** | |
| (அ) விதி 189 (3)-ஐத் தளர்த்தல் | .. 110 |
| (ஆ) விதி 32-ஐத் தளர்த்தல் | ..134—135 |
| **10. பேரவை முன்வைக்கப்பெற்ற ஏடுகள்** | . 135— 136 |




## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

**ஆளுநர்—திரு. பீஷ்ம நாராயண் சிங்.**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள் :**

1. முதலமைச்சர் — **மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :**

   பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், இந்திய காவல் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், இலஞ்ச ஒழிப்பு, தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத் துறை, சர்க்கரைப் பாகு கழிவு, சிறுபான்மையினர் நலம், இந்து சமய அறநிலையத் துறை, செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப் படச் சட்டம், சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுரங்கம் மற்றும் கனிம வளம், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, மின்னணுவியல் மற்றும் அச்சுக் காகிதக் கட்டுப்பாடு.

2. நிதி அமைச்சர் — **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :**

   நிதி, திட்டம், தேர்தல்கள், சட்ட மன்றம்.

3. சட்ட அமைச்சர் — **மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி :**

   சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள் — அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட), கம்பெனிகள் பதிவு.

4. வருவாய்த்துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், ஆவணப் பதிவுத் துறை, முத்திரைச் சட்டம் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம் மற்றும் கிராம தானம், பயண இசைவுச் சீட்டு, வணிக வரிகள்.

5. கல்வி அமைச்சர்

**மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :**

கல்வி, தொழில் நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் நலம், தொல் பொருளியல்.

6. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலம், சுற்றுச் சூழல், மாசுக் கட்டுப்பாடு.

7. போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் :**

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள், வனங்கள் மற்றும் சின்கோனா.

8. கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் :**

கைத்தறி மற்றும் துணி நூல்.



9. பொதுப்பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :**

பொதுப் பணிகள், பாசனம் (சிறு பாசனம் உட்பட), நெடுஞ்சாலைகள், மின்சாரம், மரபுசாரா எரிசக்தி வளர்ச்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு.

10. உள்ளாட்சித்துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு :**

நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை, நகர்ப்புற மற்றும் கிராமப்புறக் குடிநீர் வழங்கல்.

11. உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் :**

உணவு, கூட்டுறவு, நுகர்பொருள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு, புள்ளி விவரங்கள்.

12. தொழிலாளர்நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சே. ரகுபதி :**

தொழிலாளர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர்ப்புற மற்றும் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கு.

13. வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் :**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்பு வரி மற்றும் கரும்பு வளர்ச்சி.

14. வீட்டு வசதி-நகர்ப்புறவளர்ச்சித்துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி :**

வீட்டு வசதி, குடிசை மாற்றுத் திட்டம், ஊரக வீட்டு வசதி வளர்ச்சி, இடவசதிக் கட்டுப்பாடு, நகரமைப்பு, திட்டமிடல், நகர்ப்புற வளர்ச்சி, மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

15. சமூக நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி :

சமூக நலம் (மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உட்பட), சத்துணவு, பிச்சைக்காரர் விடுதிகள், அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம்.

16. ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் :

ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர், கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம்.

17. பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் :

பிற்பட்டோர் நலன், மிகப் பிற்பட்டோர் நலன் மற்றும் சீர்மரபினர் நலன், வெளி நாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர், முன்னாள் இராணுவத்தினர் நலன் மற்றும் மீனளம்.

18. ஊரகத்தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் :

சிறு தொழில்கள், ஊரகத் தொழில்கள் (குடிசைத் தொழில்கள் உட்பட), கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம், வக்ஃப்.



# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU.

Thiru BHISHMA NARAIN SINGH

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Chief Minister .. .. ..THE HON. Dr. J. JAYALALITHA:

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service and other All-India Services, District Revenue Officers, Police, Prevention of Curruption, Industries, Prohibition and Excise, Molasses, Minorities, Hindu Religious and Charitable Endowments, Information and Publicity, Film Technology, Cinematograph Act Tourism and Tourism Devlopment Corporation, Mines and Minerals, Tamil Development and Tamil Culture, Electronics and Newsprint Control.

2. Minister for Finance .. .. The HON. Dr. V. R. NEDUNCHEZHIAN :

Finance, Planning, Elections and Legislature.

3. Minister for Law .. ..THE HON. THIRU K.A. KRISHNASAMY :

Law, Courts, Prisons. Legislation on Weights and Measures, Debt Relief including Legislation on Money-lending, chits and Registration of Companies.

4. Minister for Revenue ... ... THE HON. THIRU S.D. SOMASUNDARAM.

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodan and Gramdan, Passports and Commercial Taxes.

5. Minister for Education .. THE HON. Dr. C. ARANGANAYAGAM:

Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare and Archaeology.

6. Minister for Health .. .. THE HON. THIRU S. MUTHUSAMY:

Health, Medical Education Family Welfare and Environmental Pollution Control.

7. Minister for Transport .. THE HON. THIRU K. A. SENGOTTAYAN:

Transport, Nationalised transport, Motor Vehicles Act. Ports, Forests and Cinchona,

8. Minister for Handlooms and Textiles .. .. .. THE HON. THIRU E. MADHUSUDHANAN:

Handlooms and Textiles.

9. Minister for Public Works .. THE HON. THIRU S. KANNAPPAN:

Public Works, Irrigation including Minor Irrigation, Highways, Electricity. Non-Conventional Energy Development and Iron and Steel Control.



10. Minister for Local Administration. THE HON. THIRU ALAGU THIRUNAVUKKARASU:

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness and Urban and Rural Water Supply.

11. Minister for Food and Co-operation. THE HON. THIRU G. VISWANATHAN:

Food, Co-operation, Civil Supplies, Price Control and Statistics.

12. Minister for Labour .. THE HON. THIRU S. RAGUPATHY:

Labour, Employment and Training, Urban and Rural Employment Programmes and Census.

13. Minister for Agriculture .. THE HON. THIRU KU. PA. KRISHNAN:

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture Sugarcane Cess and Sugarcane Development.

14. Minister for Housing and Urban Development THE HON. THIRU T. M. SELVAGANAPATHI:

Housing, Slum Clearance, Rural Housing Development, Accommodation Control, Town Planning, Urban Development and Madras Metropolitan Development Authority.

15. Minister for Social Welfare .. THE HON. TMT. R. INDIRA KUMARI :

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meals, Beggar Homes, Orphanages and Correctional Administration.

16 Minister for Adi-Dravidar Welfare. THE HON. THIRU M. ANANDAN:

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour, Animal Husbandry, Milk and Dairy Development.

17. Minister for Backward Classes and Fisheries. THE HON. THIRU D. JAYAKUMAR :

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indian Overseas Refugees and Evacuees and Welfare of Ex-Servicemen and Fisheries.

18. Minister for Rural Industries. THE HON. THRIU S. NAGOOR-MEERAN :

Small Scale Industries, Rural Industries including Cottage Industries, Khadi and Village Industries Board and Wakf.



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. முத்தையா

### பேரவைத் துணைத் தலைவர்

பேராசிரியர் க. பொன்னுசாமி.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. ம. சின்னசாமி
2. திரு. வ. சத்தியமூர்த்தி
3. திரு. ஆர். சிங்காரம்
4. திரு. வே. தம்புசாமி
5. திரு. நா. சா. பழனிசாமி

### செயலாளர்

திரு. செ. சு. ஞானகிராமன்

**பேரவையின் முக்கிய அலுவலர்கள்** (அகர வரிசைப்படி)

| | |
|---|---|
| இராமச்சந்திரன், திரு. ரெ.கு., பி.ஏ.,பி.எல். .. | இணைச் செயலாளர் |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்.ஸி.பி.எல். .. | இணைச் செயலாளர் |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ.,பி.ஜி.எல். .. | இணைச் செயலாளர் |
| ஜேக்கப் ஆர்தர், திரு. தா. பி.ஏ.,பி.எல்.,டி.பி. மற்றும் பி.ஏ. .. | இணைச் செயலாளர் |
| இராசமாணிக்கம், திரு. பெ., பி.ஏ.,பி.எல். .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| சண்முகநாதன், திரு. கோ., பி.காம். .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| முனீர் உன்னிசா, திருமதி, பி.எஸ்ஸி., பி.ஜி.எல். | குழு அலுவலர் |
| வெங்கட்டராமன், திரு. ப. சீ. பி.காம். .. | குழு அலுவலர் |
| அப்துல் சத்தார், திரு. ஜே., பி.ஏ.,பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| இராசாராமன், திரு. வி., பி.எஸ்ஸி.,பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| உமா, திருமதி. வி. நா., பி.ஏ. .. | சார்புச் செயலாளர் |
| கணேசன், திரு. சா., பி.ஏ.,பி.ஜி.எல். .. | சார்புச் செயலாளர் |
| சாயிநாதன், திரு. கி., பி.ஏ.,பி.ஜி.எல். .. | சார்புச் செயலாளர் |
| பவானி சுப்பையா, திருமதி பி.ஏ.,பி.ஜி.எல். .. | சார்புச் செயலாளர் |
| பானுமதி அனந்தராஜன், திருமதி பி.எஸ்ஸி.,பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| முடிகோபதி, திரு. நா., எம்.ஏ. .. | சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| ராஜன், திரு. கே. பி., டி.ஆர்.எஸ். | | சார்புச் செயலாளர் |
| ராஜேந்திரன், திரு. பி.சி., பி.ஏ., | .. | சார்புச் செயலாளர் |
| வெங்கட்டராமன், திரு. கோ. | .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர் |
| சந்திரகுமார், திரு. செ., எம்.ஏ., | .. | தலைமை நிருபர் |
| சுந்தரசீராஜுலு, திரு. துரை, எம்.ஏ. | | தலைமை நிருபர் |
| துரைபாண்டியன், திரு. செ.ஏ., பி.ஏ., | .. | தலைமை நிருபர் |
| வெங்கடேசன், திரு. இரா., எம்.ஏ.,எல்.எல்.பி. | .. | தலைமை நிருபர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அண்ணாமலை, திரு. எஸ். | | ஆலந்தூர் |
| 2. | அபரஞ்சி, திரு. பெ. | | அரூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | | மயிலாடுதுறை |
| 4. | அமர்நாத், திரு. ஓ. எஸ். | .. | மதுரை கிழக்கு |
| 5. | அம்மமுத்து பிள்ளை, டாக்டர் மு. | .. | கன்னியாகுமரி |
| 6. | அரங்கநாதன், திரு. ஆர். டி. | | விருத்தாசலம் |
| 7. | அரங்கநாயகம், டாக்டர் செ. | | தொண்டாமுத்தூர் |
| 8. | அர்ச்சுனன், திரு. க. | .. | வீரபாண்டி |
| 9. | அழகிரி, திரு. ச. | .. | சிதம்பரம் |
| 10. | அழகு திருநாவுக்கரசு, திரு. | | ஒரத்தநாடு |
| 11. | அறிவழகன், திரு. ஆ. | .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 12. | அன்பழகன், திரு. எஸ். | | நாமக்கல் (செ.வ.) |
| 13. | ஆசைமணி, திரு. எஸ். | | குத்தாலம் |
| 14. | ஆண்டி அம்பலம், திரு. எம். | | நத்தம் |
| 15. | ஆண்டித் தேவர், திரு. எஸ். | | திருப்பரங்குன்றம் |
| 16. | ஆரோக்கியசாமி, டாக்டர் ச. | | திருச்சிராப்பள்ளி—1 |
| 17. | ஆறுமுகம், திரு. செ. | .. | வானூர் (செ.வ.) |
| 18. | ஆனந்தன், திரு. எம். | .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |

| | | |
|---|---|---|
| 19. | இந்திரகுமாரி, திருமதி இரா | நாட்ராம்பள்ளி |
| 20. | இராசமாணிக்கம், திரு .. க. வெ. வீ. | மேலூர் |
| 21. | இராசாராமன், திரு. சோ. | பாபநாசம் |
| 22. | இராசாராம், திரு. க. .. | பனமரத்துப்பட்டி |
| 23. | இராதாகிருஷ்ணன், திரு. .. த. க. | திருமங்கலம் |
| 24. | இராமகிருஷ்ணன், டாக்டர் இ. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 25. | இராமசாமி அம்பலம், திரு. கே. ஆர். | திருவாடனை |
| 26. | இராமசுவாமி, திரு. சி. .. | சங்கராபுரம் |
| 27. | இராமச்சந்திரன், திரு. .. ஒ. ஆர். | கம்பம் |
| 28. | இராமச்சந்திரன், திரு. .. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 29. | இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 30. | இராமச்சந்திரன், திரு. .. மா. சா. மா. | இளையாங்குடி |
| 31. | இராமதாஸ், திரு. எஸ். .. எஸ். ஆர். | செஞ்சி |
| 32. | இராமநாதன், திரு. இராம. | கும்பகோணம் |
| 33. | இராஜமன்னார், திரு. சு. சே. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 34. | இராஜன்பாபு என்கிற .. தணிகைபாபு, திரு. கி. | திருத்தணி |
| 35. | இராஜேந்திரன், திரு. பி. வி. | வேதாரண்யம் |
| 36. | இராம வீரப்பன், திரு. .. | காங்கேயம் |
| 37. | இலதா பிரியகுமார், திருமதி | அரக்கோணம் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 38. | இளம்வழுதி, திரு. .. | எழும்பூர் |
| 39. | ஈஸ்வரமூர்த்தி, திரு. பி. .. | தாராபுரம் (செ.வ.). |
| 40. | ஈஸ்வரன், திரு. ஆர். .. | வாசுதேவநல்லூர். (செ.வ.). |
| 41. | ஏகாம்பர ரெட்டி, திரு. எ. | பள்ளிப்பட்டு. |
| 42. | கண்ணப்பன், திரு. எஸ். .. | திருப்பத்தூர். |
| 43. | கண்ணன், திரு. வே. .. | திருவண்ணாமலை. |
| 44. | கந்தசாமி, திரு. கே. .. | தலைவாசல் (செ.வ.). |
| 45. | கருப்புசாமி, டாக்டர் எம். .. | குன்னூர் (செ.வ.). |
| 46. | கலியபெருமாள் திரு. ப. .. | திருவையாறு. |
| 47. | கலைச்செல்வி, திருமதி .. கே. எம். | காட்பாடி. |
| 48. | கல்நிலவு தர்மராஜ், திருமதி | மொடக்குறிச்சி. |
| 49. | கற்பகம் இளங்கோ, திருமதி | காரைக்குடி. |
| 50. | கனகவல்லி, திருமதி என். | விளாத்திகுளம். |
| 51. | காஞ்சி பன்னீர்செல்வம், திரு. | உத்திரமேரூர். |
| 52. | காந்திராஜன், திரு. ச. .. | வேடசந்தூர். |
| 53. | காளன், திரு. கோ. .. | வில்லிவாக்கம். |
| 54. | காளிராஜன், டாக்டர் மு. | சமயநல்லூர் (செ.வ.). |
| 55. | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம்விளக்கு. |
| 56. | கிருஷ்ணன் திரு. எஸ். எம். | தாம்பரம். |
| 57. | கிருஷ்ணன், திரு. கு. ப. .. | ஸ்ரீரங்கம். |
| 58. | கிருஷ்ணன், திரு. சி. .. | ஓமலூர். |
| 59. | குப்பன், திரு. க. .. | திருவொற்றியூர். |
| 60. | குமரி அனந்தன், திரு. .. | சாத்தான்குளம். |

61. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்.
2. குழந்தைவேலு, திரு. சி. .. குளத்தூர் (செ.வ.).
63. கோடிமாரி, திரு. ஆர். .. நாகப்பட்டினம்.
64. கோபாலகிருஷ்ணன், திரு. வே. சங்கரநயினார். கோவில் (செ.வ.).
65. கோபால், டாக்டர் க. .. நன்னிலம் (செ.வ.).
66. கோவிந்தராசு, திரு. மா. .. ரிஷிவந்தியம்.
67. சக்குபாய், திருமதி ரா. .. கும்மிடிப்பூண்டி.
68. சக்குபாய் தேவராஜ், திருமதி டி. திருவள்ளூர்.
69. சஞ்சய் ராமசாமி, திரு. .. விருதுநகர்.
670. சண்முகநாதன், திரு. எஸ். .. ஆலங்குடி.
71. சண்முகம், திரு. எஸ்.வி. .. மதுரை மேற்கு.
72. சத்தியமூர்த்தி, திரு. வ. ... கடலாடி.
73. சந்திரசேகர், திரு. வி.பி. .. பொள்ளாச்சி.
74. சம்பத், திரு. எ. .. வாணியம்பாடி.
75. சரஸ்வதி, திருமதி அ.தி. ... சத்தியங்மகலம்.
76. சரஸ்வதி, திருமதி, ப. .. கபிலர்மலை.
77. சரோஜா, டாக்டர் வெ. .. சங்கரி (செ.வ.).
78. சாத்தையா, திரு. தி. .. இராஜபாளையம். (செ.வ.).
79 சாவித்திரி அம்மாள் திருமதி ஆர். முகையூர்.
80. சிங்காரம், திரு. ஆர். .. பேராவூரணி.
81. சிங்காரம், திரு. கே. .. மொரப்பூர்.
2. சிங்கை கோவிந்தராசு, திரு. சிங்காநல்லூர்.



83. சியாமளா, திருமதி ரெ. கோவில்பட்டி.
84. சிவசுப்பிரமணியன், திரு. கு. குறிஞ்சிப்பாடி.
85. சிவயதி, திரு. என்.ஆர். தொட்டியம்.
86. சின்னசாமி, திரு. கா. சேந்தமங்கலம் (ம.ப.).
87. சின்னசாமி, திரு. ம. கரூர்.
88. சின்னசாமி, திரு. வி.கே. பவானிசாகர்.
89. சின்னப்பன், திரு. கே.கே. ஜெயங்கொண்டம்.
90. சீனியம்மாள், டாக்ட மு. அவினாசி (செ.வ.).
91. சீனிவாசன், திரு. ஆ.கு. பெரணமல்லூர்.
92. சீனிவாசன், திரு. கு. மன்னார்குடி.
93. சுதர்சனம், திரு. டி. பூந்தமல்லி.
94. சுந்தரசாமி, திரு. எம். கலசப்பாக்கம்.
95. சுந்தரதாஸ், திரு. மா. விளவன்கோடு.
96. சுந்தரம், திரு. எம்.கே. தண்டராம்பட்டு.
97. சுந்தரராஜ், டாக்டர் எஸ். பரமக்குடி (செ.வ.).
98. சுந்தரவேல், திரு. ஏ.கே.சி. திருப்பத்தூர்.
99. சுந்தராம்பாள், திருமதி செ. மேட்டூர்.
100. சுப்பிரமணியம், திரு. வ.மு. மானாமதுரை(செ.வ.).
101. சுப்பிரமணியன், திரு. வி.என். பெருந்துறை.
102. சுப்பிரமணியன், திரு. வீ. கண்டமங்கலம் (செ.வ.)
103. சுப்புரத்தினம், திரு. ஆ. பழனி (செ.வ.).
104. சுலோசனா, செல்வி எல். மேட்டுப்பாளையம்.
105. சுவாமிநாதன், திரு. சி. புதுக்கோட்டை.

| | | |
|---|---|---|
| 106. | செங்கோட்டையன், திரு. கே. ஏ. .. | கோபிசெட்டிபாளையம் |
| 107. | செல்லக்குமார், டாக்டர் அ. | அண்ணா நகர். |
| 108. | செல்லசாமி, திரு. ஏ. டி. | ஒட்டன்சத்திரம். |
| 109. | செல்லதுரை, திரு. ஆ. .. | திருச்செந்தூர். |
| 110. | செல்வகணபதி, திரு. டி. எம். | திருச்செங்கோடு. |
| 111. | செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம். |
| 112. | செல்வராஜ், திரு. கே. .. | கோயம்புத்தூர் மேற்கு. |
| 113. | செழியன், திரு. தா. .. | பெரம்பலூர் (செ.வ). |
| 114. | சேகர், டாக்டர் எம். பி. | பெரம்பூர் (செ.வ.). |
| 115. | சேகர், திரு. எம். ஜி. .. | பாலக்கோடு. |
| 116. | சொக்கலிங்கம், திரு. பி. .. | மதுராந்தகம். |
| 117. | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | தஞ்சாவூர். |
| 118. | ஞானசேகரன், திரு. சி. .. | வேலூர். |
| 119. | டேனியல்ராஜ், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம். |
| 120. | தங்கமுத்து, திரு. கு. .. | திருவோணம். |
| 121. | தங்கராசு, திரு. இரா. .. | ஆண்டிமடம். |
| 122. | தங்கவேல், திரு. எம். .. | முசிறி. |
| 123. | தண்டாயுதபாணி, திரு. வி. | குடியாத்தம். |
| 124. | தமிழரசன், திரு. செ. கு. | வந்தவாசி (செ.வ.). |
| 125. | தமிழரசு, திரு. வெ. .. | ஆத்தூர். |
| 126. | தம்புசாமி, திரு. வே. .. | திருவாரூர் (செ. வ.). |
| 127. | தர்மலிங்கம், திரு. கி. .. | அணைக்கட்டு. |
| 128. | தர்மலிங்கம், திரு. பே. .. | பாளையங்கோட்டை. |



| | | |
|---|---|---|
| 129. | தவசி, திரு. கே. .. | ஆண்டிபட்டி. |
| 130. | தனபால், திரு. ம. .. | திருப்போரூர் (செ.வ.). |
| 131. | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 132. | தாமோதரன், திரு. சி. .. | நெல்லிக்குப்பம். |
| 133. | திருநாவுக்கரசு, திரு. எஸ். .. | அறந்தாங்கி. |
| 134. | துரை, திரு. எஸ். எம். | ஆத்தூர். |
| 135. | துரை முருகன், திரு. கு. சு. | பல்லடம். |
| 136. | துரை ராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில். |
| 137. | தெய்வநாயகம், திரு. எ. .. | மதுரை மத்தி. |
| 138. | தென்னவன், திரு. மு. .. | இராமநாதபுரம். |
| 139. | தேவராஜ், திரு. அ. .. | செய்யாறு. |
| 140. | தேனி பன்னீர்செல்வம், திரு. | போடிநாயக்கனூர். |
| 141. | நடேசன், திரு. இரா. .. | திருவட்டாறு. |
| 142. | நடேசன், திரு. மு. .. | சேலம்-2. |
| 143. | நடேசன் பால்ராஜ், திரு. வெ. | நாங்குநேரி. |
| 144. | நாகூர் மீரான், திரு. எஸ். | கடையநல்லூர். |
| 145. | நிர்மலா, செல்வி பி. .. | திண்டுக்கல். |
| 146. | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | தேனி. |
| 147. | பஞ்சவர்ணம், திருமதி கே. | வலங்கைமான் (செ.வ.). |
| 148. | பட்டாபிராமன், திரு. கா. ப. | காஞ்சிபுரம். |
| 149. | பரந்தாமன், டாக்டர் ஜெ. | பேரணாம்பட்டு (செ.வ.). |
| 150. | பரமசிவம், திரு. ஆர். பி. .. | சின்னசேலம். |
| 151. | பரமசிவன், திரு. ஏ. எம். | சோழவந்தான். |
| 152. | பலராமன், திரு. உ. .. | பூங்கா நகர். |
| 153. | பழனிசாமி, திரு. இரா. .. | தாரமங்கலம். |

| | | |
|---|---|---|
| 154. | பழனிசாமி, திரு. க. .. | எடப்பாடி. |
| 155. | பழனிசாமி, திரு. நா. சா. | கிணத்துக்கடவு. |
| 156. | பழனிசாமி, திரு. வெ. | திருப்பூர். |
| 157. | பழனிசாமி, திரு. ஜி. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 158. | பழனியம்மாள், திருமதி க. | ராசிபுரம். |
| 159. | பன்னீர்செல்வம், திரு. என். | திருவிடைமருதூர். |
| 160. | பன்னீர்செல்வம், திரு. சா. | திண்டிவனம். |
| 161. | பன்னீர்செல்வம், திரு. ஜெ. | திருநாவலூர். |
| 162. | பாண்டியம்மாள், திருமதி இரா. | உசிலம்பட்டி. |
| 163. | பாப்பா சுந்தரம், திரு. அ. | குளித்தலை. |
| 164. | பாலகங்காதரன், திரு. ஜெ. | சிவகாசி. |
| 165. | பாலகிருஷ்ணன், திரு. கோ. | முதுகுளத்தூர். |
| 166. | பாலசுப்ரமணியன், திரு. எஸ். ஆர். | பொங்கலூர். |
| 167. | பாலசுப்பிரமணியன், திரு. கி. | பட்டுக்கோட்டை. |
| 168. | பாலன், திரு. எம். கே. .. | சைதாப்பேட்டை. |
| 169. | பாலையா, திரு. ஆ. .. | குளச்சல். |
| 170. | பீட்ரிக்ஸ் டி. சோசா, டாக்டர். .. | நியமனம். |
| 171. | பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | தென்காசி. |
| 172. | புதுநயினார் ஆதித்தன், திரு. இரா. | சேரன்மகாதேவி. |
| 173. | புரட்சிமணி, திரு. ச. | மங்களூர் (செ.வ.) |
| 174. | புருஷோத்தமன், டாக்டர் வெ. | பெண்ணாகரம். |
| 175. | பூராசாமி, திரு. எம். .. | பூம்புகார். |
| 176. | பெரியசாமி, திரு. வே. .. | அந்தியூர் (செ.வ.). |
| 177. | பெரியவீரன், திரு. எம். | பெரியகுளம். |
| 178. | பெருமாள், திரு. செ. .. | ஏற்காடு (ம.ப.). |
| 179. | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.). |



| | | |
|---|---|---|
| 180. | பொன்னுசாமி, பேராசிரியர் க. | மருங்காபுரி. |
| 181. | பொன்னுசாமி, திரு. பெ. .. | தருமபுரி. |
| 182. | பொன்னுவேலு, திரு. ஏ. தா. | வரகூர் (செ.வ.). |
| 183. | போளூர் வரதன், திரு. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.). |
| 184. | மணிமேகலை, டாக்டர் சு. .. | அரியலூர். |
| 185. | மணிமேகலை, திருமதி வி. ஜி. | அருப்புக்கோட்டை. |
| 186. | மணிவாசகம், திரு. சே. பி. | உடுமலைப்பேட்டை. |
| 187. | மதுசூதனன், திரு. இ. .. | டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர். |
| 188. | மரியம் உல் ஆசியா, திருமதி கே. | அரவக்குறிச்சி. |
| 189. | மல்லிகா, செல்வி கோ. | புவனகிரி. |
| 190. | மனோகரன், திரு. கே. ஏ. | ஓசூர். |
| 191. | மாணிக்கம், திரு. சி. .. | ஈரோடு. |
| 192. | மாலா, டாக்டர் ஜி. ஆர். | திருச்சிராப்பள்ளி—2. |
| 193. | முஹமது ஆசிப், திரு. .. | திருவல்லிக்கேணி. |
| 194. | முத்துசாமி, திரு. சு. .. | பவானி. |
| 195. | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி. |
| 196. | முருகானந்தம், திரு. கே. ஆர். | சிவகங்கை. |
| 197. | முருகையா பாண்டியன், திரு. ஆர். | அம்பாசமுத்திரம். |
| 198. | முனிரத்தினம், திரு. ஏ. எம். | சோளிங்கர். |
| 199. | முனிவெங்கடப்பன், திரு. கே. | கிருஷ்ணகிரி. |
| 200. | முனுசாமி, திரு. கா. பூ. | காவேரிப்பட்டினம். |
| 201. | மூர்த்தி, திரு. து. .. | சீர்காழி (செ.வ.). |
| 202. | மோசஸ், டாக்டர் எம். .. | நாகர்கோவில். |
| 203. | ரகுபதி, திரு. சே. .. | திருமயம். |
| 204. | ரங்கநாதன், திரு. ப. .. | புரசைவாக்கம். |
| 205. | ரங்கராஜன், திரு. டி. எம். | மயிலாப்பூர். |
| 206. | ரத்தினவேல், திரு. த. . | திருவெறும்பூர். |
| 207. | ரமணி நல்லதம்பி, திருமதி .. | ராதாபுரம். |

| | | |
|---|---|---|
| 208. | ரமேஷ், திரு. வி. பி. ஆர். | தூத்துக்குடி. |
| 209. | ரவிக்குமார், திரு. ஏ. .. | பொன்னேரி (செ.வ.). |
| 210. | ரவிச்சந்திரன், திரு. வி. .. | உப்பிலியாபுரம் (ம.ப.). |
| 211. | ராமசுப்பு, திரு. எஸ். எஸ். | ஆலங்குளம். |
| 212. | ராஜு, திரு. எச். எம். .. | உதகமண்டலம். |
| 213. | ராஜு, திரு. கே. ஆர். .. | கூடலூர். |
| 214. | ராஜு, திரு. கே. பி. .. | பேரூர். |
| 215. | ராஜேந்திரன், திரு. என். ஆர். | காட்டுமன்னார் கோவில் (செ.வ.). |
| 216. | லட்சுமணன், திரு. வி. கே. | கோயம்புத்தூர் கிழக்கு. |
| 217. | லாரன்ஸ், திரு. கு. .. | பத்மநாபபுரம். |
| 218. | லோகாம்பாள், திருமதி ஜெ. | லால்குடி. |
| 219. | வரதராஜன், திரு. செ. து. | செங்கல்பட்டு. |
| 220. | விசுவநாதன், திரு. ஜி. .. | ஆற்காடு. |
| 221. | வீரபாண்டியன், டாக்டர் பெ. | செங்கம் (செ.வ.). |
| 222. | வெங்கடராமரெட்டி, திரு. மு. | தளி. |
| 223. | வெங்கடேசன், திரு. பி. ஆர். எஸ். | கடலூர். |
| 224. | வேடியப்பன், திரு. தா. .. | போளூர். |
| 225. | வேணுகோபால், திரு. என். ஜி. | ராணிப்பேட்டை. |
| 226. | வேலையா, திரு. டி. .. | திருநெல்வேலி. |
| 227. | ஜனார்தனன், திரு. தே. .. | விழுப்புரம். |
| 228. | ஜானகிராமன், திரு. கோ. | மேல்மலையனூர். |
| 229. | ஜீனத் சர்புதீன், திருமதி | சேப்பாக்கம். |
| 230. | ஜெயக்குமார், திரு. எஸ். | தியாகராயநகர். |
| 231. | ஜெயகுமார், திரு. டி. .. | ராயபுரம். |
| 232. | ஜெயராமன், திரு. எஸ். ஆர். | சேலம்-1. |
| 233. | ஜெயலலிதா, டாக்டர் ஜெ. | பர்கூர். |
| 234. | ஜெய்சன் ஜேக்கப், டாக்டர் | ஆரணி. |
| 235. | ஸ்ரீதரன், டாக்டர் ஆ. .. | வால்பாறை (செ.வ.). |

**பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்.**

| | |
|---|---|
| சுப்பிரமணியன், திரு. கே. .. | தலைமை வழக்கறிஞர். |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**புரட்டாசி, 9 ஆங்கிரச, திருவள்ளுவர் ஆண்டு 2023.**

**1992 செப்டம்பர் 24, வியாழக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

''எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.''

எப்பொருள் எத்தன்மையதாய்த் தோன்றினாலும், அத் தோற்றத்தை மட்டும் கண்டு மயங்காமல், அப்பொருளின் உண்மையான இயல்பை அறிவதே மெய்யுணர்வாகும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 61, திரு. கு. லாரன்ஸ், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

61—

### கன்னியாகுமரி கடற்கரையில் திருவள்ளுவர் சிலை.

*1963—**திரு. கு. லாரன்ஸ் :**
மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கன்னியாகுமரி கடற்கரையில் திருவள்ளுவர் சிலை அமைக்கும் பணியின் தற்போதைய நிலை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதலமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி கடற்கரையில் திருவள்ளுவர் சிலை அமைக்கும் பொருட்டு, பல்வேறுவிதமான பணிகள் கன்னியாகுமரி, திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள அம்பாசமுத்திரம், செங்கை—எம். ஜி. ஆர். மாவட்டத்தில் உள்ள சோழிங்கநல்லூர் ஆகிய இடங்களில் நடந்து கொண்டிருக்கின்றன. கன்னியாகுமரியிலும், அம்பாசமுத்திரத்திலும் ஆதாரப் பீடம் செய்வதற்கான பணி நடைபெற்று வருகிறது. சோழிங்க

நல்லூரில் சிலையின் பல்வேறு பாகங்களைச் செய்யும் பணி தொடங்கப்பட்டுள்ளது. சிலை செய்யும் பணிக்கான மதிப்பீடு ரூ. 360.15 லட்சம் ஆகும். மொத்தப் பணியில் 20 சதவீதம் அளவுக்கு பணிகள் முடிந்துள்ளன.

சிலையை நிறுவுவதற்கு ஏற்றவாறு பாறையைத் தயார் செய்யும் பணியை தமிழ்நாடு கட்டுமானக் கழகம் செய்கிறது. இப் பணிக்கான மதிப்பீட்டுத் தொகையான ரூ. 84 இலட்சத்தில் முதற்கட்டமாக ரூ. 42 இலட்சத்தை தமிழ்நாடு கட்டுமானக் கழகத்திற்கு அரசு வழங்கியுள்ளது. சிலை நிறுவ, பாறையைத் தயார் செய்யும் பணி தொடங்கி நடைபெற்று வருகிறது.

இவற்றையும் சேர்த்து சிலை செய்யும் பணிக்கு மொத்தம் ரூ. 4.44 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இப் பணிகள் அனைத்தும் துரிதமாக நடந்தேறிட நடவடிக்கை எடுக் கப்பட்டு வருகிறது.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரித்திரப் புகழ் வாய்ந்த கன்னியாகுமரி கடற்கரையில் உலகப் பொதுமறையாம் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவருக்குச் சிலை அமைப்பதன் மூலமாக தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உலக அரங்கில் தமிழ், தமிழர், தமிழ்நாட்டினுடைய பெருமையை உயர்த்தித் தருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் மெத்தப் பணிவன்போடு சொல்லிக் கொள்கிறேன். (பலத்த மேசையைத் தட்டும் ஒலி.) உள் நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை அதிகமாகக் கவரும் வகையில் இந்தச் சிலையினை அமைப்பதன் மூலமாக கன்னியா குமரி மாவட்ட மக்களும் பெருமை அடைகிறார்கள் என்று நான் சொல்வதோடு, புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களுடைய சமாதியைப் புதிதாகக் கட்டுவதன் மூலமாக மாண்புமிகு இதயதெய்வம் அவர்கள் எவ்வளவு தனிக் கவனம் செலுத்தி அதனுடைய வடிவமைப்பில் தன்னுடைய பணிகளைச் செய்து வருகிறார்களோ, அது போன்று இந்தச் சிலை அமைப்பதிலும் மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் வடிவமைப்பில் எத்துணைத் தனிக் கவனம் செலுத்துகிறார் என்பதையும், இதனுடைய வடிவமைப்பு எத்தகையது என்பதையும், இது எப்போது முடிவடையும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணி முழுமையாக முடிவடைய இன்னும் இரண்டு ஆண்டுக் காலம் ஆகும். வங்காள விரிகுடா, இந்து மகா கடல், அரபிக் கடல் ஆகிய மூன்று கடல்களும் சங்கமிக்கும் கன்னியாகுமரிக் கடற்கரையில் இருந்து 366 மீட்டர் தொலைவில் கடலில் அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்திற்கு அருகில் உள்ள மற்றொரு பாறையின் மீது 133





அடி உயரத்தில் 38 அடி பீடமும், 95 அடி உயர சிலையும் கொண்ட திருவள்ளுவர் சிலை அமைக்க அரசு ஆணையிட்டுள் ளது. இப்பணியை 3½ ஆண்டுகளில் நிறைவு செய்ய திட்டமிடப் பட்டுள்ளது. இந்த 3½ ஆண்டுகளில் 1½ ஆண்டுகள் முடிவடைந்து விட்டன. இன்னும் 2 ஆண்டுக் காலத்தில் பணி முழுமையாக முடிவடையும். சிலை அமைப்பதற்கான பணியையும் திரு. வி.கணபதி ஸ்தபதியிடம் அரசு வழங்கியுள்ளது. சிலை செய்யும் பணிக்கான மொத்த மதிப்பீடு 3 கோடியே 60 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் ஆகும். இது வரையிலும் ஒரு கோடியே 18 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய். சிற்பி திரு. வி. கணபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. சிலை செய்யும் பணி, அம்பாசமுத்திரம், கன்னியாகுமரி சோழிங்கநல்லூர் ஆகிய இடங்களில் நடைபெற்று வருகிறது. அம்பாசமுத்திரத்திலும், கன்னியாகுமரியிலும் ஆதாரப் பீடம் செய்வதற்கான வேலை நடந்து வருகிறது. சோழிங்கநல்லூரில் சிலையின் பல்வேறு பாகங்களைச் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மொத்தப் பணியில் 20 சதவிகித பணிகள் இதுவரை முடிவடைந்துள்ளன. சிலையை நிறுவுவதற்கு ஏற்றவாறு பாறையைத் தயார் செய்யும் பணியை தமிழ்நாடு கட்டுமானக் கழகம் செய்கிறது. இப்பணிகளுக்கான மொத்த மதிப்பீட்டுத் தொகையான 84 இலட்சம் ரூபாயில் முதற் கட்டமாக 42 இலட்சம் ரூபாயைத் தமிழ்நாடு கட்டுமானக் கழகத்திற்கு அரசு வழங்கியுள்ளது. சிலை நிறுவ, பாறையைத் தயார் செய்யும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

முற்பகல் 9-35

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது பாசமிகு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே வந்து இந்தச் சிலையைத் திறந்து வைக்க வர வேண்டுமென்று நான் வேண்டுவதைப் பற்றி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிலையை நிறுவும் பணிகள் முழுமையாக முடிவடைந்த பின்னர் இதைப் பற்றி முடிவு செய்யலாம் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ச. சந்திராஜன்.

திரு. ச. சந்திராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நம்முடைய ஒப்பற்ற முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் சிறப்பான முறையில், விரைவான முறையில் திருவள்ளுவர் சிலையை கன்னியாகுமரியில்

அமைப்பது பற்றி இங்கே சொன்னார்கள். அதே நேரத்தில் தமிழகத்தை எடுத்துக் கொண்டால், குறிப்பாக சென்னை நகரை எடுத்துக்கொண்டால், இங்கே சுற்றுலாப் பயணிகள் வருகின்ற போது சென்னை நகரினுடைய அழகைக் குறைக்கின்ற வகையில், குறிப்பாக மவுண்ட் ரோட்டில் சில இடங்களிலே சிலைகள் எல்லாம் இல்லாமல் மொட்டையாக வெறும் பீடமாக மட்டும் இருக்கிற நிலைமையில் அவற்றை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் குறைவாக மதிப்பிடுகின்ற காரணத்தாலும், சிலை மொட்டையாக தொடர்ந்து இருக்கின்ற அப்படிப்பட்ட பீடங்களை எல்லாம் அகற்றுவதற்கு நம்முடைய ஒப்பற்ற முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா அல்லது அந்தச் சிலையை குறிப்பிட்ட காலத்திற்குள் வைக்க வேண்டுமென்ற நடைமுறையைக் கொண்டு வருவார்களா என்று நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்து சென்னை அண்ணா சாலையில் சிலை இல்லாத பீடங்கள் என்று சொன்னால் ''சிலை இல்லாத பீடம்'' ஒன்றுதான் இருக்கிறது. (மேசையைத் தட்டுல் ஒலி) அந்தச் சிலை குறித்த காலத்தில் வைக்கப்படுமா, அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் கேள்வி எழுப்பினார். அது அவ்வளவு அவசியமா, அவசரமா (மேசையைத் தட்டும் ஒலி) என்று மாண்புமிகு உறுப்பினர் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எச். எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைக்கும் போது சிலைக்கு அருகில் திருவள்ளுவரின் பொன்னான 1,330 திருக்குறள்களும் அங்கே பொறிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே விவேகானந்தர் நினைவு மண்டபத்திற்குச் செல்வதற்கு வள்ளம் அல்லது போட் இருக்கிறது. மீனவர்களுக்கும் போட் ஓட்டுகிறவர்களுக்கும் பிரச்சினை வந்து முன்னாள் முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் அங்கே வந்து





சம்பந்தப்பட்டவர்களுடன் நேரடியாகப் பேசி பிரச்சினைக்கு அப்போது முடிவு கண்டார்கள். அதுபோன்ற பிரச்சினைகள் இனிமேல் வராமல் இருக்கும் வகையில், மக்கள் செல்வதற்காக பாலம், புட் பிரிட்ஜ் கட்டுகின்ற எண்ணம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை அத்தகைய பாலம் கட்டுகின்ற எண்ணம் ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். வி. சண்முகம்

திரு. எஸ். வி. சண்முகம் : சென்னை அண்ணா சாலையில் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் இருக்கின்ற அந்த இடம் ரொம்ப நாளாக போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லி விட்டார்கள். அதே கேள்வி திரும்பவும் வேண்டாம்.

திரு. எஸ். வி. சண்முகம் : அந்தப் பீடம் அங்கே இருப்பதால் போக்குவரத்துக்கு ரொம்ப இடையூறாக இருப்பதை மாண்புமிகு முதலமைச்சர் அறிவார்களா? அங்கிருந்து அதை அகற்ற நடவடிக்கை எடுப்பார்களா (மேசையைத் தட்டும் ஒலி) என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது தனியார் வைத்த பீடம். அனுமதி பெற்று வைத்தார்கள். அது போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பது உண்மைதான். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அது குறித்து என்ன செய்யலாம் என்பதைப் பற்றி அரசு ஆலோசித்து, பரிசீலனை செய்து ஒரு முடிவெடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 62, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

62—

கோவில் அர்ச்சகர்களுக்குப் பயிற்சி நிலையம் அமைத்தல்.

* 11898 —திரு. கே. செல்வராஜ் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோவில்களில் தமிழில் அர்ச்சனை செய்யவும், கோவில்களில் வழிபாடு முறைகளைத் தெரிந்து கொள்ளவும், கோவில்

[1992 செப்டம்பர் 24

அர்ச்சகர்களுக்குப் பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 9—40

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழில் அர்ச்சனைசெய்வது பக்தர்களின் விருப்பதிற்கிணங்க பல திருக்கோவில்களில் நடைமுறையில் இருந் தும் வருகிறது. திருக்கோவில்களில் தற்போது பணியாற்றி வரும் பூசகர்கள்/பட்டர்கள்/பூசாரிகள் மற்றும் அர்ச்சகர்கள் ஆகியோர் தினசரி பூசை முறைகளை முறைப்படி சாத்திர, சம்பிரதாயத் திற்குட்பட்டு செய்வதில் போதிய தேர்ச்சி பெறுதல் வேண்டும். அதற்கு உதவும் வகையில் தமிழ் அர்ச்சனை முறை உட்பட பல்வேறு ஆகமங்களில் ஓராண்டுக்கால புத்தறிவுப் பயிற்சித் திட்டம் ( Refresher Course ) ஒன்று செயல்படுத்த வழிவகை செய்யப்பட உள்ளது. சென்னை, காஞ்சிபுரம், திருச்சி, கோயம்புத்தூர், திருச்செங்கோடு, மதுரை, திண்டுக்கல், கும்ப கோணம், மயிலாடுதுறை, திருநெல்வேலி போன்ற இடங் களிலுள்ள பெரிய திருக்கோயில்களில் பயிற்சி வகுப்புகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை 6—10—1992 விஜயதசமி அன்று தொடங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இந்து அறநிலையத் துறை சம்பந்தப் பட்ட அனைத்துக் கோவில்களிலும், இந்து மக்கள் வழிபடுகின்ற முருகப் பெருமான், மீனாட்சி சுந்தரேஸ்வரர், பெருமாள் கோவில் களில் இருக்கும் அர்ச்சகர்கள் சாமியின் முன் நின்று கொண்டு அவர்கள் ஓதுகின்ற சமஸ்கிருத மொழி நமக்குப் புரியாமல், சாமியை வணங்குவதில் தடைகள் ஏற்படுவதால் சமஸ்கிருத மொழியில் அர்ச்சிக்காமல், தமிழ் மொழியிலேயே அர்ச்சிக்க வேண்டுமென்று நிரந்தரச் சட்டம் ஏதாவது கொண்டு வர அரசின் ஆலோசனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு தலைவ ரவர்களே, இதற்கு நிரந்தரச் சட்டம் கொண்டு வருவது குறித்து அரசின் பரிசீலனையில் இல்லை. நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல பக்தர்களின் விருப்பத்திற்கு ஏற்ப தமிழில் அர்ச்சனை செய்வது பல திருக்கோவில்களில் தற்போது நடை முறையில் இருந்து வருகிறது.



1992 செப்டம்பர் 24]

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்களில் அர்ச்சகர்களாக குறிப்பிட்ட ஒரு வகுப்பினர் மட்டும்தான் இருந்து வருகிற நிலைமை தமிழ்நாட்டில் பல ஆலயங்களில் இருந்து வருகிறது. அனைத்து வகுப்பினரை யும் ஆலயங்களில் அர்ச்சகர்களாக நியமிப்பதற்கு அரசு ஏதாவது சட்ட முன்வடிவு கொண்டுவருவதற்கு ஆலோசனை உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிப்பட்ட சட்ட முன் வடிவு ஏதும் தேவையில்லை. இதற்காகத்தான் தஞ்சாவூரில் திருவை யாற்றில் ஒரு வேத ஆகமக் கல்லூரியைத் தொடங்க அரசு உத்தேசித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே அந்தக் கல்லூரி துவங்கப்பட்ட பிறகு அதில் பயிற்சி பெற்றவர்கள், தேர்ச்சி பெற்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் கோவில் களில் பூசாரிகளாகவும், அர்ச்சகர்களாகவும் பணிபுரியலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்கை கோவிந்த ராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்களுடைய எண்ணங்களை கொள்கைகளைத் தமிழகத்திலே நிலை நாட்டுகின்ற விதத்திலும் டாக்டர் அம்பேத்கார் அவர்களும், தந்தை பெரியார் அவர்களும் எண்ணிய பெரும் சமுதாயப் புரட்சியை ஏற்படுத்தும் வகையிலும் அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்களும் அர்ச்சகர்களாக வர முடி யும் என்கின்ற நிலையை உருவாக்கிய திராவிடத் தலைவி, தமிழக முதல்வர் அவர்கள் ஆரம்பிக்க இருக்கின்ற வேத ஆகமப் பாட சாலையை ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு விடை அளிக்கை யில் ஒரு புத்தறிவுப் பயிற்சித் திட்டம் (Refresher Course) தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்ட உள்ளது என்று குறிப்பிட்டேன் திருக்கோவில்களின் வழிபாட்டு முறைகளை முறைப்படி பின்பற்ற வேண்டுமென்ற நோக்கத்திற்குச் செயல்வடிவம் வழங்குகிற வகையில் முதற்கட்டமாக வேத ஆகமக் கல்வியினை ஊக்குவிக் கும் பொருட்டு வேத ஆகமக் கல்லூரியினை தஞ்சாவூர் மாவட்டம் திருவையாற்றில் நிறுவத் தகுந்த இடம் தெரிவு செய்யவும் இது குறித்த பூர்வாங்கப் பணிகளை மேற்கொள்ளவும் ஆணை யர் நடவடிக்கை எடுத்து வருகிறார். இத்திட்டத்தின் அடிப் படையில் அர்ச்சகர்கள் மற்றும் பூசாரிகள் ஆகியோருக்கு வழி பாட்டு நெறிமுறைகள் சம்பந்தமாக புத்தறிவுப் பயிற்சித் திட்டம் ஒன்றினைச் செயல்படுத்துதல் அவசியமெனக் கருதப்

பட்டது. திருக்கோவில்களில் தற்போது பணியாற்றும் பூசகர்கள், பட்டர்கள், பூசாரிகள் மற்றும் அர்ச்சகர்கள் ஆகியோர் தினசரி பூசை முறைகளை முறைப்படி சாத்திர சம்பிரதாயத்திற்கு உட்பட்டுச் செய்வதில் போதிய தேர்ச்சி பெறாமல் அனுபவ ரீதியாகப் பூசைகளைச் செய்து வருவதால் ஓராண்டுக்கால புத்தறிவுப் பயிற்சித் திட்டத்தை அறிமுகப்படுத்த கீழ்க்காணும் 10 இடங்களில் பயிற்சி மையங்களை சுமார் 8 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை, காஞ்சிபுரம், மதுரை, திண்டுக்கல், கும்பகோணம், மயிலாடுதுறை, கோயம்புத்தூர், திருச்செங்கோடு, திருச்சி, திருநெல்வேலி. நடப்பாண்டில் இத்திட்டத்தின்கீழ் 500 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சியில் தேர்ச்சியுற்றவர்களுக்கு இளநிலை அர்ச்சகர் சான்று வழங்கப்படும். பயிற்சிக் காலத்தில் பூசகர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் 100 ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்படும். இத்திட்டத்தினை 6—10—1992 விஜயதசமி அன்று தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

முற்பகல் 9–45

ஒவ்வொரு மாவட்டத்திலும் வேதாகமப் பாடசாலை நிறுவப்படுமா என்று உறுப்பினர் கேட்டார். அதற்கு அவசியம் இல்லையென்ற கருதுகிறேன். ஒரு கல்லூரி இருந்தாலே போதுமானது. அங்கே தேர்ச்சி பெறுபவர்கள் எல்லா இடங்களிலும் இருக்கின்ற கோயில்களில் பணி ஆற்ற முடியும். இப்போது நான் அறிவித்த இந்தப் பயிற்சித் திட்டத்தில் பயிற்சி பெற இருப்பவர்கள் 500 பேர். சைவத் திருக்கோயில்களில் பூசை செய்பவர்கள் 200 பேர். வைஷ்ணவத் திருக்கோயில்களில் பூசை செய்பவர்கள் 200 பேர். கிராம தேவதைத் திருக்கோயில்களின் பூசகர்கள் 100 பேர். ஆக மொத்தம் 500 பேர் இந்தப் பயிற்சியை பெற இருக்கிறார்கள். இந்தப் பயிற்சிக் காலம் பகல் 1 மணிமுதல் 4 மணி வரை இருக்கும். பயிற்சியாளர்களுக்கு அளிக்கப்படும் உதவித்தொகை மாதம் 100 ரூபாயாகும். இந்தப் பயிற்சிக் காலம் ஓராண்டு ஆகும். பயிற்சி தொடங்கும் நாள் 6–10–1992 இந்தப் பயிற்சியை நடத்தும் ஆசிரியர்கள் சைவத்திற்கு ஒரு ஆசிரியரும், வைக்ஷ்ணவத்திற்கு ஒரு ஆசிரியரும் இருப்பார்கள். பூசகர்களுக்கு சைவ ஆகம ஆசிரியரே பயிற்சி அளிப்பார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைந் தலைவர் அவர்களே, இந்த வேத ஆகமக் கல்லூரியில் சேர ஆதி திராவிட மக்களுக்கு 18 சதவீத ஒதுக்கீடு அளித்த புரட்சித் திட்டத்தை இந்தியாவில் வேறு எந்த மாநிலமாவது கடைப்பிடித்திருக்கிறதா. அமல் செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்தவரை இல்லை.
இப்படிப்பட்ட ஒரு திட்டம் இந்தியாவிலேயே இதுதான் முதல்
முறையானது என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி: தலைவர் அவர்களே, நமது
இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் துவக்க
விருக்கின்ற வேத ஆகமக் கல்லூரியில், தற்சமயம் கோயில்களில்
பூசை செய்பவர்களுக்கும் இடம் அளிக்கப்படுமா? அல்லது புதி
தாக சேர்பவர்கள் மட்டும்தான் சேர்த்துக் கொள்ளப்படுவார்
களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கோவில்களில் அர்ச்ச
கர்களாகவும், பூசகர்களாகவும், பூசாரிகளாகவும் பணியாற்றி
வருபவர்களுக்குத் தான் ஒரு ஆண்டுக்காலம் ( Refresher Course )
நடத்தப்படும் என்று இப்பொழுது கூறினேன். தொடங்கப்பட
விருக்கிற வேதாகமக் கல்லூரியில் அவர்களும் வேண்டுமானால்
மாணவர்களாகச் சேரலாம். அதில் எந்தத் தடையுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 63, திரு. இரா. நடேசன், மாண்புமிகு நிதியமைச்சர்.

63—

துணைக் கருவூலம் அமைத்தல்.

*9059—திரு. இரா. நடேசன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதியில், ஒரு துணைக் கருவூலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதியில் ஒரு புதிய துணைக் கருவூலம் அமைக்கப்பட வேண்டிய அவசியம் ஏதும் ஏற்படவில்லை.

[1992 செப்டம்பர் 24

திரு. இரா. நடேசன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவசியம் ஏற்படவில்லை என்று தெரிவித்தார்கள். புதிய கருவூலம் ஒன்று அமைவதற்கு என்னென்ன விதிகள், சாத்தியக் கூறுகள் வேண்டும் என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கருவூல விதிகளின் படி, ஒவ்வொரு வட்டத் தலைமையிடத்திலும் ஒரு துணைக் கருவூலம் இருக்க வேண்டும். அதன்படி புதிய வட்டம் ஒன்று ஏற்படுத்தும் போது, வட்டத் தலைமையிடங்களில் துணைக் கருவூலம் ஒன்றையும் ஏற்படுத்த வேண்டும். ஏற்கெனவே 202 துணைக் கருவூலங்கள், வங்கி மற்றும் வங்கி சாரா கருவூலங்கள் என்ற முறையில் தமிழ்நாட்டில் உள்ளன. அதில் 170 துணைக் கருவூலங்கள் வட்ட மைய இடங்களிலும், 32 துணைக் கருவூலங்கள் வட்ட மையம் இல்லாத பிற இடங்களிலும் உள்ளன. திருவட்டாறு ஒரு ஊராட்சி ஒன்றியமாகும். அது கல்குளம் வட்டத்தைச் சார்ந்தது. கல்குளம் வட்டத்தில் ஒரு சார்நிலை கருவூலம் அமைந்துள்ளது. அது திருவட்டாறிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. 1985 ஆம் ஆண்டு கல்குளம் சார்நிலைக் கருவூலத்தை இரண்டாகப் பிரித்து அங்கிருந்து தென் மேற்கில் 5 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள இரணியல் என்ற இடத்தில் புதிதாக ஒரு சார்நிலைக் கருவூலத்தை அமைத்தார்கள். மேலும் திருவட்டாறிலிருந்து 12 கிலோ மீட்டர் தொலைவில் குழித்துறை என்னும் இடத்தில் விளவன்கோட்டில் சார்நிலைக் கருவூலம் அமைந்துள்ளது. தற்போது தமிழ்நாட்டில் குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தில், போக்குவரத்து வசதியை நோக்குகையில், திருவட்டாறு, கல்குளம் சார்நிலைக் கருவூலத்திற்கோ அல்லது விளவன்கோடு சார்நிலைக் கருவூலத்திற்கோ எளிதில் சென்றுவர இயலும். புதிய கருவூலம் அமைப்பதால் அரசுக்கு ஏற்படும் செலவை உற்று நோக்கும் போது, திருவட்டாறில் உள்ள அரசு அலுவலகங்கள், சார்நிலைக் கருவூலங்களுக்குச் சென்றுவர செலவழிக்கப்படும் பணத்தொகை மிகக் குறைந்த அளவில்தான் இருக்கும். மேலும் கல்குளம், விளவங்கோடு சார்நிலைக் கருவூலங்களிலுள்ள தற்போதைய வேலைப்பளு, அது மூன்றாகப் பிரிக்க வேண்டிய அவசியத்திற்கு இல்லை. திட்டமில்லா இனங்களின் செலவைக் குறைக்க வேண்டுமென்ற நிலை உள்ளதாலும், திருவட்டாறில் புதிதாக சார்நிலைக் கருவூலத்தை அமைக்கத் தேவையான அவசியம் இல்லாததாலும் இந்த கோரிக்கை ஏற்கப்படவில்லை.

முற்பகல் 9–50

திரு. இரா. நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவட்டாறு ஊராட்சி ஒன்றியமானது கோதையாறிலிருந்து தக்கலை, அழகியமடம் வரை இருக்கின்றது. கோதையாறிலிருந்து திருவட்டாறு வர வேண்மென்றாலே பாக்கி 35



92 செப்டம்பர் 24]

லா மீட்டர் இருக்கிறது, திருவட்டாறிலிருந்து 12 கிலோ
ட்டர் தூரத்திலுள்ள தக்கலையில் உள்ள கருவூலத்திற்குச்
சல்ல வேண்டுமென்றால் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள்
ரணம், அந்த இடம் மலைப் பிரதேசமாக இருப்பதால்
ங்கிருந்து பஸ் ஏறிப் போவதற்குச் சிரமமாக இருக்கிறது.
.ஏ. என்று சொல்லி பணம் பெறப்படுவதால் அரசாங்கத்திற்குத்
ான் நிறைய செலவும் ஆகின்றது. ஆகையால், கருணை
ர்ந்து வரும் நிதியாண்டிலாவது ஒரு கருவூலம் திருவட்டாறு
ஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த குலசேகரத்திலோ, திருவட்
ாறிலோ, பேச்சிப்பாறையிலோ அல்லது வேறு எங்கேயாவது
வங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு
ரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு
ட்டாறில் சார்நிலைக் கருவூலம் வேண்டுமென்று கேட்டார்கள்.
ருவட்டாறை வைத்து அதனைச் சுற்றி 12 கிலோ மீட்டர்,
5 கிலோ மீட்டர் தூரத்திலும், வேறு ஒன்று குழித்துறையிலும்
க 3 கருவூலங்கள் இருக்கின்றன. இன்னொன்று ஏற்படுத்து
ன்ற அளவுக்கு இப்போது இருக்கிற கருவூலங்களில் வேலைப்
ளு வர வேண்டும். அப்படி வேலைப் பளு வருகின்ற நிலையிலே
ான், சில வட்டங்களில்—ஒரு துணைக் கருவூலத்தில் அதிகமான
வலைப்பளு இருக்கும் என்பதற்காக இரண்டாகப் பிரிக்க
வண்டிய அவசியம் ஏற்பட்டால், மற்றொரு துணைக் கருவூலத்
ற்கு அவசியம் ஏற்படுகிறது. இப்போது திருவட்டாறைச்
ற்றி இருக்கின்ற கருவூலங்களில் வேலைப் பளு இரண்டாகப்
ிரிக்க வேண்டிய அளவுக்கு அவசியம் ஏற்படவில்லை. அப்படி
வசியம் ஏற்படுகின்ற காலம் வருப்போது வேண்டுமானால்
ருவட்டாறில் வைக்கலாமா என்பதுபற்றி யோசிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 64, திரு. எம்.
ஆண்டி அம்பலம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

4—

கைதிகளுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் மருந்துகளின் செலவின விகிதத்தை உயர்த்துதல்.

*11060— திரு. எம். ஆண்டி அம்பலம்:

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சிறைச் சாலைகளில் கைதிகளுக்கு வழங்கப்படும் உணவு, மருந்துகள் மற்றும் சுகாதார சாதனங்கள் ஆகியவற்றிற்கான செலவின விகிதம் (Rate of expense ratio) எந்த ஆண்டில் நிர்ணயம் செய்யப்பட்டது?

(ஆ) இன்றைய விலைவாசி நிலவரப்படி அந்தச் செலவு விகிதம் உயர்த்த வேண்டியதின் அவசியம் பற்றி அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சிறைச்சாலைகளில் கைதிகளுக்கு உணவு, மருந்துகள், மற்றும் சுகாதாரச் சாதனங்கள் ஆகியவை வழங்குவதற்கு செலவின விகிதம் எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை. ஆனால், விதிகளின்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அளவில் உணவுப் பொருட்கள், விலையை அடிப்படையாகக் கொள்ளாமல் வழங்கபபடுகின்றன. அதே போன்று நோயுற்ற சிறைவாசிகளுக்கு அனைத்து மருத்துவ சிகிச்சையும் அளிக்கப்படுவதுடன், தேவையான மருந்துகளும் வழங்கப்படுகின்றன. எனவே செலவின அடிப்படையில் இவற்றை மறு பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல்வாதிகள்கூட ஜெயிலுக்கு செல்லுகிறார்கள். அந்த அடிப்படையிலே பார்க்கும்போது அங்கு சுகாதார முறைகேடுகள் இருப்பதாக சில மாவட்டங்களிலிருந்து தகவல் தெரிகிறது. அதுமட்டுமல்லாமல் அங்கே இருக்கக் கூடிய ஈயத் தட்டுகளெல்லாம் எந்தக் காலத்திலோ வாங்கிய தட்டுக்கள். அவற்றைப் பார்க்கின்றபோது நமக்கே ஒரு அறுவருப்பாக இருக்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த ஈயத் தட்டுகளையெல்லாம் மாற்றிவிட்டு எவர்சில்வர் தட்டுகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலையைப் பொறுத்து அவைகளெல்லாம் உரிய காலத்திலே பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, முதல்வர் அவர்களுடைய கையெழுத்தைப் பெற்று மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இந்த ஜெயில்களுக்கு வாங்கக்கூடிய சரக்குகளை எல்லாம் சிறப்பு அங்காடிகளிலே வாங்க வேண்டுமென்ற உத்தரவை இந்த மாமன்றத்திலே அறிவித்தார்கள். ஆனால், தனிப்பட்ட காண்ட்ராக்டர்களிடம் வாங்குகின்ற காரணத்தினாலே இந்த உணவுப் பொருட்களுக்கெல்லாம் சற்று கூடத்தான் கொடுக்க வேண்டி இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் அறிவித்தபடி கூட்டுறவு





சிறப்பு அங்காடிகளிலிருந்து ஜெயில்களுக்கு இந்தச் சரக்குகளை இந்த அரசு வாங்கத் துவங்கும் என்பதை அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாகத்தான் இப்போது பர்சேஸ் செய்யப்படுகிறது. அப்படி ஏதாவது தகவல் இருந்தால் அரசிடத்திலே சொன்னால், அது பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வ. சத்தியமூர்த்தி.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையில் வைக்கப்பட்ட விவாதத்தில் இருக்கின்ற துணை மானியக் கோரிக்கையில் சிறைச்சாலைகளை நவீனப்படுத்துவதற்காக ஒரு கோடிக்கு மேல் செலவு செய்யப்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. எந்தவகையில் தமிழகத்தில் சிறைச்சாலைகள் நவீனப்படுத்தப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிய முடியுமா?

முற்பகல் 9–55

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 65, திரு. எஸ். ஆர். ஜெயராமன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

65—

## பத்திரப்பதிவு அலுவலகத்தை மீண்டும் பழைய இடத்திற்கு மாற்றுதல்.

*9949—திரு. எஸ். ஆர். ஜெயராமன் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அனைத்து வசதிகளும் கொண்ட தாதகாப்பட்டியில் இருந்த பத்திரப்பதிவு அலுவலகம் வசதிகள் இல்லாத இடத்திற்கு மாற்றப்பட்டு உள்ளதால் அதை மீண்டும் பழைய இடத்திற்கே மாற்றித் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தாதகாப்பட்டியிலிருந்த சார் பதிவகம் பொது மக்கள் நலன், இட வசதி ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு, புதிய இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. இதனை மீண்டும் பழைய இடத்திற்கு மாற்றும் செயற் குறிப்பு அரசிடத்தில் இல்லை.

திரு. எஸ். ஆர். ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இடத்திலிருந்து முதலில் இருந்த இடத்திற்கு மாற்றுவதற்கு இல்லையென்று சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அந்த இடத்திலிருந்து மாற்றிய இடம் மக்கள் வசிக்கும் இடமாக இல்லாமல், நிலங்களை வாங்கி விற்கும் ஒருவருடைய நன்மைக்காக மாற்றப்பட்டிருக்கிறது, அங்கே மக்கள் பணத்தைக் கொண்டு செல்வதற்கு பயப்படுகிறார்கள் என்பதால் அதை மாற்ற வேண்டுமென்று நேரிலே சொன்னேன். அதற்கு ஆவன செய்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது அமைச்சர் அவர்கள் மாற்றுவதற்கு இல்லையென்று சொல்கிறார்கள். எனவே, இதை அமைச்சர் அவர்கள் மாற்ற வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாற்று வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை பரிசீலனை செய்வதற்காக அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டது. அவர்கள் பரிசீலனை செய்து இப்போது இருக்கிற இடம் வசதி குறைவான இடம் என்றும் அது மாடி கட்டடத்தில் இருக்கிறது என்றும், வயதானவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள் அதிலே ஏறிச் செல்ல முடியாத நிலைமை இருக்கிறது என்றும், வளர்ந்து வருகிறபோது அதிகமான ஆவணங்களைப் பதிவு செய்ய வேண்டியிருக்கும் என்பதால் இப்போது இருக்கிற இடம் போதவில்லை, புதியதாக வேறு இடம் தேவைப்படுகிறது என்றும் சொன்னார்கள். புதியதாக மாற்றப்பட்டு இருக்கிற இடம் நல்ல பாதுகாப்பான இடம் என்றும், தற்போது இருக்கிற இடத்திற்கு அருகாமையில் மக்கள் தொகை கணக்கெடுப்பு அரசு அலுவலகம் ஒன்று இருக்கிறது, ஆயுள் காப்பீட்டு பயிற்சி மையம் ஒன்று இருக்கிறது, 5 நிமிடங்களுக்கு ஒருமுறை போக்குவரத்து பஸ் வசதி இருக்கிறது, வேண்டிய இடவசதி இருக்கிறது என்பதால் அதை மீண்டும் பரிசீலனை செய்து அந்த இடத்தில் இருப்பதற்காக அரசிடம் அனுமதி கேட்டிருக்கிறார்கள். அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஆர். ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகள் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் தவறான கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள்.





நான் நேரிடையாக அமைச்சரிடத்தில் கூட அந்த இடம் சௌகரியமாக இல்லாமலிருந்தால் வேறு இடத்தை நானே பார்த்து தருகிறேன் என்று சொல்லியிருக்கிறேன். மேலும் அந்த பதிவு செய்யக்கூடிய இடம் ஏற்கனவே ஒன்று அந்தத் தொகுதியில் இருக்கிறது. என்னுடைய தொகுதியிலிருந்த அந்த ஒரு பதிவகத்தையும் மாற்றிவிட்டார்கள். அதிலே இன்று மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஒரு யூனியனுக்கு ஒரு கோடி ரூபாய் என்ற திட்டத்தை தீட்டி அதனால் கிராமங்களில் கூட நல்ல சாலைகள் வசதியோடு, பல வசதிகள் இன்று வந்து கொண்டிருக்கிற இந்த நேரத்தில் நகராட்சியில் இருந்த இந்த பதிவகத்தை அந்த இடத்திற்கு மாற்றி இருக்கிறார்கள். அதனால் அதிலே வருவாய் இழப்பு ஏற்படுகிறது. அதே நேரத்தில் இன்று நகரங்களில் நான் வசிக்கக்கூடிய, நான் இருக்கக்கூடிய தொகுதியில் பல ரோடுகள் வசதி இல்லாமல், சாக்கடை வசதி இல்லாமல் இருக்கிற இந்த நேரத்தில் வருவாய் இழப்பு.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள். இரண்டாவது துணைக் கேள்வி கேட்கிறீர்கள். அதிலே இவ்வளவு விளக்கம் வேண்டியதில்லை.

திரு. எஸ். ஆர். ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இதை மீண்டும் மறுபரிசீலனை செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு அதைக் கொண்டு வர ஏற்பாடு செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களைத்தான் தொகுதி மக்களுக்கு ஏற்றவாறு செய்ய வேண்டியிருக்கிறது. நகரங்கள் என்கிறபோது அது தொகுதிக்கு செய்யக்கூடாது என்பதல்ல. ஒரு நகரத்திலே 2, 3 தொகுதிகள் இருக்கிறபோது, அதில் எது வந்தாலும், அரசு செய்தது என்றால், சட்டமன்ற உறுப்பினர் செய்தார் என்றுதான் பொதுவாக எடுத்துக்கொள்வார்கள். உங்கள் தொகுதியிலிருந்து மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் அது மாற்றப்படவில்லை. அது என்னுடைய கவனத்திற்கு வராமலேயே, அங்கேயிருக்கிற மாவட்டத்தில் இருக்கிற பதிவாளர்கள் ஆய்வு செய்து, அவர்களே மாற்றினார்கள். இதை நீங்கள் சொன்னவுடன், நான், யார் சொன்னாலும் கவனிக்க வேண்டும் என்பதற்காகத்தான் விரைவாக அதை ஆய்வு செய்து, விரைவாக பதில் பெற்றேன். விரைவாக பதில் பெற்ற பிறகு அந்த இடம் நல்ல இடம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதனாலே, எந்தவிதமான வருவாயும் அரசுக்கு குறைவதில்லை. அந்தத் தொகுதிக்கும் குறைவில்லை. அதுவும், முதலில் உள்ள இடமும் இப்போதுள்ள இடமும், இரண்டும் சேலம் நகரத்திலேதான் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1992 செப்டம்பர் 24

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 66, திரு. ஆர். டி. அரங்கநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

66—

## கொளஞ்சியப்பர் அரசுக் கல்லூரி மாணவர்களுக்குப் புதிய கட்டிடம்.

9501—திரு. ஆர். டி. அரங்கநாதன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விருத்தாசலம் கொளஞ்சியப்பர் அரசுக் கல்லூரியில் மாணவர்களுக்குப் போதிய கட்டிட வசதிகள் இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், தற்போது இருக்கும் பாரதி நூற்றாண்டு மண்டபத்தில் மேல்பகுதியில் புதிய கட்டிடம் கட்ட அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இது தொடர்பாக இக்கல்லூரி முதல்வருடன் தொடர்பு கொண்டதில் மாணவ மாணவியரின் எண்ணிக்கைக் கேற்ப சில ஆண்டுகளாக போதிய இடவசதி இல்லையென்று அறியப்படுகிறது.

(ஆ) கல்லூரி முதல்வருடன் தொடர்பு கொண்டு, தேவைப்படும் கட்டிட வசதிகள் செய்வதற்குரிய சாத்தியக் கூறுகள், கல்லூரிக் கல்வி ஆணையரால், நிதி ஒதுக்கீட்டிற் கேற்பப் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

திரு. ஆர். டி. அரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாக பரிசீலிக்கப்படுகிறது என்று அறிவித்திருக்கிறார்கள். அதற்கு என்னுடைய தொகுதி மக்களுடைய சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் உள்ள கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரியில் பட்டப் படிப்பு மற்றும் மேல்நிலை பட்டப் படிப்பு ஆகிய வகுப்பு



களில் மாணவர்கள் கல்வி பயில்கின்றார்கள். விருத்தாசலத்தைச் சுற்றியுள்ள நெய்வேலி, வடலூர், கம்மாபுரம், உளுந்தூர்பேட்டை, மங்களூர் போன்ற பகுதிகளிலிருந்து மாணவ மாணவிகள் விருத்தாசலம் அரசு கலைக் கல்லூரிக்கு வந்து கல்வி கற்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. கல்லூரி வகுப்புகளில் அதிக எண்ணிக்கையில் மாணவ, மாணவிகள் உள்ளதால், அங்கே உட்காருவதற்குக்கூட இடமற்ற நெருக்கடியான சூழ்நிலை இருந்து வருகிற காரணத்தால், அந்த நெருக்கடியைப் போக்குவதற்கு,—தமிழகத்தில் பல்வேறு நெருக்கடிகளைத் தீர்த்து, எல்.டி.டி.ஈ. நெருக்கடியை ஒடுக்கிக்கொண்டிருக்கும் வீரத்தாய், இதயதெய்வம், டாக்டர், புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அங்கே கூடுதல் கட்டிடங்களை வழங்குவதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லிய அத்துணை காரணங்களின் அடிப்படையிலேதான் அந்தக் கல்லூரியினுடைய தேவைக்கேற்ப கட்டிடம் கட்டுவது என்கிற கருத்துரு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 67, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

67—

## ஜவ்வரிசி தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவுப் பொருட்களைக் கட்டுப்படுத்துதல்.

9486—திரு. கே. கந்தசாமி

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜவ்வரிசி தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுப் பொருட்கள் சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதிப்பதால், தொழிற்சாலைகளுக்கு அனுமதி அளிக்கும்போதே கழிவுப் பொருட்களைக் கட்டுப்படுத்த உரிய ஏற்பாடுகள் உள்ளதா என்பதை கண்டறிய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1992 செப்டம்பர் 24

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சவ்வரிசித் தொழிற்சாலைகளுக்கு ஒப்புதலை வழங்கும்போது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறது.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சவ்வரிசித் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் சுற்றுப்புறச் சூழ்நிலை மிகவும் பாதிக்கப்படுகிறது. எனவே பொதுமக்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்கின்ற வகையில். அந்த இடத்தில் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் துர்நாற்றத்தைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு தொழிற்சாலையும் சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்கவேண்டும் என்று சொல்லி மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் வலியுறுத்தி வருகிறது. ஆனால் பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்கின்ற வாய்ப்பு அனேகமாக சேலத்தைப் பொறுத்தவரையில் இருக்காது. அங்கொன்றும் இங்கொன்றுமாக அந்தத் தொழிற்சாலைகள் இருக்கின்ற காரணத்தால் அதை அமைப்பது என்பது கடினம். எனவே, மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலமாக, அந்தந்தத் தொழிற்சாலைகளிலே சுத்திகரிப்பு நிலையத்தை அமைத்து, இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மிகவும் அதிகமாக சேலம் மாவட்டத்தில்தான் 800 சவ்வரிசித் தொழிற்சாலைகள் உள்ளன. அந்தத் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவு நீரால் பக்கத்தில் குடியிருக்கும் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அதுமட்டுமல்ல, சவ்வரிசித் தொழிற்சாலைகள் இருக்கும் அந்தப் பாதைகளில்கூட நடந்து செல்ல முடியாத அளவிற்கு துர்நாற்றம் வீசுகிறது. ஆகவே, அதைத் தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஏற்கனவே இந்தப் பிரச்சினையை அணுகிக் கொண்டிருக்கிறது. அதிலே நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை அடிப்படையாக வைத்து, தொடர்ந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு அறிவுரைகள் வழங்கலாம்.



1992 செப்டம்பர் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 68, திரு தா.
வேடியப்பன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

68—

திருவண்ணாமலையில் புதிதாக போக்குவரத்துக் கழகம்.

*11748—திரு. தா. வேடியப்பன்:
மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டம், திருவண்ணா
மலையில் புதியதாகப் போக்குவரத்துக் கழகம் ஏற்படுத்த
அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு.கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்
துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே:,

இல்லை.

முற்பகல் 10—05

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, திருவண்ணாமலை என்றாலே தீபச் சுடர் ஏற்றும்
ஒரு புனிதத் தலமாகும். ஆனால் இன்றைய நிலையில் தமிழகம்
என்றாலே நம்முடைய ஒளி விளக்காம் புரட்சித் தலைவி அவர்கள்
அவர்களுடைய புனித ஆட்சியில் எங்களுடைய பிற்படுத்தப்
பட்ட மாவட்டமாக அறிவிக்கப்பட்டிருக்கின்ற திருவண்ணா
மலை-சம்புவராயர் மாவட்டத்தின் தலைநகரமான திருவண்ணா
மலையில் ஒரு போக்குவரத்துக் கழகம் ஏற்படுத்த அரசு மறு
பரிசீலனை பண்ணுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் போக்கு
வரத்துக் கழகம், பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக்
கழகம் ஆகிய இரண்டையும் ஒன்றாக இணைத்து மூன்று போக்கு
வரத்துக் கழகங்களாக இன்றைக்கு நாம் பிரித்திருக்கிறோம்
அதிலே கொஞ்சம் பேருந்துகள், - இதிலே குறிப்பிட்ட பேருந்து
களை எடுத்து, காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு பேரறிஞர்
பெருந்தகை அண்ணா அவர்கள் பிறந்த மண்ணில், மாண்புமிகு
நம்முடைய மறைந்த முதல்வர் புரட்சித் தலைவருடைய பெய
ரால் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அந்தப் போக்கு
வரத்துக் கழகத்தை 10 மாத காலத்திலே உருவாக்கியதன்
வாயிலாக புதிய போக்குவரத்துக் கழகத்தை அந்தப் பகுதியில்
உருவாக்குவதற்கு வாய்ப்பில்லை.

[1992 செப்டம்பர் 24

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ள அந்தப் போக்குவரத்துக் கழகத்தை எங்களுடைய பிற்படுத்தப்பட்ட மாவட்டமான திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்தை யும் உள்ளடக்கி, நான்காவதாகப் பிரித்து மேலும் ஒரு போக்கு வரத்துக் கழகத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டாபிராமன் குழுவினுடைய பரிந்துரை 350லிருந்து 600 பேருந்துகள் வரை இருந்தால் ஒரு போக்குவரத்துக் கழகத்தை ஆரம்பிக்கலாம் என்ற ஒரு பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதே போன்று தில்லைநாயகம் உயர் மட்டக் குழு 750 பேருந்துலிருந்து 1,200 பேருந்துகள் வரை இருந்தால் அதைப் பிரிக்கலாம் என்ற பரிந்துரையை செய்திருக் கின்றார்கள். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அந்தப் போக்குவரத்துக் கழகத்தில், பட்டுக் கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தில் 680 பேருந்துகள் தான் இருக்கின்றன. அதேபோன்று இங்கே மற்றுமிருக்கின்ற புரட்சித் தலைவருடைய பெயரால் உருவாக்கப்பட்டிருக்கின்ற அந்தப் போக்குவரத்துக் கழகத்தில் 662 பேருந்துகளை இப் போது இயக்கிக்கொண்டிருக்கிறோம். தந்தை பெரியாருடைய போக்குவரத்துக் கழகத்தில் 782 பேருந்துகள் இருக்கின்ற காரணத்தினால் இப்போது அதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 69, திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

69—

இராசிபுரம் தொகுதியில் கைத்தறிகளை விசைத்தறிகளாக மாற்றல்.

*9652—திருமதி க. பழனியம்மாள்:

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராசிபுரம் தொகுதியில் நடப்பாண்டில் எத்தனை கைத்தறிகள் விசைத்தறிகளாக மாற்றப்பட்டுள்ளது ?

(ஆ) எத்தனை நெசவாளர்களுக்கு இலவச வீடு கட்டிக் கொடுக்கப்பட்ட உள்ளது ?



1992 செப்டம்பர் 24]

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) 1991-92-ல் கைத்தறிகளை விசைத் தறிகளாக மாற்றும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள இடங்கள் முன்னரே தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டன. இதில் இராசிபுரம் தொகுதி இடம் பெறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) நெசவாளர்களுக்கு இலவசமாக வீடுகட்டும் திட்டம் இத்துறையில் செயல்படவில்லை. ஆனால், நெசவாளர்களுக்கு மானியம் மற்றும் கடனுடன் வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் உள்ளது. இராசிபுரம் கைத்தறி பட்டு மற்றும் துணி நூல் கூட்டுறவு சங்கத்தில் உள்ள உறுப்பினர்கள் வீடுகட்டும் திட்டத் தின்கீழ் விண்ணப்பித்துள்ளதால் அவர்களில் 55 உறுப்பினர் களுக்கு 1991-92-ஆம் ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் வீடுகட்ட குறிப்பு இருக்கிறது.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில்தான் முதன் முறையாக நெசவாளர்களுக்கு பல விதமான சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. என்னுடைய இராசிபுரம் தொகுதியின் மொத்த ஜனத்தொகையில் சுமார் மூன்றில் ஒரு பங்கினர் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக் கின்றார்கள். அத்தகைய இராசிபுரம் தொகுதி இந்த ஆண்டு கைத்தறிகளை விசைத்தறிகளாக மாற்றும் திட்டத்தில் சேர்க் கப்படவில்லை என்று அமைச்சர் கூறியிருக்கின்றார்கள். வருகின்ற ஆண்டிலாவது இராசிபுரம் தொகுதிக்கு முன்னுரிமை கொடுத்து, இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு செங்கல்பட்டு-எம். ஜி. ஆர். மாவட்டத்திலுள்ள மாத்தூர், திருச்சி மாவட்டத்திலிருக்கின்ற ஜெயங்கொண்டான், கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக் கின்ற நாகர்கோவில் ஆகிய மூன்று பகுதிகளில் நெசவாளர்கள் ஜனதா ரக துணிகளையும், லுங்கிகளையும், வேட்டிகளையும் தயாரித்து வருகின்றார்கள். இவர்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாக இருக்கின்ற காரணத்தால், வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களாக இருக்கின்ற காரணத்தால், இவர்களிடையே பொருளாதார மேம்பாட்டினை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, தாயுள்ளத்தின் தலைவியாக இருக்கின்ற புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில், ஒட்டிய வயிறோடு இருக்கின்ற அவர்களுடைய வறட்சியைத் தீர்க்க

வேண்டுமென்பதற்காக இந்தப் பகுதியில் 500 கைத்தறிகளை 1,000 விசைச் தறிகளாக மாற்றும் திட்டம் ஒதுக்கப்பட்டது. அடுத்த ஆண்டு 2000 கைத்தறிகளை 5,000 விசைத் தறிகளாக மாற்றும் திட்டம் உள்ளது. அதில் பரிசீலிக்கலாமா என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 70. திரு. எம். தங்கவேல், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

70—

## திருச்சி—துறையூர் சாலையை அகலப்படுத்துதல்.

*9711—திரு. எம். தங்கவேல்:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி—துறையூர் சாலையை அகலப்பாதையாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

முற்பகல் 10–10

திரு. எம். தங்கவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லி விட்டார்கள். திருச்சியிலிருந்து துறையூர் செல்லுகிற வழியில் 15 கிலோ மீட்டர் தொலைவில் மணச்சநல்லூர் உள்ளது. அந்த மணச்சநல்லூர் சாலை அகல சாலையாக உள்ளது. மணச்சநல்லூரிலிருந்து துறையூர் வரை 20 கிலோ மீட்டர் தூரம் குறுகிய சாலையாக இருக்கிற காரணத்தாலே பஸ் செல்ல முடியாத சூழ்நிலை உள்ளது. அதை மாற்றி அகலப்பாதையாக வரும் ஆண்டிலாவது சேர்க்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணச்சநல்லூரிலிருந்து துறையூர் வரை ஏறத்தாழ 20 கிலோ மீட்டர் அந்த சாலை இருக்கிறது. ஏற்கனவே ஒரு வழி சாலையாக இருக்கிற





சாலைகளை எல்லாம்—நான் நேற்றைக்குகூட சட்டமன்றத்திலே தெரிவித்து இருக்கிறேன். முதலிலே ஒரு வழி சாலைகளையெல்லாம் பழுது பார்க்கிற பணிகளை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய ஆட்சி காலத்திலே மிகத் தீவிரமாக செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே முதற்கட்ட பணிகள் முடிவு அடைந்ததற்குப்பின்னாலே தான், இரண்டு வழி சாலைகளாக மாற்றுகிற பணிகளை மேற்கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்து இருக்கிறேன். இதற்கு ஏறக்குறைய 1 கோடி ரூபாய் மதிப்பீடு போடப்பட்டிருக்கிறது. அந்த அளவிலே நிதி ஆதாரங்கள் இந்த ஆண்டு இல்லாத காரணத்தினாலே முதலிலே ஒரு வழி சாலைகளை சீர்படுத்திவிட்டு அதற்கு பின்னாலே இரு வழிச் சாலைகளை எடுத்துக் கொள்ளலாம் என்று இந்த அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 71, திரு. தா. செழியன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

71—

## திருவாளந்துரை வெள்ளாற்றில் பாலம்.

*9733—திரு. தா. செழியன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடைப்பளிப்பாரா :

பெரம்பலூர் வட்டம், திருவாளந்துரை வெள்ளாற்றில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம் கட்டும் திட்டம் எதுவும் தற்போது இல்லை.

திரு. தா. செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த திருவாளந்துரை வெள்ளாற்று பாலம் கட்டினால் திருச்சி தென்னாற்காடு மாவட்டங்களில் 30 கிராம விவசாயிகள் பயன் அடைவார்கள். இரு மாவட்ட மக்களும் வியாபாரத்தை பெருக்குகின்ற அளவுக்கு அது வசதியாக இருக்கும். எனவே அடுத்த நிதியாண்டிலாவது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் இந்தப் பாலம் கட்டித் தரப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆற்று வழி நீர்ப் பாதை சுமார் 100 மீட்டருக்கு கட்டப்பட வேண்டும். இதன் மதிப்பீடு

ஏறத்தாழ 35 இலட்சம் ரூபாய் என்று போடப்பட்டிருக்கிறது. பொதுவாக ஒன்றை இந்த சட்ட மன்றத்திலே தெரிவித்துக் கொள்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். தற்போது தமிழ் நாட்டில் அனைத்து பாலங்களையும் கட்ட வேண்டும் என்று சட்ட மன்ற உறுப்பினர்கள் கோரிக்கைகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். முடிந்த அளவுக்கு நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நெடுஞ்சாலைத் துறைக்கு அதிகமாக நிதி ஒதுக்கித்தந்து இன்றைக்கு போர்க் கால அடிப்படையில் பாலங்களும் சாலைகளும் கட்டும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை பல்வேறு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே பாராட்டிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே 5 ஆண்டுக்காலத்திலே செய்ய வேண்டிய பணிகளை ஒருஆண்டுக்காலத்திலேயே எடுத்துக் கொள்வது என்பது நடைமுறைக்கு முடியாத விஷயம். வருகிற ஆண்டிலேயிருந்து ஒவ்வொரு ஆண்டும் இருக்கிற நிதி ஆதாரங்களைப் பொறுத்து அந்தந்தப் பகுதியினுடைய முக்கியத்துவம் கருதி அந்தச்சாலைகள், மற்றும் பாலங்கள் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 72, திரு. எ.தா. பொன்னுவேலு, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

72—

## மருதையாற்றின் குறுக்கே பாலம்.

*9781—திரு. எ.தா. பொன்னுவேலு : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வரகூர் தொகுதி ஆலத்தூர் ஒன்றியம் சாத்தனூர் இலுப்பைகுடி சாலையில் உள்ள மருதையாற்றின் குறுக்கே ஒரு மேம்பாலம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.



திரு. எ. தா. பொன்னுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய ஒளி விளக்கு, ஏழை எளியவர்களுடைய இதய தெய்வம், நான் வணங்கும் பணிந்த தெய்வமாகிய தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவியினுடைய ஆட்சிக் காலத்திலே, பொற்கால ஆட்சியிலே, —தமிழகத்திலேயே பின் தங்கிய பகுதி என்றால் வரகூர் தொகுதிதான். அந்தப் பகுதி ஆதிதிராவிட மக்கள் பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழுகிற பகுதி. அந்தப் பகுதியில் குறிப்பாக ஆலத்தூர் ஒன்றியத்திலே இருக்கிற அந்த மக்கள் குளத்தூருக்கும் இலுப்பைக் குடிக்கும் இடையிலே இருக்கிற சிறிய ஆற்றிலே அதிகமாக தண்ணீர் வருகிறபோதெல்லாம் அவர்கள் நகரங்களுக்குச் செல்வதற்கு முடியாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அந்த ஆற்றின் மீது மேம்பாலம் அமைக்க அரசின் பரிசீலனையில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அந்தப் பாலம் ஊராட்சி ஒன்றிய சாலையில் இருக்கிறது. ஊராட்சி ஒன்றிய சாலைகளிலே மிகப் பெரிய திட்டங்களைப் போட்டு பாலங்களைக் கட்டுவது என்பது நடைமுறைக்கு முடியாத விஷயம். அப்படிப்பட்ட இடங்களில் நெடுஞ்சாலைத் துறை மூலம் பகுதி 2 திட்டத்தின் மூலமாக சில இடங்களை எடுத்துச் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து அந்தப் பகுதி மக்களுடைய குறைகளைப்போக்குகிற விதத்திலே இருக்கிற நிதி ஆதாரங்களைக் கருதி அடுத்த ஆண்டு இது குறித்து முடிவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10—15

திரு. எ.தா. பொன்னுவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வளர்ந்து வரும் நவநாகரிக காலக் கட்டத்திலே ஒரு சமுதாயத்தினுடைய பண்பாடு, மக்களுடைய நாகரீக வளர்ச்சி போன்றவைகளை சாலையினால்தான், போக்குவரத்து வசதியினால்தான் அவர்கள் கற்றுக் கொள்ள முடியும், பண்பாட்டை பின்பற்ற முடியும் என்ற நிலை இருக்கிறது. கடந்த ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்த நாள் விழாவில் கூட, அந்த இடத்திற்கு நான் கொடி ஏற்றுவதற்கு செல்லும்போது காரை அந்தப் பக்கம் நிறுத்தி இறங்கி வந்து அங்கே மக்களுக்குச் சொற்பொழிவு ஆற்றினேன் என்பதையும் கடந்த கூட்டத் தொடரில் நான் பேசியிருக்கிறேன். ஆகவே தமிழக விடிவெள்ளியாக விளங்குகின்ற, இல்லை எனவாரி வழங்கும் வள்ளல் வரிசையில் வருகின்ற நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் மக்கள் நலம் பெற இந்த நிதியாண்டிலாவது அந்தச் சாலையை சீர்செய்து மேம்பாலம் அமைத்துக் கொடுத்தால் அந்தப் பகுதியில் உள்ள

மக்கள் வாழ்வார்கள், ஆகவே இந்த நிதியாண்டிலேயே மேம்பாலம் அமைக்க ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னாலே இந்த அரசு நெடுஞ்சாலைத் துறைக்கும் சரி, கிராமச்சாலைகள் துறைக்கும் சரி, மற்ற பல்வேறு துறைகளுக்கும் எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்து படிப்படியாக காரியங்களை ஆற்றிக்கொண்டிருக்கிறோம் என்பதைச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய தொகுதிக்கு பாலம் வேண்டும் என்பதிலே கண்ணும் கருத்துமாக இருக்கிறார். அதிலே இந்த அரசுக்கு மிகவும் சந்தோஷம். இருந்தாலும் இந்தச் சாலை ஊராட்சி ஒன்றியச் சாலை. இது கிராமச் சாலையாகத்தான் இருக்கிறது. அந்தப் பகுதியினுடைய தேவையைக் கருதி நான் ஏற்கெனவே சொன்னதைப்போல உரிய அதிகாரிகளை அனுப்பி அப்படி ஒரு பிரச்சினை இருக்குமானால் கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழே அதை எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 73, திரு. ஆ. செல்லத்துரை, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

73—

## தாமிரபரணி ஆற்றுக் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

*10167— திரு. ஆ. செல்லத்துரை :
மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சாத்தான்குளம், உடன்குடி, தாமிரபரணி ஆற்றுக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

(ஆ) ஆய்வுப் பணிகள் நிறைவுற்று, திட்ட மதிப்பீடு இறுதியாக்கப்பட்டு, தொழில்நுட்பக் குழுவின் ஒப்புதலுடன் அரசின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் திட்டப் பணிகள் செயலாக்கத்திற்காக எடுத்துக்கொள்ளப்படும்.





திரு. ஆ. செல்லத்துரை : வணக்கத்திற்குரிய பேரவைத்
லைவர் அவர்களே, 6 கோடி தமிழ் மக்களின் காவல் தெய்வ
ாகவும் தாயாகவும் விளங்குகின்ற எங்கள் அகிலம் காக்கும்
ழியிலே நின்று தர்மத்தின் அருளாட்சி நடத்தும் எனது காவல்
தய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவியின்
ட்சியில் கிராமப் புறத்தில் குடிநீர் பிரச்சினைக்குத் தீர்வு காண
ன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் சாத்தான்
ளம், உடன்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மிகவும் விரைவிலே
றைவுபடுத்தித் தரவேண்டும். எங்கள் பகுதியைப்
பாறுத்தமட்டில் மழை பெய்யாத காரணத்தினால் நிலத்தடி
ர் எல்லாம் வறண்டு, வற்றி நாங்கள் இப்போது குடிப்பதற்கு
ண்ணீர் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.
ங்களுடைய கிணறுகளில் எல்லாம் கடல் நீர்புகுந்து உப்பாக இருக்
றது. எங்கள் பகுதியிலே இருக்கின்ற மக்கள் குடிப்பதற்கு
ண்ணீர் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்ட நிலையில் இருக்கிறார்
ள். நாங்கள் இன்றைக்கு குடிப்பதற்கு தண்ணீர் கூட வெளிப்
குதியிலிருந்து கிரயம் கொடுத்து வாங்கக்கூடிய நிலையில் தான்
இருக்கிறோம். ஆகவே அமைச்சர் அருள் கூர்ந்து இந்தத்
திட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து உடனடியாக இந்தத்
திட்டத்தை நிறைவு செய்து எங்களுடைய பகுதி மக்களுடைய
தறையை நீக்கித் தருவார்களா என்று கேட்டுக்கொள்வதோடு
இந்தத் திட்டம் முழுமையாக நிறைவு பெருமானால் கிட்டத்
நட்ட சாத்தான்குளம், உடன்குடி பகுதியில் கிட்டத்தட்ட 308
கிராமப் பகுதி மக்கள் குடிநீர் பிரச்சினை இல்லாமல் முழுமை
பெறுவார்கள் என்பதையும் தெரிவித்து இதை உடனடியாக நீங்
ள் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி. என்ன
கேள்வி கேட்க விரும்புகிறீர்கள் ?

திரு. ஆ. செல்லத்துரை : இதனை உடனடியாக அமைச்சர்
அவர்கள் செய்து தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம் பேரூராட்சி,
உடன்குடி பேரூராட்சி மற்றும் 308 ஊரகக் குடியிருப்புகளுக்
காக கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைப்பதற்காக தமிழ்நாடு
குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்
பட்டு முடிக்கப்பட்டுவிட்டது. இத்திட்டத்தின் நீர் ஆதாரம்
பொன்னங்குறிச்சி அருகே தாமிரபரணி ஆற்றில் அமைக்கப்பட்டு
உள்ளது. சாத்தான்குளம் மற்றும் உடன்குடி நகரப் பேரூராட்சி
கள் மட்டும் அல்லாது சாத்தான்குளம், உடன்குடி, ஆழ்வார்
திருநகரி, கருங்குளம் மற்றும் திருவைகுண்டம் ஒன்றியங்களில்
உள்ள 308 ஊரகக் குடியிருப்புகள் இத்திட்டத்தினால் பயன்
பெறும். இத்திட்டத்திற்கு 17 கோடி ரூபாய் செலவாகும் என்று
மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு தமிழ்நாடு குடிநீர்
வடிகால் வாரியத்தின் தொழில்நுட்பக் குழுமம் ஒப்புதல் அளித்

திருக்கிறது. உள்ளாட்சி அமைப்புக்களின் தீர்மானங்கள் இயற்றப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு இம்மாத இறுதிக்குள் அனுப்பி வைக்கப்படும். அரசின் ஒப்புதலுடன் திட்டப் பணிகள் மிக விரைவில் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சாத்தான்குளம், உடன் குடியோடு நிற்கவேண்டும். அங்கிருந்து ராதாபுரம் போகக் கூடாது. (சிரிப்பு).

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம், நாங்குநேரி, ராதாபுரம் போன்ற பகுதிகளில் எல்லாம் குடிநீர் விலைக்கு வாங்குகின்ற சூழ்நிலை இருப்பதால் இன்றைக்கு கொடிய குடிநீர் பஞ்சம் அங்கே நிலவுகின்ற காரணத்தால் உலக வங்கி கடன் நிதியிலிருந்து இதற்கு முன்னுரிமைக் கொடுத்து உடனடியாக செயற்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆலோசனையின்படியும், ஆணையின்படியும் மிக விரைவில் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சூ. சே. இராஜமன்னார். நீங்களும் உங்களுடைய ஓட்டப்பிடாரத்திற்குப் போகக் கூடாது. இதுபற்றிய கேள்வியாக இருக்கவேண்டும்.

திரு. சூ. சே. இராஜமன்னார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டத்தில் தான் அதுவும் வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை ; இல்லை ; அது தாமிரபரணிக்கு தெற்கே இருக்கிறது. நீங்கள் வடக்கே இருக்கிறீர்கள்.

திரு. சூ. சே. இராஜமன்னார் : தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில்தான் வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குச் செல்லாம் இதில் வராது.



திரு. சூ. சே. இராஜமன்னார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தாழ்மையான வேண்டுகோள். இன்று நெல் அரவை மில் வைத்து இருக்கிற ஆதிதிராவிட தொழில் அதிபர்களுக்கு 'ஹல்லிங் ஏஜென்சி' கொடுப்பதில் செக்யூரிட்டி டெப்பாசிட்டாக 50 சதவீதம் பணம் கட்டினால் போதும் என்று உத்தரவு பிறப்பித்து இருக்கும், ஆதிதிராவிட மக்களின் இரட்சகராக பெயர் பெற்று இருக்கும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்விக்கு வாருங்கள்.

திரு. சூ. சே. இராஜமன்னார் : தலைவர் அவர்களே, சீவலப்பேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்று வரும் அந்தத் திட்டத்தை தூத்துக்குடி விமான நிலையம் ஆரம்பிக்கும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிக் கேள்வியாகப் போடவும். (குறுக்கீடு) சீவலப்பேரிக்கு இதில் எப்படி பதில் வரும் ? உட்காருங்கள். தனிக் கேள்வியாகப் போடவும்.

வினா எண் 74, திரு. ம. சின்னசாமி மற்றும் திரு. என். ஆர். சிவபதி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

74—

## நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தின் இன்றியமையாமையை மக்களுக்கு உணர்த்துதல்

*9719—திரு. ம. சின்னசாமி:

திரு. என். ஆர். சிவபதி:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தின் இன்றியமையாமையை மக்கள் இன்னும் முழுமையாக உணரவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இதன் இன்றியமையாமையை குறித்து மக்கள் அறிந்துகொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தின் இன்றியமையாமையை மக்கள் முழுமையாக உணரவில்லை என்ற காரணத்தால் அரசு இப்போது பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. குறிப்பாக மாவட்ட நுகர்வோர் குறை தீர்க்கும் அமைப்புகள் மற்றும் மாநில நுகர்வோர் குறை தீர்க்கும் ஆணையத்தின் சிறப்புத் தன்மை வாய்ந்த தீர்ப்புகளை பத்திரிகை களில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுத்து இருக்கிறோம். அதேபோல மத்திய அரசு வெளியிட்டிருக்கின்ற 'தி குருசேட்' என்ற படத்தினுடைய பிரதிகளை வாங்கி அனைத்து மாவட்டங் களில் உள்ள திரையரங்குகளில் திரையிட ஏற்பாடு செய்திருக் கிறோம். 'ஸ்பிக்' நிறுவனமும், இந்தியன் வங்கியும் சேர்ந்து தங்களுடைய நிதி உதவியால் காசட்டுகள் தயாரிக்கப்பட்டு இருக்கின்றன. அதனை தொலைக்காட்சியில் காண்பிக்கவும், போதுமான விளம்பரங்கள் செய்வதற்கான நடவடிக்கைகளை யும் இதுபோன்ற பல நடவடிக்கைகளை அரசு எடுத்து இருக் கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தினுடைய முழுமையை இன்னும் மக்கள் உணரவில்லை. குறிப்பாக நகர்ப் புறங்களில் இருக்கின்ற மக்கள் அதுவும் சிலபேர் மட்டும்தான் இதைப்பற்றி அறிந்து இருக்கிறார்கள். கிராமப்புறங்களில் இத னுடைய முக்கியத்துவத்தைப் பற்றி யாருக்குமே தெரியவில்லை. அதற்கான பல்வேறு நடவடிக்கைகளை எல்லாம் எடுத்து இருப்ப தாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்னும் தீவிரமாக எடுப்பதற்கு ஒரு பிரச்சாரக் குழுவை அரசின் சார்பில் அமைத்து இந்த நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தினுடைய முக்கியத்துவம் பற்றி எல்லா கிராமங்களுக்கும் சென்று அவர்கள் மக்களுக்குச் சொல்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே பல நடவடிக்கைகளை எடுத் திருக்கிறோம். நமது மாநிலத்திலுள்ள 13 ஆயிரம் முதியோர் கல்வி மையங்களில் பயன்படும் வகையில் நுகர்வோர் பாதுகாப்பு குறித்து ஒரு பாடம் துணை நூலாக சேர்க்கப்பட்டிருக் கிறது. அதே நேரத்தில் தமிழகத்தில் இருக்கின்ற கல்லூரிகளில் உள்ள வேதியியல் பாடத்தில் உணவு கலப்படம் மற்றும் அவற்றின் கண்டுப்பிடிப்பைப் பற்றிய ஒரு பாடத்தை அதிலே சேர்க்கச் சொல்லியிருக்கிறோம். அதுபோக பல்வேறு பல்கலைக் கழகங் களில் எம். பில்., பி.எச்.டி. போன்ற தலைப்புகளில் நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம் பற்றிய ஒரு தலைப்பைச் சேர்க்கச் சொல்லி யிருக்கிறோம். மாநில அளவில் பல கருத்தரங்குகள் நடைபெறு கின்றன. இதுபற்றியும் இன்றைக்கு மாநில அளவிலான கருத் தரங்கை சிறப்பான முறையில் நடத்தி வருகிறோம். இது போதுமானது என்றே நான் கருதுகிறேன்.



திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தின் சட்ட திட்டங் களை மத்திய அரசை எதிர்நோக்காமல் மக்கள் அறிந்து கொள் ளும் வகையில் மாநில அரசே இயற்ற முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கன்சுமர் புரடெக்ஷன் ஆக்ட்' என்பது மத்திய அரசின் சட்டம். அதை நிறைவேற்றுகின்ற பொறுப்பு மாநில அரசிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மத்திய அரசு, மாநில அரசு ஆகிய 2 பேரும் சேர்ந்து இந்த நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை நிறைவேற்றி வருகிறோம். அந்த நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம் நம்முடைய இந்திய நாட்டைப் பொறுத்த வரையில் ஒரு புதிய இயக்கம். ஆகவே எல்லோரும் சேர்ந்துதான் அந்த இயக்கத்தை வளர்த் தாக வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 75, செல்வி எல். சுலோசனா, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

75—

மேட்டுப்பாளையத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலையம்.

*10038—செல்வி எல். சுலோசனா :

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : தொழிலாளர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையத்தில் அரசினர் தொழிற் பயிற்சி நிலை யம் அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரி சீலனையில் இல்லை.

முற்பகல் 10-25.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலேயே மேட்டுப்பாளையம் தொகுதியிலேதான் அதிகமாக, சுமார் 70-க்கும் மேற்பட்ட சிறு கிராமங்களில் மலைவாழ் மக்கள் வாழ்கின்றனர். மேலும், நரிக்குறவர் இனத்தைச் சேர்ந்த மக்கள் சுமார் 100 குடும்பத்தினர் 10 ஆண்டுகளுக்கும் மேலாக நிலையாக ஒரேயிடத்தில், காரமடை என்ற பகுதியில் வாழ்கின்றனர். மிகவும் பின்தங்கிய மக்களின் நலனைப் பேணிக் காக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி

அவர்களின் அரசு தாழ்த்தப்பட்ட, ஏழையெளிய, மிகவும் பின் தங்கிய நிலையிலுள்ள இம்மக்கள் பயன்பெற்று வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய ஒரு அரசு கலைக் கல்லூரியோ அல்லது அரசு தொழில் நுட்பக் கல்லூரியோ இல்லாத மேட்டுப்பாளையம் தொகுதிக்கு. அரசு தொழிற் பயிற்சி நிலையத்தையாவது, வருகின்ற ஆண்டில் அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலே 3 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களும் 20 தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களும் இயங்கி வருகின்றன. அவற்றில் ஒன்று, தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களிலே ஒன்று மேட்டுப்பாளையத்திலே இயங்கி வருகிறது. புதிதாக அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் அமைக்க வேண்டுமென்றால், தொடரா இனச் செலவாக 55 இலட்சம் ரூபாயும், ஆண்டொன்றுக்கு தொடரினச் செலவாக 5 இலட்சம் ரூபாயும் செலவாகும். எனவே, நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு, இப்போது அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் அமைக்கின்ற செயற் குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் தொழில் நுட்பக் கல்லூரிதான் மேட்டுப்பாளையத்தில் உள்ளது. ஏழையெளிய மக்கள் பயன் பெறுகிற வகையிலே அரசு தொழிற் பயிற்சி நிலையத்தையாவது அமைக்க வேண்டுமென்றுதான் கேட்கிறேன். அடுத்த வருடத்திலாவது இதை அரசு அமைக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் ஆண்டில் நிதிநிலைமைக்கேற்ப இது பற்றி கருத்தில் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 76, திரு. வி. கே. லட்சுமணன், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

76—

## ஆழ்குழாய்க் கிணறு அமைக்க தண்ணீர் இருப்பதைத் தெரிவிக்கும் கருவி.

*10067—திரு. வி. கே. லட்சுமணன் :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பல இடங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு பொய்த்துப் போவதால் விஞ்ஞான ரீதியாக ஒரு இடத்தில் உறுதியாகத் தண்ணீர் கிடைக்கும் என்பதைத் தெரிவிக்கும் கருவி ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : நிலத்தின் அடியில் உள்ள நீரூற்றுகளைக் கண்டறிய நீரியல் ஆய்வுத் துறையில் ரெஸிஸ்டிவிட்டி மீட்டர் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இக்கருவிகளைக் கொண்டு ஓரிடத்தில் நிலைமைகளை ஆய்வு செய்து அவ்விடத்தில் தண்ணீர் கிடைக்குமா என்று கண்டறிந்து அதன் பிறகு ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்படுகின்றன.

திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரெஸிஸ்டிவிட்டி மீட்டர் மூலமாக நிலத்தடியிலே இருக்கிற பாறைகளைத்தான் கண்டறிய முடிகிறதேயொழிய தண்ணீர் இருக்கிறதா என்பதைச் சரியான முறையிலே கண்டறிய முடியாத காரணத்ினாலே ஊராட்சி மன்றங்களிலே குடிநீருக்காக தோண்டப்பட்ட பல ஆழ்குழாய் பகுதிகள் பொய்த்துப்போய் அரசுக்கு ஏராளமாக நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. லட்சுமணன், கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே, அதுகுறித்து பரிசீலித்து நீங்கள் என்ன முடிவை எடுக்கப் போகிறீர்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் பணிக்காக ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கக்கூடிய பணிகளுக்குரிய கருவிகள்தான் வேளாண் துறையிலே இருக்கின்றன. அதனை வைத்து அந்த நிலத்து நீரை ஆய்வு செய்து தோண்டப்பட்டிருக்கக்கூடிய பல்வேறு ஆழ்குழாய்க் கிணறுகள் வெற்றிகரமாகச் செயல்பட்டு வந்திருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1992 செப்டம்பர் 24

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இன்றைக்குக் கோவை மாவட்டத்திலே சிலர்
தங்களுக்கு, இந்த நிலத்தடி நீரை கண்டுபிடிக்கின்ற சக்தி
உடலிலே இருக்கிறது என்று சொல்லி மக்களை, விவசாயிகளை
ஏமாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். இன்றைக்கு மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் சொல்லியபடி, இந்தக் கருவிகளை வைத்து
அரசு சம்பந்தப்பட்ட வேலைகளுக்கு மட்டுந்தான் பயன்படுத்த
முடியுமா அல்லது விவசாயிகள் இந்தக் கருவிகள் மூலமாக
தாங்கள் பயன்பெறவேண்டுமென்று கருதினால் அதையும்
அரசு அவர்களுக்கு உதவியாகச் செய்யுமா என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஏமாறுகிறவர்கள் இருக்கின்ற காலம்
வரை ஏமாற்றுபவர்களும் இருந்துகொண்டுதான் இருக்கி
றார்கள். ரெஸிஸ்ட்டிவிட்டி மீட்டர் வேளாண் பொறியியல்
துறையில் இருக்கிறது. குடிநீர் வடிகால் வாரியத்திலும்
இருக்கிறது. விவசாயிகளுக்குத் தேவைப்படுகின்றபோது
இந்த இரண்டு துறைகளுமே நிலத்தடி நீரை ஆய்வுசெய்து
விவசாயிக்ள் பயன்பெறுகின்ற வகையிலே அவர்களுக்கு அறிவு
ரையும், தக்க நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.
விவசாயக் காரியங்களுக்காக பயன்படுத்தக் கூடிய விவசாயி
களுக்கு அரசு 200 ரூபாய் என்று நிர்ணயம் செய்து குறைந்த
ச்லுகையிலே அவர்களுக்கு நிலத்தடி நீரை ஆய்வு செய்து
வழங்கி இருக்கிறது.

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன்
அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படு
கிறது. திரு. வி. கே. லட்சுமணன்.

திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கோவை மாவட்டத்திலே அவிநாசி, பல்லடம்,
கோவை போன்ற தாலுக்காக்கள் நிரந்தரமான வறண்ட
பகுதிகள். இந்தப் பகுதிகளிலே திறந்த வெளிக் கிணறு
களைத் தொண்டுவதற்கு இனிமேல் வாய்ப்பு இல்லை.
காரணம், நிலத்தடி நீர் 300 அடிக்குக் கீழே போய்விட்டது.
ஆக, ஆழ்குழாய்க் கிணறுகளைத்தான் பயன்படுத்த வேண்டிய
நிலைமை இருக்கிறது. அந்த ஆழ்குழாய்க் கிணறுகளைப்
பயன்படுத்துகின்றபொழுது ஒரு கிணறு தோண்டுவதற்கு
ரூபாய் 30,000 வரை செலவாகிறது. ஆகவே, தண்ணீர்
உறுதியாகக் கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டால்தான்



1992 செப்டம்பர் 24]

விவசாயிகள் ஆழ்குழாய்க் கிணறுகளைத் தோண்ட முடியும்,
ஒரு கிணறு பொய்த்துப் போய் விட்டால் 30,000 ரூபாய்
நஷ்டம் ஏற்படுகிறது, அதற்கு இன்ஷ்யூரன்ஸ் பாதுகாப்பும்
இல்லை. எனவே, இந்த ரெசிஸ்டிவிட்டி மீட்டருக்குப் பதிலாக
இன்னும் வேறு ஏதாகிலும் நவீன விஞ்ஞானக் கருவிகள், நம்
முடைய நாட்டிலே இல்லாவிட்டாலும் அயல்நாடுகளிலேயாவது
கிடைக்குமா என்பதை அரசு ஆராயுமா என்பதை நான் அறிய
விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இன்னும் நவீனக்கருவிகள் உலகத்தின் எந்த
மூலையிலே இருந்தாலும் அதனைக் கொண்டு வந்து இந்தத்
திருநாட்டைப் பொன்னாடாய் ஆக்குவதற்கு எங்களுடைய
புரட்சித் தலைவியினுடைய அரசு என்றும் முயலும் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு நிறைய
கேள்விகள் வருகின்றன. வினா எண், 77, திரு, கே.
பாலசுப்பிரமணியன், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற
வளர்ச்சித்துறை அமைச்சர்,

77—

நிலையான கூரை அமைத்தல்.

*9768—திரு. கே. பாலசுப்பிரமணியன் :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை
அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

நகரத்திலுள்ள குடிசைகளுக்கு நிலையாக லைட் ரூப் ஷீட்
அல்லது ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் (Lite Roof Sheet or Asbestos Sheet)
அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி
மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது திட்டம் ஏதும் இல்லை.

[1992 செப்டம்பர் 24

திரு. கே. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாதிரி நகரத்தைச் சுற்றியும், அருகாமையிலும் இருக்கும் குடிசை வாழ் மக்களெல்லாம் வசித்து வரும் வேளையிலே அவர்களுக்கு இந்தக் குடிசைகள் பற்றி எரிவதான நிகழ்ச்சிகள் அடிக்கடி ஏற்பட்டு வருகின்றன அப்படி ஏற்படும்பொழுது அரசாங்கம் அவர் களுக்கு நஷ்டயீடாக வீடுகளைப் புதுப்பித்துக் கொள்ளும் வகையிலே பல இலட்ச ரூபாய்களை அவர்களுக்குக் கொடுக் கிறார்கள். இப்படி தொடர்ச்சியாக இந்தத் தொகையைக் கொடுத்து வருவதனாலே இருக்கக்கூடிய நஷ்டத்தை அர சாங்கம் தொடர்ந்து செய்து வருகிறது. இதை ஈடு செய்யும் வகையிலே, லைட் ரூஃப் ஷீட் என்ற ஒரு பொருளையோ அல்லது ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் என்று சொல்லக்கூடிய ஒரு பொருளையோ உபகரணமாக அவர் களுக்குக் கொடுத்தால் பர்மனென்டாக ஐந்தாண்டு களுக்கோ அல்லது பத்தாண்டுகளுக்கோ அவர்கள் வசித்து வருவதற்கும், நஷ்டம் ஏற்படாமல், தீயினால் பாதிக்கப் படாமல் இருப்பதற்கும் ஏதுவாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதன்முதலாக 1971-ஆம் ஆண்டிலே தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் சென் னையிலே ஏற்படுத்தப்பட்டு குடிசை மாற்றும் திட்டங்களைச் செயல்படுத்தி வந்தது. 1983-ஆம் ஆண்டிலிருந்து இது சென்னையிலிருந்து விரிவுபடுத்தப்பட்டு சுமார் 112 நகரங்களும் 31 பேரூராட்சிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்தத் திட்டங் களெல்லாம் செயல்படுத்தப்பட்டு வந்தன. அந்த அடிப் படையில் குடிசைகள் நெருக்கமாக இருக்கின்ற பகுதிகளுக்கு அடுக்கு மாடித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மற்றப் பகுதிகளில் அரசு நிதி உதவியுடனும், ஹட்கோ நிதி உதவி யுடனும் உலகவங்கி நிதி உதவியுடனும் குடிசைகள் மேம் படுத்தப்பட்டு வருகின்றன. எனவே, இந்தக் குடிசைகள் மேம்படுத்தப்படுகின்ற திட்டத்தில் கடனாக 4,000 ரூபாய் அரசு அளிக்கிறது. அந்த அடிப்படையிலே குடிசைவாழ் மக்கள் தங்களுடைய குடியிருப்புகளுக்கு லைட் ரூஃப் ஷீட் அல்லது ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் மற்றும் ஒரு கழிவறை போன்றவற்றைச் செய்து கொள்ளலாம். அந்த நிலையில் தற்போதைக்கு அரசின் பரிசீலனையில் இந்த லைட் ரூஃப் ஷீட்டோ, ஆஸ் பெஸ்டாஸ் ஷீட்டோ அரசு மூலமாகவே செய்கின்ற திட்டம் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஜீனத் சர் புதீன்.



1992 செப்டம்பர் 24]

திருமதி ஜீனத் சர்புதீன் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவரவர்களே, சென்னையில் வாழும் குடிசைப் பகுதி மக்கள் ஸ்லம் கிளீயரன்ஸ் போர்டு மூலமாக அடுக்கு மாடிக் கட்டிடங்களை வாங்கி விடுகிறார்கள். அதன் பிறகும் அதன் பக்கத்திலேயே குடிசைகளைப் போட்டுக் கொண்டிருக் கிறார்கள். அப்படி அவர்களிடம் சென்று இதை காலி செய்ய வேண்டுமென்று கேட்டாலும் அல்லது ஸ்லம் கிளீ யரன்ஸ் போர்டுக்குக் கம்ப்ளெயின்ட் கொடுத்தாலும் சரி, அவர்கள் ஸ்டே வாங்கி விடுகிறார்கள். இப்படியே போய்க் கொண்டிருந்தால் எத்தனை அடுக்கு மாடிக் கட்டிடங்கள் நீங்கள் கட்டினாலும் அந்தக் குடிசைகளை மாற்றி அமைக்க முடியாது. ஆகையினால் இதற்கு ஒரு புதிய சட்டத்தை நாம் கொண்டு வர முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 78, திரு. செ. பெருமாள், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

முற்பகல் 10.35

78—

## ஏற்காடு தொகுதியில் தொழிற்கல்விக் கூடம்.

9604— திரு. செ. பெருமாள் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா,

ஏற்காடு தொகுதியில் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ஒரு தொழிற்கல்விக் கூடம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஏற்காடு தொகுதியில் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் தொழிற்கல்விக் கூடம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. செ. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே, ஆயிரம் பேர் கொண்ட கிராமங்களுக்கு ஒரு பேருந்து விடப்படும் என்ற முறையில் அதிகமான பஸ்கள் விடப்பட்டிருக்கின்றன. என்னுடைய

தொகுதியிலே மாணவர்கள், நிறைய படித்த இளைஞர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பயன்பெறும் வகையிலே அமைச்சர் அவர்கள் இந்த திட்டத்தை மீண்டும் பரிசீலனை செய்து, அடுத்த ஆண்டிலாவது கொண்டு வர ஏற்பாடு செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. பெருமாள், நீங்கள் இந்தக் கேள்வியைக் கேட்கிற விதம் சரியல்ல. போக்கு வரத்துத் துறை அமைச்சர் அதிகமான பஸ்களை விட்டுக் கொண்டிருக்கிறார்; நீங்கள் இதைச் செய்வீர்களா என்று சொல்வது, அந்த இரண்டு அமைச்சர்களுக்கும் நீங்கள், ஏதோ அவர் செய்கிறார், நீங்கள் செய்யவில்லையா என்று கேட்பதைப் போலாகும். அதிகமான பஸ்கள் விடப்பட்டிருக்கின்றன; எனவே, இந்தத் தொழிற்கூடம் அமைக்கப்படுமா என்று அந்தக் கேள்வி அமைக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் 3 இருக்கிறது. அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் 13 இருக்கின்றன. அங்கீகரிக் கப்பட்ட தனியார் தொழிற்கல்விக் கூடங்கள் 6 இருக்கின்றன. அந்த மாவட்டத்தில், அங்குள்ள மலைவாழ் மக்களுக்கான பெர்சென்டேஜ் இன்னும் பூர்த்தி செய்யப்படாத நிலையில் இருக்கிறது. ஆகவே, அங்குள்ள அந்த வசதிகளையெல்லாம் அங்குள்ள இளைஞர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 79, திரு.. ப. கலியபெருமாள், மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

79—

திருவையாறு தொகுதியில் மீனவர்களுக்கு வீடுகள்.

*10123—திரு. ப. கலியபெருமாள் :

மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருவையாறு தொகுதியிலுள்ள தோகூர் திருவாலம் பொழில், அந்திலி போன்ற கிராமங்களில் வாழும் மீனவர்களுக்கு நிரந்தரமான குடியிருப்பு மனை வழங்கி, வீடு கட்டித்தர அரசு முன்வருமா ?

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க யாற்றப்பெற்றது.





மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இத்தகைய திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் திட்டம் இல்லை என்று கூறினார்கள். எனது தொகுதியில் அடங்கிய தோகூர், திருவாலம் —பொழில், அந்திலி ஆகிய பகுதிகளில் வாழும் முந்நூறுக்கு மேற் பட்ட உள்நாட்டு மீனவக் குடும்பங்கள் மிகவும் ஏழ்மைநிலையில் வாழ்பவர்கள், அவர்களுக்கு எந்தவிதமான சொந்த இடமும் கிடையாது. தற்போது தனியாரிடத்தில், புறம்போக்கு நிலத்தில் குடியிருக்கிறார்கள். ஒரு சிறிய வீட்டில் இரண்டு, மூன்று குடும்பங்கள் இருந்து கொண்டு கஷ்டப்படுகிறார்கள். ஆகையால், கோடாது கோடி ஏழை எளியோர் உள்ளங்களில் இதயதெய்வமாக இருக்கிற, அப்படிப்பட்ட குடும்பங்களின் இல்லங்களில் ஒளியேற்றி வைத்து கொண்டிருக்கிற, புரட்சித் தலைவியின் ஆட்சியில், அந்த ஏழை எளியோருக்கு குடியிருக்க பட்டா நிலம் வழங்கி, எந்தவகையிலாவது வீடு கட்டித தரவோ அல்லது வீடு கட்டுவதற்கு கடன் வசதி செய்து தரவோ அமைச்சர் நடவடிக்கை எடுக்க ஆவன செய்வரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் 180 கடலோர கிராமங் கங்களில் 13,862 வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. பொதுவாக உள்நாட்டு மீனவர்களைப் பொறுத்தவரையிலே அவர்கள் பாதுகாப் பான ஒரு சூழ்நிலையிலே வாழ்ந்து வருகின்றனர். ஆனால் கடலோர கிராமங்களில் வாழும் மீனவர்கள் இயற்கையின் சீற்றத்திற்கு அடிக்கடி உள்ளாகிற காரணத்தினால், அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு அளிக்க வேண்டியது அரசின் தலையாய கடமையாகும். அந்த வகையிலே, கடலோர கிராமங்களில் வாழுகிற மீனவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு இலவசமாக வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. அதேபோன்று, இலவசமாக வீட்டுமனை வேண்டுமென்று ஒரு கோரிக்கையினை மாண்புமிகு உறுப்பினா அவர்கள் கோறியிருந்தார்கள். இலவசமாக மனை அளிக்கும்திட்டம் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் , திரு. ஆர். கோடிமாரி. இது திருவையாறு தொகுதி சம்பந்தப்பட்டது.

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடு இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கும் ஏழை மீனவர்களுந்கு முழுமையாக வீட்டுவசதி செய்ய அரசிடம் என்ன திட்டம் உள்ளது என்பதையும், எவ்வளவு சதவிகிதம் மீனவர் களுக்கு தற்போது வீடு கட்டிக் கொடுக்க உள்ளது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அறிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

[1992 செப்டம்பர் 24

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நமது தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர்
டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், மீனவர்கள்பால் அன்பு
கொண்டு, வருடந்தோறும் இரண்டயிரம் வீடுகள் கட்டித்தர
உத்தரவிட்டுள்ளார்கள். இந்த அடிப்படையில் 1992-93-ஆம்
ஆண்டிற்குள் இரண்டாயிரம் வீடுகள் இலவசமாகக் கட்டித்தரப்
தரப்படுகிறது. சுமார் 442 கிராமங்களிலே வசிக்கும் மீனவர்
களுக்கு, இதுவரையிலே 180 கிராமங்ளுக்கு இலவசமாக 13,862
வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. இன்னும் பல கிராமங்
களில் இந்தத் திட்டம் நிறைவு செய்யப்படவிருக்கிறது, அந்த
வகையில் கணக்கை நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறோம், அது
வந்தவுடன் அட்லீஸ்ட் 'பேஸாடு மானரி லானது இதைசெய்யலாம்
என்று இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 80
திரு. ஏ.எம். பரமசிவன், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை
அமைச்சர்.

80—

வாடிப்பட்டித் தாலுக்காவில் அரசு தொழில் பேட்டை

9074 திரு. ஏ. எம். பரமசிவன்:

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்கண்ட
வினாக்களுகு விடையளிப்பாரா;

(அ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி தாலுகாவில் சிறு
தொழில் துவங்க முனைவோரை ஊக்குவிக்கும் வகையில் அரசு
தொழில் பேட்டை உருவாக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு.எஸ்.நாகூர் மீரான், ஊரகத்தொழில் துறை
அமைச்சர்: மாண்புமிகுபேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம் வாடிப்பட்டி தாலுகாவில்
தொழிற்பேட்டை அமைக்க குறைந்த பட்சம் 10 தொழில்
முனைவோர்கள் முன் வருவார்களேயானால் சிட்கோ உரிய
நடவடிக்கை மேற்கொள்ளும்.

திரு.ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மதுரை மாவட்டம் வாடிப்பட்டி பிற்பட்ட பகுதியாக
இருக்கிறது. அது தொழில் பகுதியாக அறிவிக்கப்பட்ட காரணத்
தால் அங்கு பத்து பேர்கள் சிறு தொழில் துவங்கத் தயாராக
இருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே,
அரசு அங்கே தொழிற்பேட்டை அமைக்க முன்வருமா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி
அந்த பத்து பேர்களும் உரிய விண்ணப்பங்களை அளிப்பார்



1992 செப்டம்பர் 24]

களேயானால், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் தகுந்த
நிலத்தினை தேர்வு செய்து, அதற்கு பின்னாலே அரசு
தொழில் பேட்டையை அமைக்க உரிய நடவடிக்கையை மேற்
கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள்
நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்
பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது
என்பதைக் குறிக்கும்.]

முற்பகல் 10—40.

## 2. சிறப்புக் குறிப்புகள்.

### (அ) ஓர் உறுப்பினர் அவையில் பேசியது பற்றிய செய்தியை வானொலியில் ஒலி பரப்பாதது குறித்து.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நேற்றைய தினம் துணை மானியக் கோரிக்கை
மீது பேசிய பேச்சுக்கள் முழுமையும் ரேடியோவில் இன்று 'சட்ட
மன்ற நிகழ்ச்சி' என்ற அந்த நிகழ்ச்சியில் செய்திகள் இருட்
டடிப்புச் செய்யப்பட்டிருக்கின்றன. அப்படிச் செய்யப்பட்ட
தற்கு என்ன காரணம் என்று புரியவில்லை. ஒருக்கால் அரசுத்
தரப்பிலே சில விமர்சனங்கள் வந்த காரணத்தினால் அப்படி
மறுக்கப்பட்டதோ என்ற சந்தேகம் எழுகிறது. எனவே, தாங்கள்
அதற்கு விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் என்னிடம்
கொடுத்தது வேறு— உங்களுடைய பெயர் அந்நிகழ்ச்சியில்
சொல்லப்படவில்லை என்று. இப்பொழுது மொத்தமாக இருட்
டடிப்புச் செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்வது சரியல்ல.
என்னிடம் நீங்கள் எதைக் கேட்கிறீர்களோ அதைப்பற்றித்
தான் இங்கே வந்து நீங்கள் இந்த நேரத்திலே கிளப்பலாம்.
இதிலே நீங்கள் உள்நோக்கம் கற்பிக்கிறீர்கள். அதை நீங்கள்
என்னிடத்திலே தெரிவிக்கவில்லை. மொத்தமாகச் செய்திகள்
இருட்டடிப்புச் செய்யப்பட்டிருக்கிறது என்பதை என்னிடத்
திலே சொல்லியிருந்தால், அதை நான் அரசாங்கத்திற்குத் தெரி
வித்து, அந்தத் துறைக்குத் தெரிவித்து, நான் அவர்களுடைய
விளக்கத்தைக் கேட்டிருப்பேன். மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, வானொலியோ, தொலை
காட்சியோ மாநில அரசின் கட்டுப்பாட்டில் இல்லை என்பதை
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறந்து விட்டார்களோ
என்னவோ என்று எண்ணத் தோன்றுகிறது. (மேசையைத்
தட்டும் ஒலி). நிச்சயமாகத் தொலைக் காட்சியிலோ வானொலி

யிலோ நாங்கள் சில செய்திகளை இப்படிப் போடுங்கள் என்று வற்புறுத்தினால் அவர்கள் அப்படிப் போடுகிற நிலையிலோ அல்லது சில செய்திகளை இருட்டடிப்புச் செய்யுங்கள் என்றால், அப்படி இருட்டடிப்புச் செய்யும் நிலையிலோ அவர்கள் இல்லை. நாங்களும் அப்படி எப்போதும் சொல்வது கிடையாது. அவர்களிடம் இப்படிப்பட்ட தேவையற்ற சலுகைகளை எதிர்பார்ப்பதும் இல்லை. அப்படிச் சொல்லக் கூடியவர்கள், கட்டாயப்படுத்தக் கூடியவர்கள் வேறு சிலர் இங்கு வேண்டுமானாலும் இருக்கலாம். அவர்கள் சொன்னால்தான் அங்கே எடுத்துக் கொள்வார்கள் என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தம்புசாமி அவர்களுக்கும் மற்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய வேண்டுகோள். நீங்கள் என்னுடைய அறையிலே வந்து என்னுடைய கவனத்திற்கு ஒரு பிரச்சினையைச் சொல்லுகிறீர்கள். சரி, நீங்கள் அதை வேண்டுமானால் அவையில் கிளப்புங்கள் என்று அனுமதி கொடுக்கிறேன். என்னிடம் நீங்கள் எவ்வாறு கருத்தைத் தெரிவித்தீர்களோ அந்த அடிப்படையில்தான் நீங்கள் இங்கே வந்து அப்பிரச்சினையை எழுப்ப வேண்டும். என்னிடத்திலே வந்து தெரிவித்தது, வானொலியில் நான் நேற்றுப் பேசியதாகவே கூடச் சொல்லவில்லை என்று சொன்னீர்கள். அது உங்களுடைய உரிமையைப் பொறுத்த விஷயம். எனவேதான், இன்றைக்கு மற்ற உறுப்பினர்களை விட உங்களுக்கு முன்னுரிமை கொடுத்து உங்களுக்கு முதலிலே பிரச்சினையை எழுப்ப அனுமதி வழங்கப்பட்டது. எனவே, அதை எடுத்துக் கொண்டோம். நீங்கள் இங்கே வந்ததும் என்ன சொல்கிறீர்கள்? அரசுத் தரப்பில் சில விமர்சனங்கள் இருந்த காரணத்தால் இருட்டடிப்புச் செய்துவிட்டார்களோ என்று ஒரு உள்நோக்கம் கற்பிக்கிறீர்கள். நீங்கள் என்னிடத்திலே தெரிவித்த கருத்துக்கும், இங்கே பேசுகிற கருத்துக்கும் முழுக்க முழுக்க மாறுபட்டுச் சொல்வதும், அப்படி உள்நோக்கம் கற்பித்துச் சொல்வதும் நியாயமல்ல. இந்த முறையை இனி வருங்காலத்தில் நீங்கள் கடைப்பிடிக்காமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் இங்கே எத்தகைய நிலைமை நிலவுகிறது என்று சொன்னாரோ அதற்கு முற்றிலும் மாறுபட்ட நிலைமைதான் தமிழகத்தில் நிலவுகிறது. சில பேர் டெல்லியில், தங்களுக்குள்ள செல்வாக்கை வைத்துக்கொண்டு, தூர்தர்ஷனுக்குச் சென்று அங்கே மிரட்டி, முதலமைச்சருக்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள், முதலமைச்சரின் செய்திகளை இருட்டடிப்புச் செய்யுங்கள் என்று சொல்கிறார்கள் அந்த நிலையில்தான் இன்று தமிழகத்தில் நாங்கள் இருக்கின்றோம். (மேசையைத் தட்டும்ஒலி), அதற்கு, தூர்தர்ஷனில் பணிபுரிபவர்கள், முதலமைச்சரின் செய்திகளை நாங்கள் எப்படி இருட்டடிப்புச் செய்ய முடியும் என்று பதில் கேள்வி கேட்டதால் அங்கே உள்ள சிலரை டிரான்ஸ்



பர் செய்ய வேண்டுமென்று கேட்டுச் சிலர் இங்கே முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினா திரு. தம்புசாமி அவர்கள் அறிவார்களா என்று தெரிவியலலை.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆகவே இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் நீங்கள் என்னிடத்திலே கேட்டுக் கொண்டது உங்களுடைய பெயர் விடுபட்டது என்பது. அதைப பொறுத்தமட்டில் அது உங்களுடைய உரிமை சம்பந்தப்பட்டப பிரச்சினை. செய்தி வெளியிடுகின்ற நிறுவனங்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் நான் சொல்லிக் கொள்வது, இங்கே பேசிய உறுப்பினர்கள், யார், யார் பேசினார்கள். என்பதை முழுமையாக வெளியிடுங்கள். ஒவ்வொருவருடைய பேச்சையும் முழுமையாக வெளியிட உங்களுக்கு முடியவில்லை அல்லது இயலாவிட்டால், இன்னின்னார் பேசினார்கள் என்பதை விடாமல் வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(ஆ) தென்னாற்காடு, வடாற்காடு மாவட்டங்களில் நடைபெற்ற சில வன்முறைச் சம்பவங்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, நேற்றைய தினம் தென்னாற்காடு, வடாற்காடு மாவட்டங்களில் சிலபல வன்முறை சம்பவங்கள் ஏற்பட்ட நிகழ்ச்சி குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று திரு. ஜெய்சன் ஜேக்கப், திரு. ஞானசேகரன், திரு. சே. செல்வராஜ், திருமதி பொன்னம்மாள் ஆகியோர் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதில் திருமதி பொன்னம்மாள் அவர்கள் நேற்றைய தினம் நடந்த, விருத்தாசலம் அருகே நடைபெற்ற ஒரு சம்பவத்தின் போது, அந்த இடத்தில் தான் இருந்ததாகவும், அந்தச் சம்பவத்தை முழுமையாக விளக்கி அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்றும் கேட்டிருக்கிற காரணத்தால், இவர்கள் சார்பில் அவர்களுக்கு அனுமதி அளித்து இருக்கிறேன். திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 21 ஆம் தேதி ஊருக்குச் சென்றுவிட்டு, ஒரு கோர்ட் வாய்தாவிற்காக சென்று விட்டு, மீண்டும் 22 ஆம் தேதி இரவு பாண்டியன் துரித வண்டியிலே வந்து கொண்டிருந்தேன். வரும்போது பாண்டியன் துரித வண்டி, புறப்படும்போதே ஒரு மணி நேரம் கால தாமதமாக வந்து, கொடை ரோட்டுக்கு 9-15 மணிக்கு வந்தது. வரும்போது 4 மணி 5 மணி நேரம் என்று கால தாமதமாக வந்து கொண்டிருந்தது. இந்த விருத்தாசலத்திற்கு அருகிலே தாழநல்லூர் என்று ஒரு சிறிய ஸ்டேஷன், அந்த ஸ்டேஷனிலே இரண்டு மணி நேரம் அந்த வண்டியை நிறுத்தி விட்டார்கள். அங்கே ஒரே கும்பலாக எல்லோரும் வண்டியிலிருந்து இறங்கிப் போகிறார்கள், நானும் என் மகனும் இறங்கி ஓடினோம். அது என்ன

[திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்] [1992 செப்டம்பர் 24

என்று பார்க்கும்போது, அந்த நிகழ்ச்சியைப் பார்க்கும்போது,
மிகக் கொடூரமாக, பாவம் ஒரு அப்பாவி ஸ்டேஷன் மாஸ்டர்
அவர், 4 மணிக்கு அவரிடத்திலே சிலர் என்ன சொன்னார்கள்
என்று சொன்னால், அதாவது ராமதாசை கைது செய்த
காரணத்தினால், இங்கே சில வன்முறையாளர்கள், இங்கே
ஓடி வந்து அந்த ஸ்டேஷன் மாஸ்டரை நீர் இரயிலுக்கு சிக்னல்
காட்டக் கூடாது என்று சொல்லி அவரைத் தாறுமாறாக வெட்டி
யிருக்கிறார்கள். அவரைத் தடுக்கச் சென்ற அந்த உதவியாள
ரையும் வெட்டியிருக்கின்றார்கள். அங்கே இரத்தம் ஓடி, அந்த
இடங்கள் எல்லாம் இரத்தக் கரைப் படிந்து இருந்தது. அதன்
பிறகு அவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றார்கள் என்று
சொன்னார்கள். ஆனால் ஆஸ்பத்திரிக்கு செல்வதற்குள்
உயிர் போய் விட்டதா, போக வில்லையா, குற்றுயிராக இருக்
கிறதா என்பது தெரியவில்லை. அந்த ஸ்டேஷன் மாஸ்டர்
தங்கியிருந்த அந்தஇடம் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது.
காலையில் 4 மணிக்கு நடந்த சம்பவம், பிறகு 7, 8, 9 மணி
என்று, 9 மணியளவிலே அந்த இரயில் அங்கேயிருந்து கிளம்பு
கின்ற வரையிலும் அந்த ஸ்டேஷன் தீப்பிடித்து எரிந்து கொண்
டிருந்தால் இது எங்கே போய் முடியும்? இந்த வன் செயல்
களை நாம் கட்டுப்படுத்த வேண்டும். நாம் ஏற்கெனவே ஒரு
சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். மாண்புமிகு
முதல்வர் அவர்கள் தலைமையிலே ஒரு திருத்தச் சட்டத்தை
கொண்டு வந்து, எந்தப் பொதுசொத்துக்காவது எங்கே
யாவது களங்கம் ஏற்படுத்துவார்களேயானால், அது எந்தக்
கட்சியாக இருந்தாலும் சரி, அந்தப் பொதுச் சொத்தின்
நஷ்டஈட்டை அந்தக் கட்சிதான் செலுத்த வேண்டுமென்று
நாம் ஒரு திருத்தச் சட்டத்தையே கொண்டு வந்திருக்கின்றோம்.
அது கொண்டு வந்தும் கூட, பல பஸ்கள் கொளுத்தப்பட்டிருக்
கின்றன. தனியார் பஸ்கள் கொளுத்தப்பட்டிருக்கின்றன.
அரசாங்கத்தினுடைய பஸ்கள், லாரிகள் எல்லாம்
கொளுத்தப்பட்டிருக்கின்றன. இந்தக் கொடுமை நடந்தால்—
யார் தவறு செய்கிறார்களோ அங்கே போய் ஏதாவது செய்
யட்டும், ஆனால் தவறே செய்யாமல் இருக்கிற ஒரு அதிகாரி,
ஒரு இடத்திலே இருக்கும்போது அவருக்கு இவ்வளவு பெரிய
கொடுமை நடக்குமானால் —கத்தினாராம் அந்த அதிகாரி, அந்த
ஸ்டேஷன் மாஸ்டர், ஐயோ என்னை ஒன்றும் செய்யாதீர்கள்
என்று. நீ சிக்னல் போடக்கூடாது, நீ சிக்னல் போடக்கூடாது,
போட்டால் உன்னைக் கொலை செய்து விடுவோம் என்று எல்
லாம் சொல்லி மிரட்டி அந்த அளவுக்கு வெட்டியிருக்கிறார்கள்
என்றால் இந்தக் கொடுமையை ஒரு ஜனநாயக நாட்டில்
மகாத்மா காந்தி பிறந்த நாட்டில், ஒரு கன்னத்தில் அடிக்கும்
போது இன்னொரு கன்னத்தைத் திருப்பிக் கொடுத்தாரே
அந்தக் காந்தி பிறந்த நாட்டில் இப்படி வன் செயல்கள் நடப்
பதை நாம் பார்த்துக் கொண்டிருப்போமேயானால், மத்திய
அரசும், மாநில அரசுகளும் இதைச் சகித்துக் கொண்டிருக்கு
மேயானால் எங்கே சென்று முடியும் என்பதை நான் மாண்புமிகு
சபாநாயகர் மூலமாக நம்முடைய அமைச்சருக்கு பணிவோடு



1992 செப்டம்பர் 24] [திருமதி எ. ஏஸ். பொன்னாம்மாள்]

தெரிவித்துக் கொள்கிறேன். யாராக இருந்தாலும் இந்த
வன் செயல்களிலே ஈடுபடக் கூடாது. எந்தக் கட்சியாக இருந்
தாலும் (குறுக்கீடு) அது உண்மையிலேயே 'பேன்' பண்ணக்கூடிய
கட்சிதான். மக்களுக்குக் கெடுதல் செய்யக்கூடிய, மக்களுக்குத்
துன்பம் இழைக்கக்கூடிய, சாதாரண மக்களுக்கு, ஒன்றுமே
தெரியாத மக்களுக்கு துன்பம் இழைக்கக்கூடிய கட்சி கெடுதலை
பண்ணக்கூடிய இந்தப் பாட்டாளி மக்கள் கட்சி என்ற கட்சி
இந்த நாட்டிலே இருக்க வேண்டுமா என்பதை தயவு செய்து
நீங்கள் ஆராய்ந்து பார்த்து இதைத் தடை செய்வதற்கு
மத்திய அரசுக்கே நீங்கள் சிபாரிசு செய்து, இதைத் தடை
செய்வதற்கான நடவடிக்கை எடுத்தால்தான் இந்த வன்செயல்
களை நிறுத்த முடியும் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்
கொள்கிறேன்.

முற்பகல் 10-50

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:</u> மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, 23—9—1992 அதிகாலை 5
மணிக்கு விருத்தாசலம் அருகிலுள்ள தாழநல்லூர் இரயில்
நிலையத்தில் மதுரையில் இருந்து சென்னை வந்து கொண்
டிருந்த பாண்டியன் எக்ஸ்பிரஸை பாட்டாளி மக்கள் கட்சி
யினர் 20 பேர் தடுத்து நிறுத்தி மறியல் செய்து, இரயிலைத்
தொடர்ந்து செல்ல விடாமல் தடுத்தபோது, ஸ்டேஷன் மாஸ்டர்
திரு. ராஜ்பால் என்பவர் இரயிலை மறிக்காதீர்கள் என்று
சொன்னதால், வன்முறைக் கும்பல் அவரைத் தாக்கி அவரது
இடது கையை அரிவாளால் வெட்டிக் காயப்படுத்தியுள்ளனர்.
அவர் விருத்தாசலம் மருத்துவமனையில் உள் நோயாளியாக்
அனுமதிக்கப்பட்டிருந்தார். பின்னர் அவர் பாண்டிச்சேரி,
ஜிப்மர் மருத்துவமனைக்குத் தீவிர சிகிச்சைக்காகக் கொண்டு
செல்லப்பட்டுள்ளார். ஸ்டேஷன் மாஸ்டரைத் தாக்கிக்
காயப்படுத்திய இந்த வன்முறைக் கும்பல் பாண்டியன் எக்ஸ்
பிரஸ் இரயிலையும் பயங்கரமான ஆயுதங்களால் தாக்கி,
இரயிலின் கதவுகள், இருக்கைகள், மின் விசிறிகள் ஆகியவற்றை
மிகக் கடுமையாகச் சேதப்படுத்தி உள்ளனர். சம்பவம் நடை
பெற்ற இடத்திற்கு போலீசார் உடனடியாக விரைந்து சென்று
வன்முறைக் கும்பலைக் கலைத்து அமைதியை ஏற்படுத்தி
னார்கள். இச்சம்பவம் குறித்து போலீசார் தீவிர விசாரணை
நடத்தி வருகிறார்கள்.

இந்தச் சம்பவம் காரணமாக சென்னை நகருக்கு வந்து
கொண்டிருந்த முத்துநகர் எக்ஸ்பிரஸ் மற்றும் கொல்லம் மெயில்
ஆகியவை பெண்ணாடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டன. அதே

போல் பாண்டியன் எக்ஸ்பிரசும் இந்தச் சம்பவத்தினால் நிறுத்தி
வைக்கப்பட்டது. அனைத்து இரயில்களும் 4 மணி நேரத்திற்கு
மேல் தாமதமாக சென்னை வந்து சேர்ந்தன.

அதே போல இன்று (24—9—1992) அதிகாலையில் திண்டி
வனம் இரயில் நிலையத்திற்கும்—கூட்டேரிப்பட்டு இரயில் நிலை
யத்திற்கும் இடையில் பங்களூர் இரயில்வே கேட் அருகே
தண்டவாளத்தில் பாறாங்கற்களை விஷமிகள் வைத்திருந்த
னர். அப்பொழுது அங்கு வந்த சென்னை—விழுப்புரம் சரக்கு
இரயிலை ஓட்டி வந்த டிரைவர் அதைப் பார்த்து விட்டு இரயிலை
உடனே நிறுத்தி விட்டார். பின்னர் உடனடியாகப் போலீ
சாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டு, போலீசார் சம்பவம்
நடந்த இடத்திற்கு விரைந்து சென்று பாறாங்கற்களை அப்
புறப்படுத்தினர். அதன் பின்னர் இரயில் போக்குவரத்து மீண்
டும் தொடங்கியது. இந்தச் சம்பவத்தினால் $1\frac{1}{2}$ மணி நேரம்
அந்தப் பகுதியில் இரயில் போக்குவரத்து தடைப்பட்டது.

பாட்டாளி மக்கள் கட்சியினர் இதுபோன்ற சம்பவங்களை
ஒருசில இடங்களில் செய்து, வன்முறையில் ஈடுபட்டு பொது
மக்களுக்குச் சிரமங்களை உருவாக்க வேண்டும் என்று திட்ட
மிட்டுச் செயல்பட்டு வருகிறார்கள். காவல்துறை இவர்கள்
மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அறி
வுறுத்தியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ.எஸ். பொன்
னம்மாள் அவர்கள் பேசுகையில், பாட்டாளி மக்கள் கட்சி
யினரால் தமிழக மக்களுக்கு எவ்வளவு கஷ்டம், அவர்கள்
மக்களுக்கு எவ்வளவு பீதியை ஏற்படுத்திக் கொண்டிருக்
கிறார்கள், அன்றாட வாழ்க்கையை எந்தவிதத்தில் எல்லாம்
அவர்கள் தொல்லை நிறைந்ததாக ஆக்கிக் கொண்டு இருக்
கின்றார்கள் என்பதையெல்லாம் எடுத்துச் சொல்லி, இத்தகைய
ஒரு அமைப்பு தேவைதானா, இதனைத் தடைசெய்யவேண்டும்
என்ற கோரிக்கையையும் முன்வைத்துள்ளார்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி. பொன்னம்மாள் மட்டு
மல்ல, இன்னும் பலபேர் இன்று இதே கருத்தைத்தான்
தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். எடுத்ததற்கெல்லாம்
பொதுச் சொத்துக்களை சேதப்படுத்துவது, பஸ்களை எரிப்
பது, கொளுத்துவது, தனியார் வாகனங்களையும் சேதப்
படுத்துவது, நூற்றுக்கணக்கானோர் பயணம் செய்யும்
இரயில் வண்டியைத் தடை செய்வது என்று செய்துகொண்டு
இருக்கிறார்கள். இரயில் கவிழ்ந்தால் எத்தனை நூற்றுக்
கணக்கான உயிர்கள் பலி ஆகும், எத்தனை குடும்பங்கள்
பாதிக்கப்படும் என்பதைப் பற்றியெல்லாம் சிறிதும் கவலைப்





படாமல் இரயில் பாதைகளில் தண்டவாளங்களில் பாறாங்
கற்களை வைப்பது, இது போன்ற வன்முறைச் செயல்கள்
எல்லாம் பாட்டாளி மக்கள் கட்சியினர் வழக்கமாகச் செய்து
வரும் செயல்கள் ஆகும்.

ஒரு அப்பாவி ரெயில்வே ஸ்டேஷன் மாஸ்டர். அவர்
எந்த வகையில் நாட்டு நடப்புகளுக்குப் பொறுப்பாளியாக
முடியும்? அவரை அரிவாளால் வெட்டியிருக்கிறார்கள். கவர்ன்
மெண்ட் சர்வண்ட்-ஆக இருக்கின்ற பஸ் ஓட்டுநர்களை அரி
வாளால் வெட்டியிருக்கிறார்கள். கடப்பாறைகளால் அடித்
திருக்கிறார்கள். இவர்களால் எத்தனையோ உயிர்களும்
போய் இருக்கின்றன. கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பளவில்
பொதுச் சொத்துகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. எல்லா
வற்றிற்கும் மேலாக இவர்கள் போதிப்பது தேச விரோதக்
கொள்கை, மற்றும் நாட்டுப் பிரிவினை. எனவே இத்தகைய
ஒரு தேச விரோத, வன்முறைக் கும்பல் நாட்டிற்குத் தேவை
தானா என்பதை அனைவரும் சிந்தித்த பிறகு இந்த அமைப்
பைத் தடைசெய்ய வேண்டும் என்று மாண்புமிகு பிரதமர்
அவர்களுக்கு நான் கடிதம் எழுதியிருக்கிறேன். இப்பொழுதுதான்
அந்தக் கடிதம் சென்று உள்ளது. (மேசையைத் தட்டும்
ஒலி) எனவே, தமிழ்நாட்டு மக்களின் நலனைக் கருத்தில்
கொண்டு மட்டுமல்ல, இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைக்
கருத்தில்கொண்டு மத்திய அரசாங்கம் விரைவில் இதற்குக்
தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்
தின் மூலமாகவும் நான் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முத
லமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்குத் தெரிவித்து இருக்கிற
கடிதத்தோடு, அவர்கள் இங்கே தெரிவித்த உணர்வுகளை
ஒட்டுமொத்த இந்தப் பேரவையின் உணர்வுகளாக மத்திய
அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதையும் தெரிவித்துக்
கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

(இ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ரேஷன் கார்டுகள் பெறு
வதிலுள்ள சிரமங்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கன்னியாகுமரி மாவட்
டத்தில் ரேஷன் கார்டுகள் பெறுவதில் உள்ள பிரச்சினை
பற்றி அவையின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டு
மென்று திரு. மா. சுந்தரதாஸ் அவர்கள் அனுமதி கேட்டிருக்
கிறார்கள். இதே பிரச்சினை குறித்து திரு. கு. லாரன்ஸ்,
டாக்டர் தே. குமாரதாஸ், டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை
போன்ற மாண்புமிகு உறுப்பினர்களும் என்னுடைய கவனத்
திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களும் இந்தப்
பிரச்சினையை எழுப்பியதாகக் கருதப்படுகிறது. திரு. மா.
சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டம் கேரளாவினுடைய எல்லை மாவட்டம். இந்த மாவட்டத்திலே ரேஷன் கார்டுகள் பெறுவதிலே இருக்கிற பிரச்சினை முக்கியமான ஒன்றாக இருக்கிறது. பலமுறை இதுபற்றி சொல்லியிருக்கிறேன்.

கடைசியாக, அமைச்சர் அவர்கள், எம்.எல்.ஏ.-க்களுடைய பரிந்துரை இருந்தால் கொடுக்கலாம் என்று சொன்னார்கள். இதுவரை சராசரியாக ஒவ்வொரு எம்.எல்.ஏ.—யும் செய்த பரிந்துரையின்பேரில் 150, 200 கார்டுகள் தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இன்றைக்கு விளவங்கோடு தாலுகாவைப் பொறுத்தவரையில் மட்டும் 5 ஆயிரம், 6 ஆயிரம் கார்டுகளுக்கு மேல் எம்.எல்.ஏ. பரிந்துரை செய்ததற்குப் பின்னால், அதிகாரிகளே வந்து விசாரித்ததற்குப் பின்னால், அதை நான் குறை சொல்லவில்லை— எல்லாம் சரியான முறையில் இருக்கிறது, கார்டுகள் கொடுக்க தயார் நிலையில் இருக்கும் நிலையில் அரசு அனுமதித்தால் கொடுக்கலாம் என்று அதிகாரிகள் சொல்லும் நிலையில் அங்கே ரேஷன் கார்டு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அரிசிக்காக மட்டுமல்ல, மக்களுடைய எல்லாவிதமான பிரச்சினைகளுக்கும் குடும்ப அட்டை தேவை. உதாரணமாக ஐ.ஆர்.டி.பி. லோன் வேண்டுமென்று சொன்னாலும், பேங்க் லோன் வேண்டுமென்று சொன்னாலும், பாஸ்போர்ட் வேண்டுமென்று சொன்னாலும், எடுத்தற்கெல்லாம் ரேஷன் கார்ட் வேண்டுமென்று கேட்கிறார்கள். 5 ஆயிரம் என்பது விளவங்கோடு தாலுகாவை பொறுத்தவரையில் மட்டும். ஆனால் ஜில்லா பூராவும் 15 ஆயிரம் கார்டுகளுக்கு மேல் வழங்கப்பட வேண்டியிருக்கிறது என்று கலெக்டர் சொன்னார். அது எப்படி வருகிறது என்று சொன்னால் ஒரே குடும்பமாக இருந்தவர்கள் தனியே குடித்தனம் செல்லும் நிலையில், குடும்பம் பிரிக்கப்பட்ட நிலையில் அவர்களுக்கு கார்டு தேவைப்படுகிறது. அதிகாரிகள் எல்லாம் நேரில் சென்று விசாரணை செய்து தனிக் குடித்தனம் செய்வது உண்மைதான் என்று விசாரணை முடித்து கார்டு வழங்கலாம் என்கிற நிலையிலுள்ள கார்டுகளை மட்டும் தான் இங்கே சொல்கிறேன். ஆகவே, அதிகாரிகள் கொடுக்கலாம் என்று முடிவு செய்துள்ள ரேஷன் கார்டுகளை மட்டுமாவது உடனடியாக வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையிடுவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மற்ற மாவட்டங்களைவிட அங்கே இந்தப் பிரச்



சினை சற்று சிக்கலாக இருக்கிறது. அங்கே வருகின்ற விண்
ணப்பங்களும் மற்ற எல்லா தொகுதிகளையும் விட அதிக
மாகவே இருக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற 4 தாலுக்கா
களில் மட்டும் இதுவரை வந்துள்ள விண்ணப்பங்களின்
எண்ணிக்கை 35,088. இதுவரை நாம் வைத்திருந்த சட்டப்
படி 2 பங்கு போலிக் கார்டுகளைப் பிடித்தால் ஒரு பங்கு
புதிய கார்டுகளை வழங்கலாம் என்று வைத்திருந்தோம்.
அது இந்த மாவட்டத்திற்கு பொருத்தம் இல்லையென்று
அங்கேயிருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்ன காரணத்
தால் அதற்கு விதிவிலக்கு அளித்து இதுவரையில் 8,396
கார்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதிலே, சட்டமன்ற,
நாடாளுமன்ற உறுப்பினர்களின் பரிந்துரையின்பேரில் முன்
னுரிமை கொடுத்து வழங்கிய கார்டுகள் 936 என்பதை நான்
தெரிவித்துக்கொள்கிறேன். தாலுகா வாரியாக பார்க்கும்
போது குறிப்பாக, விளவங்கோடு பற்றி இங்கே மாண்புமிகு
உறுப்பினர் சொன்னார். அங்கே மட்டும் 11,458 விண்ணப்பங்
கள் வந்திருக்கின்றன. இங்கே அதிகமாக விண்ணப்பங்கள்
வருவதற்கான காரணத்தையும் உறுப்பினர் தெரிவித்தார்.
தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல, அந்தப் பகுதி
யிலே கேரளாவிலே வாழ்பவர்கள்கூட அந்தப் பகுதிக்கு வந்து
குடும்ப அட்டை வேண்டுமென்று கேட்கிறார்கள். அதை
அடையாள அட்டையாகக்கூட பலபேர் பயன்படுத்துகிறார்கள்.
நம்முடைய பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இடம் வாங்கு
வதற்கு மற்றும் எம்பிளாய்மெண்ட் எக்சேஞ்சில் பெயர்களை
பதிவு செய்வதற்குக்கூட பயன்படுத்துகிறார்கள். ஆகவே,
ரெவின்யூ இலாகாவின் மூலம் அத்தகைய அடையாள அட்டை
களை வழங்குவதற்கு முடியுமா என்பதைப் பற்றி கூட
யோசித்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் எந்தவிதமான சிரம
மும் இல்லாமல், யார் யாருக்கு உள்ளபடியே கார்டு வழங்கப்
படாமல் இருக்கிறதோ அவர்களுக்கு உடனடியாக வழங்கப்
படும். சட்டமன்ற கூட்டத் தொடர் முடிந்த உடனேயே
நானே கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நேரில் சென்று இது
குறித்து உரிய முறையில் பிரச்சினையை தீர்த்து வைப்பேன்
என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11.00

3. விதி 110—ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கைகள்.

(அ) இலவச வேட்டி, சேலைகள் வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முத
லமைச்சர் அவர்கள் இரண்டு முக்கியப் பிரச்சினைகள் குறித்து
பேரவையில் அறிக்கைகள் வைக்க வேண்டி பேரவை விதி

110-ன்கீழ் அனுமதி கோரியிருக்கிறார்கள். அவர்கள் இப்போது அந்த இரண்டு அறிக்கைகளையும் பேரவைக்கு அளிப்பார்கள்.

**மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று, 23-9-1992, இந்த மாமன்றத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்களும் துணை மானியக் கோரிக்கையின்மீது உரையாற்றும்போது இலவச வேட்டி. சேலைகள் வழங்கும் திட்டத்தைப் பற்றிச் சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அவை குறித்து சரியான விவரங்களை இம்மாமன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன். எங்கள் அரசு சென்ற ஆண்டு தமிழகத்தில் உள்ள 1,20,00,000 நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கும், நகர்ப்புறங்களில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் ஏழை எளியோருக்கும் இலவசமாக வேட்டி சேலைகள் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்கீழ் 60 இலட்சம் வேட்டிகளையும் 60 இலட்சம் சேலைகளையும் வழங்க திட்டமிடப்பட்டது. வழங்கப்பட வேண்டிய 60 இலட்சம் சேலைகளில் இதுவரை, அதாவது 23—9—1992 வரை 59,99,870 சேலைகள் வழங்கப்பட்டு விட்டன. வேட்டிகளைப் பொறுத்தமட்டில் வழங்கப்பட வேண்டிய 60 இலட்சம் வேட்டிகளில் இதுவரை 57,69,234 வேட்டிகள் வழங்கப்பட்டுவிட்டன. இனி 130 சேலைகளும், 2,30,766 வேட்டிகளும் மட்டுமே வழங்கப்பட வேண்டியுள்ளது. மீதமுள்ள இந்த வேட்டி சேலைகள் அனைத்தும் கோவாப்டெக்ஸ் மூலமாகப் பெறப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்களால் வரும் அக்டோபர் மாதம் 15 ஆம் தேதிக்குள் முழுமையாகக் கொடுத்து முடிக்கப்படும். ஒரு சில மாவட்டங்களில் உள்ள ஒரு சில தாலுக்காக்களில் வேட்டிகள் இன்னும் பெறப்பட வேண்டியிருப்பதால், ஏற்கெனவே கிடைக்கப்பெற்ற சேலைகள், பயனாளிகளுக்கு வேட்டிகளையும் சேலைகளையும் சேர்த்து வழங்கலாமென்ற அடிப்படையில் வழங்கப்படாமல் உள்ளன. கிடைக்கப்பெற்ற சேலைகளை உடனடியாகப் பயனாளிகளுக்கு வழங்கும்படி ஆணையிட்டுள்ளேன். இன்னும் வழங்கப்பட வேண்டிய 2,30,766 வேட்டிகளும், 130 சேலைகளும் விரைவில், அதாவது அக்டோபர் 15-ஆம் தேதிக்குள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு கோடியே 20 இலட்சம் பேருக்கு வேட்டிகளும், சேலைகளும் வழங்குவது ஒரு மிகப்பெரியத் திட்டம் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன். இதனைக் குறிப்பிட்ட காலத்திற்குள் செயல்படுத்துவதிலுள்ள சிரமங்களையும் நீங்கள் அறிவீர்கள். இத்திட்டத்தில் வழங்க வேண்டிய 1,20,00,000 வேட்டி சேலைகளில் இதுவரை 1,17,69,104 வேட்டி, சேலைகள் கொடுத்து முடித்துள்ளோம் என்பதே ஒரு சாதனையாகும். (மேசையைத்



தட்டும் ஒலி). இந்நிலையில் இத்திட்டம் சரிவர செயல்படுத்தப்படவில்லை என்று கூறிய கருத்துக்கள் தவறானதாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நடப்பு ஆண்டுக்கு, அதாவது 1992—93 ஆம் ஆண்டுக்கு இத்திட்டத்திற்குத் தேவையான அனைத்து வேட்டிகளையும், சேலைகளையும் கோவாப்டெக்ஸ் நிறுவனம் மூலமாக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்து கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதனால் தமிழகத்தில் உள்ள ஏழை நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(ஆ) மறைமலை நகர் இரயில் நிலையத்திற்கு "மறைமலை நகர்—காமராஜர் இரயில் நிலையம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்த அறிக்கை.

**மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டங்குளத்தூர்-சிங்கப்பெருமாள் கோயில் இரயில் நிலையங்களுக்கு இடையே உள்ள மறைமலை நகர் இரயில் நிலையத்திற்கு 'காமராஜர் நகர் இரயில் நிலையம்' எனப் பெயர் மாற்றம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கைகள் பல்வேறு பிரிவினர்களிடமிருந்தும் அரசுக்கு வந்துள்ளன. மேலும் 1988 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் தேதி அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் பிரதமர், நம் பாசத்திற்குரிய திரு. இராஜீவ் காந்தி அவர்கள் 'காமராஜ் நகர் இரயில் நிலையம்' என்ற பெயர் நிரந்தரமாக அவ்விடத்திற்கு இட வேண்டுமென்று மறைமலை நகரிய மக்கள் தன்னிடம் வேண்டுகோள் விடுந்ததாகவும் அறிவித்திருந்தார்.

பிறகு, காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த பல்வேறு தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மறைமலை நகர் இரயில் நிலையத்திற்கு காமராஜர் நகர் இரயில் நிலையம் என்று பெயரிடச் சொல்லி போராட்டங்கள் மூலமும், தனிப்பட்ட முறையில் கடிதங்களின் மூலமும் அரசுக்கு அவ்வப்போது வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

அமரர் இராஜீவ் காந்தி அவர்களிடம் பொதுமக்கள் விடுத்த வேண்டுகோளுக்குச் செவிசாய்க்கிற வகையிலும், நேற்று என்னைச் சந்தித்த காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுத்த இந்தக் கோரிக்கையினை நிறைவு செய்கிற வகையிலும், இது தொடர்பாக பொதுமக்களிடமிருந்து வந்த கோரிக்கைகளுக்கு மதிப்புக்

கொடுக்கிற வகையிலும் மறைமலை நகர் இரயில் நிலையத்தை
"மறைமலை நகர்—காமராஜர் இரயில் நிலையம்" எனப்
பெயர் மாற்றம் செய்ய (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய
அரசுக்குப் பரிந்துரை செய்ய அரசு முடிவெடுத்துள்ளது என்
பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசை
யைத்தட்டும் ஒலி).

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு
முன்னாலே மறைமலை நகரிலே, காமராஜர் நகரில் அகில
இந்திய காங்கிரஸ் கமிட்டியின் கூட்டம் நடைபெற்றபோது,
இராஜீவ்காந்தி அவர்கள்அங்கே வாழ்கிற அந்த நகரிய மக்களுடைய
கோரிக்கையை ஏற்று, அங்கே நிரந்தரமாக ஒரு இரயில் நிலை
யம் இருக்கும் என்றும், அந்த இரயில் நிலையத்திற்குக் காமராஜர்
இரயில் நிலையம் என்று பெயர் சூட்டப்படும் என்றும் அறிவித்
திருந்தார்கள். அதை இரயில்வே இலாக்காவும் ஏற்றுக்கொண்
டது. ஆனால் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்
போது அந்தப் பெயரை மாற்றியிருந்தார்கள். இப்போது
எங்களுடைய நீண்டநாள் கோரிக்கையை ஏற்று மறைமலை
நகர்-காமராஜர் இரயில் நிலையம் என்று அங்கே பெயர் சூட்டி
யிருப்பதற்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இப்போது மறைமலை நகர் இரயில் நிலையத்திற்கு
காமராஜர் பெயர் வைக்க வேண்டுமென்று நீண்ட பல வருடங்க
ளாக நாம் போராடி வந்திருக்கிறோம். எங்களுடைய தமிழ்
நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி
அவர்கள் தலைமையில் 50 ஆயிரம் பேர் சிறை சென்றோம்,
உண்ணா விரதம் இருந்தோம். அருமைத் தலைவர் இராஜீவ்காந்தி
அவர்கள் வைத்த காமராஜர் பெயரை வைக்க வேண்டுமென்று
நாங்கள் உண்ணாவிரதம் இருந்தும், தி.மு.க. கொடுங்கோல்
ஆட்சியில் உடனடியாக அந்தப் போர்டையும் அகற்றி, பிரிண்ட்
செய்யப்பட்டிருந்த டிக்கட்டுகளையும் மாற்றி சர்வாதிகாரம்
செய்தார்கள். அந்த நிலையைப் போக்கி (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே ஒன்றும் இல்லை
பிறகு சொல்லுங்கள். (குறுக்கீடு).

திரு. ஆர். சிங்காரம்: அந்த நிலைமையையும் போக்கி
நம்முடைய அருமைத் தலைவி, தமிழகத்தின் புரட்சித் தலைவி
அவர்கள் எங்கள் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, தமிழகத்



திலே உள்ள எங்களின் லட்சக் கணக்கான தொண்டர்களின்
உணர்வுகளைப் புரிந்துகொண்டு, அந்த இரயில் நிலையத்திற்கு
காமராஜர் இரயில் நிலையம் என்று பெயரை வைத்ததற்காக
எங்களுடைய உளப்பூர்வமான, இதயப்பூர்வமான நன்றியி
னைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)
அதே நேரத்தில், இந்தப் போராட்டத்தில் சிறை சென்ற
50,000 பேருக்கும் மேற்பட்டவர்கள் மீது.... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டிஸ்கஷன் வேண்டாம்.

திரு. ஆர். சிங்காரம் : நன்றி சொல்லவேண்டும். சேசை
ரெப்பர் செய்திருக்கிறார்கள். அந்த 50 ஆயிரம் பேருக்கும் மேற்
பட்டவர்கள் மீது, எங்கள் மீது கொலையாளிகள், கொள்ளை
யடித்தவர்கள் என்றும் வழக்குகள் போடப்பட்டு ஜெயிலில்
அடைக்கப்பட்டு கொடுங்கோல் செய்தார்கள். அப்படிப்பட்ட
அந்த வழக்குகளையெல்லாம் தமிழகத்தின் தங்கத் தலைவி
டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நீக்கி இருக்கிறார்கள்.
விடுதலை செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)
அதற்காகவும் எங்களுடைய இதயபூர்வமான நன்றியை,
தமிழகத்தின் காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி
அவர்களின் சார்பாகவும் தமிழகத்தின் தொண்டர்களின் சார்
பாகவும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, நன்றி, நன்றி.

## 4. கவன ஈர்ப்பு.

## சிதம்பரம் வட்டத்தில் காலரா நோய் பரவியுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கி
யத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்த கவன ஈர்ப்பு. திரு
ச. அழகிரி கொண்டு வருவார். திரு. ச. அழகிரி. (குறுக்
கீடு) அந்த ஆட்சியில் இந்த மாதிரி வழக்குப் போட்டார்கள்
என்று சொல்கிறார். அதைச் சொல்லாமல் என்ன செய்வார்
கள் ? உட்காருங்கள். உட்காருங்கள். இல்லை. அதில் டிஸ்
கஷன் போய்க்கொண்டேயிருக்கும். (குறுக்கீடு) தி.மு.க.
ஆட்சியில் அந்தமாதிரி வழக்குப் போட்டார்கள் என்று சொல்
கிறார். அந்த வழக்கை வாபஸ் வாங்கியதற்கு நன்றி என்கிறார்.
அதில் என்ன இருக்கிறது ? (குறுக்கீடு) உட்காருங்கள். திரு.
ச. அழகிரி, நீங்கள் பேசுங்கள்.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாமரைக்கனி உட்கார
வேண்டும். அதேமாதிரி பரிதி இளம்வழுதி உட்கார வேண்டும்.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, சிதம்பரம் நகரத்திலும், சிதம்பரம் நகரத்தைச் சுற்றி யிருக்கிற பன்னப்பட்டு, மேலழுங்கிலடி மற்றும் பல கிராமங் களிலும்........(குறுக்கீடுகள்)

முற்பகல் 11.10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னொருவர் பேசுகிற போது குறுக்கிடக் கூடாது. (குறுக்கீடுகள்) இதையெல்லாம் டிஸ்கஷனில் விட முடியாது. (குறுக்கீடுகள்) திரு. தாமரைக் கனி........, திரு. தாமரைக்கனி, வரம்புமீறிப் போகக் கூடாது. (குறுக்கீடுகள்) அதுமாதிரி, அதைவிட வரம்புமீறி பரிதி இளம்வழுதி போகக்கூடாது. (குறுக்கீடுகள்) உட்காருங் கள். (குறுக்கீடுகள்). அவர் பேசியது எதுவும் அவைக் குறிப் பிலே இல்லை. உட்காருங்கள். திரு. ச. அழகிரி அவர்கள். (குறுக்கீடுகள்) இப்போது நீங்கள் திரு. அழகிரிக்கு இடையூறு செய்கிற குற்றத்திற்கு ஆளாவீர்கள். திரு. ச. அழகிரி. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், (குறுக்கீடுகள்). நான் அழகிரியை அழைத்து இருக்கிறேன். (குறுக்கீடுகள்). நான் அழகிரியை அழைத்து இருக்கிறேன். நான் அழகிரியை அழைத்ததற்குப் பிறகு நீங்கள் பேசிக்கொண்டே இருப்பது முறையல்ல ; நட வடிக்கை எடுக்க வேண்டிவரும். (குறுக்கீடுகள்) நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். (குறுக்கீடு) அவரை உட்காரச் சொன் னேன் ; உட்கார்ந்து விட்டார். நீங்கள்தான் இப்போது உட் கார வேண்டும். (குறுக்கீடு) பாயின்ட் ஆஃப் ஆர்டர் இதில் ஒன்றும் இல்லை. இப்போது பாயின்ட் ஆஃப் ஆர்டர் எல்லாம் முடிந்து, அழகிரியை அழைத்துவிட்டேன். உட்காருங் கள். (குறுக்கீடு) இதிலே ஒன்றும் பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை. திரு. ச. அழகிரி.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இளம்வழுதி, வெளி யேற்ற வேண்டிவரும். (குறுக்கீடு) நடவடிக்கை எடுக்கவேண்டி வரும் ; உட்காருங்கள். (குறுக்கீடு). நீங்கள் உட்கார்ந்து விட்டு எழுந்திருப்பது முறையல்ல. திரு. ச. அழகிரி.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, " சிதம்பரம் வட்டத்தில் காலரா நோய் பரவியுள்ளது குறித்த " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ் வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர் களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :



அறிக்கை.

தென்னாற்காடு மாவட்டத்தில் சிதம்பரம், கடலூர் ஆகிய தாலுக்காக்களில் 6—8—1992 முதல் 11—9—1992 முடிய குடல் அழற்சி நோயினால் 83 நபர்கள் பாதிக்கப்பட்டனர். 23 நபர்கள் மரணமடைந்தனர். பாதிக்கப்பட்ட கிராமங்களின் பெயர் கீழ்வருமாறு :— கோடிபள்ளம், நாவபேட்டை, கீழ்ச் சாவடி, நக்கரவான்குடி, பன்னப்பட்டு, கில்லை, மடுவன்கரை, சிதம்பரநாதபேட்டை, மீதிக்குடி, பரதூர், சித்தலப்பாடி, வெண்றான்பேட்டை, புவனகிரி, கொன்குரான்பாளையம், வாசன் புதூர், வையூர், விபூஸ்ணபுரம், கீழகுன்டலபாடி, அம்மாபேட்டை, பூவான்குப்பம், பூண்டியான் குப்பம். பன்னப் பட்டு கிராமம்தான் அதிக எண்ணிக்கையில் அதாவது 36 நபர்கள் பாதிப்புக்குள்ளாகி 7 நபர்கள் இறந்துள்ளார்கள்.

இந்நோய் பாதிக்கப்பட்டதற்கான தகவல் பெறப்பட்டவுட னேயே கடலூர் துணை சுகாதார இயக்குநர் காலரா நோய் தடுப்புப்பணி சுகாதாரப் பணியாளர் குழுவுடன் சம்பந்தப் பட்ட கிராமங்களை தன் நேரடிப் பார்வை மேற்கொண்டு தேவையான மருந்துகள், கிருமிநாசினிகள், தடுப்பூசி மருந்துகள் முதலியவற்றுடன் சென்று தேவையான நோய் முன் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர். விளாகம் ஆரம்ப சுகாதார நிலையம் மருத்துவ அலுவலர் பாதிக்கப்பட்ட கிரா மத்திற்குச் சென்று 24 மணிநேரம் சிகிச்சை முகாம் அமைத்து பணி செய்துள்ளார். குடிநீர் வழங்கும் குழாய்கள் சிற்சில இடங் களில் உடைக்கப்பட்டுள்ளதால் அதன்வழியாக மாசுபட்ட குழாய்த் தண்ணீர் இக்கிராம மக்கள் பயன்படுத்தியதன் விளை வாக குடற் அழற்சி நோய் பரவியது. அக்கிராமத்தில் மேல் நிலை நீர்த்தொட்டிகளைச் சுத்தம் செய்து நீர் வழங்கும் குழாயில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்யும் வரையில், நல்ல சுகாதார முறையிலான குடிநீர் வழங்க மாற்று ஏற்பாடு உடனே செய்யப் பட்டது. காய்ச்சிய ஆறிய தண்ணீரை குடிக்கும்படியும், நோய் பரவாமல் சுகாதாரத்தைப் பேணும்படியும் கிராம மக்களுக்கு சுகாதாரக் கல்வி போதிக்கப்பட்டது. கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தேவையான தடுப்பு நடவடிக்கைக்கான மருந்து, கிருமிநாசினி மற்றும் பணியாட்கள் முதலியவற்றை தடையின்றி வழங்கி, சுகாதாரப் பணியாளர் களுக்கு உதவும்படியும் அறிவுரை வழங்கியுள்ளார்.

பொதுச் சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துத் துறை இணை இயக்குநர் (கொள்ளை நோய்) அவர்கள் பன்னப்பட்டு கிராமத் தையும் அதைச் சுற்றியுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களையும் 12—9—1992 முதல் 18—9—1992 வரை சுற்றிப் பார்த்து தேவையான தடுப்பு நடவடிக்கைகளை மேலாண்மை செய்தார். 14—9—1992 அன்று சிதம்பரம் மருத்துவமனையைப் பார்வை யிட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு தகுந்த முறையில் சிகிச்சை

அளிக்கும்படி முதன்மை மருத்துவ அலுவலருக்கு வேண்டிய அறிவுரை வழங்கினார். மருந்து கையிருப்பு தேவையான அளவு இருந்ததுடன் நோயாளிகளை பராமரிப்பதும் திருப்திகரமாக இருந்தது. மற்றும் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் தேவையான மருந்து மற்றும் கிருமிநாசினிகளை ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் குறைவின்றி வழங்கியுள்ளார்கள். ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்கள் களப் பணியாளர்களுடன் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்குச் சென்று நல்லமுறையில் கண்காணித்து குடற் அழற்சி நோய் பரவாமல், தடுக்க வேண்டிய எல்லா நடவடிக்கைகளும் எடுத்துள்ளனர்.

சிதம்பரம் நகராட்சியில் மருத்துவ அலுவலர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் கொண்ட 6 குழுக்கள் பாதிக்கப்பட்ட பகுதியில் தங்கி தேவையான எல்லா தடுப்பு நடவடிக்கைகளையும் எடுத்துள்ளனர். 16—9—1992 வரையில் சிதம்பரம் மற்றும் பாதிக்கப்பட்ட பகுதியில் 21,523 நபர்களுக்கு தடுப்பு ஊசி போடப்பட்டது. பாதிப்புக்குள்ளான கிராமங்களில் வழங்கும் குடி தண்ணீர் தேவையான அளவு பாசிகையூட்டுதல் செய்யப்பட்டுள்ளது. 26 நபர்களுடைய மலப் பரிசோதனைக்கு எடுக்கப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்நோயை மேலும் பரவாவண்ணம் அனைத்து சுகாதார நடவடிக்கைகளையும் மேற்கொண்டதின் விளைவாகத் தற்பொழுது நிலைமை கட்டுக்குள் அடங்கியுள்ளது.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் நகரத்திலேயும், சிதம்பரம் நகரத்தைச் சுற்றி இருக்கின்ற பன்னப்பட்டு, மேலமூங்கிலடி போன்ற கிராமங்களிலும் இதுவரை பொதுமக்கள் காலரா நோயினாலே 58 பேர் இறந்துபோய் இருக்கிறார்கள். சிதம்பரம் நகரைப் பொறுத்தவரை 1952 ஆம் ஆண்டில் அங்கே குடிநீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டன. அவைகள் மிகவும் பழுதடைந்துவிட்ட காரணத்தினாலே, சாக்கடைநீர் குடிநீரோடு கலந்து வருகின்ற காரணத்தினாலே அங்கே உள்ள மக்களுக்கு காலாரா நோய் ஏற்பட்டு இருக்கிறது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய அறிக்கையிலே அறிவித்து இருக்கிறார். அதுபோல பன்னப்பட்டு கிராமத்தில் 11 அரிசன மக்கள் காலரா நோயால் இறந்துபோய் இருக்கிறார்கள் என்று அறிவித்து இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள். கொடுத்து இருக்கிற அறிக்கையை வைத்து இரண்டு கேள்விகள் கேளுங்கள். அந்த அறிக்கையையே திரும்பச் சொல்ல வேண்டுமென்பதல்ல. ''ஜீரோ அவர்'' மென்ஷன் என்பது வேறு, இது வேறு.

திரு. ச. அழகிரி : அங்கே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இருக்கிறது. 6 ஆழ்குழாய்க் கிணறுகள் இருக்கின்றன; 6 குழாய்ப் பம்புகள் இருக்கின்றன. அதாவது சற்றேறக்குறைய 10 இலட்

சம் ரூபாய்க்கு அரசாங்கம் அங்கே குடிநீர் வசதிக்கு ஏற்பாடு செய்து இருந்தும்கூட பொது மக்களுக்கு குடிநீர் கிடைக்காத காரணத்தால், வாய்க்காலிலேபோன நீரைக் குடித்துவிட்ட காரணத்தால் அவர்கள் இறந்து போய் இருக்கிறார்கள். அதனை அரசு அறியுமா என்பதனை இந்த நேரத்திலே கேட்க விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இங்கே கிடைத்து இருக்கின்ற தகவலின்படி குடிநீர்க் குழாய்கள் உடைக்கப்பட்ட காரணத் தினாலும், அப்படி உடைக்கப்பட்ட இடங்களிலே மற்ற அசுத்த மான தண்ணீர் கலந்துவிட்டதன் காரணத்தினாலும்தான் அந்த காலரா நோய் அங்கே ஏற்பட்டு இருக்கிறது என்று அறிக்கை கொடுத்து இருக்கிறார்கள். இந்தத் தகவல் தெரிந்த உடனே சுகாதார அதிகாரிகள் நேரடியாக அங்கே சென்று முகாம் அமைத்து. 24 மணி நேரமும் நோய் தடுப்புப் பணியை மேற் கொண்டு இருக்கிறார்கள்.

அதேபோன்று சிதம்பரத்திலே 6 இடங்களிலே குழாய்கள் அமைத்து, இந்த மருத்துவ வசதியையும் செய்து கொடுத்ததன் மூலமாகத்தான் இப்போது கட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறது. தற்போது நிலைமை கட்டுக்குள் அடங்கி இருக்கிறது என்ற தகவலையும் கொடுத்து இருக்கிறார்கள்.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குடிநீர்க் குழாய்கள் கடந்த 6 மாத காலமாகச் செயல்பட வில்லை,, என்ன காரணம் என்று ஊராட்சி ஒன்றிய ஆணை யாளரைக் கேட்டபோது 6 மாத காலமாக குடிநீர்க் குழாய் களுக்கான உதிரி பாகங்கள் எங்களிடம் வரவில்லை என்று சொல் கிறார்கள். 6 மாத காலமாக குடிநீர்க் குழாய்கள் இயங்காத காரணத்தினால், பொதுமக்கள் வாய்க்காலில் வந்த தண்ணீரைக் குடித்த காரணத்தினால் இந்த நோய் ஏற்பட்டு இருக்கிறது. 6 மாத காலத்திற்கு உதிரி பாகங்கள் கிடைக்காததற்கான காரணம் என்ன? அரசு ஏன் அதிலே அக்கறை எடுத்துக்கொள்ள வில்லை? அரசாங்க அதிகாரிகளைக் கேட்டால், அதற்கு முன்பு நாங்களே உதிரி பாகங்களை வாங்கிவந்தோம்; ஆனால், இப் போது அப்படி வாங்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு இருக் கிறது. எனவே, எங்களால் வாங்கமுடியவில்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக உதிரிப் பாகங்களை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கு அனுப்புவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்பட்டிருக்கிற மரணங்கள் இயற்கையான, இயல்பான மரணங்கள் அல்ல. அங்கே இருக்கிற நிர்வாகத்தின் அலட்சியப் போக்கால் ஏற்பட்ட மரணங்கள். எனவே, அந்த ஏழை மக்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய நிவாரண நிதியிலிருந்து ஏதாவது உதவி செய்ய முன்வருவார்களா என்று இந்த நேரத்தில் நான் அறிய விரும்புகிறேன்.

பு-2 53-282—8

முற்பகல் 11-15

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே அவர்கள் என்ன கொடுத்திருந்தார் களோ அதற்கு மாறுபட்ட வேறு துறைக்கு சம்பந்தப்பட்ட சில கேள்விகளை இங்கே கேட்டிருக்கிறார்கள். கவனஈர்ப்புத் தீர் மானத்தில் கொடுக்கப்பட்டது காலரா நோயால் இறந்தவர் களுக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதுதான். எனவே, நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தவரையில் இந்தப் பிரச்சினை ஏற்பட்டவுடனே கவனித்து இருக்கிறது. எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. கொடுக்கப்பட்ட அறிக்கையில் இப்படிப்பட்ட கருத்துக்கள் சொல்லப்படவில்லை. அவர் சொல்லியிருப்பது அங்கேபோய்க் கொண்டிருக்கிற குடி தண்ணீர் குழாய்கள் உடைக்கப்பட்டிருக்கிறது. அப்படி உடைக் கப்படுகிறபோது—சில நேரங்களில் கிராமங்களில் உடைத்து விடுகிறார்கள். நமக்கே தெரியும். உடைக்கப்படுகிறபோது தண் ணீர் மாசுபடுகிறது. அதன்காரணத்தால் இது வந்திருக்கிறது. இது தெரிந்தவுடன் எல்லா நடவடிக்கைகளும் உடனடியாக எடுத்திருக்கிறோம். மற்ற பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் தனிப்பட்ட முறையில் சம்பந்தப்பட்ட துறைக்கு மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தால் நல்லது. நேற்றே கூட இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை பார்த்தவுடன் உடனடியாக உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு இருப்பதாக என்னிடத்திலே தெரிவித்து இருக்கிறார்கள். எனவே, தனியாக அதைப்பற்றி பேசினால் அது சரியாக இருக்கும் என்று கருது கிறேன்.

## 5. அறிக்கைகள் அளித்தல்.

### (அ) பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. ம. சின்னசாமி, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் பின்வரும் அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்:

(1) இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1983-84 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் தமிழ்நாடு மின்வாரியம் தொடர்பான பத்திகள் குறித்து பொது நிறுவனங்கள் குழு அளித்த 18-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நட வடிக்கைகள் பற்றிய குழுவின் எண்பத்தொன்றாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.



(2) இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1981-82 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் போக்குவரத்துத் துறை தொடர்பான பத்திகள் குறித்து பொது நிறுவனங்கள் குழு அளித்த 30-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய என்பத்திரெண்டாவது அறிக் கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) அரசு உறுதிமொழிக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். திருமதி ரமணி நல்லதம்பி, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் :

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (பத்தாவது சட்டமன்றப் பேரவை) ஆறாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. அறிவிப்புகள்.

### (அ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1992 (ஆ. செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 7. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ் நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி(திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 8 முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1992–93—பொதுவிவாதம் —தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992–93 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை மீது விவாதம் தொடர்கிறது. நேற்றையதினம் பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் பேசமுடியாமல் போய்விட்டது. அவர்கள் அனைவரும் பேசவேண்டுமென்று என்னிடத்தில் கோரிக்கை எழுப்பியிருக்கிறார்கள். எனவே, இப்போதிருந்து 12.45 வரையிலும் விவாதத்திற்கும், பதிலுரைக்கும் ஒதுக்கலாம் என்று கருதுகிறேன். அதற்குள் முடிக்கிற வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் சுருக்கமாக தங்களுடைய கருத்துக்களைச் சொல்ல வேண்டும். திரு. ஆர். சிங்காரம்.

முற்பகல் 11–20

*திரு ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா ஒரே நாடு, எத்துணை மொழி, எத்துணை இனம், எத்துணை குலம், எத்துணை மதம் இருந்தாலும், அவைகளின் முரண்பாடுகளை எல்லாம் கடந்து, நாம் இந்தியர், நமது நாடு இந்தியா என்றஉணர்வை ஊட்டி வளர்த்தது காங்கிரஸ் பேரியக்கம். குமரி முதல் இமயம் வரை உள்ள பிரதேசத்தை ஒரே தேசமாக கட்டிக் காத்தது காங்கிரஸ் பேரியக்கம். அன்று நாட்டுப் பிரிவினை பேசியவர்கள் எல்லாம், தங்கள் பகுதிகளிலே மட்டும் இருந்து கொண்டு பேசிவிட்டு, பின்னாலே நாடாளு மன்றம் சென்ற பிறகு, கொஞ்சம் கொஞ்சமாக நாட்டுப் பிரிவினை உணர்வுகளை மறந்தார்கள். தேச ஒற்றுமையில் அக்கறை செலுத்தினார்கள். சில தலைவர்கள் கூட தேச ஒற்று



மையில் மிகுந்த ஈடுபாடு கொண்டு, தேச ஒற்றுமைக்காக பாடு பட்டார்கள். இன்றைய நிலையில், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர், புரட்சித் தலைவி அவர்கள் எடுத்துள்ள நிலை என்ன? தேச விரோத சக்திகளை முறியடித்த இந்த மாமன்றத்திலே அழுத்தந்திருத்தமாக சூளுரைத்துள்ளார்கள். தேச ஒற்றுமையிலே அக்கறை கொண்ட ஒருவரால்தான் இந்தச் சூளுரையைச் செய்ய முடியும். தேச ஒற்றுமைக்காக முதல் குரல் கொடுக்கும் தேசியத் தலைவியாம், புரட்சித் தலைவியை நான் மனமார உளமார ஒரு காங்கிரஸ்காரன் என்ற முறையிலே அவர் களைப் பாராட்டுகிறன். (மேசையைத் தட்டும் ஒலி)

தேச விடுதலைக்காகப் போராடிய தியாகிகளுக்கு, நாங்கள் ஆட்சி செய்தபோது கூட செய்ய முடியாத ஒரு காரியத்தை, எங்கள் காங்கிரஸ் கட்சி ஆட்சி நடத்தும் மாநிலங்களில் கூட செய்யாத ஒரு காரியத்தை, தமிழகத்ினுடைய முதல்வர், டாக்டர், புரட்சித்தலைவி அவர்கள் செய்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகஸ்ட் புரட்சி பொன் விழா அரசாலே கொண்டாடப்பட்டு தியாகிகளுக்கு பென்சனை ஆயிரமாக உயர்த்தி, பொன்னாடை போர்த்தி தஞ்சாவூர்த் தட்டு பரிசளித்து அதைக் கொண்டுசெல்ல அருமையான சூட்கேஸ் வழங்கி கௌரவித்தார்கள். புரட்சித் தலைவி அவர்கள் விழாவிற்கு வந்தபோது, தியாகிகள் எல்லாம் காந்தி வாழ்க, நேரு வாழ்க, வந்தே மாதரம், ஜெய் ஹிந்த் என்று கோஷம் போட்டார்கள். முதல்வர் அவர்கள் மகிழ்ச்சியோடு மேடையில் அமர்ந்து அனைவரும் பேசிய பிறகு, தியாகிகளுக்கு பென்சனை ஆயிரமாக உயர்த்தி, பொன்னாடை போர்த்தி, தஞ் சாவூர்த் தட்டு கொடுத்து, சூட்கேசும் கொடுத்து, அதை வாங்கிய வுடன் அதே தியாகிகள் ஜெயலலிதா வாழ்க, முதல்வர் வாழ்க, புரட்சித் தலைவி வாழ்க, அம்மா வாழ்க என்று கோஷம் போட் டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

தேசத் தியாகிகளை மதிக்கின்ற பண்பு, புரட்சித் தலைவி அவர்களிடம் இருந்ததால்தான், காந்தியாரை வாழ்த்தியவர்கள், நேருவை வாழ்த்தியவர்கள், வந்தே மாதரம் என்றவர்கள், ஜெய் ஹிந்த் என்றவர்கள், நம்முடைய புரட்சித் தலைவியை வாழ்க, வாழ்க என்று கோஷம் போட்டார்கள். அந்த அடிப்படையிலே தேசத் தலைவர்கள் வரிசையிலே நம்முடைய புரட்சித் தலைவி அவர்களைச் சேர்த்தது குறித்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். புரட்சித் தலைவியையும், அதே வரிசையில்தான் அவர்கள் சேர்த்து, அங்கே பாராட்டினார்கள்.

பிரச்சினைகளில் எவ்வளவோ நிர்வாக ரீதியாக சிரமங்கள் இருந்தாலும், அரசியல் ரீதியாக சங்கடங்கள் இருந்தாலும், தமிழ்நாட்டின் கோரிக்கைகள் வலுவானது, நியாயமானது

ஏன்பதாலே மிகவும் உறுதியான நிலைப்பாட்டை எடுத்து, போராடி வருகின்றார் வீராங்கனை, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

இதில் என்ன ஒரு வேடிக்கை என்று சொன்னால், நான் முன்பு சொன்னதைப் போல புரட்சித் தலைவி அவர்கள் வருகின்ற போது, அனைவரும் வந்தே மாதரம், ஜெய் ஹிந்த் என்று சொன்னார்கள். அதே தியாகிகள் பின்பு, புரட்சித் தலைவி வாழ்க என்று சொன்னார்கள். ஆனால் நினைத்துப் பார்க்கிறேன். வேறு ஆட்சியாக இருந்திருந்தால், அங்கே முதலமைச்சர் வருகின்றபோது அந்த முதலமைச்சருடைய பெயரை, வாழ்க வாழ்க என்று சொல்வதற்கு 500 பேரை செட்-அப் செய்து, அங்கே அமரச் செய்து வைத்திருப்பார்கள். ஆனால் அந்த முயற்சியை எல்லாம் எடுக்காமல், அதாவது நிதானமான முறையில், அமைதியான முறையில், ஒழுங்கான முறையில் முறைப்படி நடக்க வேண்டும் என்ற உணர்வோடு, அங்கே முறைப்படி தியாகிகள் அனைவரையும் அமர வைத்து, அவர்களை கௌரவித்த நல்ல காரியத்தை நான் பாராட்டாமல் இருக்க முடியாது. எனவே தேசிய உணர்வு கொண்ட, புரட்சித் தலைவி அவர்களை நான் மீண்டும் பாராட்டுகிறேன்.

சென்னை மணலியில் அரோமாட்டிக் தொழிற்சாலைக்கு மத்திய அரசின் அனுமதி பெற்ற சாதனை, சிவகங்கையில் கிராபைட் தொழிற்சாலை, ஜெயங்கொண்டத்தில் நிலக்கரியில் மின்சாரம் உற்பத்தி செய்யும் பிரம்மாண்டமான திட்டம், இன்னும் பல்வேறு திட்டங்களை நான் சொன்னால் பேரவைத் தலைவர் அவர்கள் நிறுத்திவிடுவார்கள். ஆகவே அவைகளைச் சொல்வதற்கு நேரம் இல்லை. என்றாலும், இந்த மூன்றையும் சொல்கிறேன். இதுபோன்ற பல திட்டங்களை மத்திய அரசோடு நல்ல அணுகுமுறையோடு இருந்து, தமிழ்நாட்டிற்குப் பெற்றுத் தந்த சிறப்பு உடையவர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

இன்னும் பல கல்லூரிகளும், என்ஜீனியரிங் கல்லூரிகளும், கலைக் கல்லூரிகளும் தொடங்க இருக்கிறார்கள்.
பேராவூரணியிலே, என்ஜீனியரிங் கல்லூரி, கலைக்
கல்லூரி தேவை என்பதுதான் என்னுடைய கோரிக்கையாகும்.
வெத ஆகமக் கல்லூரி புரட்சித்தலைவி என்று நாம் முதலமைச்
சரைச் சொல்கின்றபோது புரட்சி என்ற வார்த்தையோடு
நேருங்கிய தொடர்பு உள்ளவர்கள் நம் நினைவிற்கு வருகிறார்கள்,
புரட்சி என்றவுடன், நம் நினைவிற்கு காரல் மார்க்ஸ், எஞ்சல்ஸ்
லெனின், ஆகியோர் நினைவிற்கு வருகிறார்கள். புரட்சித்
தலைவியை மார்க்சுடன் ஒப்பிடலாமா என்று சிலர் நினைக்கலாம்.
ஒப்பிடலாம். ஏன்? சமூகத்தில் எந்த உருவத்தில் சுரண்டல்
வந்தாலும், அதை எதிர்த்து முறியடிக்க மார்க்ஸ் தத்துவம்
தந்தார். (மேசையைத் தட்டும் ஒலி.) இருந்தாலும் வர்க்க



சுரண்டலை முறியடிக்கத்தான் அவர்கள் முக்கியத்துவம் தந்து
வர்க்கப் போராட்டமே, அதன் வெற்றியே, மனித தர்மத்திற்கு,
நன்மை பயக்கும் என்ற முடிவிற்கு மார்க்ஸ் அவர்கள்
வந்தார்கள்.

முற்பகல் 11–25.

இந்தியாவில் ஆதிகாலம் தொட்டு ஒரு சுரண்டல் ஆதிக்கம்
செலுத்தியது. என்ன சுரண்டல்? அதுதான் வருண சுரண்டல்.
இந்தச் சுரண்டலை முறியடிக்க பல்வேறு தலைவர்கள் முயன்
றார்கள். முடியவில்லை. ஆனால் இந்தியாவிலேயே
முதன் முதலாக பெரும் புரட்சிகரமான செயலை நமது முதல
மைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் செய்துள்ளார்கள்.
என்ன புரட்சி என்று சிலர் கேட்கலாம். அதே நேரத்தில்
சமதர்ம தர்மத்தை அடிப்படையாகக் கொண்டு, மனு தர்மத்
தில் வேதங்களை எல்லாம் பிராமணர்கள் அல்லாதவர்கள் படித்
தால் அவர்கள் நாக்கை அறுக்க வேண்டும், படிக்கக் கேட்டால்
ஈயத்தைக் காய்ச்சி காதிலே ஊற்ற வேண்டுமென்று சொல்லப்
பட்டுள்ளது. அந்த நிலையை புரட்சித் தலைவி அவர்கள் அடி
யோடு உடைத்தெறிந்து விட்டார்கள். (மேசையைத் தட்டும்
ஒலி) எப்படி? வேத ஆகம கல்லூரி தொடங்க ஏற்பாடு செய்
துள்ளார். அதிலே நான்கு வருணங்கள் மட்டுமல்லாது, ஆதி
திராவிடர்களும் வேதங்களைப் படிக்சலாம் என்ற அறிவிப்பைச்
செய்தது பெரும் புரட்சி அல்லவா? பள்ளர், பறையர் என்று
ஒதுக்கி வைக்கப்பட்ட ஆதி திராவிடர்களும் வேதம் படிக்காலம்
என்று அரசு அறிவித்தது, அது என்ன சாதாரண விஷயமா?
மாபெரும் புரட்சி அல்லவா? இதை ஏன் நாம் ஏஞ்சல்ஸ்
ஸோடு ஒப்பிடக் கூடாது? ஆகவே தான்புரட்சி, புரட்சி,
புரட்சி என்கிறோம். மாபெரும் புரட்சியைத் தந்த புரட்சித்
தலைவி அவர்களை மீண்டும் நான் காங்கிரஸ்காரன் என்ற முறை
யில் மனமார, உளமார பாராட்டுகிறேன். (மேசையைத்
தட்டும் ஒலி).

சாராயத்தைப் பற்றி எல்லாம் இங்கே பேசினார்கள். சில்
லறை. சாராயம் என்பது ஒழிக்கப்பட வேண்டுமென்ற உணர்
வில் சொல்லப்படுவது இரண்டு கட்டம். சாராயத்தை அடி
யோடு ஒழிக்க வேண்டுமென்ற உள்ள உணர்வோடு, உண்மை
யாக, நீதியாக, நேர்மையாக நினைப்பது ஒன்று. சாராயத்தை
ஒழிக்க வேண்டுமெனறு நடிப்பது ஒன்று. கடந்த ஆட்சிக்
காலத்தில் நடித்தார்கள். ஆனால் இந்த ஆட்சியில் நம்முடைய
முதலமைச்சர், புரட்சித் தலைவி அவர்கள் உண்மையிலேயே
சாராயத்தை ஒழிக்க வேண்டுமென்ற உணர்வில்தான் செயல்
படுகிறார்கள். அதை யாரும் மறுக்க முடியாது. குறை
சொன்ன பழனிசாமி கூட மறுக்க முடியாது. சாராயத்தை
ஒழிக்க வேண்டுமென்ற உணர்விலே நூற்றுக்கு நூறு சரியானவர்
நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள். அதை எப்படியெல்லாம்
ஒழிக்க வேண்டுமென்று பல்வேறு நிலைகளில் திட்டமிட்டு,
சிந்தித்துச் செயல் பட்டார்கள். உத்தரவிட்டார்கள். ஆனால்

[திரு. ஆர். சிங்காரம்] [1992 செப்டம்பர் 24

நடை முறையில் 50 சதவிகிதம் பல இடங்களில் வெற்றிகரமாக
நடந்திருக்கிறது. இன்னும் பல இடங்களில் 60 சதவிகிதம்
நடந்திருக்கிறது. இன்னும் பல இடங்களில் நானே மது ஒழிப்புக்
கமிட்டிகளை அமைத்து, எல்லா ஏற்பாடுகளும் செய்தும் கூட.
60 சதவிகிதம் ஒழிந்திருக்கிறது. 40 சதவிகிதம் இருக்கிறது
காரணம், இதை திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு
சவாலாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள், ஏன் ? தி.மு.க.
தலைவர் கலைஞர் அவர்கள் அங்கே திட்டமிட்டுச் சொன்னார்
கள். ஒரு ஆண்டு கழித்து யாரோ சாராயத்தில் செத்து விட்
டார்கள் என்பதற்காக சட்டத்தை மாற்றி, மலிவு விலை
மதுவைக் கொண்டு வந்தார்கள். ஆனால் இன்று புரட்சித்
தலைவி அவர்கள் ஒழித்தே தீர வேண்டுமென்று சொல்கிறார்
கள். ஆகவே இதற்குச் சவாலாக நாம் எப்படி எதிர்த்து, அதை
முறியடிக்க வேண்டுமென்று அவர்கள் செயல்பட்டுக் கொண்
டிருக்கிறார்கள். அங்கே சொல்லும் போது யாரோ ஆட்சேபம்
சொன்னார்கள். நான் சொல்கிறேன். இன்று சாராயம்
காய்ச்சுபவர்கள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச்
சார்ந்தவர்கள் தான். அதிலே மாறுபாடு கிடையாது. இவர்
கள் எல்லாம் நமக்குள்ளே இருக்கின்ற சிலரையும் கூப்பிட்டுக்
கொண்டு போய் கூட்டு சேர்த்தால் சமாளித்து விடலாம்
என்று எண்ணுகிறார்கள். நம்மவர்கள் யாரும் ஏமாற மாட்
டார்கள். ஏமாறவில்லை. அது எனக்குத் தெரியும்.

ஆட்சி என்றால் குறைகள் இருக்கத்தான் செய்யும், குற்றங்
கள் இருக்கத்தான் செய்யும். ஆனால் நம்முடைய முதலமைச்ச
ருடைய உணர்வு என்ன ? அமைச்சர் பெருமக்களுடைய உணர்வு
என்ன ? சட்ட மன்ற உறுப்பினர்களுடைய உணர்வு என்ன ?
சாராயத்தை ஒழிக்க வேண்டுமென்பதுதான். அதற்கு நாம்
எல்லோரும் ஒன்று சேர்ந்து செயல்பட வேண்டும். நான்
முதலிலே சொன்னேன். முதலமைச்சர் மட்டும் செயல்பட்
டால் போதாது. அனைவரும் ஒன்று திரள வேண்டும். கிராம
மக்களும் கூட்டு சேர வேண்டும். மது ஒழிப்புக் கமிட்டிகளை
அமைக்க வேண்டும். அதன் வாயிலாக மக்களைத் திரட்டி,
அந்த மதுவை ஒழிக்கும் முயற்சிகளை எடுக்க வேண்டுமென்ற
அடிப்படையிலே பரிசுத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள்,
நம்முடைய முதலமைச்சர். அதிலே நான் பரிசு வாங்க வேண்டு
மென்று தீவிரமாக இன்னும் செயல் பட்டுக் கொண்டிருக்கிறேன்.
நிச்சயமாக நான்தான் பரிசு வாங்க நினைக்கிறேன். அந்த
அளவிற்கு மிகச் சிறப்பான முறையில் கள்ளச் சாராயத்தை
ஒழிக்க வேண்டுமென்ற உணர்வில் இங்கே ஒராண்டு கழித்து,
இரண்டு ஆண்டுகள் கழித்து இந்த முறியடிக்கவில்லை, முறி
யடிக்க முடியவில்லை, ஆகவே மீண்டும் மலிவு விலை மதுவைக்
கொண்டு வருவோம் என்று சொல்வார்கள் என்று பலர் எதிர்
பார்த்தால் அவர்கள் ஏமாந்து போவார்கள். நிச்சயமாக
நடக்காது. நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இருக்கின்ற



1992 செப்டம்பர் 24] [திரு. ஆர். சிங்காரம்]

வரையில் தமிழகத்தின் தாய்மார்கள் எல்லாம் நம்பிக்கையோடு
இருக்கிறார்கள். நிச்சயமாக ஒழிப்பார்கள் என்று. ஆக அந்த
அளவுக்கு இங்கே நிலைமைகள் இருக்கின்றன.

அதே நேரத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்
மாநாடு நடத்தி, அந்த மாநாட்டில் நம்முடைய முதலமைச்சர்
அவர்கள் மாலை 4 மணியளவில் உட்கார்ந்து, விடியற்காலை
6 மணிக்குத்தான் சென்றார்கள். அத்தனை மணி நேரம்
அவர்கள் உட்கார்ந்த அதிசயத்தைப் பார் என்று சொல்கின்ற
வேளையில், நம்முடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி
விடுதலைப் புலிகளை ஒழித்த அதிசயத்தைப் பார் என்று சொல்
கின்ற அதே நேரத்தில், தமிழகத்தில் மிகச் சிறப்பாக நிர்வா
கத்தை, மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு
என்று சொல்கின்ற அளவில் காங்கிரஸ்காரர்களையும், மற்றவர்
களையும் மதித்து நடக்கின்ற அதிசயத்தைப் பார் (மேசையைத்
தட்டும் ஒலி) என்று சொல்கின்ற அதே நேரத்தில் சாராயக்
கடைகள் இருக்கின்ற பாரையும் பார் என்று சொல்கின்ற வேளை
யில் சில சங்கடங்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள்
அதற்குத் தெளிவாகப் பதில் சொல்லி இருக்கிறார்கள். அவர்கள்
நேரிடையாக சாப்பிட்டு விட்டு வீட்டுக்கு போனால் அவர்
களுடைய துணைவியாரை அடிப்பார்கள், மிதிப்பார்கள் உதைப்
பார்கள். ஆகவே அந்த பாரில் சாப்பிட்டால் வீட்டிற்கு
போவதற்குள் அந்த போதை இங்கேயே தெளிந்து விடும் என்
பதற்காகத்தான் பார் வைத்திருக்கிறோம் என்றெல்லாம் சொல்
லியதை அறிக்கையிலே பார்த்தேன். உண்மைதான், நியாயம்
தான். ஆனால் அந்த பாரை பயன்படுத்திக் கொண்டு பல
சங்கடங்களை மக்களுக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.
உங்களுக்கு பொருளாதார சிக்கல்கள் எந்த அளவுக்கு இருக்கின்
றன என்பதை நான் உணருகிறேன். மத்திய சர்க்கார் உங்க
ளுக்கு என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமோ அவைகளைச்
செய்ய நாங்கள் எல்லோரும் ஒன்றாக சேர்ந்து மத்திய சர்க்கா
ரிடத்திலே முறையிட்டு வேண்டிய நிதியை உங்களுக்கு வாங்கி
தருவதற்கு உதவி செய்கிறோம். நீங்களும் எவ்வளவு பெரிய
நஷ்டம் வந்தாலும் கஷ்டம் வந்தாலும் துன்பம் வந்தாலும்
துயரம் வந்தாலும் வேதனை வந்தாலும் வருகிறகாலத்திலே முழு
மையாக மதுவிலக்கை அமல் செய்யவேண்டும் என்று உங்களை
பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11–30

அடுத்து, தஞ்சை மாவட்டத்திலே கல்லணை கால்வாய்.
அந்தக் கால்வாய் யை சீர்திருத்த வேண்டும் என்று இங்கே
இந்த அறிக்கையில் கூட இருக்கிறது. கல்லணை கால்வாய்
கட்டப்பட்டு 45 ஆண்டுக் காலமாக எந்த சில்டும் எடுக்கவில்லை,
வண்டலும் எடுக்கவில்லை;. அது 2 அடிக்கு உயர்ந்து விட்டது.
அதை எடுக்க வேண்டும் என்று சென்ற ஆண்டு நம்முடைய
முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொண்டேன். நம்
முடைய பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்

[திரு. ஆர். சிங்காரம்] [1992 செப்டம்பர் 24

கொண்டேன். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டேன். உடனடியாக 15 இலட்சம் ரூபாய் அனுமதித்து 3 கிலோ மீட்டருக்கு சில்ட் தற்போது எடுத்திருக்கிறார்கள். இன்னும் 7 கிலோ மீட்டர் எடுக்கவேண்டும். அதை எடுத்தால்தான் எங்களுடைய பேராவூரணி பட்டுக்கோட்டை கடைமடைப் பகுதிக்கு தண்ணீர் சென்று சேரும் சூழ்நிலை ஏற்படும். ஆகவே அதையும் நீங்கள் செய்ய வேண்டும் என்று நான் உங்களைப் பணிவன்போடு வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் நீண்ட நேரம் பேசக் கூடாது, விரைவில் முடித்து விடுங்கள் என்று அறையிலேயே சொன்ன காரணத்தினால் நான் இத்தோடு முடித்து, நம்முடைய புரட்சித் தலைவி தமிழ்கத்தினுடைய முதலமைச்சராக வந்ததில் இருந்து தமிழக மக்கள் அத்தனை பேரும் நலமாக இருக்கிறார்கள். கிராமங்களிலே எந்த விதமான சலனமும் கிடையாது. நீங்கள் எதற்கும் பயப்பட வேண்டிய அவசியமே கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) கிராம மக்கள் மத்தியிலே எந்தச் சலனமும் கிடையாது. மேலே உள்ள எங்களைப் போன்றவர்கள் தான் சில சலசலப்புகளையும் சலனங்களையும் செய்கிறார்களே தவிர அங்கே இல்லை. ஆனால் எதையுமே சுட்டிக் காட்டினால் உடனே நடவடிக்கை எடுக்கின்ற திராணி சக்தி தெம்பு அனைத்தும் முதலமைச்சரிடத்திலே இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய கட்சிக்காரர்களாக இருந்தாலும் சரி, தோழமைக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் சரி, தமக்கு வேண்டியவர்களாக இருந்தாலும் சரி, வேண்டாதவர்களாக இருந்தாலும் சரி, சுட்டிக் காட்டினால் உடனே தட்டிக் கேட்கின்ற நடவடிக்கை இருக்கிறது. நான் இப்படிப்பட்ட அமைச்சர்களையே பார்த்தது கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) யதார்த்தமாக சொல்லுகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கே சென்றால், உடனடியாக சட்டமன்ற உறுப்பினர்களை உள்ளே அனுப்பு என்று முதல் மரியாதை தருகிறார்கள். என்ன கோரிக்கை சொல் என்று உடனே நடவடிக்கை எடுக்கிறார்கள். நானும் எத்தனையோ பேர்களை பார்த்திருக்கிறேன். இதே பழனிசாமியை பார்த்து இருக்கிறேன். ஆனால் பழனிசாமிக்கு மிகுந்த மரியாதை கொடுக்கிறார்கள். (சிரிப்பு) நான் மறுக்கவில்லை. கடந்த ஆட்சிக் காலத்தில் நிரம்ப கொலை நடந்து கொள்ளை நடந்தது, ஆனால் அவைகள் திட்டம் இட்டே மேலேயிருந்து கீழே வரை பங்கேற்று கொலை கொள்ளை நடக்கும். சட்டமன்றத்திலே சுட்டிக் காட்டினால் ஏன் என்று கேட்க மாட்டார்கள். அவர்கள் தி.மு.க. காரராக இருந்தால் அந்த வழக்கையே மாற்றி விடுவார்கள். உதாரணம் நிறைய இருக்கிறது. (குறுக்கீடுகள்) பேராவூரணியில் சுமதி என்ற பெண்ணை கற்பழித்த வழக்கை இதே சட்டமன்றத்திலே சொல்லிய போது அன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள் என்ன சொன்னார்? (குறுக்கீடுகள்).



1992 செப்டம்பர் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பரிதி இளம்வழுதி பேசுங்கள்.

திரு. போளூர் வரதன் : அவர் பேசிக் கொண்டிருக்கும் போது ஏன் அனுமதிக்கிறீர்கள்? அவர் பேசிய பிறகு பேசட்டும். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் அவர்களே அனுமதிக்கிறார்கள். அவர் "I am not yielding என்று சொல்லவில்லை.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் அவர்கள் இப்படி பேசுவதிலே எனக்கு எந்த விதமான ஆச்சரியமும் இல்லை. (குறுக்கீடு) அவர் மிகவும் நல்லவர். அவர் மிகவும் நல்லவர். கொண்ட கொள்கையிலேயிருந்து மாறாதவர். எங்கள் ஆட்சியிலேயும் இப்படிப் பேசினார். உங்களுடைய ஆட்சியிலும் இப்படிப் பேசுகிறார், யாராக இருந்தாலும் ஒரே ஐஸ் மழைதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது இந்த அவையிலே எழுப்ப வேண்டிய அளவுக்கு ஒன்றும் முக்கியமானது அல்ல. மற்ற உறுப்பினர்களைப் பற்றி இப்படிப் பேசுவது கூடாது.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்காரம் அவர்கள் என்றைக்கும் கொண்ட கொள்கையிலே இருந்து நழுவாதவர் என்பது எல்லோருக்கும் தெரியும். நாங்கள் எதிர்க்கட்சியிலே அமர்ந்து கொண்டிருந்த நேரத்திலே அன்றைக்கு முதலமைச்சராக இருந்த கருணாநிதி இடத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அன்றைக்கும் இது போன்ற தவறுகள் நடைபெறுகிறது, இது போன்ற கொலைகள் நடைபெறுகிறது என்பதை சுட்டிக்காட்டிய வீரன்தான் என்பதை மறந்து விடக் கூடாது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ராமசுப்பு உட்காருங்கள். தேவையில்லாத குறுக்கீடு. பேசிய உறுப்பினர் மீது உள்நோக்கம் கற்பிப்பது சரியல்ல. மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு சிங்காரம் அவர்கள் ஒரு தோழமை கட்சிக்குரிய பண்போடு அவருடைய பேச்சு அமைந்திருக்கிறது. இது காக்காய் பிடிப்பது என்றால் இதற்கு முன்னாலே நடைபெற்ற தி.மு.க. ஆட்சியில் எத்தனை காக்காய்கள் இருந்தன என்பது எல்லோருக்கும் தெரியும்.

முற்பகல் 11-35.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். கொலைக் குற்றங்கள், பல்வேறு குற்றங்கள் தி.மு.க. ஆட்சிக் காலத்திலே நடக்கும்போது இங்கிருந்து தொடர்பு கூட நடந்தன என்பதைச் சொன்னார்கள். அதற்கு அவர்கள் ஆட்சேபித்து எழுந்திருந்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. அவர் வேறு ஏதோ சொன்னார்.

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு : இல்லை. அதைச் சொல்லி விட்டுத்தான் அவர் அப்படிச் சொன்னார். ஆனால் அதே சமயத்திலே எங்களுடைய தொகுதியிலே முன்னால் ஒரு முறை சிவகாமிபுரம் என்னும் ஒரு கிராமத்திலே ஒரு பெண் கற்பழித்து கொலை செய்யப்பட்டாள். ஆனால் அந்தக் கொலையை முன்னால் இருந்த முதல்வர் கருணாநிதி அவர்களிடம் சொன்னபோது அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஏனென்றால் அதில் சம்பந்தப்பட்டவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. உட்காருங்கள். உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தேன். நீங்கள் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தவில்லை. (குறுக்கீடு) உங்களுக்குக் கொடுத்த வாய்ப்பை நீங்கள் பயன்படுத்தவில்லையென்றால் என்ன செய்வது ?

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் . தலைவர் அவர்களே, நான் தக்க ஆதாரத்தோடு தான் பேசுகிறேன். அரைகுறைப் பேர்வழி நான் அல்ல. அதிகாரப்பூர்வமாக, ஆதாரப் பூர்வமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல இந்த சட்டமன்ற அவைக் குறிப்பிலே இருக்கிறது. ஒரு பெண்—சுமதி என்ற ஒரு ஏழைப் பெண்ணை கற்பழித்து, ஒன்பது மாதங்கள் ஆகிவிட்ட பிறகு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு பிரசவம் ஆகிய பிறகு, ஆண் குழந்தை வாய்க்குள் 5, 6 நெல்லை உள்ளே போட்டு, அந்தக் குழந்தையைக் கொன்ற அந்த நிகழ்ச்சியை சட்டமன்றத்திலே நான் வாதிட்டேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சருக்குத் தெரியும். வாதிட்டேன். வாதிட்ட பிறகு அன்றைய முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம்



அவர்கள் சொன்னதை நான் விசாரித்தேன். ஆனால் அந்தப் பெண்ணினுடைய சம்மதத்தோடு தான் அவள் கற்பழிக்கப்பட்டாள் என்று நான் கேள்விப்பட்டேன் என்றார். இதைவிட என்ன ஆதாரம் வேண்டும். இந்த அவையிலே குறிப்பு இருக்கிறது. ஒரு பெண்ணுடைய சம்மதத்தோடு கற்பழிப்பதும், சம்மதம் இல்லாமல் கற்பழிப்பதும் எனக்குத் தெரியாது, உங்களுக்குத் தான் தெரியும் என்றெல்லாம் நான் சொல்லி அதை பேரவைத் தலைவர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கி இப்படிப்பட்ட நிகழ்சசி ஏற்பட்டு அன்றிருந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் கோ. சி. மணி அவர்கள் என்னிடத்தில் பாய்ந்து, நான் அவர் மீது பாய்ந்து அந்த நடவடிக்கைகள் எல்லாம் அவைக் குறிப்பில் இருக்கிறது.

நான் இன்றைய ஆட்சியில் சுட்டிக் காட்டுவதைப் போல அன்றைய ஆட்சியில் சுட்டிக்காட்டி இருக்கிறேன். ஆனால் காக்காய் பிடிக்கின்ற எண்ணத்தில் நான் அன்று காக்காயாக இருக்கவில்லை. பல காக்காய்கள் இருக்கலாம். ஆனால் என்னைப் பொறுத்த வரையில் நிலைமையைச் சுட்டிக்காட்டுகின்ற ஒரு தொண்டனாகத் தான் இருந்தேனே தவிர இந்த அளவிற்கு அவர்களை என்றும் பாராட்டியது இல்லை. காரணம் பாரட்டுவதற்கு மனம் இல்லை. காரணம் பெருந்தலைவர் காமராஜர் பல வகையிலும் அவமதிக்கப்பட்டவர். அந்தக் காரணத்தினாலே காங்கிரஸ்காரனுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் என்றாலே எரிச்சல். காரணம் நடைமுறை. அந்த அளவிற்கு எங்களுக்கு மிகப் பெரிய அளவிலே தொல்லைகளையும் துன்பங்களையும், கஷ்டங்களையும், நஷ்டங்களையும் கொடுத்து எங்களுடைய சொத்துக்களையும், சுகங்களையும் நாங்கள் இழப்பதற்கு பல்வேறு வகையிலும் தொல்லைகள் செய்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள். ஆகவே மிகப் பெரிய ஒரு வெறுப்பு எங்களுக்கு உண்டு. அவர்களுக்கும் உண்டு. ஆகவே நான் அதற்காகச் சொல்லவில்லை. இருந்தாலும் நான் எல்லா நிலைமையையும் சுட்டிக் காட்டியிருக்கிறேன்.

மேலும் இங்கே நம்முடைய நண்பர் ராமசுப்பு அவர்கள் சொன்னார்கள். இது போன்று ஆயிரக்கணக்கான கற்பழிப்புகள், ஆயிரக்கணக்கான கொலைகள், ஆயிரக்கணக்கான கொள்ளைகள் அத்தனையையும் நாங்கள் தினமும், நானும் சரி, திரு. எஸ். ஆர். பி. அவர்களும் சரி, மற்ற உறுப்பினர்களும் சரி, அத்தனை பேரும் சுட்டிக்காட்டியிருக்கிறோம். அத்தனை பேரும் சுட்டிக்காட்டி எதற்காவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா? எதற்குமே நடவடிக்கை இல்லை. அவர் சொன்னது போல திராவிட முன்னேற்றக் கழகத்தவர் தான் கற்பழித்திருப்பார். திராவிட முன்னேற்றக் கழக நண்பர் தான் கொலை செய்து

[திரு. ஆர். சிங்காரம்] [1992 செப்டம்பர் 24

இருப்பார், திராவிட முன்னேற்றக் கழக நண்பர்
கொள்ளை அடித்திருப்பார். நம்முடைய முதலமைச்சர் தான்
கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். அவர்
தீர்மானம் கொடுத்தவுடன் எந்தவித மாசும் இல்லாமல் ஒத்திவைப்புத்
யாக ரிப்போர்ட்டை வரவழைத்து, அவன் கொலை உடனடி
அண்ணா தி.மு.கா.வா, தி.மு.கா.வா, காங்கிரசா, செய்தவன்
என்ற உணர்வுக்கு வராமல் உடனடியாக பதில் சொல்கின்ற கம்யூனிஸ்டா
கட்சி மாச்சர்யம் மறந்து செயல்படுகின்ற முதலமைச்சர் அந்த
டைய முதலமைச்சர். நான் அன்று கொடுத்தேன் நம்மு
தீர்மானம். கவன ஈர்ப்பு தீர்மானம் ஒத்திவைப்பு
ஆனால் மாசு இல்லாமல் யாராக இருந்தாலும் கொடுத்திருக்கிறேன்.
எடுக்கின்ற பாங்கு, தெம்பு, தைரியம் நம்முடைய நடவடிக்கை
ருக்கு இருக்கிறது. ஆகவே தான் நான் அவரைப் முதலமைச்ச
கிறேன். அந்த அளவுக்கு எதைச் சுட்டிக்காட்டினாலும்— பாராட்டு
அன்றும் கொலை கொள்ளை நடந்தது. இன்றும் சில
களில் கொலை நடக்கிறது, கொள்ளை நடக்கிறது. இடங்
றும் இங்கொன்றும். இங்கே சிதம்பரத்தில் நடந்ததைச் அங்கொன்
னாகள். கேள்விப்பட்ட உடனே, உடனடியாக சொன்
விசாரணை நடத்தச சொல்லி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அங்கே

இது போன்று பல்வேறு இடங்களில் தமிழகம் பூராவும்
அவருடைய நாலெட்ஜுக்குச் சென்றவுடன், அமைச்சருடைய
நாலெட்ஜுக்குச் சென்றவுடன் உடனடியாக நடவடிக்கை எடுக்
கின்ற அமைச்சர் பெருமக்களை நாம் பெற்றிருக்கிறோம். எந்த
நிலையாக இருந்தாலும் சொன்னால் உடனடியாக நடவடிக்கை
எடுக்கிறார்கள். அதே நேரத்தில், நம்முடைய அமைச்சர் பெரு
மக்கள் முதலமைச்சர் அவர்கள் சொன்னால், அங்கே வெட்டி
வா என்று சொன்னால் கட்டி வருகின்ற அமைச்சர்கள் தான்
இங்கே இருக்கிறார்கள். ஆகவே அமைச்சர்களைப் பொறுத்த
வரையில் ஏதோ சில குறை இருக்கலாம். ஆட்சியிலும் குறை
இருக்கலாம். குறை இல்லாத மனிதனே கிடையாது. ஆனால்
எந்தக் குறையையும் சுட்டிக் காட்டினால் நடவடிக்கை எடுக்கின்ற
முதலமைச்சரை வைத்துக் கொண்டு நாம் அலம்பலோ, ஆடம்
பரமோ செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே தான்
நான் தெளிவாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த ஆட்சியில்
எந்த ஒரு நிலையைச் சுட்டிக் காட்டினாலும், நடவடிக்கை
எடுக்க நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தயாராக இருக்கிறார்
கள். என்னைப் போல் பிரச்சினையைச் சந்திக்கின்றவன்
நாட்டிலே யாருமே இருக்க முடியாது. தினந்தோறும் பிரச்
சினையை சந்திக்கின்றவன். தினந்தோறும் பிரச்சினைக்காகப்
போராடுகிறவன். நான் சட்டமன்ற உறுப்பினராக வருவதற்கு
முன்பாக போராடி, போராடி 300 நாட்கள் ஜெயிலில் இருந்து
விட்டுத்தான் சட்டமன்ற உறுப்பினராக வந்து இருக்கிறேன். ஆக
சாதாரணமாக வரவில்லை. தினம் ஆயிரம் பிரச்சினைகள்



1992 செப்டம்பர் 24] [திரு. ஆர். சிங்காரம்]

இருக்கும். அதை எல்லாம் அனைவருக்கும் நாம் சொல்லி
சம்பந்தப்பட்ட அமைச்சரை அணுகி பிரச்சினையை எடுத்துச்
சொல்லி அதை ஒரு முறைக்கு இரு முறை எடுத்துச் சொல்லி,
பார்த்துப் பேசி செய்யாவிட்டால் தான் நாம் அவர்களைக் கேட்க
வேண்டும். ஆனால் ஒரு முறை சொன்னவுடன் கேள்வியாக
சொன்னவுடன் பல்வேறு காரியங்கள் நடந்து விடுவதால் எனக்கு
மட்டும் அல்ல, பல சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் செய்
கிறார்கள். அதே நேரத்தில் அந்த அளவுக்கு எந்த ஒரு
நிலையைச் சுட்டிக் காட்டினாலும் நடவடிக்கை எடுக்கின்ற
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை
யும் அதனுடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்
தலைவி அவர்களையும் நான் பாராட்டுகிறேன்.

முற்பகல் 11-40

அதே நேரத்தில் இங்கே உரத்தின் விலை மிகவும் அதிகமான
அளவுக்குப் போயிருக்கிறது. நான் காங்கிரஸ்காரன் என்றாலும்
கூட எங்கள் கட்சி மத்திய அரசை ஆண்டாலும் கூட பிராக்டிக
லாக கிராமங்களில் இருக்கின்ற விவசாயிகள் பெரும் அதிர்ச்சியை
யும், வேதனையையும் கொண்டிருக்கிறார்கள். இருக்கின்ற
உரத்தை வியாபாரிகள் கடத்திக் கொண்டு போய் பதுக்கி
வைத்திருக்கிறார்கள். ஆகவே அந்த உரம் கிடைக்கவில்லை.
விவசாயிகள் மிகப்பெரும் வேதனைக்கு உள்ளாகி இருக்கிறார்
கள். அதைப்பற்றி மத்திய அரசுக்கு நீங்களும் எழுதுங்கள்,
நாங்களும் முயற்சி செய்து பதுக்கி வைத்து இருக்கின்ற உரங்
களை மீட்பதற்கு துரித நடவடிக்கை எடுத்து விவசாயி
களைக் காப்பற்ற வேண்டுமென்று நான் பணிவன்போடு வேண்டி
விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே நம்முடைய எஸ். எஸ். ராமசாமி படையாச்சி அவர்
களைப் பற்றி உங்களுக்குத் தெரியும். அவர் முன்னாள் அமைச்
சராக இருந்தவர், சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர்
எம்.எல்.சி. யாக இருந்தவர்; மிகப்பெரிய அளவில் இந்த
படையாச்சி சமூகத்தின் மிகப்பெரிய தலைவராக இருந்தவர்.
அந்த அளவுக்கு இருக்கின்ற எஸ். எஸ். ரா்மசாமி படையாச்சி
மிகப்பெரிய செல்வாக்கு மிகுந்தவர். அவர்கள் மகன்தான்
டாக்டர் ராமதாஸ். இங்கே சட்டமன்ற உறுப்பினராக இருக்
கின்றவர். ஆக அப்படிப்பட்ட மிகப்பெரிய தியாகங்களைச்
செய்த, மிகப் பெரிய சேவை மனப்பான்மை உள்ளம் கொண்ட
அந்தத் தலைவருடைய பெயரை தென்னாற்காடு மாவட்டத்
திற்கு வைக்க இந்த அரசு முயற்சி எடுத்தால் இந்த நேரத்தில்
பொருத்தமாக இருக்கும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.
வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். ஜெய் ஹிந்த்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை நிதிநிலை அறிக்கையின் மீது இந்திய குடியரசுக் கட்சியின் சார்பில் கருத்துக்களை வழங்க வாய்ப்பு தந்தமைக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். காலத்தின் அருமை கருதி இந்த துணை நிதிநிலை அறிக்கையின் மீது இரத்தின சுருக்கமாக சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

விவசாயிகளுடைய துயரைத் துடைக்கின்ற வகையில் அவர்களுடைய கடன் சுமையைக் குறைக்கின்ற வகையில் ஊக்கத் தொகை வழங்க 40 கோடி ரூபாயை ஒதுக்கி இருக்கிறீர்கள். இந்த நல்ல சிறப்பான காரியத்திற்காக உதவிய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தங்க மனதை நான் முதலில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோல் 60 லட்சத்திற்கும் மேற்பட்ட ஏழை எளிய குடும்பங்களுக்கு வேட்டி, சேலை வழங்குவதற்காக 45 கோடி—ரூபாய்க்கு அனுமதி கேட்டிருக்கிறீர்கள். அதிலே இந்த 60 லட்சம் குடும்பங்களில் 59 லட்சம் குடும்பங்கள் ஏறக்குறைய தாழ்த்தப்பட்ட குடும்பங்களாகத்தான் இருக்கும். நடைமுறையில் நான் அதை அறிவேன். ஆக இத்தகைய நல்ல பொங்கல் திருநாளில் இவ்வளவு பேருக்கு உடுக்க உடை வழங்க இருக்கின்ற தாய் உள்ளத்தை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை).

இங்கே பலரும் குறிப்பிட்டதைப் போல இந்தியாவுக்கு முன் உதாரணமாக வேறு எந்த மாநிலமும் செய்யாத வகையில் தேசிய உணர்வோடு தேசிய ஒருமைப்பாடு உணர்வோடு தன்னுடைய உயிரையும் துச்சமாகக் கருதி இன்றைக்கு வீர நடை போட்டுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்குப் பாராட்டு விழா நடத்தியதற்காக நான் இங்கே பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த தென்னகம் தான் உலகத்திற்கு முதன் முதலில் ஒரு தத்துவத்தை விளக்கியது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாக 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கருத்தை இங்கே இருந்து தான் கணியன் பூங்குன்றனார் எழுப்பினார். அந்த வகையில் அந்த கருத்தை பிரதிபலிக்கின்ற வகையில் ஒருமைப்பாட்டுச் சின்னமாக விளங்கிக்கொண்டு இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். நாம் ஒரு காரியத்தை நினைத்துக்கொண்

1992 செப்டம்பர் 24] [திரு. செ. கு. தமிழரசன்]

டிருக்கும் போதே அதைச் செயற்படுத்தி விடுகின்ற வீரமும்,
விவேகமும் நிறைந்த நம்முடைய முதலமைச்சர் டாக்டர்
புரட்சித் தலைவி அவர்களுக்கு உண்டு.

முற்பகல் 11-45

இன்றைக்கு சில கருத்துக்களை நான் இங்கே சொல்லவேண்டு
மென்று கருதுகிறேன். தமிழகத்திலே ஒரு குறிப்பிட்ட கட்சி
போராடினாலோ, அது ஒரு ஊர்வலத்தை அறிவித்தாலோ
இல்லை, அந்தத் தலைவர்கள் சட்டப்படி கைது செய்யப்பட்டு
விட்டாலோ வெளியே போகிறவர்கள் ஒழுங்காக வீடு திரும்ப
முடியுமா என்ற ஒரு அச்ச நிலைமை, பதட்ட நிலைமை; அவல
நிலைமை இன்றைக்கு நாட்டிலே இருந்து கொண்டிருக்கிறது.
இந்தக் கட்சி வன்முறையில் தொடங்கப்பட்டக் கட்சி என்பதை
நான் வரலாறு பூர்வமாக அறிவேன். 1987-லே இந்தக் கட்சி
யினர் தென்னார்க்காடு மாவட்டத்திலே மட்டும் மூன்றாயிரத்
துக்கும் மேற்பட்ட வீடுகளைக் கொளுத்தி, அதிலும் குறிப்பாக
தாழ்த்தப்பட்ட மக்களுடைய குடிசைகளையெல்லாம் எரித்து,
நாசமாக்கி, இன்றைக்குக்கூட அந்தப் பகுதியிலே இருக்கிற பல
இளைஞர்கள், படித்தவர்கள் வேலைக்குப் போக முடியாமல்
திண்டாடிக் கொண்டிருப்பதை நான் பார்க்கிறேன். சான்றிதழ்
களையெல்லாம் அவர்கள் இழந்துவிட்டு, சொத்துக்களையெல்
லாம் அவர்கள் இழந்துவிட்டு, பலர் இன்றைக்கும் தாம் படித்த
தற்குரிய சான்றிதழ்களைக் கூட பெறமுடியாமல், வேலைக்குப்
போக முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிற கொடுமையைக்
அந்த மாவட்டத்திலே பார்க்கிறேன். அப்படிப்பட்ட வன்முறை
கட்சியை, ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிதனைக்
கடித்ததைப் போல இன்றைக்கு, இந்த தேசத்தின் ஒருமைப்
பாட்டிற்கே உலை வைக்கிற அளவிற்கு தன்னுரிமை பற்றி பேசிக்
கொண்டு இருக்கிற இந்தக் கட்சியை, கடுமையான நடவடிக்கை
யை மேற்கொண்டு கட்டுப்படுத்த வேண்டும்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், பிரதமருக்கு எழுதியுள்ள
தைப் போல, அதைத் தடை செய்யவேண்டுமென்கிற கோரிக்கை
யையும் நான் ஆதரிக்க விரும்புகிறேன். எத்தனையோ சமுதாயத்
தலைவர்களெல்லாம் இருந்திருக்கிறார்கள். எங்கள் வணக்கத்திற்
குரிய தலைவர் பாபா சாகேப் அம்பேத்கார் அவர்கள் "செப்ப
ரேட் எலக்டோரேட்'' என்று சொல்லப்படுகிற தாழ்த்தப்பட்ட
மக்களுக்கான தனி ஒதுக்கீடு முறைக்காக போராடியபோது
அன்றைக்கு காந்தி அவர்கள், இந்தக் கோரிக்கை வலுப்பெறுமே
யானால் ஹிந்து சமுதாயம் அழிந்து விடும் என்று அதை எதிர்த்து
உண்ணாவிரதம் இருந்தபோது, காந்தியினுடைய போற்றுதற்
குரிய உயிரைக் காப்பாற்றுவதற்காக தன்னுடைய கொள்கையைக்
கூடகொஞ்சம் விட்டுத் தந்து, தன்னுடைய கோரிக்கையைக் கூட
மாற்று வடிவத்தோடு ஏற்று அன்றைக்கு காந்தியினுடைய
உயிரைக் காப்பாற்றியவர் பாபாசாகேப் அம்பேத்கார் அவர்கள்.
அதைப் போலத்தான் பல சமுதாயத் தலைவர்கள் இருந்தார்கள்.

[திரு. செ. கு. தமிழரசன்] [1992 செப்டம்பர் 24

கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள் இருந்தார்கள். அவர் இந்து எதிர்ப்புப் போரிலே முன்னணி தளபதியாக இருந்தவர் பாகிஸ்தான் இந்தியாவின் மீது போர் தொடுத்தபோது இந்தியா வுக்கு ஆதரவாக குரலிட்டவர்களிலே முன்னணியிலேயே இருந்தவர். அப்படிப்பட்ட சமுதாயத் தலைவர்கள் இருந்திருக்கிறார்கள். ஒரு சமுதாயம் குற்ற பரம்பரை சமுதாயம் என்று இருந்ததை மாற்றி இன்றைக்கு அதை தமிழக அளவிலே ஒரு வலுவான சமுதாயமாக மாற்றி தேசிய உணர்வு கொடுத்து வந்த பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரை நாம் பார்த்திருக்கிறோம். இப்படிப் பட்ட சமுதாயத் தலைவர்களுக்கிடையே இன்றைக்கு ஒரு சமுதாயத்தை திட்டமிட்டே மெல்ல மெல்ல குற்றப் பரம்பரை யாக ஒருசிலர் மாற்றிக்கொண்டு இருக்கிற அந்த ஈனச் செயலைப் பார்க்கிறோம். எனவே, இந்த நிலைமையை மாற்றி இன்றைக்கு தமிழகத்திலே ஒரு நல்ல சகோதரத்துவ உணர்வை வளர்ப்பதற்கு அந்தக் கட்சியை தடை செய்தாலும், அது தவறில்லை என்பதே என்னுடைய கருத்து என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். தமிழனுடைய வாழ்வுரிமைக்காகத்தான் நாங்கள் தன்னுரிமை கேட்கிறோம் என்று சொல்லுகிறவர்களிடையே நான் ஒரு சின்ன கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். இன்றைக்குக் கூட, இந்தப் பேரவையிலே பேசியிருந்தாலும் கூட, இந்தப் பேரவையிலே முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்த பின்னாலும் கூட கும்பகோணத்திற்கு பக்கத்திலே உள்ள குடிதாங்கியிலே தாழ்த்தப்பட்ட மக்கள் சுடுகாட்டுக்குப் போவதற்குக்கூட ஒரு அரசியல் பின்னணியோடு ஒரு சமுதாயம் தடுத்து நிறுத்திக்கொண்டு இருக்கிறது. இந்த வாழ்வுரிமையைப் பற்றி கவலைப்படாதவர்கள் வேறு சில வாழ்வுரிமைக்காகத் தான் உரிமை கேட்கிறோம் என்று சொல்வது மோசடித்தனம் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு எவ்வளவோ நலத் திட்டங்களை இந்த அரசு மிக வேகமாகச் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறது. நான் சில கோரிக்கைகளை இங்கே முன் வைக்க விரும்புகிறேன். கடந்த வாரத்திலே கூட மத்திய சமூக நலத் துறை அமைச்சர் மாண்புமிகு சீதாராம் கேசரி அவர்கள், இந்தியத் துணைக் கண்டத்திலேயுள்ள அனைத்து மாநிலங்களிலேயுள்ள நலத்துறை அமைச்சர்களை அழைத்து அங்கே ஒரு முடிவை வலியுறுத்தி யிருக்கிறார்கள். 18 விழுக்காடு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பல நிறுவனங்களிலும் அரசுத் துறைகளிலும் முழுமையாக தரப்படுவதில்லை. அது இன்னமும் கூட நிலுவையிலே இருந்து கொண்டிருக்கிறது. முற்றுப் பெறாமலேயே இருக்கிறது. இதை கட்டாயமாக, கண்டிப்பாக செயல்படுத்திட மாநில அரசுகள் முனைய வேண்டும். அதற்குத் தடையாக அலுவலர்களும் அரசு ஊழியர்களும் இருப்பார்களேயானால் அவர்கள் பேரிலே



1992 செப்டம்பர் 24]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) : திரு. தமிழரசன், சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டது. 7 நிமிடங்கள் முடிந்து விட்டது. சீக்கிரம் முடித்து விடுங்கள்.

திரு. செ. கு. தமிழரசன் : அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு சமூக நலத்துறை மத்திய அமைச்சர் திரு. சீதாராம் கேசரி அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். நான் இங்கே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த 18 விழுக்காடு நிரப்பப்பட்டு இருக்கிறதா என்ற கேள்வி எழுகிறபோது, பலரும் நிரப்பப்பட்டு இருக்கிறது என்று அரசாங்கத் துறையிலேயிருந்து பதில் சொல்லு கிறார்கள். எப்படி அதை அவர்கள் கணக்கிலே எடுத்துக் கொள் கிறார்கள் என்றால், அந்தத் துறையிலே இருக்கிற கடைநிலை ஊழியர்கள் இருக்கிறார்களே, காவலர்களாக, கடைநிலை ஊழியர்களாக, ஸ்கேவஞ்ஜர்ஸ் என்று சொல்லப்படுகின்ற துப்புரவுத் தொழிலாளர்களாக உள்ள இவர்களையெல்லாம் கணக்கிலே சேர்த்து, 18 விழுக்காட்டிற்கு மேலே என்கிற புள்ளிவிவரத்தைத் தருகிறார்கள். அனைத்துப் பதவிகளிலேயும் அது கிளாஸ் 1, கிளாஸ் 2, கிளாஸ் 3 என்று இப்படிப் பிரித்திருக் கிறோமே, அனைத்து பணிகளிலும் முறையாக 18 விழுக்காடு தரப்பட வேண்டும் என்பது தான் முறையான கோரிக்கையாக வும், ஒரு சரியான சமூக நீதியாகவும் இருக்க முடியுமே தவிர, இதைக் கணக்கிலே எடுத்துக் கொண்டு சொல்லுவது என்பது ஒரு பொய்யான கணக்காக இருக்கும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

முற்பகல் 11-50

1947-க்கு முன்னாலே தாழ்த்தப்பட்ட மக்களுடைய பொரு ளாதார நிலைமை எப்படி இருந்ததோ அந்தச் சமூகப் பின்னணி யும் வளர்ச்சியும் எப்படி இருந்ததோ, அதிலிருந்து இன்றைக்கு 45 ஆண்டுக் காலத்திற்குப் பின்னாலே நாம் ஒரு புள்ளி விவரத் தைப் பார்க்கிறபொழுது 10 விழுக்காடு தான் உயர்ந்திருக்கிறது. ஒரு தலைமுறைக்குப் பின்னாலேகூட தாழ்த்தப்பட்ட மக்களு டைய சமூக பின்னணி வளர்ச்சி 10 விழுக்காடுதான் வளர்ந் திருக்கிறது என்று சொல்லும்பொழுது நாம் அதிலே ஆழமான கவனம் செலுத்த வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். இந்த நிலைமையிலே நான் வேறொன்றையும் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். ஏராளமான போலிச் சான்றிதழ்கள் இன்றைக்குப் பெருகியிருக்கின்றன.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) : முடித்து விட வேண்டும், முடித்து விடுங்கள். ஒரு நிமிடத்திலே முடித்து விடுங்கள்.

திரு. செ. கு. தமிழரசன் : முடித்து விடுகிறேன். போலிச் சான்றிதழ்கள் என்பது தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கிடைக்கப் படுகிற அந்த ஒதுக்கீடுகளை, சலுகைகளை முறைகேடாகப்

[திரு. செ. கு. தமிழரசன்] [1992 செப்டம்பர் 24

பயன்படுத்திக் கொள்வதற்காக இன்றைக்குப் பலரும் போலிச்
சான்றிதழ்களைப் பெற்றுப் பள்ளிகளிலேயும், கல்லூரிகளிலேயும்
வேறு பல துறைகளிலேயும் வந்து விடுகிறார்கள். இங்கே
அவைக்கேகூட 1980-லே ஒரு சட்டமன்ற உறுப்பினர் போலிச்
சான்றிதழ் பெற்று ரிசர்வ் தொகுதியிலே வந்து இங்கே உறுப்பி
னராக வந்தார். பின்பு வழக்கு மன்றத்திற்குப் போன பின்னாலே
தான் அவருடைய பதவியை ரத்து செய்ய வேண்டியிருந்தது.
சட்டமன்றத்திற்கே வருகிற அளவிற்கு போலிச் சான்றிதழ்கள்.
பெருகியிருக்கின்றன. அதற்கு என்ன காரணம் என்றால்,
நாம் ரெட்டியார் என்று சொல்கிறோம்; அதிலே கொண்டா
ரெட்டியானால் அது தாழ்த்தப்பட்ட பகுதிக்கு வந்து விடுகிறது.
அவர்கள் கொண்டா ரெட்டி என்று சான்றிதழ் பெற்று விடு
கிறார்கள். நாயக்கர் என்று சொன்னால் அது பிற்படுத்தப்பட்ட
வகுப்பு. காட்டு நாயக்கன் என்று சொன்னால் அது மலை
ஜாதியாகி விடுகிறது. உடனே சலுகை கிடைக்கிறது. எனவே
இப்படி மாற்றி பெற்றுக் கொள்கிறார்கள். வண்ணான் என்று,
சொன்னால் அது பிற்படுத்தப்பட்ட வகுப்பு. அதிலே குதிரை
வண்ணானானால் அது தாழ்த்தப்பட்ட வகுப்புக்கு வந்து விடு
கிறது. ஆகவே, சின்ன வரிகளை மாற்றுவதன் மூலம், ஒரு சில
எழுத்துக்களை மாற்றுவதன் மூலம் இந்தப் போலிச் சான்றிதழ்
கள் பெருகி விடுகின்றன. அதைத் தடுத்து நிறுத்துவதற்காக நான்
இங்கே இந்த அரசை வேண்டிக் கேட்டுக் கொள்வதெல்லாம்
ஒரு கமிஷனைப் போட வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி):
முடித்து விடுங்கள். அடுத்து திரு. சிங்கை கோவிந்தராசு.
(குறுக்கீடு) சரி, ஒரே நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

திரு. செ. கு. தமிழரசன்: தாழ்த்தப்பட்ட மக்களுடைய
சமூகப் பின்னணியை, தாழ்த்தப்பட்ட மக்களுடைய பொருளா
தார வளர்ச்சியை, தாழ்த்தப்பட்ட மக்களுடைய நலத்
திட்டங்கள் அவர்களுக்குப் போய்ச் சேருகின்றனவா என்பதை
ஆராய்வதற்காக இவைகளைக் கருத்திலே கொண்டு ஒரு
கமிஷன் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை நான்
இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

அதேபோல, சிறப்புக் கால்நடைப் பராமரிப்புத் திட்டம்
என்கிற ஒரு திட்டம் இருந்தது. இந்தத் திட்டத்திற்கு
மத்திய அரசு நிதி உதவி தந்து கொண்டிருந்தது. இந்த
நடப்பு நிதியாண்டிலே அந்த நிதியை நிறுத்தி இருக்கிறார்கள்.
நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையிலே ஒரு கோடியே
ஐம்பது இலட்சத்திற்கும் மேற்பட்ட தொகையைத் தந்திருக்கி
றார்கள். சில மாவட்டங்களிலே இந்த ஆண்டுதான் அதைச்
செயல்படுத்தவே தொடங்கியிருக்கிறார்கள். அதுவும்,
குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக இருக்கிற
செங்கல்பட்டு, தர்மபுரி, தென்னார்க்காடு போன்ற மாவட்டங்



1992 செப்டம்பர் 24] [திரு. செ. கு. தமிழரசன்]

களிலே இந்த ஆண்டுதான் அதைச் செயல்படுத்தத் தொடங்கி
யிருக்கிறார்கள். இந்தக் கால்நடைப் பராமரிப்புத் திட்டத்
திலே வழங்கப்படுவதற்கு, அந்த மாடு வாங்குவதற்காக, ஆடு
வாங்குவதற்காக வழங்கப்படுகிற தொகை இருக்கிறதே,
அதிலே பெரும்பகுதி ஏழை எளியவர்கள், தாழ்த்தப்பட்ட
வர்கள், விதவைப் பெண்கள் இவர்கள்தான். இந்தத்
திட்டத்தின் மூலம் கிராமப்புறங்களிலே பலர் பயன் அடைந்து
கொண்டிருக்கிறார்கள். அது ஒரு குடிசைத் தொழிலாக
இருந்து கொண்டிருக்கிறது. ஆடு வளர்ப்பது, மாடு வளர்ப்பது,
கோழி வளர்ப்பது, இது ஒரு பெரிய நன்மை பயக்குகிற திட்டம்.
ஒரு தொழிலைத் தருகிற திட்டமாக இன்றைக்கு இருந்து
கொண்டிருக்கிறது. அது ஏழை எளியவர்களுக்கு நன்மை
தரக்கூடிய திட்டமாக இருக்கிறது. இந்தத் திட்டத்திற்கு
இன்றைக்கு மத்திய அரசு நிதியை நிறுத்தி விட்டிருக்கிறது.
நம்முடைய மாநில அரசு தருகின்ற இந்த ஒரு கோடியே
ஐம்பது இலட்சம் கொஞ்சமும் போதாது. எனவே, நான்
இங்கே சொல்ல விரும்புவது, மத்திய அரசு நிதி தருகிறதோ
இல்லையோ, மாநில அரசே இன்னும் கொஞ்சம், சில
கோடிகளை அதற்கு ஒதுக்கி, வேண்டுமானால், மாநில அரசே
இதை முழுமையாகச் செயல்படுத்துவதானால், "புரட்சித்
தலைவி நலிந்தோர் நல்வாழ்வுத் திட்டம்" என்று அதற்குப்
பெயர் வைத்து, அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும்.
இது ஒரு அவசியமான திட்டம். கிராமப்புறத்திலே, குடிசை
பகுதிகளை வாழ்விக்கின்ற திட்டம். சாதாரண, ஏழை எளிய
தாழ்த்தப்பட்ட பெண்களுக்குப் பயன் அளிக்கின்ற திட்டம்
இதை நிறுத்தக் கூடாது என்று நான் இங்கே சொல்ல விரும்பு
கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவையினுடைய
மாற்றுத் தலைவரவர்களே, இன்றையதினம் துணை நிதி நிலை
அறிக்கையினுடைய துணை மானியக் கோரிக்கைகள் மீது
நடைபெறுகின்ற பொது விவாதத்திலே வரவேற்றுப் பேசுகின்ற
வாய்ப்பினைத் தந்தமைக்காக உளப்பூர்வமான நன்றியைத்
இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

இன்றையதினம் தமிழகத்திலே, மனித நேயத்தோடும், தேசிய
உணர்வோடும், வாரி வழங்குகிற வள்ளலாக தேசிய ஒருமைப்
பாட்டுச் சின்னமாக விளங்குகிற நம்முடைய ஒப்புயர்வற்ற
தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி
அவர்கள் ஆட்சியிலே, கடந்த 13 மாதங்கள் முடிவுற்று, 14-வது
மாதம் நடைபெறுகிற இந்த நேரத்திலே இந்த துணை மானியக்
கோரிக்கை மீது, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கொண்டு
வந்திருக்கக்கூடிய நிதி ஒதுக்கீட்டினை வரவேற்கிற பாங்கினை,

[திரு. சிங்கை கோவிந்தராசு] [1992 செப்டம்பர் 24

இன்றையதினம் எனக்கு முன்னே பல்வேறு உறுப்பினர்கள்
பாராட்டுகிற முகத்தான் பல்வேறு திட்டங்களை பாராட்டு
கின்ற வகையிலே அமைந்திருந்த பாங்கினை எண்ணிப்
பார்க்கிறபோது, வரலாற்று சிறப்புமிக்க இந்தியத் திருநாட்டி
னுடைய வரலாற்றிலே, பொன்னெழுத்துக்களால் பொறிக்கக்
கூடிய இந்த ஆட்சிக்கு நன்றி உணர்வினை தமிழக மக்கள்
தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அமைதி பூங்காவாக இன்றையதினம் தமிழகம் திகழ்கிறது.
தொழில் முனைவோருக்கும், தொழிலிலே பணியாற்றுவோருக்கும்,
மிகச் சிறந்த தொழில் பாதுகாப்பை இந்த அரசு கொடுத்து
வருகிறது. இங்கே நேற்றையதினம் பேசிய எதிர்க்
கட்சியினுடைய தலைவர் அவர்கள், கோவை மாவட்டத்திலே
அதுவும் குறிப்பாக என்னுடைய சிங்காநல்லூர் தொகுதியிலே
பல ஆலைகள் மூடப்பட்டிருக்கிறது என்பதை நானும் இங்கே
சபையிலே சொல்வேன் என்று, சொல்லும்போது குறிப்பிட்
டார்கள். நான் இங்கே ஒன்றே ஒன்றைத் தெளிவாக
எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மூடப்பட்ட
ஆலைகள் தமிழகத்திலே இந்த அரசு ஏற்படுவதற்கு முன்பு
இருந்ததையும், அதே நேரத்திலே புரட்சித் தலைவி அவர்
களுடைய ஆட்சி ஏற்பட்டதற்குப் பின்னாலேதான் பி அண்டு சி
மில் திறக்கப்பட்டது என்பதையும், ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ்
திறக்கப்பட்டது என்பதையும், வருகிற தைத் திருநாளிலே
மூடிக் கிடக்கிற—10, 13 ஆண்டுகளாக என்னுடைய
தொகுதியிலே மூடிக் கிடக்கிற—வசந்தா மில் ஆலை திறக்க
விருக்கிற நடவடிக்கை நிறைவு பெறப்போகிறது என்கிற
மகிழ்ச்சியான செய்தியை இங்கே நான் தெரிந்து வைத்திருக்
கிறேன். ஆனால், அங்கே மூடிக் கிடக்கிற ஆலைகள் என்று
அவர் குறிப்பிட்டது, முதலாளிகள் சம்பந்தமான ராதா
கிருஷ்ணா மில்லும், ஜெயலட்சுமி மில்லும் மூடிக்கிடக்கிறது.
அந்த ஆலைகள் தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும்
ஏற்பட்ட பிரச்சினையல்ல ; நிர்வாகத்திலே இருப்பவர்
களுடைய பங்கு பிரச்சினை சம்பந்தமாக ஏற்பட்ட
பிரச்சினை. அந்தப் பிரச்சினையைக் கூட நான் முதன்
முதலாக புரட்சித் தலைவி அவர்களுடைய பாதந்தொட்டு
வணங்கி இந்த சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்றுக்
கொண்ட நேரத்திலே, அவர்களுடைய கவனத்திற்குக்
கொண்டு சென்றபோது மூடிக் கிடக்கிற அந்த ஆலைகளைக்
குறிப்பிட்டு, சம்பந்தப்பட்ட அந்த நிர்வாகத்தினரே சமரச
மாகி விட்டார்கள் ; அவர்களே பாகப்பிரிவினை செய்து ஓட்ட
இருக்கிறார்கள் என்பதை இங்கே நம்முடைய சட்ட
மன்ற குறிப்பிலே முதலமைச்சர் அவர்கள் கூறியிருப்பது
பதிவாகியிருக்கிறது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன்.



1992 செப்டம்பர் 24] [திரு. சிங்கை கோவிந்தராசு]

அவை தவிர, இருக்கக்கூடிய மது ஸ்பின்னிங் மில்லும்
வசந்தா மில்லும் திறக்கக்கூடிய நடவடிக்கை எடுக்கப்பட்டு
ஏ.எப்.ஆர்.ஐ., பி.எப்.ஆர்.ஐ. ஆகியவற்றின் சலுகைகளுக்
காக கோப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றன என்பதையும்—
நானும் ஒரு தொழிலாளி என்ற அடிப்படையிலும் தொழி
லாள வர்க்கம் புரட்சித் தலைவியின் பக்கம் என்கிற அடிப்படை
யிலே என்னைத் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள் ; அப்படிப்
பட்ட தொழிலாளர்களின் அரசாகத்தான் இந்த அரசு விளங்கு
கிறது என்பதையும் உணர்த்துகிற வகையிலேதான் சென்ற
ஆண்டு போனஸ் பிரச்சினையிலே, புரட்சித் தலைவி அவர்
கள் தொழிலாளர்களின் உணர்வை மதிக்கிற வகையிலே
அங்கே இருக்கக்கூடிய தி.மு.க. சட்டமன்ற உறுப்பினரும்,
தி.மு.க. யூனியனைச் சேர்ந்தவர்களும் கூட ஏற்றுக் கொண்ட
படி போனஸ் பிரச்சினையை தொழிலாளர்களுக்காக ஆதர
வாக செய்து முடித்தார்கள். மூடிக் கிடக்கின்ற ஆலைத்
தொழிலாளர்களுக்கும், பல்வேறு நிறுவனங்களுடைய தொழி
லாளர்களுக்கும் நிவாரணத் தொகையாக 400 ரூபாயை
முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கித் தந்திருக்
கிறார்கள். இப்படித் தொழிலாளர்களுடைய நலனைக் காக்
கும் அரசாக புரட்சித் தலைவியினுடைய அரசு விளங்குகிறது.
இப்படிப்பட்ட நேரத்திலே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்
மூடிக் கிடக்கின்ற ஆலைகளை இந்த அரசு கவனத்திலே எடுத்துக்
கொள்ள வேண்டுமென்று சொல்வது நிச்சயமாக அது தொழி
லாளர்களுக்கு ஏற்ற கருத்து அல்ல. எங்கள் ஆட்சியிலே
மூடப்படவில்லை என்பதையும் மூடப்பட்டு இருக்கக்கூடிய
இரண்டு ஆலைகளையும் கூடிய விரைவிலே திறக்க நடவடிக்கை
எடுக்கப்படுகிறது என்பதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்
களும், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களும் இந்தச்
சபையிலே அறிவித்திருக்கிறார்கள் என்பதை இங்கே அவர்
களுக்குச் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நண்பகல் 12.00.

அதே போல இன்றைய தினம் ஏழையெளிய மக்கள் பயன்
பெறுகின்ற வகையிலே 60 இலட்சம் பேர்களுக்கு இலவச உடை
வழங்குகின்ற திட்டத்திற்காக இங்கே நிதியொதுக்கீடு செய்
திருக்கிறார்கள். அதே போல 40 இலட்சம் ரூபாயை இன்றைய
தினம் விவசாயிகளுடைய வரிகள், கடனையும் வட்டியையும்
சேர்த்துக் கட்ட வேண்டிய சூழ்நிலையை—வட்டியை ரத்துச்
செய்து அவர்களுக்கு இந்த உதவியினை இந்த அரசு செய்
திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றையதினம் எதிர்க் கட்சிகள் எல்லாம், மாணவர்கள்
போராட்டம் என்று, மருத்துவர்கள் போராட்டம் என்று,
அரசு ஊழியர்கள், சத்துணவு நிர்வாகிகள் போராட்டம்
என்ற அடிப்படையிலே எதிர்க் கட்சிகள் அரசுக்கு இடையூறு
செய்கின்ற வகையிலே அவர்களுடைய கோரிக்கைகளை முன்

[திரு. சிங்கை கோவிந்தராசு] [1992 செப்டம்பர் 24

வைக்கின்ற நேரத்திலே, தமிழக முதல்வர் அவை அனைத்தை யும் பரிசீலனை செய்து, அவர்களுக்குத் தேவையான நட வடிக்கையை உடனுக்குடன் செய்து வருகின்றார்கள். இந்த நேரத்திலே, கோவை மாவட்டத்திலே இருக்கக் கூடிய கிட்டத் தட்ட 1½ இலட்சம் மில் தொழிலாளர்கள் சார்பாகவும், அதே நேரத்தில் தமிழகத்திலே இருக்கக் கூடிய 3½ இலட்சம் பஞ் சாலைத் தொழிலாளர்கள் சார்பாகவும் நான் விரும்பி வேண்டி கேட்டுக் கொள்வதெல்லாம், இன்றையதினம் மாற்றுக் கட்சி யிலே இருக்கக்கூடியவர்கள், ஏதோ எதிர்க் கட்சியிலே இருக்கக் கூடியவர்கள், இரண்டு ஆண்டுகளாகக் கொடுக்கப்பட வேண்டிய சம்பள உயர்வைப் பெற்றுத் தரவேண்டுமென்று ஜவுளி ஆலைகள் முதலாளிகள் சங்கத்திலே கோரிக்கை வைத்து அந்தக் கோரிக்கை வருகின்ற 6–ஆம் தேதி அன்று தமிழகத் திலே இருக்கக் கூடிய தொழிலாளர்களைப் போராட்டத்திற்கு அழைக்கின்றார்கள். தொழிலாளர்கள் போராடிப் போராடி, அவர்களுடைய வாழ்க்கையில் ஏழ்மை நிலையைத் தவிர வே றொரு முன்னேற்றமும் அடையாத நிலையில் இருந்துகொண் டிருக்கின்றார்கள். அப்படித் தொழிலாளர்களுடைய வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றம் அடையச் செய்கின்ற வகையிலே—வரு கின்ற 6 ஆம் தேதி திட்டமிட்டு, இந்த அரசுக்குத் தொழி லாளர்கள் மத்தியிலே ஒரு அவப் பெயரை உருவாக்க வேண்டு மென்று எண்ணுகின்ற வகையில் செயல்படுகிறார்கள்— தொழிற்சங்கத் தலைவர்களுடைய மத்தியில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு சென்று அவர் களுடைய பிரச்சினையை 10-பி ஆக்டுக்கு விடப்பட்டு அது வழக்கு மன்றத்திலே, தொழிலாளர் நல வழக்கு மன்றத்திலே முடிவு செய்யப்பட வேண்டுமென்ற நிலையை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே தொழிலாளர்கள் சார்பாகக் கேட்டுக் கொண்டு, நான் மூன்றாவது முறையாக வேண்டுகோள் விடுக்கிறேன். தொழிலாளர்களுக்காக உழைத்து, தொழி லாளர்கள் தலைவனாக வாழ்ந்து தொழிலாளர்கள் மத்தியிலே தெய்வமாக விளங்குகின்ற தியாகி எம்.ஜி. இராமசாமி அவர் களுடைய பெயரை தொழிலாளர் நல மருத்துவமனைக்கு, என் னுடைய தொகுதியிலே இருக்கின்ற இ. எஸ். ஐ. ஆஸ்பத்திரிக்கு வைத்து உதவ வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே வேண்டுகோள் விடுத்து, இந்த விவாதத்தில் பங்கு கொள்ள வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி அமை கிறேன். நன்றி, வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. நா.சா. பழனிசாமி.

திரு. நா.சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மதிப்பீட்டுக் கோரிக்கை யின் மீது உழவர் உழைப்பாளர் கட்சியின் சார்பிலே ஒரு



1992 செப்டம்பர் 24] [திரு. நா. சா. பழனிசாமி]

சில கருத்துக்களை முன் வைக்க வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, இந்தத் துணை மதிப்பீட்டுக்கு ரூ. 167.29 கோடி கொடுக்கப்பட்டுள்ளதை வரவேற்கின்றேன். தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விவசாயிகளு டைய துயர் துடைப்பதற்காக விவசாய இயக்கங்களுடைய வேண்டுகோளையெல்லாம் ஏற்றுக் கொண்டு 69 கோடி ரூபாயை வட்டிச்சலுகையாக, போனஸாக அளித்தார்கள். அதற்கு 30-9-1992 என்று காலக்கெடு நிர்ணயம் கொடுத்தார்கள். ஆனால் விவசாயப் பெருமக்களைப் பொறுத்தவரையில், இன்று தமிழ கத்தினுடைய பல மாவட்டங்களில், குறிப்பாக, கோவை, பெரி யார், சேலம், தர்மபுரி போன்ற மேற்கு மாவட்டங்களிலே கடுமையான வறட்சி நிலவிக் கொண்டிருக்கிறது. இன்னும் வட ஆற்காடு, சம்புவராயர் போன்ற மாவட்டங்களில் அங்கே பயிரிட்ட நெல், துங்கு வைரஸ் போன்ற நோயால் தாக்கப்பட்டு மகசூல் பாதிக்கப்பட்டிருக்கிறது. பல மாவட்டங்களிலே கடந்த 4, 5 ஆண்டு காலமாக விவசாயத் தொழிலில் ஏற்பட்ட நெருக் கடியின் காரணமாக, விவசாயப் பெருங்குடிமக்கள் இப்பொழுது தவணைகளில் கூட கட்ட இயலாத சூழ்நிலையில் இருந்து கொண் டிருக்கிறார்கள். எனவே, இந்தக் கூட்டுறவுக் கடனைப் பொறுத்தவரையிலே அவர்கள் இந்தத் தவணையை இன்னும் ஒரு 6 மாதத்திற்கு நீட்டித்து ஒரே தவணையில் கட்டுவதற்குப் பதி லாக மூன்று தவணைகளில் கட்டுவதற்கான வாய்ப்பைக் கொடுக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலமாக கேட்டுக் கொள் கிறேன். நிலவள வங்கிக்கும் ஏதாவது ஒரு வட்டி சலுகை அளித்து அதை வசூலிப்பதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தக்காவி என்ற கடனை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்திலே தள்ளுபடி செய்யப் பட்டக் கடனை இன்று பல வழிகளிலே ஜப்தி செய்து வசூலித்து வருகிறார்கள். ஜப்தி செய்ய வருகின்ற . . . . . . . . . . . . . .

பிற்பகல் 12.05.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, தவறான கருத்தை நேற்றுகூட அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கும் சொல் கிறார்கள். தமிழ்நாட்டில் எங்கேயும் ஜப்தி செய்யப்படவில்லை என்பதை நான் உறுதியாகச் சொல்கிறேன். ஆனால் தக்காவி கடனை யார் கட்டவில்லையோ அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக் கிறது. ஆனால் அது எம்.ஜி.ஆர். காலத்தில் தள்ளப்பட்டது என்று சொன்னார்கள். அப்பொழுது தள்ளப்பட்டது 1977–ஆம் ஆண்டும் அதற்கு முன்பும் வாங்கிய கடன் தள்ளப்பட்டது என்று தான் 1989–ஆம் ஆண்டு போட்ட அரசு ஆணை, ஆனால்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1992 செப்டம்பர் 24

1978 ஆம் ஆண்டு வாங்கப்பட்டக் கடன் இப்பொழுது கட்டப்பட வேண்டும் என்பதற்காகக் கடுமையான அறிவிப்பு கொடுக்கப் பட்டிருக்கிறது. எங்கேயும் ஜப்தி செய்யப்படவில்லை.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜப்தியை அதிகாரிகள் அதிகாரப் பூர்வமாக செய்யாமல் விவசாயிகளுடைய வீடுகளிலே ஜப்தி நோட்டீசோ மற்ற எந்த முன் அறிவிப்போ கொடுக்காமல் அவர்கள் மிரட்டி அங்கே ஜப்தி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்கு ஆதாரம் கொடுக்கக் கூடிய நிலையில் இல்லை. விவசாயிகள் அதைத் தடுத்தால் அவர்கள் மீது ................

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : ஆதாரம் கொடுக்கக் கூடிய நிலையிலே இல்லை என்று சொல்வது அவ் வளவு முறையாகாது. நீங்கள் சட்டமன்றத்திலே பேசுகிறீர்கள். சட்டமன்றத்திலே பேசினால் இன்றைக்கு மாலை செய்தித் தாள் களிலே வந்துவிடும். விவசாயிகள் மீது ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டது இந்த அரசால் என்று. ஆகவே, தவறான கருத்தை சொல்ல வேண்டாமென்று பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. நா. சா. பழனிசாமி : அதிகாரிகள், அமைச்சர் அவர் களுக்கு தெரிவிக்காமல் கூட சில இடங்களிலே அரசாங்கத்தின் உத்தரவு இல்லாமல் கூட வசூலிப்பதற்கான நடவடிக்கை எடுக் கிறார்கள் என்பதைச் சொல்கிறேன். அதிலே ஜப்தி என்பதை அவர்கள் நோட்டீஸ் கொடுத்து செய்யாத போது நாங்கள் ஆதாரம் கொடுக்க இயலாத நிலையிலே இருக்கிறோம். எனவே, இந்த ஜப்தி நடவடிக்கையை ..................

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஜப்தி என்று சொன்னால், அங்கே இருக்கிற ஏதாவது பொருள்களை எடுத்துச் செல்ல வேண் டும். அப்படி எங்கேயாவது பொருள்களை எடுத்துச் சென்றார் கள் என்று நீங்கள் சொன்னால், இன்றைக்கு மாலையே உங் களுக்கு பதில் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஆதாரங்கள் இருந்தால் அது குறித்துப் பேசலாமே தவிர பொதுவாகச் சொல்வது சரியாக அமையாது.

திரு. நா. சா. பழனிசாமி : வட ஆற்காடு மாவட்டத்திலே சில விவசாயிகள் வீடுகளிலே பேன்-ஐ எடுத்து சென்று விடு கிறார்கள் என்ற அடிப்படையிலே சொன்னேன். அதற்கு



992 செப்டம்பர் 24] [திரு. நா. சா. பழனிசாமி]

வேண்டிய ஆதாரம் இருந்தால் அதை பின்னால் கொடுக்கிறேன். நான் அதைப் பற்றிய விவாதத்திற்கு வரவில்லை. விவசாய பெருங்குடி மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் மீது பரிவுக் காட்டி இந்தக் கடன் பிரச்சினையிலே பரிவுக் காட்ட வேண்டுமென்ற வேண்டுகோளைச் சொல்லிக் கொண்டிருக்கி றேன். இதிலே சில கூட்டுறவு வங்கிகளிலே இப்பொழுது பல இடங்களில் அந்தக் கடன் பற்றி விவசாயிகளுக்கு தெரியாம லேயே அந்த வங்கிகளுடைய செயலாளர்கள் சில தவறுகளைச் செய்து அது இப்பொழுது விவசாயிகளுக்கு தெரிய வந்திருக்கிறது. அதிலே உரத்திற்கு, உரப்பகுதி என்றும், பணப்பகுதி என்றும் பிரித்துக் கொடுக்கிறார்கள். ஆனால் உரப்பகுதி, விவசாயிகள் சிலருக்கு கடைசியான நேரத்தில் உரம் தேவையில்லாத போது வேண்டாம் என்று சொல்லுகின்ற போது அந்த உரத்திற்கு அவர் கள் சேர்த்துக் கையெழுத்து வாங்கிக் கொண்டு அந்த உரத்தை வெளியிலே விற்று விடுகிறார்கள். அந்தக் கடனை விவசாயிகள் மீது திணித்து இருக்கிறார்கள். அந்த வகையிலே பெரியார் மாவட்டம் சின்னக்காம்பாளையம், தாராபுரம் தாலுக்காவிலே ஒரு கூட்டுறவு சொசைட்டியிலே அந்தத் தவறு நடந்திருக்கிறது. சங்கரடாம்பாளையம் கூட்டுறவு சொசைட்டியிலே அந்தத் தவறு நடந்திருக்கிறது. அதே போல நத்தம் பிரைமரி அக்ரி கல்சுரல் சொசைட்டியிலே திண்டுக்கல் அண்ணா மாவட்டத்திலே நடந்திருக்கிறது. அதை சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்கும் அங்கே தெரிவித்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக அதிகாரிகள் விசாரணை வைத்திருக்கிறார்கள். அதிலே திண்டுக்கல்லிலே விசா ரணை செய்த துணை பதிவாளரையேகூட இந்த செயலாளர் தன் னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, அந்த தனி அதிகாரிகளை எல்லாம் அங்கே மாற்றியிருக்கிறார்கள். அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்து அந்த விவசாயிகளைப் பாதுகாக்க கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

அணைப் பகுதி மேம்பாட்டிற்காக 49.85 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதை வரவேற்கிறேன். அதிலே பரம்பிக் குளம் ஆளியாறு திட்டத்திலே, இப்போது காண்டூர் கெனால் என்று இருக்கிறது. இந்த கெனாலிலே மிகவும் பழுதுகள் ஏற் பட்டிருக்கின்றன. அதன் காரணமாக திருமூர்த்தி அணைக்கு சரியாக தண்ணீர் வரமுடியவில்லை. எனவே அந்த அணையை, அந்த வாய்க்காலை சீர்திருத்தம் செய்வதற்கு நிதி ஒதுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான பென்ஷன் தொகை 400லிருந்து ரூபாய் ஆயிரமாக உயர்த்தி இருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நேரத்திலே நான் விவசாயிகளின் சார்பிலே இந்த மாமன்றத்திலே மன வேதனை யோடு சொல்லிக்கொள்ள விரும்புவது, இந்த உர விலையை

[திரு. நா. சா. பழனிசாமி] [1992 செப்டம்பர் 24

மத்திய அரசாங்கமானது மிகக் கடுமையாக உயர்த்தி இருக்கிறார்கள். இந்த உர விலை உயர்வு இதுவரை வேறு எந்த நாட்டிலும் எந்த காலத்திலும் இல்லாத அளவில் உயர்ந்திருக்கிறது. உதாரணமாகச் சொல்லப்போனால், பொட்டாசு உரமானது 4-7-1991-லே ரூ. 63.30 பைசாவாக இருந்தது ரூ. 300 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். அதாவது விலை உயர்வு 5 மடங்கு, 500 சதவிகிதம் உயர்வு. இந்த சூப்பர் பாஸ்பேட் 50 கிலோ, 4-7-1991-லே ரூ. 48 ஆக இருந்ததை 11-9-1992–லே 155 ரூபாய்க்கு உயர்த்தி இருக்கிறார்கள். டீ.ஏ.பி. விலை 177.52 ரூபாய் என்று இருந்ததை ரூ. 454 ஆக உயர்த்தி இருக்கிறார்கள். இந்த உர விலை என்பது விவசாய பெருமக்கள் வாங்கிக்கொள்ள முடியாத அளவிலே உயர்ந்திருக்கிறது. எனவே, இந்த உர விலையைக் குறைக்கக்கோரி தமிழக அரசின் சார்பிலே மாண்புமிகு டாக்டர் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் மத்திய அரசுக்கு இந்த மாமன்றத்தின் சார்பிலே ஒரு தீர்மானத்தைப் போட்டு அனுப்பி இந்த உர விலையைக் குறைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த உர விலையைக் குறைப்பதற்காக மத்திய அரசாங்கம் ஆண்டுக்கு 6 ஆயிரம் கோடி ரூபாய் மானியம் கொடுத்திருப்பதை எடுத்து அந்த உரத்தை விற்பதிலே டீ கண்ட்ரோல் செய்திருக்கின்றார்கள். அந்த 6 ஆயிரம் கோடி ரூபாய் உரத்திற்கான மானியம் ஒரு மிகப்பெரிய தொகை என்று சொல்லி அந்த தொகையை நீக்கிய மத்திய நிதி அமைச்சர் திரு. மன்மோகன்சிங் அவர்கள், 4 ஆயிரம் கோடி ரூபாய் வங்கி ஷேர் ஊழல் நடைபெற்று இருக்கிறது, அந்த பங்கு மார்க்கெட் ஊழல்கள் நடைபெற்று இருக்கிறது. அந்த 4 ஆயிரம் கோடியை, ஒரு அற்பத் தொகை, இந்த அற்பத் தொகையை பத்திரிகைகள் இவ்வளவு பெரிது படுத்திக்கொண்டு இருக்கின்றன. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உர விலை ஏறியிருப்பது வருந்தத்தகக ஒரு நிகழ்ச்சிதான். நாங்களும் உர விலையை குறைக்க வேண்டும் என்றுதான் விரும்புகிறோம். ஆனால் அதே நேரத்தில் உர விலைகள் குறைக்கப்பட்டதையும் நாம் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும். நைட்ரஜன் பேர்ட்டிலைசர்ஸ் தழைச் சத்துள்ள உரங்கள் விலைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. 10 சதம் குறைக்கப்பட்டிருக்கின்றன. 45 சதவிகிதம் குறைக்சப் பட்டிருக்கின்றது. உதாரணமாக 158.70 ரூபாய்க்கு விற்ற யூரியா 142 ரூபாய்க்கு விற்கப்படுகிறது, அதே போல் சி.ஏ. கால்சியம் அம்மோனியம் நைட்ரேட் ரூ. 210 ஆக விற்றது, ரூ. 104-க்கு விற்கப்படுகிறது. சி.ஏ.என். ரூ. 180-க்கு விற்ற அம்மோனியம் சல்பேட் ரூ. 100-க்கு விற்கப்படுகிறது.



1992 செப்டம்பர் 24] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

அம்மோனியம் குளோரைட் ரூ. 160-க்கு விற்கப்பட்டது. 160 ரூபாய்க்கு விற்ற அம்மோனியம் குளோரைட் ரூ. 104-க்கு விற்கப்படுகிறது. இவைகளை எல்லாம் மனதிலே வைத்துக் கொண்டு மேலும் மற்ற உரங்களின் விலைகளைக் குறைக்கக் கேட்டுக்கொள்ள வேண்டும். காரணம் இந்த நைட்ரஜன் உரங்களைத்தான், தழைச் சத்து உரங்களைத்தான் விவசாயிகள் அதிகமாக உபயோகிக்கிறார்கள். உபயோகிக்கின்ற உரங்களில் 70 சதவிகித உரம் தழைச் சத்தாக உபயோகிக்கிறோம். மணிச் சத்து, பொட்டாசியம், சாம்பல் சதது குறைவாக உபயோகிக்கிறோம். அதற்கு விலை ஏற்றியிருக்கிறார்கள். அது அதிகமாகத் தான் இருக்கிறது. அதைக் குறைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் இந்த டி.ஏ.பி. பொறுத்தவரையில், உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். மத்திய சர்க்காரை எந்தக் காரணத்தைக் கொண்டும் இறக்குமதி செய்யக்கூடாது என்று அந்த தொழிலைச் சேர்ந்தவர்கள் நிர்ப்பந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. நாங்கள் இறக்குமதி செய்யப் போகிறோம். இப்போது விற்கப்படுகின்ற விலையின் 3-ல் 2 ஆக அது குறையப்போகிறது என்று சொல்லிக் கொள்கிறேன். 'டி.ஏ.பி. பெர்டிலைசர் இம்போர்ட் டீ கேனலைஸ்' என்ற தலைப்பிலே செய்தி வந்திருக்கிறது. 9000 ரூபாய் டி.ஏ.பி. 6 ஆயிரம் ரூபாயாக குறையும் என்ற நல்ல செய்தி வந்திருக்கிறது. என்றாலும்கூட மத்திய சர்க்கார் பெரிய மனது வைத்து முன்பிருந்த விலைகளுக்கு மணிச்சத்து உரங்களையும் சாம்பல் சத்து உரங்களையும் விற்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

அதே நேரத்திலே விவசாயத்தைப் பொறுத்தவரையில், விவசாயிகள் மிகவும் கஷ்டமான நிலையில் இருக்கின்றார்கள் என்று நண்பர் அவர்கள் சொன்னார்கள். உண்மையாகவே தண்ணீர் வரியும், நில வரியின்மீது விதிக்கப்பட்டிருக்கிற 'செஸ்'ம் மிக அதிகமாக ஏற்றப்பட்டிருக்கிறது. அதையும் மாநில அரசாங்கம் பரிவோடு பரிசீலித்து குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிடுகிறபோது தழைச் சத்து உரங்கள் அதிகமாக பயன்படுத்து

கிறோம் என்று சொன்னார். ஆனால் தமிழகத்திலே தழை சத்துக்கு மத்திய அரசு உரத்தினுடைய கட்டுப்பாட்டுக் கொள்கை யை தன்னுடைய கையில் எடுத்துக்கொண்டதன் விளைவாக தமிழக விவசாயிகள் பயன்பெறுவது 20 கோடி ரூபாய். ஆனால் மணிச் சத்தை, சாம்பல் சத்தை, அதிகமாக பயன்படுத்துகின்ற ஒரே மாநிலம் தமிழகம் தான். இங்கே மணிச்சத்து, சாம்பல் சத்து, அதிகமாக பயன்படுத்தப்படுகிற காரணத்தினால் விவ சாயிகளுக்கு இந்த ஆண்டு கூடுதல் செலவினமாக வரக்கூடிய தொகை 350 கோடி ரூபாய் என்பதனை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு பணிவோடு தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தழைச்சத்து உரத்தினுடைய விலையை 10 சதவிகிதம் குறைத் துள்ளதாகச் சொன்னார்கள். தழைச்சத்து உரத்தினுடைய விலையை 4–7–1990-லே 40 சதவிகிதம் உயர்த்தியிருக்கிறார் கள். அதற்குப் பிறகு 30–11–1991லும் உயர்த்தியிருக்கிறார் கள். 30–11–1991-லே உயர்த்திய விலையில் இருந்துதான் 10 சதவிகிதம் குறைத்திருக்கிறார்களேயல்லாமல், சென்ற ஆண்டு 4–7–1991–லே உயர்த்திய 40 சதவிகித விலையிலிருந்து குறைக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடியுங்கள். இன்னும் 2 உறுப்பினர்கள் பேச வேண்டும்.

திரு. நா.சா. பழனிசாமி: 4–7–1991-லே யூரியாவினுடைய விலை ரூ. 115.56. ஆனால் 11–9–1992–லே யூரியாவினுடைய விலை ரூ. 142. சி.ஏ.என். 50 கிலோ 4–7–1992–லே ரூ. 88.33. 11–9–1992–லே அ தன் விலை ரூ. 103.32 என் பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு ' இந்து ' பத்திரிகையிலே ஒரு செய்தி வந்துள்ளது. அதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் கவனத் திற்கு கொண்டு வருகிறேன். மத்திய இரசாயனம் மற்றும் உர அமைச்சர் திரு. சிந்தா மோகன் அவர்கள் பத்திரிகையிலே ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். வெளிநாட்டிலிருந்து கிட்டத்தட்ட.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிசாமி முடியுங் கள். (குறுக்கீடு) நீங்கள் பேச ஆரம்பித்து 10 நிமிடத்திற்கு மேல் ஆகிவிட்டது. இன்று ஒரு மணிக்குள் விவாதம் முடிந்து பதில் உரையும் முடிய வேண்டும்.

திரு. நா. சா. பழனிசாமி : 20 கப்பல்களிலே 7.8 லட்சம் டன் ரசாயன உரம் இறக்குமதி செய்யப்பட்டது. அந்த உரத்தை வெளிநாட்டிலேயிருந்து இறக்குமதி செய்து வாங்குகின்ற



நேரத்திலே ஒரு டன்னுக்கு 4 ஆயிரம் ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இங்கே அந்தக் கப்பல் வந்து சேர்கின்ற நேரத்தில் 8 ஆயிரம் ரூபாய்க்கு அதன் விலை உயர்ந் திருக்கிறது. அதை இறக்குமதி செய்தது மினரல்ஸ் அன்ட் மெட்டல்ஸ் டிரேடிங் கார்ப்பரேஷன். ஆனால் இப்பொழுது அந்த ரசாயன உர ஆலைகள் பழைய விலைக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்கின்றன புதிய விலையில் நாங்கள் விற்று லாபம் சம்பாதிப்போம் என்று அந்த எம்.எம்.டி.சி. அதை கொடுக்கமாட்டோம் என்றும், நாங்கள்தான் அதிக விலைக்கு விற்போம் என்றும் சொல்வதால் அவர்களுக்கு உள்ளே இருக்கிற போட்டியின் காரணமாக விசாகப்பட்டணம் துறைமுகத்திற்கு வந்திருக்கிற அந்த ரசாயன உரமானது இறக்க முடியாத நிலையில் இருக்கிறது. அவர்கள் லாபம் சம்பாதிப்பதிலே, விவசாயிகளைச் சுரண்டுவதிலே, அரசுக்கும் கூட்டுறவு உர ஆலை களுக்கும் இருக்கிற போட்டியின் காரணமாக இன்றைக்கு அந்த உரத்தை இறக்குமதி செய்ய முடியாத நிலை இருக்கிறது. எனவே, 4 ஆயிரம் ரூபாய் வீதம் டன் ஒன்றுக்கு மத்திய அரசாங்கம் லாபம் வைத்து விற்கிறது என்பது பகிரங்கமாக உர அமைச்சர் மூலமாக வெளியிடப்பட்டிருக்கிற செய்தி என்பதையும் இங்கே நான் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, D.A.P. Fertilizer import decanalised என்ற தலைப்பில் ' In a major decision the Government has decided to decanalise the import of D.A.P. fertilizer with a view of providing this important crop nutrienr to the farmers at a comparatively cheaper rate than it is available in the domestic market. The decission was taflen by the Ministry of fertilizers on the pressure from the Agriculture Ministry which had been arguing that the decontrol of the fertilizers'....... நிறைய இருக்கிறது. அதாவது நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சரைப் பொறுத்தவரையில் விவசாயிகளுடைய நன்மையை எப்போதும் கருத்திலே கொண்டிருப்பவர் என்பதை யும், அவரை நிச்சயமாக உறுதியாக நம்பலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

பிற்பகல் 12–20

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992–93–ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீட்டு விவாதத்தின்மீது உரையாற்ற வாய்ப்

பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியினைக் காணிக்கையாக்குகிறேன். சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க தங்களின் இன்னுயிரையும் துச்சமென மதிக்கின்ற காவல் துறை பணியாளர்களுக்கு உடுப்பு பராமரிப்புப் படிகள் மற்றும் உணவுக் கட்டண வீதங்களை உயர்த்திய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். ஆயுதக் கலாச்சாரத்தின் கூடாரமாக விளங்கிய தமிழகத்தை அமைதிப் பூங்காவாக மாற்றிய பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு உண்டு. தீவிரவாதிகளிடமிருந்தும், சமூக விரோதிகளிடமிருந்தும் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள கண்காணிப்புப் பணியில் ஈடுபடும் காவல்துறை அதிகாரிகள் துப்பாக்கியோடு செல்ல ஆணையிட்டுள்ள புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி கூறுவதோடு மட்டுமின்றி தேசத் துரோக சக்திகளை ஒடுக்கியே தீருவேன் எனச் சூளுரைத்து நடைமுறைப்படுத்தி இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் அந்தச் செயல் பாராட்டுதற்குரியது. நாட்டு நலனைக் காக்க இதுவரை எவரும் எடுக்காத பல துணிவான முடிவுகளை புரட்சித் தலைவி அவர்கள் எடுத்துள்ளது மிகவும் பாராட்டத்தக்கது.

கள்ளச் சாராயம் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் குறிப்பிட்டபோது குழுக்களை அமைத்து, கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்காக நடவடிக்கைகளை எடுத்து, அதற்காகக் கிடைக்கக் கூடிய பரிசு தனக்குத் தான் கிடைக்குமென்று சொன்னார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்த மட்டிலும் கள்ளச் சாராயத்தை காய்ச்சுபவர்கள் யாராக இருந்தாலும் அதை அடையாளம் காட்டினால் 1001 ரூபாய் நானே பரிசு தருகிறேன் என்று கூறியிருக்கிறேன். ஆகவே அந்தப் பரிசை எனக்குத்தான் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களிடம் கடன் பெற்று காலங் கடந்த வட்டி மற்றும் அபராத வட்டிச் சுமையால் வாடிய விவசாயிகள் 30–9–1992–க்கு முன்னர் கடனைத் திருப்பிச் செலுத்தினால் காலங் கடந்த வட்டி மற்றும் அபராத வட்டிக்குச் சமமான தொகையினை போனசாக அளிக்க அனுமதித்துள்ளது புரட்சித் தலைவி அவர்கள் விவசாயிகள் பால் கொண்டுள்ள கருணையுள்ளத்தைக் காட்டுவதோடு மட்டுமின்றி, விவசாயிகளின் தோழனாக புரட்சித் தலைவரின் வாரிசாக புரட்சித் தலைவி திகழ்கிறார் என்பதை நிரூபித்தும் காட்டுகிறது.

பெற்ற மகனே பெற்றோரை கவனிக்கத் தவறுகிற இந்தத் யுகத்தில் ஏழை எளியோருக்கும் ஊரக நிலமற்ற வேளாண்மை தொழிலாளர்களுக்கும் வருகின்ற பொங்கல் திருநாளில் தாயாக நான் உள்ளேன் என்று 45 கோடி செலவில் 60 இலட்சம் வேட்டிகள், 60 இலட்சம் புடவைகளை வழங்க ஆணையிட்டுள்ள புரட்சித் தலைவி அவர்களை மனதாரப் பாராட்டுகிறேன். சுதந்திரக் கனியினை பாரதத் தாயின் பொற்பாதங்



வறுமையில் வாடும் விடுதலைப்
களில் சமர்ப்பிக்கப் போராடி
போராட்ட தியாகிகளைப் பாராட்டியும், அவர்களின் தியா
கங்களுக்குப் பலனாக உதவித் தொகையினை 400-லிருந்து
1,000-மாகவும், உயிர் நீத்த விடுதலைப் போராட்ட வீரர்
களுக்கு ரூ. 400-ஐ ரூ. 500 ஆகவும் உயர்த்தியுள்ளது. பாரதத்
தாயே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் வடிவில் அந்த
விடுதலைப் போராட்ட வீரர்களைப் பாராட்டி பரிசளிப்பதாகவே
கருதி மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை இந்தத் தாய்த்
திருநாடே பாராட்டக் கடமைப்பட்டுள்ளது. அதோடு மட்டு
மின்றி வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் பொன்விழாக்
கொண்டாட்டங்களின் போது பொன்னாடை போர்த்தி நினைவு
பரிசுகளை வழங்கி கவுரவித்தது, பொன் எழுத்துக்களால் நாட்
டின் சரித்திரத்தில் பொறிக்கப்பட வேண்டியதாக அமைந்துள்ளது.

விளையாட்டுத் துறையிலும் தமிழகம் தலை சிறந்து
விளங்க வேண்டுமென்கிற நோக்கோடு 10-வது ஜவஹர்லால்
நேரு தங்கக் கோப்பை பன்னாட்டு கால்பந்துப் போட்டியை
சென்னையில் நடத்த பன்னாட்டு விளையாட்டு அரங்க
மொன்றை ரூபாய் 7 கோடி செலவில் நேரு விளையாட்டு
அரங்கில் கட்டப் பணித்த மாண்புமிகு முதல்வருக்கு, குறிப்
பாக இளைஞர் சமுதாயம் என்றைக்கும் கடமைப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்
அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய திருத்தம். நேரு
விளையாட்டு அரங்கம் 30 கோடி ரூபாய் செலவில் புதிதாகக்
கட்டப்படுகிறது. முதற் கட்டமாக 7 கோடி ரூபாய் வழங்கப்
பட்டது.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : தவறுக்கு மன்னிக்க வேண்டு
கிறேன். ரூபாய் 80 இலட்சத்தை முன் பணமாக வழங்கி
சிறைகளை நவீனப்படுத்த பணிகளை மேற்கொண்டுள்ளதும்
பாராட்டத்தக்கது. திரைப்படங்கள் எல்லாம் தித்திக்கும்
பாடங்களாக அமைய வேண்டுமென்கிற நோக்கத்தோடும்
சென்னை மாநகரத்தில் டிஸ்னி லேண்டுக்கு நிகரான ஒரு திரைப்
பட நகரை உருவாக்க ஒப்புதல் அளித்து திரைப்படத் துறை
யினரை ஊக்குவிக்கின்ற வகையில் பணிகளை மேற் கொள்ளும்
அரசின் திட்டத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி 2 கோரிக்கைகளை
இந்த மாமன்றத்தில் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.
என்னுடைய தொகுதியைப் பொறுத்த மட்டிலும் இதற்கு
முன்னாலே ஏகோபித்த கருத்தாக எத்தனையோ சட்ட மன்ற
உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் தொகுதிக்கு
ஒரு கல்லூரி வேண்டுமென்ற பொதுமக்களின் கருத்தினை நானும்

[டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்] [1992 செப்டம்பர் 24

பல முறை சொல்லி இருக்கிறேன். நிதி நிலை நெருக்கடியிலே அப்படிக் கேட்பது தவறு என்று உணர்ந்தாலும், அங்கே ஆரணியை அடுத்து இருக்கின்ற எஸ். வி. நகரம் என்ற ஊரில் 45 ஏக்கர் நிலப் பரப்பிற்குள்ளாக பிரம்மாண்டமானதொரு ஜாகீர் அரண்மனை இருக்கிறது. ஒரு கல்லூரியைத் துவங்குவதற்குக் கட்டிடமும், இடமும்தான் பெரிய செலவாக இருக்கும். ஆகவே ஏற்கெனவே அங்கே இருக்கிற அந்தக் கட்டிடத்திலே குறைந்த முதலீட்டைக் கொண்டு ஒரு கல்லூரியைத் துவக்க வாய்ப்பு இருக்கிற காரணத்தாலே, என்னுடைய தொகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையான அந்தக் கல்லூரியை அங்கே அமைத்திட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல ஆரணி தொகுதியில் சட்டம் ஒழுங்கை சீராகப் பாதுகாக்கும் பணி எளிதாக அமைய ஆரணி நகருக்கு ஒருகாவல் துறை துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தை இந்த நடப்பு ஆண்டில் அமைத்துத் தர வேண்டுமென்ற கோரிக்கையை அரசுக்கு சமர்ப்பித்து, வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்கி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பீட்டர் அல்போன்ஸ், ஒரு மணிக்கு விவாதம் முடிந்து, வாக்கெடுப்புக்கு விட வேண்டும். ஆக எந்த அளவுக்கு விரைந்து பேசி முடித்து நிதி அமைச்சர் அவர்களுக்கு நேரம் கொடுக்கிறீர்களோ அந்த அளவுக்கு அவர்கள் பதில் சொல்ல முடியும். 10 நிமிடங்களில் முடித்துக்கொள்ளவும்.

பிற்பகல் 12.25

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992–93 ஆம் ஆண்டுக்கான முதல் துணை நிதிநிலை அறிக்கையினைப் பற்றிய விவாதத்தின்மீது, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்குவதற்கு வாய்ப்புகள் தந்த தங்களுக்கு காங்கிரஸ் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்த்துப் பாடியே வாழ்க்கை நடத்த வேண்டுமென்ற நிலை இல்லாமல் மக்கள் எங்களுக்குக் கொடுத்த ஜனநாயகக் கடமையின் பொறுப்புக்களை உணர்ந்து, அதை நிறைவேற்றுகின்ற வகையில் ஒரு பொறுப்புள்ள காங்கிரஸ்காரனாக, ஒரு தோழமைக் கட்சி உறுப்பினராக, சில கருத்துக்களைத் தங்களின் மேலான பார்வைக்கு வைக்க விரும்புகிறேன்.

தனி மனித ஒழுக்கம், தன்னலமற்ற தொண்டுள்ளம், பொது வாழ்வில் எளிமை, தூய்மை, நேர்மை, சட்டத்தின் வார்த்தைகளுக்கு முறையான மரியாதை ஏழை எளிய மக்கள் துன்



1992 செப்டம்பர் 24] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்[

புறும்போது, துடித்துப் போகும் போது வில்லில் இருந்து
புறப்படும் அம்பாகச் சென்று அவர்களைக் கவனித்தல், மது
விலக்கு, தீண்டாமை ஒழிப்பு, எல்லோருக்கும் எளிய விலையில்
கல்வி, அரசு நிர்வாகத்தில் முறைகேடுகள், சீர்கேடுகள் இல்லா
மல் முறையான நிர்வாகம், துருப்பிடித்துத் தூங்கிக் கொண்
டிருக்கின்ற அரசு இயந்திரத்தைத் துரு நீக்கி வேகமாக முடுக்கி
விடுதல், தீவிர வாதத்தையும் பயங்கர வன்முறைகளையும் வாழ்
வின் நெறிமுறைகளாகக் கொண்டு தமிழகத்தைப் பிடித்திருந்த
விடுதலைப் புலிகளின் முதுகெலும்பை முறித்து அமைதி நிலவும்
பூங்காவாக தமிழகத்தை மாற்றுவோம் என்று மக்களுக்கு அன்னை
இந்திரா காந்தியின் மீது, ஆணையாக, தலைவர் காமராஜர்
மீது ஆணையாக, பேரறிஞர் அண்ணா மீது ஆணையாக,
அமரர் எம்.ஜி.ஆர். மீது ஆணையாக, ளைய தலைவர்,
இனிய தலைவர், 80 கோடி மக்களின் இதயம் நிறைந்த
எங்கள் இனிய இளவரசு எங்கள் ராஜீவ் காந்தியின் ரத்தத்தின்
மீது ஆணையாக மக்களுக்கு உறுதி தந்து, இந்த ஆட்சியை
அமைப்போம் என்று சொல்லி, மக்களிடம் வாக்கு கேட்
டோம். மக்கள் வாக்களித்தார்கள் என்பதை விட வாக்கு
களை அள்ளிக் கொட்டினார்கள் என்று தான் சொல்ல வேண்டும்.
அந்த வாக்குகளை அள்ளிக் கொட்டிய மக்களுக்கு நாம் கொடுத்த
வாக்குறுதியை, நாம் அளித்த நம்பிக்கையை எவ்வளவு தூரம்
நிறைவேற்றியிருக்கிறோம் என்பதைப் பரிசீலிக்கிர ஆத்தும
சோதனையாகத்தான் நான் இந்த சட்டமன்றத்தை நினைக்
கிறேன்.

ஆத்தும சோதனை என்பது நாமே நமக்குக் கேள்வி கேட்டுக்
கொண்டு, நமக்கு நாமே பதில் சொல்வது தான். இப்படி
யாக ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களாக இருக்கிற
நாங்கள் கேள்வி கேட்கவும், நீங்கள் பதில் சொல்லவும், அந்தப்
பதிலைத் தமிழக மக்கள் உணர்ந்து கொண்டு, இவர்கள்
கொடுத்த வாக்குறுதிகளுக்கு நேர்மையாக, அந்தரங்க சுத்தி
யுடன் ஆட்சி நடத்துகிறார்கள் என்று முடிவுக்கு வருவார்கள்
என்று சொன்னால், நாமும் அந்த மாபெரும் தலைவர்
களுடைய நினைவுக்கும் புகழுக்கும் அஞ்சலி செலுத்துபவர்கள்
ஆவோம். அந்த நிலையில் நான் பேசுவதாகத்தான் நீங்கள்
எடுத்துக்கொள்ள வேண்டும்.

கடந்த ஓராண்டுக் காலமாக நாம் ஒரு ஆட்சியை நடத்திக்
கொண்டிருக்கிறோம். இந்த ஆட்சியில் எங்கெல்லாம் தவறுகள்
இருக்கின்றன, எங்கெல்லாம் இந்த ஆட்சி நாம் நினைத்த
இடத்தைத் தொட்டிருக்கிறது, எங்கெல்லாம் நாம் எதிர்
பார்த்த மதிப்பீடுகளை விட அதிகமாகச் செய்திருக்கிறது என்
பதையெல்லாம் நாம் தொடர்ந்து பார்த்துக் கொண்டு வரு
கிறோம். குறிப்பாக காவல் துறையை நவீனப்படுத்தியிருக்கிறோம்.
நமது முதலமைச்சருக்கு மட்டுமே கொடுக்க வேண்டிய
கிரெடிட் அது. அதில் நமக்கு அபிப்பிராய பேதம் இல்லை.

பவர்கட்டே இல்லாத ஒரு ஆண்டுக் காலத்தை உருவாக்கி வைத்திருக்கிறோம் தமிழக சரித்திரத்திலே. அதுவும் நாம் இந்த அரசுக்கு கொடுக்க வேண்டிய கிரெடிட். பப்ளிக் டிஸ்டிரிபூஷன் சிஸ்டம் என்று சொல்லக் கூடிய பொது விநியோகத்திட்டத்திலே பல நல்ல மாறுதல்களைச் செய்திருக்கிறோம். அதற்கும் இந்த அரசை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆக இதெல்லாம் நாம் பாராட்ட வேண்டிய அம்சங்கள்.

இந்த அரசு எங்கே தவறி இருக்கிறது, இந்த அரசு இன்னும் எப்படிச் செய்தால் நாட்டு மக்களின் நல்லெண்ணத்தைப் பெற முடியும் என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய பொறுப்பும் கடமையும் அந்தச் சுட்டிக் காட்ட வேண்டிய தெளிவும் சிந்தனையும் எங்களுக்கு இருக்கிறது. அந்த வகையிலே கடந்த அரசு, இதற்கு முன்னால் ஆண்ட திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்தத் தவறுகளைச் செய்ததோ, எந்த அதிகார துஷ்பிரயோகம் செய்ததோ, எந்த முறைகேடுகளைச் செய்ததோ, அத்தகைய முறைகேடுகள் இல்லாமல் ஆட்சி அமைப்போம் என்று வாக்களித்தோமோ, அந்த முறைகேடுகளிலிருந்து, அந்த அதிகார துஷ்பிரயோகத்திலிருந்து, அந்த அவல நிலையிலிருந்து நாம் எவ்வளவு தூரம் மாறுபட்டு இருக்கிறோம் என்பதை மக்களுக்கு நிரூபிக்க வேண்டிய கடமையும் நமக்கு இருக்கிறது.

அந்த வகையில் முதலில் பார்க்கிற போது சட்டம் ஒழுங்கைப் பார்க்கிறோம். சட்டம் ஒழுங்கை முதலமைச்சர் அவர்கள் தனது தனிப்பட்ட பொறுப்பில் வைத்து செயல்படுகிறார்கள். கடந்த இரண்டு பட்ஜெட் கூட்டத் தொடரில் அதை நாம் நெஞ்சாரப் பாராட்டியிருக்கிறோம். ஆனால் நாளாக சில தொய்வு அதில் வருவதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் சாதாரணமாக சுட்டிக்காட்ட விரும்பவில்லை.

Lock-up deaths தமிழ்நாட்டில் 1985-லிருந்து 1991 வரை 19 Lock-up deaths. ஆனால் 1991-92 ஒரு ஆண்டிலேயே 19 Lock-up deaths நடந்திருக்கின்றன. Lock-up deaths என்பது, போலீஸ் விசாரணையிலே, குடியுரிமை பெற்ற ஒரு வாக்காளருக்கு போலீஸ் ஸ்டேஷனுக்குள்ளேயே நடக்கிற மரணம் தான் Lock-up death. இது ஒரு சமுகத்தினுடைய அழிவுக்கு அடையாளம். இது ஒரு ஜனநாயக நாட்டிலே நடக்கக் கூடாத ஒரு கொலை. நான் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். இதற்கு என்ன காரணம் என்பதை நாம் ஆராய வேண்டும். ஒரே வருடத்திலே இத்தனை லாக்-அப் மரணங்கள் ஆகியிருக்கிறதே, இதற்கு என்ன காரணம், இதற்கு யார் காரணம் என்பதை நாம் ஆராய வேண்டும். 3 வாரங்களுக்கு முன்னால் ஆனந்த விகடன் பத்திரிகையிலே ஒரு தலையங்கம் வந்து இருக்கிறது. 'ஒரு காலத்திலே இந்தியாவிலே தொழில் புரட்சியிலே நாம் தான் முதலாவதாக நிற்கிறோம் என்று பெருமை சொல்லி வந்தோம். விவசாய உற்பத்தி





யிலே நாம் தான் மூன்றாவதாக இருக்கிறோம் என்று சொல்லி வந்தோம். ' இன்று ஆனந்த விகடன் தலையங்கம் சொல்கிறது. இந்தியாவிலேயே ஜுவினைல் டெலிங்குவன்சி அதாவது இளங் குற்றவாளிகள் அதிகம் இருக்கின்ற மாநிலம் தமிழ்நாடு தான் என்று அது சொல்கிறது. அதற்கு என்ன காரணம், அதற்கு என்ன அடிப்படை என்பதை நாம் ஆராயவேண்டும். அந்த அடிப்படையை நீங்கள் ஆராய்ந்தீர்கள் என்று சொன்னால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-30

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி தமிழ்நாட்டில் ஜுவினைல் டெலிங்குவன்சி அதிகம் என்று ஒரு பத்திரிகை சொல்கிறது என்றால் அதையே வேத வாக்காக எப்படி எடுத்துக்கொள்ள முடியும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கிச் சொல்ல வேண்டும்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் அந்தத் தகவலைத் தான் உங்களுக்குச் சொல்கிறேன்: அதைத் தாங்கள் குற்றச்சாட்டாக எடுத்துக்கொள்ளக் கூடாது. (குறுக்கீடுகள்) ஒரு பொறுப்பான பத்திரிகையிலே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டில் எத்தனையோ பத்திரிகைகள் இருக்கின்றன. ஆங்கிலப் பத்திரிகைகளும் இருக்கின்றன, தமிழ் வாரப் பத்திரிகைகளும் இருக்கின்றன. நல்ல விஷயங்களைச் சொல்கின்ற பத்திரிகைகளும் இருக்கின்றன. ஆனால், பத்திரிகைகள் கொடுக்கின்ற புள்ளி விவரங்களை எல்லாம் இந்த நாட்டிலே நடக்கின்ற நிகழ்ச்சிகளாக நாங்கள் எப்படிக் கணக்கில் எடுத்துக்கொள்ள முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்க வேண்டும். ஆனந்த விகடன் என்று சொல்லிவிட்டால் போதாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசுகின்ற போது 1985 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி 1991 வரை நடைபெற்ற லாக்-அப் சாவுகளை விட 1991 ஆம்

டாக்டர் ஜெ. ஜெயலலிதா [1992 செப்டம்பர் 24

ஆண்டில் அதிகப்படியான லாக்-அப் சாவுகள் நடந்ததாக இங்கே குறிப்பிட்டார். இது சரியான விவரம் என்று நான் கருத வில்லை. அந்த விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. அந்த விவரத்தைத் தெரிந்துகொண்டு அவைக்கு அறிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுக்கின்ற புள்ளி விவரம் சரியான விவரமாகத் தான் இருக்க முடியும் என்று வாதிடவில்லை. (குறுக் கீடுகள்). என்னைச் சொல்ல விடுங்கள் சார். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து உட் காருங்கள். நீங்கள் கொடுக்கிற புள்ளிவிவரம் சரியானது என்று உங்கள் நம்பிக்கைக்கு எட்டிய வரையிலாவது, என் நம்பிக்கைக்கு எட்டிய வரை இது சரியானது தான் என்ற நம்பிக்கைக்குப் பிறகு தான் நீங்கள் சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்) உட் காருங்கள். நான் சொல்லிவிட்டேன். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, சரியான தகவலை, புள்ளி விவரங்களைக் கொடுக்க வேண்டியது உறுப்பினருடைய தலையாய கடமை.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: நான் முடித்து விடு கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலே இளம் குற்ற வாளிகள் இத்தனை ஆண்டுக் காலம் இருந்ததை விட, தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி யிலேதான் குறைந்து இருக்கிறார்கள் என்ற புள்ளி விவரமே இருக்கிறது.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் எந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு சொல்கிறார்கள் என்று எனக்குத் தெரிய வில்லை. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இளம் குற்றவாளிகளைக் கவனிக்கவேண்டிய பொறுப்பு சமூக நலத்துறையிலே இருக்கின்ற காரணத்தினாலே, அவர்கள் அந்த அடிப்படையிலே இந்த மாமன்றத்திற்குத் தகவலைப் பொறுப்புணர்ச்சியோடு அளிக்கிறார்கள்



1992 செப்டம்பர் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, 'நான் துதி பாடமாட்டேன்' என்று சொன் னார். பரவாயில்லை. ஆனால், புள்ளி விவரத்தையாவது சரி யாகத் தருகிறாரா என்றால், 'எனக்கே தெரியவில்லை அந்தப் புள்ளிவிவரம்' என்று சொல்கிறார். பத்திரிக்கையிலே சில செய்திகள் வரவேண்டும் என்பதற்காகவே அவர் இதுபோன்ற தவறான தகவலைத் தருவது சரிதானா என்பதை நான் உங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: (குறுக்கீடு) நீங்கள் சொல்லிவிட்டீர்கள். சில புள்ளிவிவரங்களை நீங்கள் தருகிற போது, அந்த புள்ளிவிவரங்களை நான் இந்த வகையிலே பெற் றேன். இது உண்மைதான் என்று சொல்லலாம். (குறுக்கீடு) அந்த மாதிரி நீங்கள் சொல்லாமல், ஒரு பத்திரிக்கையிலே தலை யங்கம் எழுதி இருக்கிறது என்றுதான் சொல்கிறீர்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: அதைச் சொல்லப் போகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: அதாவது பத்திரிகை யிலே வந்த, நான் சாதாரண பத்திரிகையைச் சொல்லவில்லை. எங்களுக்குக் கிடைக்கிற ஒரே சோர்ஸ், லாக்-அப் டெத்ஸ்...... (குறுக்கீடு) லாக்-அப் டெத்ஸை-பற்றி இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையிலே—மனித உரிமை பாதுகாப்பு மாநாடு டில்லியிலே நடந்தது; அன்று இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையிலே ஒரு ஆர்ட்டிகிள் எழுதப்பட்டு இருந்தது. நம்முடைய முதலமைச்சர் கூட அந்த மாநாட்டிலே இருந்தார்கள் என்று எண்ணுகிறேன். அந்த ஆர்டிகிளிலே—அந்த மாநாடு நடக்கின்றபோது, தமிழ் நாட்டிலே மனித உரிமைகள் பாதுகாக்கப்படுகின்ற உணர்வுகள் எப்படி மேலோங்கி இருக்கின்றது என்பதை வலியுறுத்த வந்த இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை இந்தத் தகவலைத் தந்து இருக் கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, அண்மைக் காலங்களில் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையில் வருவதை யாரும் நம்புவது- இல்லை, இந்த நாட்டில். (மேசையைத் தட்டும் ஒலி). வேண்டுமென்றே

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 செப்டம்பர் 24

அவர்கள் செய்திகளைத் திரித்து, தவறாகப் போடுகிறார்கள்.
நேற்று அதிகாரிகளுடன் சட்டம் ஒழுங்கு பற்றி ஒரு ஆலோசனைக்
கூட்டம் நடத்தினேன். அதுபற்றி செய்திக் குறிப்பு எல்லாப்
பத்திரிகைகளுக்கும் கொடுக்கப்பட்டது. 1½ மணி நேரம் அந்தக்
கூட்டம் நடைபெற்றது என்று செய்தி அறிக்கையில் கொடுத்
தோம். ஆனால் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையில் இன்று
காலை 30 நிமிடங்கள் தான் நடந்தது என்று பிரசுரிக்கப்பட்
டுள்ளது. அதைப்போலவே தூத்துக்குடியில் நடைபெற்ற ஒரு
நிகழ்ச்சியில் தொடங்கப்படப் போகிற ஒரு தொழிற்சாலையில்
70 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று நான்
பேசினால் 700 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று
அவர்கள் செய்தியைப் போடுகிறார்கள். வேண்டுமென்றே தவ
றான செய்திகளைப் போடுவதற்காகவே புகழ்பெற்ற பேப்பர்,
இந்தியன் எக்ஸ்பிரஸ். அதை ஆதாரமாக வைத்துக்கொண்டு
உறுப்பினர் பேசுகிறாரே என்பது தான் எனக்கு மிகவும் வியப்பாக
இருக்கிறது.

பிற்பகல் 12-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்டத் துறை
அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அல்போன்ஸ்
அவர்கள் அண்மையில் டெல்லியில் நடைபெற்ற 'ஹியூமன்-
ரைட்ஸ் கான்பரஸ்' பற்றிச் சொன்னார்கள். அனைத்து முத
லமைச்சர்களும் கலந்துக்கொண்டார்கள். நம்முடைய மாண்புமிகு
முதல்வர் அவர்களுடைய தூதுவனாக, அவர்களுடைய ஒப்புத
லோடு, அவர்களுடைய வாழ்த்துக்களோடு கலந்து கொண்டு,
அவர்களுடைய கருத்தை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி
அவர்களுடைய கருத்தை –நான் அங்கே வெளியிட்டேன். இங்கே
இந்தியன் எக்ஸ்பிரசில் 'லாக்-அப் டெத்ஸ்' பற்றி வந்திருப்
பதாகச் சொன்னார்கள். ஆனால் அங்கே பேசப்பட்டது 22
மாநிலங்களிலும் இந்தக் கொடுமை இருக்கிறது. உத்தர பிர
தேசத்தில் இருக்கிறது, நீங்கள் ஆள்கிற குஜராத்திலே இருக்கிறது,
ஓரிஸ்ஸாவில் இருக்கிறது, காஷ்மீரத்திலே இருக்கிறது என்பதா
கும். ஆகவே அது 'இந்தியன் பினாமினன்' தானே தவிர,
ஏதோ தமிழ்நாட்டிலே மட்டும் இருக்கிறது என்பதல்ல. ஆனால்
இந்தியன் எக்ஸ்பிரசில் நம்முடைய தமிழ் நாட்டில் இருக்கிற
அந்த எண்ணிக்கையை மட்டும் போட்டார்களே தவிர, பிற
மாநிலங்களில் இருக்கிற எண்ணிக்கையை போடவில்லை. எனவே,
அதனையும் நீங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று
தயவுசெய்து கேட்டுக் கொள்கிறேன். ஆனந்த விகடனைப் பற்றிச்
சொன்னீர்கள். ஆனந்த விகடன் தலையங்கத்தை நானும் படித்
தேன். படிக்கிற வழக்கம் எங்களுக்கும் உண்டு. குறிப்பாக
அவர்கள் பொதுவாக சொல்லியிருக்கிறார்களே தவிர பிற



1992 செப்டம்பர் 24] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

மாநிலத்திலே எந்த அளவுக்கு வளர்ந்து கொண்டிருக்கிறது என்ற
விவரத்தைச்சொல்லி, தமிழ்நாட்டில் அதிகமாக இருக்கிறது என்று
சொன்னால் அது ஏற்பு அல்லது நீங்களாவது சொல்லியிருக்க
வேண்டும். ஆகவே, முழு விவரம் இல்லாமல் தனியாகப் பிரித்து
தமிழ் நாட்டிலே மட்டும் அதிகமாக இருக்கிறது என்று சொல்வது
அவ்வளவு உகந்ததல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள், நீங்கள்
எல்லோரும் பதில் சொல்லிக் கொண்டிருந்தால் நேரம் ஆகிவிடும்.
(குறுக்கீடு) நீங்கள் ஏற்கனவே சொல்லியிருக்கிறீர்கள். உட்
காருங்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியன் எக்ஸ்பிரஸ்ஸில் வருகிற
அத்தனைச் செய்திகளையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
ஏற்றுக்கொள்கிறாரா ? இதற்கு முன்னால் மறைந்த பாரதப்
பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களைப் பற்றி பல்வேறு கருத்துக்
களைச் சொல்லி இருக்கிறார்களே—அதுபோன்ற, பத்திரிக்கைகள்
சொல்கிற கருத்துக்களை மாண்புமிகு காங்கிரஸ் நண்பர் ஏற்றுக்
கொள்கிறாரா ?

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : இதற்கு இப்போது பதில்
சொல்ல விரும்பவில்லை. நான் பாயிண்ட்டை சொல்லிவிட்டு
அமர்ந்து விடுகிறேன். (குறுக்கீடு) இல்லை, நான் என்ன சொன்
னேன் ? இந்தியன் எக்ஸ்பிரசை சொன்னால் அதை பொய் என்
கிறீர்கள். ஆனந்த விகடனைச் சொன்னால் சரியில்லை என்
கிறீர்கள். நான் என்ன தகவலைச் சொல்ல முடியும் ? (குறுக்
கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் உட்
காருங்கள். (குறுக்கீடு) 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில்
தவறான செய்திகள் வந்துக்கொண்டிருக்கின்றன. அந்தப் பத்
திரிகை கொடுக்கிற செய்திகளை நீங்கள் நம்புகிறீர்களா என்று
எல்லோரும் கேட்கிறார்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்,
அவர் பேசட்டும்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : பேரவைத் தலைவர்
அவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்
அதைப் படித்தேன் என்று சொன்னார்கள். அதற்கு அரசு ஒரு
மறுப்பு வெளியிட்டிருந்தால் இது வந்திருக்காது. இந்தியன்
எக்ஸ்ப்ரசில் வந்த ஆர்ட்டிகிளைப் பற்றி மறுப்பு வெளியிட்டிருந்
தால் அதன்மீது நான் பேசியிருக்கமாட்டேன்.

[1992 செப்டம்பர் 24

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இதிலே மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் அதற்கு மறுப்பு வெளியிட வேண்டுமென்று சொல்
கிறார்கள். மொத்தம் எத்தனை பத்திரிகைகள் நடந்து கொண்
டிருக்கின்றன ?

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : சட்ட அமைச்சர் நான் படித்தேன் என்று சொல்கிறாரே.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : குறைந்தது பத்து
பத்திரிகைகளாவது நடத்தி, தினந்தோறும் மறுப்பு வெளியிட்டுக்
கொண்டிருந்தால்தான் பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியும்.
எனவே, நான் கேட்க விரும்புவதெல்லாம் சட்டமன்றத்திலே
ஏதாவது இப்படி ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்கிறபோது முழு
மையாக பொறுப்பு ஏற்றுக்கொண்டுதான் சொல்ல வேண்டும்.
காரணம் இப்போது அவர்கள் சொல்லிவிட்டால் அரசாங்கம் அது
பற்றி புள்ளிவிவரத்தைத் தேடி கொடுப்பதற்குள்ளாக எல்லா
பத்திரிகைகளிலும் வந்து விடுகிறது.நாளையதினம் சரியான புள்ளி
விவரத்தை நாங்கள் கொடுத்தால் கூட அது அவ்வளவு பொருத்த
மாக இருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நானும் அதைத்தான் வலி
யுறுத்திக் கூற விரும்புகிறேன். இப்போது உறுப்பினர் பீட்டர்
அல்போன்ஸ் அவர்கள் குறிப்பிட்டார்கள். 1985-ஆம் ஆண்டி
லிருந்து தொடங்கி 1991 வரையில் தமிழ்நாட்டில் நடைபெற்ற
'லாக்-அப்' சாவுகளை விட கடந்த ஒரு ஆண்டில், 1991-ஆம்
ஆண்டில் அதிகப்படியான 'லாக்-அப்' சாவுகள் நடத்திருக்
கின்றன என்று. எந்தப் புள்ளி விவரத்தை வைத்துக் கொண்டு
சொல்கிறார் என்று தெரியவில்லை. ஆனால் அவர் சொன்ன
குற்றச்சாட்டு இன்று எல்லா பத்திரிகைகளிலும் வெளிவரும்.
நான் உடனடியாக இதற்குப் பதில் சொல்ல முடியாது. நான்
டிபார்ட்மெண்டில் கேட்டு புள்ளி விவரத்தைப் பெற்று நாளை
தான் இந்த அவையில் சொல்ல முடியும். அதற்கு அந்த அளவு
முக்கியத்துவம் பத்திரிகைகளில் கொடுக்க மாட்டார்கள்.
எனவே, நீங்கள் சொல்கின்றபோது, புள்ளிவிவரங்களின் ஆதாரங்
களை வைத்து நீங்கள் சொல்கிறீர்கள் என்று சொல்ல
வேண்டாமா?



1992 செப்டம்பர் 24]

பிற்பகல் 12-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் அவர்கள்
கேட்பதைப் போல, நீங்கள் ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில்
நடைபெற்ற லாக்-அப் சாவுகளை விட இந்த ஆண்டில் நடந்தது
அதிகம் என்றீர்கள். இந்த ஆண்டுகளில் இவ்வளவு, நான் இந்த
ஆதாரத்தை வைத்து இதைச் சொல்கிறேன், இந்த ஆண்டு இவ்
வளவு என்று சொல்லி விட்டால் முடிந்தது. (குறுக்கீடு).

*Thiru T. M. Rangarajan : On a point of order, Sir. As per Rule 93, he has to give prior intimation about making these allegations.

Thiru S. R. Balasubramoniyan : It is not an allegation.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, அது அலி
கேஷனாக இருந்தால்தான். அது அலிகேஷன் இல்லை. அவர்,
பொதுவான கருத்தாகத்தான் சொல்கிறார். (குறுக்கீடு) நீங்கள்
சொல்வது ஸ்பெசிபிக் அலிகேஷன். (குறுக்கீடு). ஸ்பெசிபிக்
அலிகேஷனாக இருந்தால்தான் அது வரும். (குறுக்கீடு). திரு.
பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : சமூகத்திலே சமூக
விரோதிகளுக்கு, சட்ட விரோதிகளுக்கு ஒரு மன தைரியம் வேக
மாக வளர்ந்து வருவதைப் பார்க்கிறோம். (குறுக்கீடு). ஒத்துக்
கொள்கிறேன். அந்த தைரியம் இருக்கின்ற காரணத்தால்தான்,
அதிகாரம் யாரிடமிருந்து வர்வேண்டுமோ, அதிகாரம் யாரால்
அமுல்படுத்தபடவேண்டுமோ, அதிகாரத்தின் ஊற்றுக் கண்களாக
யார் இருக்கிறார்களோ, அவர்களையே நேரடியாகச் சென்று
சமூகவிரோதிகள் தாக்குகின்றார்கள் என்று சொன்னால், சமூக
விரோதிகளுக்கு மனதிலே இருக்கின்ற பயம் குறைந்து வருகிறது
என்று பொருள். சமூகத்திலே அரசு தருகின்ற அதிகாரத்தை
அமுல்படுத்தவேண்டிய அதிகாரிகள், அந்த அதிகாரிகளுக்கு அதி
காரத்தைத் தருகின்ற ஊற்றுக் கண்களாக இருக்கின்ற சட்ட
மன்ற உறுப்பினர்கள், இவர்களை எல்லாம் பாதுகாக்கின்ற
போலீஸ் அதிகாரிகளேயே தைரியமாகச் சென்று சமூக விரோதி
கள் தாக்குகிறார்கள் என்று சொன்னால், சமூக விரோதிகளுக்கு
சட்டத்தின் மேல் பயம் இல்லை என்ற நிலை வந்திருக்கின்றது.
அவர்களுக்கு ஏன் சட்டத்தின் மேல் பயம் இல்லை என்று சொன்
னால், இரண்டு காரணங்கள், ஒன்று அவர்கள் கையிலே இருக்
கின்ற அதீதியான பணம், மற்றொன்று, அவர்களுக்கு இருக்கின்ற
செல்வாக்கு, பணம் எப்படி வருகிறது என்று சொன்னால், சட்ட
விரோதமான செயல்களில் ஈடுபடுவதால், They get easy money
செல்வாக்கு எப்படி வருகிறது என்று சொன்னால் (குறுக்கீடு)

கணக்கான பேரை அங்கே கொன்று கொண்டிருக்கிறார்கள். எனவே நாம் அங்கே இருக்கின்ற அந்த அரசாங்கமே செயல்பட வில்லை என்று சொல்லிவிடமுடியுமா? எனவே இப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்கிறபோது அரசாங்கத்திலே நாம் நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செல்வராஜ் உட் காருங்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : நான் அரசு செயல்பட வில்லை என்று சொல்லவில்லை. அமைச்சர் அவர்கள் ஏன் அந்த வார்த்தைகளை நுழைக்கிறார்கள் என்று எனக்குத் தெரிய வில்லை. அது பெரிய தப்பு. Then it becomes aConstitutional break-down, then, what will be the result? I did not saythat. உங்கள் கவனத்திற்கு நான் இதைக் கொண்டுவருகிறேன். அரசு செயல்படவில்லை என்று நான் சொல்லவில்லை. நீங்கள் என் னுடைய வாயில் உங்களுடைய வார்த்தைகளைத் திணிக்கக் கூடாது. You should not put your words in my mouth
நான் என்ன சொல்கிறேன் என்று சொன்னால் (குறுக்கீடு) இன்
னும் ஒரு படி அதிகமாகக் கூட சொல்வேன், தஞ்சாவூர் மாவட்ட
வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே சட்டமன்ற உறுப்பினர் திரு.
இராமநாதன் பேசியதை, கோயம்புத்தூர் மாவட்ட வளர்ச்சிமன்ற
கூட்டத்திலே மாவட்டச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினரு
மாக இருக்கின்ற திரு. ராஜு பேசியதை, எங்களுடைய மாவட்ட
வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் பேசியதைத் தான் நான்
சொல்கிறேன். குறிப்புகள் இருக்கின்றன. கள்ளச் சாராயக்
காரர்களுடைய செல்வாக்கும், பலமும் எவ்வளவு தூரம் ஆணித்
தரமாக வேரூன்றியிருக்கிறது என்பதை நம்முடைய தஞ்சை,
கும்பகோணம் இராமநாதன் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவ
ரிடம் இந்தப் போலீஸ் நடவடிக்கை எடுக்காது, எனக்கு ஒரு
தனிப் படை கொடுங்கள், நான் போகிறேன் என்று சொல்லி
யிருக்கிறார்கள். அவர் சொன்னதைத்தான் நான் இந்தச்
சட்டமன்றத்தில் இன்று சொல்கிறேன். (குறுக்கீடு) மாவட்ட
வளர்ச்சி மன்ற கூட்டத்தினுடைய Notes வாங்கி நீங்கள்
பாருங்கள்.

திரு. கே. பி. ராஜு : வளர்ச்சிமன்றக் கூட்டத்தில் நான் அப்படிப் பேசவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.



திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : போலீஸ்துறை
அதிகாரிகள் எங்களை அவமானப்படுத்துகிறார்கள், நான்
வாக்-அவுட் செய்வேன் என்று சொல்லி, நான் தான் சொன்
னேன். வேண்டாம் அவசரம் காட்டாதீர்கள். மாவட்ட ஆட்சித்
தலைவர் அவர்களை அழைத்துப் பதில் சொல்ல வைக்கிறேன்
என்று சொல்லியிருக்கிறார்கள். நாம் வேறு பிரச்சினைகளைப்
பேசுவோம் என்று சொல்லி, அப்போதும் சமாதானம் அடை
யாமல், பரவாயில்லை, டிபனைச் சாப்பிடுங்கள். காபி
சாப்பிடுவதற்குள்ளாக அவர்கள் வந்துவிடுவார்கள். அவர்கள்
வந்து பதில் சொல்லட்டும் என்று சொல்லியிருக்கிறேன். இது
அனைத்துப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : திரு. பீட்டர் அல்போன்ஸ்
அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சொன்னதற்கு
நாங்கள் நன்றி தெரிவிக்கவேண்டும். காரணம், அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இதுபோன்ற தவறுகள்
நடக்கக் கூடாது என்பதைத் தடுப்பதற்காக, எங்களுடைய
சட்டமன்ற உறுப்பினர்களும், எங்களுடைய கட்சிக்காரர்களும்,
எவ்வளவு தீவிரமாக இருக்கிறார்கள் என்று நீங்கள் சொன்னதற்கு
நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். சில இடங்களிலே
எங்காவது ஒரு நிர்வாகத்திலே, மத்திய அரசாங்கமாக இருந்
தாலும் சரி, எந்த மாநில அரசாங்கமாக இருந்தாலும் சரி,
சில இடங்களிலே சில அதிகாரிகள் தவறு செய்தால், அதிலே
நிச்சயமாக முதலமைச்சர் அவர்களோ, அல்லது சம்பந்தப்பட்ட
அமைச்சர்களோ நடவடிக்கை எடுக்கிறார்கள். எனவே அதிலே
ஒரு குற்றச்சாட்டு இருப்பதைப்போல எங்களால் எடுத்துக்
கொள்ள முடியவில்லை. இருந்தாலும் நீங்கள் குறிப்பிட்டுச்
சொன்னால், முதலமைச்சர் அவர்கள் நாங்கள் அதைப்
பார்த்து நடவடிக்கை எடுக்கிறோம் என்றுகூட தெரிவித்
திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொஞ்சம் வேகமாக முடியுங்கள். ஒரு நிமிடத்திலே முடியுங்கள்.

திரு. பீட்டர் அல்போன்ஸ் : நமது முதலமைச்சர் அவர்கள்,
நேற்றையதினம் பேசுகின்றபோது, அதற்கு முந்தையதினம்
பேசும்போது, காவல் துறையை நவீனப்படுத்துவதற்காக ரூ. 70
கோடியை வாங்கித் தரவேண்டும். சட்டமன்ற எதிர்க்கட்சித்
தலைவர் தன்னுடைய செல்வாக்கையும், தொடர்பையும் பயன்
படுத்தவேண்டுமென்று கேட்டார்கள். அதிலே நாங்கள் யாருக்
கும் பின்வாங்க மாட்டோம். இந்த தமிழ்நாட்டினுடைய நலனுக்
காக நீங்கள் மத்தியிலே போராடிப் பெறுகின்ற ஒவ்வொரு
ரூபாயிலும், அந்த ஒவ்வொரு பைசாவிலும் எங்களால் துணை
நிற்க முடிந்தால் 100 விழுக்காடு துணை நிற்போம். ஆனால்

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [1992 செப்டம்பர் 24

அதே நேரத்திலே மத்திய அரசினிடமிருந்து பெற்ற பணத்தை
செலவழிக்க முடியாமல் திரும்ப அனுப்பப்படுகிறதே அதற்கு
என்ன சொல்கிறீர்கள் ?

1991–92 ஆம் ஆண்டு பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டு
வதற்காக ரூ. 1 கோடியை மத்திய அரசு வழங்கியது. மத்திய
அரசு வழங்கிய அந்த ஒரு கோடி ரூபாயிலே, அந்த மனுக்களை
எப்படி தயாரிப்பது என்பதில் ஏற்பட்ட அந்த ஃபைல் போக்கு
வரத்திலே ஒரு வருடம் போய் அந்த ஒரு கோடி ரூபாயும்
போய்விட்டது. இப்போது திரும்ப ஆயிரம் மனுக்களுக்குக்
கொடுத்திருக்கிறார்கள். கொடுத்து மூன்று மாதம் ஆகிவிட்டது.
இன்னும் யாரிடமிருந்து மனு பெறவேண்டுமென்று தொழிலாளர்
நலத்துறை முடிவு செய்யவில்லை. இது நீரிழிவு நோய்க்காரன்
கையில் கிடைத்த இனிப்பாக இருக்கிறது.

It is like a sweet in the hands of a diabetic. It cannot be used. You fight for rights, you fight for more money, you fight for more Central Assistance and we are also with you. But, when the Central Aassistance comes to you... ...

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் துறைக்கும், காவல்
துறைக்கும் என்ன சம்பந்தம் என்பதை மாண்புமிகு உறுப்பின
ரவர்கள் இங்கே தெளிவுபடுத்த வேண்டும். சட்டம், ஒழுங்கைக்
காப்பாற்றுவதற்காக இங்கே காவல் துறையை நவீனப்படுத்து
வதற்காகப் பெறப்பட்ட நிதியில் ஏதாவது பயன்படுத்தப்
படாமல் திருப்பி அனுப்பப்பட்டதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பொதுவாகத்
தெரிவித்திருந்தால் பரவாயில்லை. நேற்றையதினம்
முதலமைச்சர் அவர்கள் கேட்டார்கள் என்று சொல்லி, நேற்று
முதலமைச்சர் அவர்கள் ' ஸ்பெசிபிக்காக ' ஒரு பாயின்டில்
தான் கேட்டார்கள்,. எல்லாத் துறைகளிலும் மத்திய அரசி
னுடைய நிதி வராமலுந்தான் இருக்கும். இந்தக் காவல் துறையை
நவீனமாக்குவதற்கு மட்டும்தான நேற்றையதினம் முதலமைச்சர்
அவர்கள் அந்தக் கருத்தைத் தெரிவித்தார்கள். மற்ற எல்லாத்
துறைகளிலும் பணம் வரும், வராமல் இருக்கும். அதையெல்லாம்
அவர்கள் நேற்றையதினம் குறிப்பிடவேயில்லை. இதை மட்டும்
சொல்லி முடியுங்கள், மணி 12.50.

பிற்பகல் 12-50

THIRU S. PETER ALPHONSE : The Government has got collective responsibility. You cannot distinguish from Labour



1992 செப்டம்பர் 24] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

department and Police department. This department and every department is a part and parcel of this Government and you cannot claim credit for one thing and you annot put the responsibility on others for anotherthing. The entire cabinet is answerable to the House.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி.—மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த
நோக்கத்திலே சொல்லவில்லை. பீடி தொழிலாளர்களுக்கு வீடு
கட்டிக் கொடுக்க வேண்டும் என்பது தலையாய கடமைதான்.
முக்கியமானதுதான். ஆனால் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையிலே
காவல் துறையை நவீனப் படுத்தவேண்டிய அவசியம் என்பது
மிகவும் அவசியமான ஒன்றாக இருக்கிறது. இந்த நாட்டு மக்களை
ஒட்டு மொத்தமாக காப்பாற்றவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிற
காரணத்தால் அது மிகவும் அவசியமானது. ஆகவே அதையும்
இதையும் ஒப்பிடாதீர்கள். நாங்கள் அதற்கு பணம் கேட்டிருக்
கிறோம், கொடுக்கவில்லை. அதோடு எப்படி ஒப்பிடுவது என்று
தான் சொன்னேன். நீங்கள் ஏதோ கேட்டால் ஏதோ பதில்
சொல்லுகிறீர்கள். அதற்கு பணம் கேட்டிருக்கிறார்கள் கொடுக்க
வில்லை. எனவே தான் நீங்கள் அதோடு இதை ஒப்பிடுவது
அவ்வளவு பொருத்தமாக தெரியவில்லை. நீங்கள் அதற்கு
பதில் சொல்வதும் சரியாக தெரியவில்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அல்போன்ஸ் இத்தோடு
முடித்துவிடுங்கள், பதிலுரை வேறு அளிக்க வேண்டும்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : நான் எங்கே பேசி
முடித்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் இதை ஒரு மணிக்குள்
முடிக்கவேண்டும். பத்து நிமிடமாவது நான் நிதியமைச்சருக்கு
கொடுக்க வேண்டாமா ? 12-25-லிருந்து பேச ஆரம்பித்தீர்கள்,
மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு மாநில அரசுக்கு
நிதிகள் ஒதுக்கி அதை செலவழிக்க முடியாமல் திரும்ப அனுப்புவது
என்பது இப்போது மட்டுமே, இந்த ஆட்சியில் மட்டுமே ஏற்பட்ட
ஒன்று அல்ல. நான் 25 ஆண்டுக்காலம் இந்த அவையில் இருந்து
வருகிறேன். எதிர்க்கட்சி தலைவனாகவும் இருந்திருக்கிறேன்.
காங்கிரஸ் ஆட்சியிலேயே பல சூழ்நிலையில் செலவழிக்க
முடியாமல் திரும்ப போயிருக்கிறது. செலவழிக்க முடியாத
தன்மைகளுக்கெல்லாம் காரணங்கள் சொல்ல வேண்டும். பப்ளிக்
அக்கவுண்ட்ஸ் கமிட்டியிலே அதற்கு காரணங்கள் சொல்ல

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1992 செப்டம்பர் 24

வேண்டும். ஏ.ஜி.யும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
இப்படிப்பட்ட நிலைமை எப்போதும் இருக்கிற ஒன்றே தவிர
குறிப்பிட்ட ஒன்றை மட்டும் சுட்டிக்காட்டி எல்லாம் அப்படித்
தான் என்ற முடிவிற்கு வருவது நல்லது அல்ல. ஆகவே சீக்கிரம்
முடித்துவிட்டால் பிரச்சினை தீர்ந்துவிடும்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : தலைவர் அவர்களே...

மாண்புமிகு 'பேரவைத் தலைவர் : அமைச்சர் உட்கார
வேண்டும். நான் ஒரு மணிக்குள் அதை முடித்தாக வேண்டும்.
நிதியமைச்சர் அவர்களே அதற்குப்பதில் சொல்லியிருக்கிறார்கள்.
திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : இறுதியாக சி. ஏ. ஜி.
ரிப்போர்ட். The Auditor–Accountant General Report has been
tabled in the hobse. It has shown a red signal. ஏறக்குறைய 1,400
கோடி ரூபாய்க்கு டி.என்.இ.பி.யிலே டெபிசிட். அதிலே 434
கோடி ரூபாய் சப்சிடி அக்கவுண்டிலே டி.என்.இ.பி.க்கு அரசிட
மிருந்து வரவேண்டியிருக்கிறது. ஆனால் அந்தப் பணம் போய்
சேர்ந்து விட்டதா என்று தெரியவில்லை. ஆனால் முறையாக
எலக்ட்ரிசிட்டி போர்டு நிர்வாகம் நடக்கிறதா என்று பார்க்க
வேண்டும். எண்ணூர் தெர்மல் நிலையத்திலே ஆஷ் ஹேண்டிலிங்
மெஷின் வாங்குவதற்கான கோப்புகள் எப்படி இருக்கிறது
என்று பார்க்க வேண்டும். 33 கோடி ரூபாய்க்கு டெண்டர் போட்டு
பிறகு 12 கோடி ரூபாய் சேர்த்து 45 கோடி ரூபாய்க்கு அதே
டெண்டரை அதே ஆளுக்கு அனுமதிப்பது என்பது சரியல்ல.
நிதித்துறையினுடைய அனுமதி வந்துவிட்டதா ?.... (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அவர் அந்த பாயின்ட்டிற்கு வந்துவிட்டார்.
I will give explanation. I will give. பாயின்ட்டிற்கு வந்து
விட்டீர்கள். அதனால் நான் விளக்குகிறேன் (குறுக்கீடு).

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : அப்படி முறைகேடான
நிர்வாகத்தை நடத்த மாட்டோம் என்று சொல்லித்தான் நீங்கள்
ஆட்சிக்கு வந்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப்
பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்
போன்ஸ் அவர்கள் மின்சார வாரியத்தைப் பற்றி இங்கே குறிப்
பிட்டார்கள். அவர் ஆரம்ப கட்டத்தில் மின்சார வாரியத்தைப்



1992 செப்டம்பர் 24] [திரு. எஸ். கண்ணப்பன்]

பாராட்டி விட்டு பவர் கட் இல்லாமல் மின்சாரம் வந்து கொண்
டிருக்கிறது எனறு சொன்னார்கள். உண்மையிலேயே ஒரு
உண்மையைச் சொன்ன காரணத்தினால் அவருக்கு நன்றி தெரி
வித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய தமிழ்
நாடு மின்சார வாரியம் 72 கோடி ரூபாய் லாபத்திலே செயல்
படுகிறது. ஆனால் நாம் இலவச மின்சாரம் கொடுப்பது போன்ற
பல்வேறு காரணங்களினால்தான் அதற்கு இழப்பு ஏற்படுகிறது,
என்று நான் பலமுறை இந்தச் சட்டமன்றத்திலேயே தெளிவாக
சொல்லியிருக்கிறேன். அதற்கு அடுத்தாற்போல் இந்த ஆஷ்
ஹேண்ட்லிங் பிரச்சினைக்கு வந்திருக்கிறார்கள். அதற்கு பல்
வேறு பத்திரிகைகளிலே எக்கனாமிக்ஸ் டைம், துக்ளக் போன்ற
பல பத்திரிகைகளில் பல்வேறு காரணங்களை சொல்லிக் கொண்
டிருக்கிறார்கள்.

அந்த திட்டத்தைப் பொறுத்த மட்டிலே ஒரு டெண்டர்
கோரப்பட்டது. 3, 4 பேர் பங்கு எடுத்துக் கொண்டார்கள்.
அதிலே 51 கோடி ரூபாய்க்கு ஒருவர் டெண்டர் போட்டிருந்தார்.
ஒருவர் 29 கோடி ரூபாய்க்கு டெண்டர் போட்டிருந்தார். அரசு
அந்த டெனடர்களை பரிசீலனை செய்கிறபோது who is the
lowest-யார் குறைவாக இருக்கிறார்களோ அவர்களுக்குப்
பரிசீலனை செய்யவேண்டும் என்று போர்டிற்கு உத்திரவிட
பட்டது. அந்த அடிப்படையிலே செய்யப்பட்டது. அதற்கு
பின்னாலே டெண்டர் கோரியவர் இன்றைக்கு இருக்கிற விலை
வாசியைச் சுட்டிக்காட்டி ரூபாயினுடைய மதிப்பு குறைக்கப்
பட்டதனால் — இந்திய அரசினால் ரூபாயினுடைய மதிப்பு
குறைக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணத்தால் 11 காசாக
இருந்த ரூபாய் மதிப்பு 6 காசாகக் குறைக்கப்பட்டு இரண்டு
மடங்காக இன்றைக்கு விலைவாசி ஏறி இருக்கிறது. எங்க
ளுடைய வித்தியாசம் 22 கோடி டெண்டருக்கு இருக்கிறது. என்று
ஒரு மனுவைக் கொடுக்கிறார் (குறுக்கீடு)

பிற்பகல் 12–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பீட்டர்
அல்போன்ஸ், நீங்கள் இப்படி எழுப்பக்கூடாது. (குறுக்கீடு)
அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். (குறுக்கீடு) திரு.
பீட்டர் அல்போன்ஸ் உட்கார வேண்டும். (குறுக்கீடு) நீங்கள்
எந்த ஆதாரமும் இல்லாமல் சொன்னீர்கள். ஆனால் அமைச்சர்
அவர்கள் தன்னிடத்தில் இருக்கிற ஆதாரத்தை வைத்துச் சொல்
கிறார். எனவே அமைச்சர் பேசவே கூடாது என்று சொல்வது
எப்படி சரி ? (குறுக்கீடுகள்) இப்போது திரு. அழகிரி ஏன் எழுந்
திருக்கிறார் ? திரு. ரங்கநாதன் ஏன் எழுந்திருக்கிறார் ? (குறுக்
கீடுகள்) அமைச்சர் பதில் சொல்கிறபோது எல்லோரும் எழுந்
திருக்கிறீர்கள் என்றால் என்ன அர்த்தம் ? எனவே இது வேண்டு
மென்றே பிரச்சினையை உருவாக்குவதுபோல் அமையும்.
அமைச்சர் தன்னிடத்திலே இருக்கிற விவரத்தைச் சொல்கிறார்.
அது தவறு என்றால் தவறு என்று சொல்லுங்கள். ஆனால்

[பேரவைத் தலைவர்] [1992 செப்டம்பர் 24

நீங்கள் எல்லோரும் எழுந்துகொண்டு, எப்படிச் சொல்லலாம் அவர் என்று கேட்டால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு) திரு. அழகிரி உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) அவர் ஆனந்த விகடன் பத்திரிகையை வைத்துக்கொண்டு சொல்லலாம்; எக்ஸ் பிரஸ் பத்திரிகையை வைத்துக்கொண்டு சொல்லலாம்; ஆனால் அமைச்சர் தன்னுடைய துறையிலே இருந்து ஆதாரம் சொன் னால் அனுமதிக்கக்கூடாதா? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்ட விவரம் வந்து விட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போனஸ் அவர்கள் தவறான தகவல்களை இந்த அவைக்குத் தருவதையே ஒரு வாடிக்கையாக எப்படி வைத்துக்கொண்டிருக்கிறார் எனபதை இதிலிருந்தே நான் நிரூபித்துக் காட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) Number of lock-up deaths in Tamil Nadu: 1985–Seven ; 1986–Seven ; 1987–Seven ; 1988–Twelve, 1989–Thirteen ; 1990–Nine.
ஆக 1985 முதல் 1990 வரை மொத்தம் 6 ஆண்டுகளில் 55 லாக்கப் சாவுகள் நடைபெற்றிருக்கின்றன ; ஆனால் 1991 ஆம் ஆண்டில் 8 லாக்கப் சாவுகள் மட்டுமே நடைபெற்றிருக் கின்றன. அதனால் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பீட்டர் அல்போன்ஸ் சொன்னதை அவர் வாபஸ் பெற வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்காகத்தான் நான் முதலிலேயே சொன்னேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது தெரிவித்ததற்கு திரு. பீட்டர் அல்போன்ஸ் உங்கள் பதில் என்ன? (குறுக்கீடுகள்)

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே** என்று சொல்கிறார்கள். அது தப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாரும் அப்படிப் பேச வில்லை (குறுக்கீடு) அப்படி யாரும் பேசவில்லை. எனவே திரு. ரங்கநாதன் நீங்களாக அப்படிச் சொல்லக்கூடாது. வாபஸ் பெறவேண்டும் என்று சொல்வது வேறு; நீங்கள் சொல்வதுபோல் சொல்வது என்பது வேறு; வாபஸ் வாங்கவேண்டும் என்று சொல்கிறார்கள். எனவே அதிலே தலையிடக் கூடாது.

Thiru S. PETER ALPHONSE : The Hon. Chief Minister informed the House the number of lock-up deaths till 1991. 1991-92 ஆம் ஆண்டில் எத்தனை லாக்-அப் டெத்ஸ்?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1992 செப்டம்பர் 24] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவரம் தற்போது என்னிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் இதற்கு முன்னால் பேசுகிறபோது என்ன சொன்னார்? அவர் 1991-92-ஐப் பற்றிப் பேசவில்லை. He did not speak about 1991–92. He cannot raise this question now. அதற்கு நீங்கள் முன் அனுமதி பெற்று ஒரு கேள்வியைப் போட்டு முறையாக நீங்கள் பதில் பெறவேண்டுமே தவிர this is not the way to raise questions in the House. (Thumping of desks)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பீட்டர் அல்போன்ஸ் பேசுகிறபோது 1991-92 என்ற அந்த ஆண்டின் இறப்பு பற்றிச் சொல்லவில்லை. 91 என்று நன்றாகச் சொன்னீர்கள். அது இல்லை என்று முதலமைச்சர் இவ்வளவு ஆணித்தரமாக மறுத்ததற்குப் பிறகு நீங்கள் சொன்ன குற்றச்சாட்டை வாபஸ் வாங்குவதுதான் சரி.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைக்குறிப்பில் இருந்து இதை நீங்கள் 'வெரிஃபை' செய்யலாம். மாண்புமிகு உறுப்பினர் சொன்னது 1985 முதல் 1990 வரை ஏறத்தாழ 12 கேஸஸ் நடந்திருக்கின்றன என்றார். ஆனால் 1991-ல் மட்டும் 19 கேஸஸ் என்னவோ நடந்தன என்றார்; அதுதானே நீங்கள் சொன்னது? (குறுக்கீடு) ஆக மொத்தம் அவர் சொன்னது அந்த 6 ஆண்டுகளில் நடைபெற்ற லாக்-அப் சாவுகளை விட 1991 ஆம் ஆண்டில்—ஒரே ஆண்டில்—அதிகப்படியான லாக்-அப் சாவுகள் நடைபெற்றன என்று கூறினார். அதை நான் இப்போது ஆதாரத்துடன் மறுத்து இருக்கிறேன். 1985 முதல் 1990 வரை நடைபெற்ற லாக்-அப் சாவுகள் 55. அதாவது 6 ஆண்டுகளில் நடைபெற்ற லாக்-அப் சாவுகள் 55. ஆனால் 1991 ஆம் ஆண்டில் 8 சாவுகள்தான் நடைபெற்று இருக்கின்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே நிமிடம் இருக்கின்ற காரணத்தினால்...

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, துணை மானிய கோரிக்கைகள் 1 மணிக்கு நிறுத்த வேண்டும். சரியாக 1 மணிக்கு ஓட்டுக்கு விடவேண்டும் என்று இருக்கிறது.

[1992 செப்டம்பர் 2·

பிற்பகல் 1-00

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ரூ. 161 கோடியே 29 இலட்சத்திற்கான துணை மதிப்பீடுகளை இந்த அவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

## 9. அரசினர் தீர்மானங்கள்.

### (அ) விதி 189(3)-ஐத் தளத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 189 (3)-ஐ தளர்த்துவதற்குரிய தீர்மானத்தை மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் முன்மொழியக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: அவர் ஏற்கனவே இந்த அவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுவிட்டார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்மானமாக முன்மொழியுங்கள். Suspension of Rules —Suspension of Rule 189(3)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 189 (3)ஐத் தளர்த்தி 1992–93 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதம் முடியும்வரை ஆவையின் நேரத்தை* நீட்டிக்கலாம் " என்னும் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம் என்க. " ஆம் "
மறுப்போர் இல்லை என்க.
மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.
மறுப்போரே இல்லை.
தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

*மாண்புமிகு பேரனவத் தலைவர் தீர்ப்புக்கிணங்க மாற்றப் பெற்றது.



1992 செப்டம்பர் 24]

## 8. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1992–93—பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது விவாதம்—பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. இப்போது முதலமைச்சர் அவர்கள் லாக்—அப் டெத் பற்றி கேட்டது. (குறுக்கீடு) ஒரு கருத்தை நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அவர் நீங்கள் சொன்னது தவறு, அந்தக் குற்றச்சாட்டு தவறு என்று சொன்னதற்குப் பிறகு அதை நீங்கள் வாபஸ் வாங்குவதில் தப்பே இல்லை.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, 1990–91லே இந்த ஆட்சி இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் 1991 என்ற அந்த ஹோல் இயரைச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: அதுதான். நான் என்ன சொல்கிறேன். We are responsible only for 1991–92. We are discussing that.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. நீங்கள் பேசுகின்றபோது அப்படி பேசவில்லை. 1991 என்று சொன்னீர்கள்,

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அதிலே அவர்கள் 1985-லேயிருந்து 1990 வரை கொடுத்த அதுவே தவறு. 19 என்று சொன்னார். 55 நடந்திருக்கிறது. எனவே அதுவே கூட தவறு. எனவே தவறான தகவல் கொடுத்திருக்கிறீர்கள் என்பதற்கு அதுவே உதாரணம். (குறுக்கீடுகள்)

[1992 செப்டம்பர் 24

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் அவர்கள் உங்களுக்கு இப்போது சரியான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். அதை ஏற்றுக்கொண்டு நீங்கள் ஏற்கனவே கொடுத்தது தவறு, தவறானது, அதை வாபஸ் வாங்கிக்கொள்கிறேன், இதை ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்லலாம்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான தகவலை அவைக்குத் தெரிவித்துவிட்டு அது தவறு என்று நிரூபித்த பிறகு அதைத் திரும்பப் பெறுகின்ற பண்பு ஒரு உறுப்பினரிடம் இல்லை என்று சொன்னால் அதை அத்துடன் விட்டுவிடுவோம். ஏனென்றால் உண்மை நிலைமை என்ன என்பதை நான் இங்கே ஆதாரத்துடன் தெரிவித்துவிட்டேன். அதுவே எனக்குப் போதுமானது. (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : I want to set records right. நீங்கள் ஆட்சியில் இல்லாத சமயத்திலே நடக்கின்ற குற்றங்களுக்கு உங்களை எப்படிப் பொறுப்பாக்க முடியும்? (குறுக்கீடுகள்) நான் என்ன சொன்னேன்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒரு புள்ளி விவரத்தைச் சொன்னீர்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : தலைவர் அவர்களே, அந்த புள்ளிவிவரம் என்ன என்று சொல்ல விடுங்கள். திரும்ப ஒரு தடவை சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் முதலிலேயே சொன்னேன். அந்தப் புள்ளிவிவரம், ஏதோ ஒரு பத்திரிகையிலே வந்ததை வைத்துக்கொண்டு—ஏதோ சில வாரப் பத்திரிகையில் எவ்வளவோ வருகின்றன—அவற்றிலே வந்தவற்றை வைத்துக்கொண்டு நீங்கள் பேசியதாலேதான் வந்த தவறு. நீங்கள் அடிப்படையே, ஆரம்பித்த ஆரம்பமே தவறாக ஆரம்பித்த காரணத்தினாலே தான் வந்தது. ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் அந்த ஆஷ் ஹேண்டலிங் மெக்கானிஸத்தைப் பற்றி நான் சொன்ன கருத்துக்களுக்கு பதில் தெரிவித்தார்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் அமருங்கள். அவர் சொல்லட்டும். (குறுக்கீடு) திரு. ஜெயக்குமார் உட்காருங்கள்.



[1992 செப்டம்பர் 24

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : தலைவர் அவர்களே, அதாவது அந்த டெண்டர் அனுமதிப்பதற்கு முன்னாலேயே அந்த விலையை மாற்ற வேண்டும் என்று அந்த நிறுவனம் கோரிக்கை விட்டதாகச் சொன்னார்கள். எனக்கு கிடைத்திருக்கின்ற தகவலின்படி என்னிடம் இருக்கின்ற ஆதாரத்தின்படி முதலிலே உள்ள டெண்டர் வாஸ் அக்ஸெப்டட்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எந்த ஆதாரமும் என்னிடம் தரவில்லை. நீங்கள் உங்களிடம் இருக்கின்ற ஆதாரம் என்று இங்கே அவ்வளவு அழுத்தம் திருத்தமாகச் சொல்கின்றபோது என்னிடத்திலே நீங்கள் அதைக் காண்பித்திருக்க வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் அவ்வளவு அழுத்தம் திருத்தமாகச் சொல்கின்றபோது, அது சரியல்ல. இப்போது இதோடு இந்தப் பிரச்சினையை முடியுங்கள். அல்லது அவர் துறையிலேயிருந்து சில தகவலைத் தருகிறார். அதையாவது ஏற்றுக்கொள்ளுங்கள். மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

பிற்பகல் 1—05

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசுகிறபோது பீடித் தொழிலாளர்களுக்கு மத்திய அரசு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியதாகவும், அதை மாநில அரசு திருப்பிச் செலுத்தியதாகவும் ஒரு தவறான தகவலை அவைக்குத் தந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தொழிலாளர் நலம் காக்கின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு தொழிலாளர்களுக்காக வழங்கப்பட்ட எந்தத் தொகையையும் திருப்பிச் செலுத்தவில்லை ; திருப்பி அனுப்பவில்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தவறான தகவல் அவைக்குத் தரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாள் விவாதத்திற்கு பிறகு இந்த நேரத்திலாவது என்னை பதில் சொல்கின்ற

அளவுக்கு விடுவித்ததற்கு மாண்புமிகு உறுப்பினர் பெருமக்
களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

துணை மானியக் கோரிக்கையின்மீது பொதுவாக விவாதம்
ஒரு நாள்தான் நடைபெறும். சிலபல நேரங்களில் ஒருசில
மணிகள்தான் நடைபெறும்; சிலபல நேரங்களில் ஒருசில
நிமிடங்கள்தான் நடைபெறும். ஆனால் இந்த தடவை 2
நாட்களாக நடத்தியும் எனக்கு நேரம் கிடைக்கவில்லை என்பதை
(சிரிப்பு) எண்ணுகிறபோது பெரும் வருத்தமாக இருக்கிறது.
நிதிதான் எனக்கு கிடைக்கவில்லை என்றாலும், நேரமாவது
கிடைப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் வழி,
செய்திருப்பார்களானால் மிக மிக நன்றாக இருந்திருக்கும்.

ஆக நேற்றும், இன்றும் 14 மாண்புமிகு உறுப்பினர்கள்
பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கின்றபோது
அந்தக் கருத்துக்களுக்கு சிறுபல விளக்கங்கள் தருவதற்கு
வாய்ப்புகூட இல்லாத அளவுக்கு வழிவகை செய்திருக்கிறீர்கள்
மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள். உறுப்பினர்கள் நிதிச்
சுமையை குறைக்காவிட்டாலும் என்னுடைய நேரச் சுமையைக்
குறைத்து இருக்கிறீர்கள் என்பதை எண்ணி உள்ளபடியே நான்
வருந்துகிறேன் என்றாலும் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள்
நேற்றும், இன்றும் இந்த துணை மானியக் கோரிக்கையைப்
பொறுத்து பல்வேறு கருத்துக்களை வழங்கியிருக்
கிறார்கள், இதிலே விரிவான விளக்கங்கள் பலவற்றை எடுத்துச்
சொல்வதற்கு நேரம் இல்லை என்றாலும்கூட, இங்கே
மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் தொகுதி பற்றிய
பிரச்சினைகளையும், தங்கள், தங்கள் தொகுதியில்
நடைபெற வேண்டிய வளர்ச்சித் திட்டங்கள்பற்றியும்;
ஆங்காங்கே தேவைப்படுகின்ற பணிகள் பற்றியும்; இங்கே
வற்புறுத்தி பலவற்றையும் சொல்லியிருக்கிறார்கள். அவற்றிற்
கான பதிலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு
அமைச்சர் பெருமக்களும் உண்மையான நிலையை; உள்ள
நிலையை; மிகத் தெளிவாகவும் திட்டமாகவும் எடுத்துக் கூறி
யிருக்கிறார்கள். மற்றபடி அவர்கள் எடுத்துச் சொன்ன பல்வேறு
கருத்துக்களை அந்தந்த துறையைச் சேர்ந்த அமைச்சர்
பெருமக்கள் கூர்ந்து கவனித்து அவற்றில் நிதிநிலைமைக்கு ஏற்ப,
விதிமுறைகளுக்கு ஏற்ப; நாட்டு நடப்புக்கு ஏற்ப;
எவ்வெவற்றை நடைமுறைப்படுத்த இயலுமோ அவற்றை
நடைமுறைப்படுத்துகின்ற முயற்சியிலே அவர்கள் எல்லாம்
ஈடுபடுவார்கள் என்பதை மட்டும் இப்போது நான் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். அவற்றில் ஒருசிலவற்றிற்கு நான்
விளக்கங்கள் வைத்து இருக்கிறேன் என்றாலும் 1½ மணிக்குள்



அவற்றையெல்லாம் சொல்லி முடிக்க இயலாது என்ற காரணத்
தால், பொதுவாக நான் சொல்லுகிறேன். இதைப் பொறுத்த
வரையில் எடுத்துச் சொல்லுகின்றபோது மாண்புமிகு உறுப்பினர்
கள் உணர்ச்சி வயப்படாமல், இந்த துணை மதிப்பீடுகள் கோரிக்
கையை ஏற்கவேண்டும் என்பதுதான். செய்யப்பட்ட செலவு
களுக்கு, செய்யப்படுவதற்காக எடுத்துக்கொண்ட பணிகளுக்காக
ஒதுக்கப்பட்ட தொகையை ஈடுகட்டும்படி அனுமதிக்கும் ஒரு
வார்த்தையைத்தான் உங்களிடையே நான் கேட்கிறேன். ஏன்
என்றால் அந்தத் தொகை எதிர்பாராத செலவினத்திலிருந்து
எடுத்து செலவழிக்கப்பட்டதற்கு நீங்கள் அனுமதி தந்ததற்குப்
பிறகுதான் மறுபடியும் அந்த எதிர்பாராத செலவினத்தில்
இந்த தொகையை நான் சேர்த்து மறுபடியும் எதிர்காலத்தில்
எதிர்பாராத செலவினங்களுக்கு ஈடுகட்டுவதற்காகபயன்படுத்தப்
படும். தவிர எதிர்காலத்தில் புதிய பலபணிகளை செய்வதற்கு
நிதி ஒதுக்கீடு செய்வது இந்த துணைமானியக் கோரிக்கையில்
வராது. அது பொது வரவு-செலவுத்திட்ட விவாதத்தின்போது
வரும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த துணை மானியக்
கோரிக்கையை என்னிடத்தில் விட்டுவிட்டு அவர்கள் எங்கெங்
கேயோ போய் சுற்றி, சுற்றி பார்த்துவிட்டு வந்துள்ளார்கள்.
உலகத்தை, நாட்டை, நாட்டின் நிலைமையை எல்லா
வற்றையும் அலசிவிட்டு அவரவர்கள் இடத்திலே அமைதியாக
அவரவர்கள் உட்கார்ந்து விட்டார்கள். (சிரிப்பு—மேசையைத்
தட்டும் ஒலி) ஆக, இந்த துணை மானியக் கோரிக்கை
மதிப்பீடுகள்பற்றி தேவையா ? இல்லையா ? குறைக்கலாமா?
கூட்டலாமா ? என்பதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருப்பார்
களானால் என்னுடைய நோக்கம் ஒரளவுக்கு நிறைவேறுவதாக
இருந்திருக்கும். இங்கே குறை சொல்லுவதோ குற்றம்
சொல்லுவதோ தவறு இல்லை. அதற்காகத்தான் சட்டமன்றமே
இருக்கிறது. நாட்டுமக்களின் சார்பாக எடுத்துச் சொல்லு
வதற்கு மாண்புமிகு உறுப்பினர்சள் இருக்கிறார்கள்.

பிற்பகல் 1–10

நான் அடிக்கடி எடுத்துச் சொல்வது மாதிரி, 'The ruling
party has its way; the opposition party has its say'
என்பார்கள். ஆகவே, ஜனநாயகப் பண்பிலே எடுத்துச்
சொல்வதற்காகத்தான் எதிர்க்கட்சிகள் இருக்கின்றன. குற்றம்
குறைகளைச் சுட்டிக் காட்டுவதற்கு அவர்களுக்கு உரிமை
இருக்கிறது. குற்றம் குறைகளைச் சுட்டிக் காட்டலாமே தவிர,
குற்றம் குறைகளைச் சாட்டக்கூடாது. எங்கள்மீது சுமத்தக்கூடாது
குற்றங்கள் இருக்கின்றன; குறைகள் இருக்கின்றன என்று
எடுத்துச் சொல்வதற்குக் கடமைப்பட்டு இருக்கிறார்கள்,

1992 செப்டம்பர் 24] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஆகவே, நாட்டிலே நடைபெறுகின்ற, 5½ கோடி
மக்களின் சார்பாக இருக்கின்ற பிரச்சினைகள் அத்தனையும்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், இங்கே
இருக்கின்ற அமைச்சர் பெருமக்கள் அத்தனை பேருக்கும்
கண்ணுக்கும், காதுக்கும், கருத்துக்கும் எட்டும் என்று யாரும்
எதிர்பார்க்க முடியாது. இங்கே எடுத்துச் சொல்கின்ற
பொழுதுதான் சிலபல குற்றங்கள், குறைகள் நடைபெறுவது
தெரிய வருகின்றது. அவற்றை நீக்குவதற்கான வழிவகைகளை
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர்
பெருமக்களும் தங்களிடத்திலே இருக்கிற அதிகாரம் மற்றவை
களை வைத்துக்கொண்டு, இந்தக் குற்றங்களை எந்தெந்த
வகைகளிலே களையலாம்; குறைகளை எந்தெந்த
அளவிற்கு நீக்கலாம் என்ற அளவிற்கு உள்ளபடியே முயற்சி
செய்கின்றனர். ஆனால் குற்றம் குறைகளைச் சுட்டிக்காட்டுகின்ற
பண்பு இருக்க வேண்டியதுதான். அப்படியிருந்தால்தான்
எங்களுக்குத் தெரியும் அவற்றை நீக்குவதற்கு. அந்த
முறைகளைத்தான் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்
அவ்வப்போது பல்வேறு விளக்கங்களைத் தந்து, தெளிவுபடுத்தி
இந்த மன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாமல் நாட்டிலே
உள்ள மக்களும் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக
பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.
ஆனால் தொடர்பேயில்லாமல் சிலபல கருத்துக்கள், சிலபல
நேரங்களில் வருகின்றபோதுதான் உள்ளபடியே வேதனை
தருகின்றது. வேறு பல நிலைமைகளும் ஏற்படுகின்றன.
சிலபேர் எடுத்துச் சொல்கின்றபொழுது இங்கே எதிர்க்கட்சியாக
மட்டுமல்லாமல் எதிரிக் கட்சியாக இருந்து வழக்கமாக குற்றம்
சுமத்த வேண்டும்; சாட்ட வேண்டும் என்ற அளவுக்குச்
சாட்டுகிறார்கள். காரண காரிய விளக்கங்கள் வேண்டும்
எதற்கும். ஆதாரங்கள் வேண்டும். சாதாரணமாகப் பொறுப்
பற்ற முறையில் பேசுகின்ற இடமல்ல. ஆகவே, 5½ கோடி
மக்களின் சார்பாக அமைந்திருக்கின்ற மன்றம் பேசுகிறது
என்று சொன்னால் அந்த மக்களின் சார்பாகப் பேசுகிறோம்,
நாம் எடுக்கிற நடவடிக்கைகளெல்லாம் அவர்களின் சார்பாக
எடுக்கிறோம் என்பது பொருள். அதை விட்டுவிட்டு
என்னென்னமோ, பொருத்தமில்லாமல் எடுத்துச் சொல்வார்
களானால் பதில் சொல்லவே முடியாது. இரண்டு காலும்
இல்லாத நொண்டி விரைவாக ஓடினான் என்றும், அதனை முழு
குருடன் பார்த்தான் என்றும், அதை முழு செவிடன் கேட்டான்
என்றும், அதை முழு ஊமை சொன்னான் என்றும் சொல்லி
(சிரிப்பு) காரண காரிய விளக்கங்களை எடுத்துச் சொல்வார்
களேயானால், நாங்கள் என்ன செய்ய? எதைச் செய்ய?
ஆகவே, ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாத அளவுக்கு
எடுத்துச் சொல்கின்றபோதுதான் அதை எடுத்துச் சொல்கிறவர்
ளுக்கும் பயன்படாது; நாட்டுக்கும் பயன்படாது. என்கிறோம்
அந்த வகைகளிலேயிருந்து உள்ளபடியே இந்த அவையிலே
நடைபெறுகின்ற விவாதங்கள் அனைத்தும் நமக்குப் பயன்



[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1992 செப்டம்பர் 24

டுவனவாக அமையவேண்டும். அந்தவகையிலே, சூடு இல்லாமல்
ஒளி தரத்தக்ககூடிய அளவுக்கு வாதங்கள் அமையுமேயானால்,
மன்றத்திற்கும் பயன்படும், உண்மைநிலையும், உள்ள நிலையும்
நாட்டு மக்களுக்குத் தெரிவிப்பதற்கும் பயன்படும்

ஒரு சிலக் கருத்துக்களை மட்டும், நான் பொதுவாக நிதியை பொறுத்தவரையிலும், நாட்டினுடைய நிலைமை, நம்முடைய நிலையைப் பொறுத்தவரையிலும் எடுத்துக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். மற்றொன்றை எடுத்துச் சொன்னார்கள். குற்றங்கள் சொல்கின்றபொழுது, ஒன்றை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில், குற்றங்கள் குறைகள் நிகழக்கூடும். அறவே இல்லை என்று சொல்லிவிட முடியாது, இராமன் ஆண்ட இராமராஜ்யத்திலேயேகூட, இருந்தன என்றுதான் சொல்கின்றார்கள். சேர, சோழ, பாண்டியர் காலத்திலேயும்கூட உண்டு. இப்பவும் உண்டு. ஆனால், கம்பேரிடிவ்—அதாவது, ஒப்பிட்டுப் பார்க்கின்ற நிலைமை இருக்க வேண்டும். இப்போது, உலகம் முழுவதுமே மனப்போக்கு மாறியிருக்கிறது. சமுதாயத்தினுடைய மனப்போக்கு மாறியிருக்கிறது. வன்முறை செயல்கள் பெருகியிருக்கின்றன. வன்முறைகள் பல இடங்களிலும் நடைபெறுகின்றன. கட்டுப்பாட்டுக்கு பெயர்போன அமெரிக்க நாட்டிலே கூட, லாஸ் ஏஞ்சல்ஸில் இரண்டு மாத காலத்திற்கு முன்னே என்னென்ன நடந்தன என்றும், வேறுபல நாடுகளிலேயெல்லாம் அன்றாடம் நாம் தொலைக்காட்சியைப் பார்க்கின்றபொழுது என்னென்ன காட்சிகளைக் காணுகின்றோம் என்பதும் அனைவருக்கும் அறிந்தவையே. சமுதாயத்தினுடைய மனப்போக்கும் அணுகுகின்ற முறையும், வன்முறைசெயல்களிலே ஈடுபடுகின்ற தன்மையும், அதைப்பற்றி கவலைப்படாத நிலைக்கு, கட்டுப்பாட்டுக்கு பெயர்போன நாடுகளிலேகூட அத்தகைய தன்மைகள் வந்து விட்டன. இந்தியாவிலும் அவை பெருகி இருக்கின்றன. எல்லா மாநிலங்களிலும் இருக்கின்றன. இங்கேயும் இருக்கின்றன. அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு இருக்கிறது என்பதை நாம் ஒப்புக் கொள்கிறோம். கொலை, கொள்ளை, திருட்டு இவைகள் எல்லாம் வளர்கின்றன. அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான தன்மைகளில்தான் தமிழக காவல்துறையினர் இருக்கிறார்கள். ஐந்தரை கோடி மக்களிடத்திலே ஏற்படுகின்ற பிரச்சினைகள், அவர்களுடைய உடைமையைக் காப்பாற்ற, உயிரைக் காப்பாற்ற, அவர்களுடைய உரிமைகளைக் காப்பாற்ற, இவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டிய முழு பொறுப்பும் கிட்டத்தட்ட 75,000 காவல்த்துறையினருக்குத்தான் அமைந்திருக்கிறது. அந்த 75,000 காவல் துறையினரை வைத்துக் கொண்டு நாம் ஆளவேண்டி இருக்கிறது. அத்தகைய தன்மை

களை ஒப்பிட்டுத்தான் நீங்கள் பார்க்கவேண்டும். அந்தவகை யிலேதான், பிற மாநிலங்களில், பிற இடங்களில் எப்படி இருக் கின்றன, நம்முடைய நிலைமை எப்படி இருக்கிறது, நம்முடைய சமுதாய மனப்போக்கு எப்படி இருக்கிறது என்பதை வைத்து பார்க்கின்றபோது, இந்தியாவிலே இருக்கிற வேறு எந்த மாநிலத்தையும்விட, திறமையான முறையிலும், மிகச் சிறப்பான முறையிலும் பணியாற்றுகின்ற காவல்துறையினர் தமிழகத்திலே தான் இருக்கிறார்கள் என்பதை இன்றைக்கு நான் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-15

The best Police among all the Police forces of India is the Tamil Nadu Police என்று தமிழக காவல்துறை பெயர் பெற்றுள்ள இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் இருக்கின்ற காவல் துறையினர் கண்டு பிடிக்கின்ற வழக்குகள், மற்றவைகள் வழக்குமன்றத்திற்குச் சென்றால் 100-க்கு 72 சதவீதம், 73 சதவீதம், 71 சதவீதம், 70 சதவீதத்திற்குக் கிட்டத்தட்ட குறையாமல் அவர்களுக்குத் தண்டனை வாங்கித் தருகின்ற தன்மையைத்தான் தமிழகப் போலீசார் கொண்டிருக்கிறார்கள். வேறு பல மாநிலங்களிலே ஒப்பிட்டுப் பார்ப்போமேயானால் 36 சதவீதத்திற்குக்கூட தண்டனைவாங்கித் தர முடியாமல், இருக்கிறார்கள் 46 சதவீதம், 50 சதவீதம், 55 சதவீதத்திற்குக்கூட வாங்கித்தர முடியவில்லை. தொழில் நுட்ப சாதனங்களை வைத்துக்கொண்டு, தொழில் நுட்ப அறிவை வைத்துக்கொண்டு, குற்றங்களை விரைவிலே கண்டுபிடித்து, கண்டு பிடித்த குற்றங்கள்மீது வழக்குகள் தொடுத்து, வழக்குகள் தொடுப்பதற்கான தன்மை களில், தண்டனை வாங்கித்தருகின்ற அளவிற்குப் பாடுபடுகின்ற வகையிலேயும் தமிழகம் மிகச் சிறந்துதான் விளங்குகிறது.

இன்றைக்குக் காஷ்மீருடைய நிலை, அசாமினுடைய நிலை, பஞ்சாப் மாநிலத்திலே ஏற்பட்டிருக்கின்ற நிலை, உத்திரப் பிரதேசத்திலே ஏற்படுகின்ற நிலை, பீகார், இராஜஸ்தானிலே ஏற்படுகின்ற நிலை, ஆந்திராவிலே ஏற்பட்டுக் கொண்டிருக்கிற நிலை, இவற்றையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுது எந்த அளவிற்குத் தமிழகம், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுடைய சீரிய தலைமையின்கீழே காவல் துறை பாணியாற்றி வருகிறது என்பதையும், அதற்கான ஊக்கம், ஆக்கம் எந்த வகையிலே தரப்படுகின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் உணர வேண்டும்.

நேற்றே தெளிவுபட மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எடுத்துத் தெரிவித்தார்கள். நம்முடைய காவல்துறை இன்னும் வலிவுடையதாக ஆக நவீனக் கருவிகளை வைத்துக்கொண்டு



தங்களுடைய பணிகளைச் சிறப்பாகச் செய்ய வேண்டுமென் பதற்காக, மத்திய அரசிடம் நிதி கேட்டிருக்கிறோம், அது வரும் என்று நாம் நம்பிக்கை கொண்டிருக்கிறோம் என்பதற்கான காரண காரிய விளக்கங்களையும் அவர்கள் எடுத்துச் சொன்னது மட்டுமல்லாமல், அவர்களை ஊக்குவிக்கின்ற முறையிலேயும்கூட அண்மையிலே காவல் துறையினருக்கு பதக்கங்கள் வழகுங் கின்ற விழாவிலேகூட 23,000 காவல் துறையினருக்குப் பதவி உயர்வு தந்து, அவர்களுக்கு ஒரு மனக்குறை இல்லாத அளவிற்கு பணியாற்றுவதற்கான பதக்கங்களையும் இந்தத் திங்கள் 15-ஆம் தேதி அறிவித்திருக்கிறார்கள். குறைபாடுகள் எவையும் இல்லை என்று நான் சொல்லவில்லை. காவல் துறையிலே குறைபாடுகள் இருக்கின்றன என்று 'Vigilance Commission' பல்வேறு வழக்குகளைத் தொடுக்கிறது. அவர்கள் பல பேர் நீக்கப்பட்டு இருக்கிறார்கள்; சஸ்பென்ட் செய்யப்பட்டிருக் கிறார்கள். அவர்களிலே சிலபேர் வேலையை விட்டுக்கூட நீக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தப் புள்ளி விவரங்களை தனியாகக் காவல்துறை மானியக் கோரிக்கை வருகின்றபொழுது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தருவார்கள். அமைதி காக்க எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவை.

ஏனென்றால் மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களே குறிபிட்ட வழக்குகளிலே ஈடுபடுகின்றபொழுது, காவல் துறையினர் எப்படிப்பட்ட....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச் சரவர்கள் அந்த நேரத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் ஏற்கனவே முன்மொழிந்திருக்கின்ற தீர்மானத்திலே 1-30 வரை என்று இருப்பதை, ''இது முடியும் வரை'' என்றேகூட வைத்துக் கொள்வதற்கு விதி இருக்கிறது. ஆகவே, நீங்கள் நேரத்தைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டி யதில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய முழு நன்றியைத் தெரிவித் துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காவல் துறையைப் பொறுத்தவரையில் குறைபாடுகள் இருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர்கள் அங்கொன்றும், இங்கொன்றுமாகச் சுட்டிக் காட்டியுள்ளார்கள் ஒன்றைச்

1992 செப்டம்பர் 24] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

சுட்டிக்காட்டி, அதுதான் முழுவதும் என்று சொல்லி விட
முடியாது. ஆகவே, ஒரு 'Part-ஐ' எடுத்துக் கொண்டு
அதுதான் 'Whole—Wholesome' என்று சொல்லுகின்ற
அளவிற்கு வருமேயானால் அது பொருந்தியே வராது. குறிப்
பிட்ட குறைகளைச் சுட்டிக்காட்ட வேண்டியதுதான். சுட்டிக்
காட்டுவதிலே என்ன நடவடிக்கை எடுக்கிறோம் என்று பார்க்க
வேண்டும். நடவடிக்கை எடுக்காமல் விட்டால் அப்பொழுது
அரசின் மீதோ, ஆட்சியின் மீதோ, குற்றச்சாட்டுகளைச்
சாட்டலாம்.

ஆனால் ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுது, இந்தியாவிலே
இருக்கின்ற தன்மைகளைப் பார்த்தால், கூடுமான வரையில்
தமிழகத்தைப் பொறுத்த வரையிலும் அமைதி,
நிலவுகிறது மற்றவைகளைக் காப்பாற்றுவதிலே முழு முனைப்
போடு அரசு இருந்து வருகிறது.

இப்பொழுதும் இந்தத் தமிழகக் காவல் துறையை வைத்துக்
கொண்டு, விடுதலைப் புலிகளை நாம் அடக்கினோம் ;
போராளிகளையெல்லாம் ஒடுக்கினோம் ; அதற்கான காரண
காரிய விளக்கங்களை எல்லாம் இந்தப்பேரவை பெற்றிருக்கிறது.
அத்தனையையும் நாமாக நேரடியாகச் செய்யவில்லை. காவல்
துறையினரையும், காவல் துறை அதிகாரிகளையும், அதிலே
பணியாற்றுகின்றவர்களையும் வைத்துக்கொண்டு தான் நாம்
அத்தனையையும் செய்கின்றோம். இன்றைக்கும் அசாமிலே
பத்தாண்டுக் காலமாக ஏற்பட்டு வருகின்ற வன்முறைச் செயல்
கள், அங்கே நடக்கின்ற கொள்ளை, கொலை, மற்றவைகள்
அடங்கியபாடில்லை பணத்தை எவ்வளவு பயன்படுத்தினாலும்
கூட, மத்திய அரசாங்கம் எவ்வளவுதான் அவர்களுக்கு உதவி
செய்தாலும் கூட எவ்வளவு ஊக்கம் தந்தாலும்கூட, இன்ன
மும் வன்முறைச் செயல்களை அங்கு அடக்க முடியவில்லை.
எவ்வளவுதான் ஊக்கமும். ஆக்கமும் எல்லாம் தந்து, இந்தியா
விலே வேறு எந்த மாநிலத்தையும் விட அதிகமான அளவிற்கு
வசதி வாய்ப்புகளைத் தந்து, இராணுவத்தையே கொண்டுபோய்
நிறுத்திபடைத் தளவாடங்களையெல்லாம் கொண்டுபோய்நிறுத்தி
யதற்குப் பிறகுப்கூட இன்றைக்கும் காஷ்மீரிலே வன்முறை
நிகழ்ச்சிகளை அடக்க முடியவில்லை ; பஞ்சாபைப் பொறுத்த
வரையிலும் அடக்க முடியவில்லை. ஆனால், ஆந்திராவிலே
தீவரவாதிகளை அடக்க எவ்வளவோ முயன்று பார்க்கிறார்கள் ?
அங்கே எல்லாம் தீவிரவாதிகளை அடக்க முடியாத நிலையில்
தமிழகத்தைப் பொறுத்தவரையில் இங்குள்ள காவல் துறை
யினரைவைத்துக் கொண்டு, பொதுமக்களுடைய ஒத்துழைப்பு,
ஆதரவோடுகூட விடுதலைப் புலிகளினுடைய அட்டூழியங்களை
யும், அவர்களுடைய அக்கிரமங்களையும் அழித்து, ஒழித்து, அவர்



1992 செப்டம்பர் 23] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கள் அறவே இல்லை என்கின்ற அளவிற்கு, இந்தியா தெரிந்து
கொள்ளுகிற அளவிற்கு இந்த அரசு செய்து முடித்துள்ளது,
இவற்றைப்பற்றிக் கவனிக்கின்றபொழுது எதிர்கட்சியினரின்
குற்றசாட்டிற்குப் பொருளில்லை 'என்று புலப்படும். இந்த அரசு
எவ்வளவு பொறுப்புணர்ச்சியோடு பணியாற்றுகிறது என்பது
எவருக்கும் புரியும் ஒரு குற்றம் நிகழ்கிறது, குறை நிகழ்கிறது,
என்றால் இந்த அரசுக்கு என்ன தொடர்பு என்றுதான் கவனிக்க
வேண்டுமே தவிர, அங்கே நடக்கிறது. இங்கே நடக்கிறது, ஒரு
குப்புசாமியும். குமாரசாமியும் செய்வதற்கு இங்கே உட்கார்ந்
திருக்கிற நாங்கள் என்ன செய்யமுடியும். குற்றங்களைச் சுட்டிக்
காட்டினால் அவற்றைக் கண்டிக்கிற உரிமை எங்களுக்கு இருக்
கிறது. அவைகளை தடுப்பதற்கான, அதிகாரம் அவற்றை
ஒடுக்குகிற உரிமை எங்களுக்கு இருக்கிறது.

பிற்பகல் 1–20

கடந்த ஆண்டு இந்த ஆட்சியில் நடந்த 'ஆல் இந்தியா
போலீஸ் ட்யூட்டி 'யில் தமிழ்நாடு போலீஸ்தான் முதல் பரிசு
பெற்றது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்
பிட்டுக் காட்டினார்கள். இப்போது மட்டுமல்ல ;ஒரு ஏழெட்டு
ஆண்டுக்காலமாகவே அகிலஇந்திய பேனரும் நம்முடைய மாநிலத்
திற்குத்தான் தொடர்ந்து வந்திருக்கிறது ஏழெட்டு ஆண்டு
களாக தொழில் நுட்பத் தன்மையிலே இரசாயன
முறையின் மூலம் வழக்குகளை விரைவிலே கண்டுபிடிப்பது
ஒரு இடத்திலே ஒரு குற்றம் நடந்து விட்டால், அது 5 நிமிடத்திற்
குள்ளாக செய்திகள் வந்து, உடனே காவல் துறைக்குப்
போகிற விளைவுக்கான சூழ்நிலைகள் எல்லாம்
பெற்றிருப்பது தமிழகம். இதற்கு ஊக்கமும், ஆக்கமும் தர
வேண்டும். தவறு செய்பவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்
என்பதிலே மிக முனைப்பு உள்ளத்தோடுதான் மாண்புமிகு
முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கிறார்கள்
என்பதையும் இந்த வாய்ப்பிலே நான் சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுகிற வகையிலே
நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலே ஒன்றை
மட்டும் இந்த அவைக்கு நான் தெளிவாக்க கடமைப்
பட்டிருக்கிறேன். 1992–93ஆம் ஆண்டிற்கான நிதிநிலை
அறிக்கையை இந்த அவை முன்னால் வைத்தபோது, நடப்
பாண்டின் இறுதியில் நிகரப் பற்றாக்குறை ரூ. 494 கோடி
யாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டது. அப்போது, நான் கடந்த
மே திங்களின்போது, பல்வேறு காரணங்களினால் இந்தப் பற்றாக்
குறை ரூ. 700 கோடி அளவுக்கு மேல் செல்லும் என்று இந்த
அவையில் தெரிவித்து இருந்தேன், அதுமட்டுமல்லாமல், மாண்பு
மிகு முதலமைச்சர் அவர்கள் உதவியோடு கடந்த ஆண்டு பல
நடவடிக்கைகள் எடுத்ததன் விளைவாக நிதிப் பற்றாக்குறையை
ஓரளவுக்குச் சமாளித்து, ஐந்தாண்டுத் திட்டத்திலே ஒரு ஆண்டுத்

திட்டத்தை ரூ. 1,605 கோடியிலிருந்த அளவை மிஞ்சி, ரூ. 175
கோடி அளவிற்கு செலவழிக்க உள்ளோம். இந்த நிதிநிலை
வளர்ச்சியை நாம் தொடர்ந்து செய்ய இயலும் என்று நம்பி
இருந்தோம் ஆனால், பல காரணங்களினால் குறிப்பாக ஒரு புறம்
மத்திய தொகுப்பிலிருந்து வழங்கக்கூடிய அரிசியின் விலை உயர்வு
பெட்ரோல் மற்றும் டீசல் போன்ற பொருட்களின் விலை உயர்வு
மத்திய அரசு கொண்டு வந்துள்ள மாற்றங்களினால் சிறுசேமிப்பு
வசூலில் ஏற்பட்ட தொய்வு, மேலும் மாண்புமிகு
உறுப்பினர்களுடைய கோரிக்கைகளின் அடிப்படையில்
பல புதிய செலவினங்களை ஏற்றுக் கொண்டவை ஆகியவைகளி
னால் அரசின் நிதிநிலைமை மறுபடியும் பாதித்துள்ளது. தற்
போது நடப்பு ஆண்டிற்கான பற்றாக்குறை, இப்போது
இருக்கின்ற சூழ்நிலையை வைத்துப் பார்க்கிறபோது, உத்தேச
மாக நாம் சொல்ல வேண்டுமானால் கிட்டத் தட்ட 800
கோடிக்கு மேல் செல்லும் என்கிற நிலைதான் இப்போது
நம்முடைய பற்றாக்குறையைப் பொறுத்தவரை நிலைமை இருந்து
கொண்டு வருகிறது. நிதிநிலை தொடர்ந்து ஆரோக்கியமாக
இருக்க வேண்டுமென்றால், அடிப்படை மாற்றங்கள் சிலவற்றை
நாம் மேற்கொண்டே ஆக வேண்டும். அது தவிர, வேறு வழியே
இல்லை. எனவேதான் அரசு ஊதிய விகிதங்களில் மாற்றம்,
படிகளில் மாற்றம், அரசு அலுவலர்களின் எண்ணிக்கை மற்றும்
மானியத்தின் மீது தனிக்கவனம் செலுத்த வேண்டிய நிலை
ஏற்பட்டுள்ளது. இவைகளைச் கட்டுப்படுத்தும் முயற்சியில்
நாம் ஈடுபடாவிட்டால் நிதிநிலை மேலும் சீர்கேடு அடைந்து,
தினந்தோறும் அரசு செய்யவேண்டிய பணிகள் பாதிக்கக்கூடிய
நிலைமைகூட ஏற்படும். இந்தத் தடைகள் சற்று கசப்பாக
இருந்தாலுங்கூட, நாட்டின் நலன் கருதி, தேவையான மாற்றங்
களைச் செய்வதற்கு இந்தப் பேரவை உறுப்பினர் பெருமக்களும்,
நாட்டிலே இருக்கிற நல்லோர்களும், ஆன்றோர்களும், பொருளா
தார வல்லுநர்களும் மற்றவர்களும் பேருதவி செய்ய வேண்டியவர்
களாக இருக்கிறார்கள். அண்மையில் வருகிற, அதாவது நாளை
மறுநாள் டெல்லியில் தேசிய வளர்ச்சிக் குழுக்கூட்டம் நடைபெற
விருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிலே கலந்து
கொண்டு, நம்முடைய பிரதமர் மாண்புமிகு திரு. நரசிம்ம ராவ்
அவர்களும் மற்றவர்களும் கலந்துகொள்ள இருக்கும்படியான
ஒரு தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டம் கூட்டப்பட்டது; ஆனால்,
இன்று காலையிலே வந்த பத்திரிகையின்படி, அது தள்ளி வைக்கப்
பட்டிருக்கிறது என்று தெரிய வருகிறது. அதை எதற்
காகக் கூட்டினார்கள் ? என்று கேட்டால், அந்தக்
கூட்டத்தில் ஒரிசா முதல்வராக இருக்கும் திரு. பிஜு பட்நாயக்
அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட துணைக்
குழுவினுடைய அறிக்கையைப் பற்றி விவாதிப்பதற்காக இந்த
தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டம் கூட்டப்பட்டது. அது
தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. பின்னர் நடைபெறக்கூடும். இந்த
அறிக்கையின்படி எல்லா மாநிலங்களிலும் நிதி நிலை சற்று
அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிய வருகிறது.



வருவாய்க் கணக்கை மட்டும் வைத்துப் பார்த்தால், வரு
வாய்க்கணக்கில் திட்டம் இல்லாத செலவினங்களுக்கும், மொத்த
வருவாய்க்கும் விகிதாச்சாரத்தையும் நாம் பார்த்தோம் என்றால்
இந்த நிதிநிலை தெளிவாகத் தென்படும். தமிழ்நாட்டைப்
பொறுத்தவரையிலும் 1984–85இல் இந்த விகிதாச்சாரம் 73.6
சதவிகிதமாக இருந்தது. அதாவது திட்டச் செலவு, திட்டம்
இல்லாத செலவுகள் என்று கணக்கிடுகிறபோது, வருவாய்த்
துறை கணக்கிலே மட்டும் 73.6 திட்டம் இல்லாத இனங்
களுக்கு செலவழித்துக் கொண்டிருந்தோம். அதேமாதிரி அது
திட்டச் செலவுகளுக்கு என்று கணக்கு எடுக்கிறபோது,
கிட்டத்தட்ட 23.4 சதவிகிதம்தான் ஆயிற்று.

பிற்பகல் 1–25

அதே நேரத்தில் அகில இந்தியாவினுடைய நிலை
80.4 சதவிகிதம் ஆகும். மற்ற மாநிலங்களோடு
எல்லாம் சேர்த்து வைத்துக் கணக்கிடுவோமேயானால்
அந்த அளவுக்குத் திட்டமில்லாத செலவினங்களுக்குச்
செலவழிக்கப்படுகின்ற நிலையில் தமிழகம் நன்றாகத்
தான் இருந்தது ஓரளவுக்கு. அகில இந்திய அளவில் 80.4%
என்ற அளவுக்கு இருக்கும்போது தமிழகம் 73.6% என்ற
அளவிலே இருந்தது. ஆனால் அதற்குப் பிறகு வருவாய்க் கணக்
கில் செலவினங்கள் மிக வேகமாக உயர்ந்தது. வரவினங்கள் குறைந்
ததனுடைய விளைவாக குறிப்பாகச் சொல்லப்போனால் அகில
இந்திய கணக்குகனளப் பார்ததோம் என்றால் 1991இல் இந்த
விகிதாச்சாரம் 80.4 சதவிகிதத்தில் இருந்தது. அகில இந்திய
அளவில் எல்லா மாநிலங்களையும் சேர்த்துக் கணக்கிட்டால்
சராசரி 88.1 சதவீதத்திற்கு திட்டமில்லாத செலவினங்கள்
வளர்ந்து விட்டன. ஆனால் அதேநேரத்தில் தமிழ்நாட்டின்
நிலை 73.6 சதவிகிதத்தில் இருந்து 91.4 சதவிகிதத்திற்குச்
செலவினங்கள் வளர்ந்து விட்டன. எனவே 1984-85 இல்
தமிழ்நாட்டின் நிதிநிலை அகில இந்திய சராசரியை விட
சற்று நல்ல நிலையில் இருந்தது என்றாலும் 1990–91 ஆம் ஆண்டு
கணக்குப்படி தமிழ்நாட்டின் நிதிநிலை அகில இந்திய சராசரியை
விடச் சற்று மோசமான நிலைக்கு மாறிவிட்டது. இதற்கான
அடிப்படைக் காரணங்களை நாம் ஆராய்ந்தோம் என்றால் 1984-
85 முதல் 1990–91 வரை தொடர்ந்து அகில இந்திய அளவில்
வருவாய் இனங்கள் 15.3 சதவிகிதம் ஆண்டுதோறும் உயர்ந்து
இருக்கிறது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்த வரையில்
12% மட்டும்தான் வருவாயினுடைய தன்மையில்
வளர்ந்து இருக்கிறது. செலவினங்களைப் பொறுத்த
வரையில் இடைவெளியில் அகில இந்திய அளவில் 17.1
சதவிகிதம் என்ற நிலையில் இருக்கின்றன. தமிழ் நாட்டில் 16.1
சதவிகிதம் ஆண்டுதோறும் ஏற்பட்டிருக்கிறது. ஒரு
சிறிய வித்தியாசம்தான் இருக்கிறது. வருவாய் ஆதாரங்கள் சரா
சரியை விடக் குறைவாக இருந்தாலும் செலவினங்கள், சராசரியை

ஒட்டியே இருந்தாலும் நம்முடைய நிலையில் அதிக பாதிப்பு
காணப்படுகிறது. இதனை நாம் மறுபடியும் சீர்படுத்தி
எடுத்துச் செல்லவேண்டும். குறிப்பாக, திட்டங்களுக்கு நிதி ஒதுக்கு
வகையில் செலவினங்களை மாற்றியமைக்க வேண்டும். இந்த
அடிப்படைத் தத்துவத்தைத்தான் நான் மீண்டும் மீண்டும் கூறிட
வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மானியங்கள், ஊதிய உயர்வுகள்
போன்ற செலவினங்களை நாம் உயர்த்திக் கொண்டே சென்றால்
முக்கிய செலவினங்களான பணிகள்—பள்ளிகள், சாலைகள், குடிநீர்
வசதி, பாசனம், தொழில்கள், விளைப் பொருட்கள் உற்பத்தி,
குடிசைத் தொழில்பொருட்கள் உற்பத்தி—போன்ற இனங்
களுக்கு நிதி ஒதுக்கங்களைப் போதுமான அளவுக்கு
செய்ய இயலவில்லை. திட்டப் பணிகளுக்கான ஒதுக்கங்
களைச் செய்ய இயலவில்லை என்றால், மேலும் மேலும் வளர்ச்சி
பணியும் சரி மற்றும் தனி நபர் வருமான உயர்வும் சரி பெரிதும்
பாதிக்கப்படும் என்பதை உணரவேண்டும். மேலும் மேலும் மானி
யங்கள் வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் எழும்பும்.
எனவே இந்தச் சிக்கலான சூழலில் இருந்து வெளிவருவதற்கு நாம்
திட்டமில்லாத செலவினங்களை எவ்வளவுக்கெவ்வளவு குறைக்க
அரசு முயற்சிகள் எடுத்தாலும், அதற்கு மாண்புமிகு உறுப்பினர்
பெருமக்களும், மற்றவர்களும் ஒத்துழைப்புத் தந்தால்தான் அது
சிறப்பாக முடியும். அதையொட்டித்தான் மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களும் அவ்வப்பொழுது நடவடிக்கை
எடுத்துக்கொண்டு வருகின்றார்கள். இதற்கு ஒத்துழைப்புத்
தேவைப்படுகிறது. நாட்டிலே, வளர்ச்சித் திட்டங்களுக்கு அதிகத்
தொகை வழங்குவதுதான் நம்முடைய பணியாக இருக்க
வேண்டும். இதனை ஒட்டித்தான் அரசுக் கொள்கையை வகுக்க
வேண்டியவர்களாக இருக்கின்றோம். இந்த நிலைமை எல்லா
மாநிலங்களிலும் நிலவிவருகின்ற காரணத்தால் திட்டமில்லா
செலவினங்களை மத்தியிலும் மாநிலங்களிலும் குறைப்பதற்கான
வழிவகைகளைக் காண வேண்டும் என்பதற்காகத்தான் அகில
இந்திய தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டம் கூட்டப்பட்டிருக்
கிறது. எல்லா மாநிலங்களையும் கூட்டி வைத்து, மத்திய அரசும்
சேர்ந்து, எந்த எந்த வகைகளிலே இந்தத் திட்டமில்லாத
செலவினங்களைக் குறைக்கலாம் என்பதற்குத்தான் திரு. பிஜு
பட்நாயக் அவர்கள் தலைமையிலே அமைக்கப்பட்ட துணைக்
குழு ஆராய்ந்து அறிக்கை அளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்
டது. அந்தத் துணைக் குழு இப்போது ஒரு அறிக்கையை அனுப்பி
யிருக்கிறது. அந்த அறிக்கையை அடிப்படையாக
வைத்துத்தான் இந்தக் கூட்டம் நடைபெறுகிறது.

திரு. பிஜு பட்நாயக் என்னென்ன யோசனைகள் சொல்லி
யிருக்கிறார்கள் என்று பார்த்தால் அதிலே 5, 6 மாநில முதல்
அமைச்சர்களும், திட்டக் குழு உறுப்பினரும், மத்
திய அரசின் திட்ட இலாக்காவின் துணை அமைச்சரும் இடம்



பெற்றிருக்கிறார்கள். அந்தக் குழு என்னென்ன பரிந்துரைகள் செய்திருக்கிறார்கள் என்று பார்த்தால், திட்டமில்லாத பணிகளுக்கான செலவினங்கள் 8-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் குறைந்தது ஐந்து சதவிகிதமாவது குறைக்கப்பட வேண்டும். 8-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அரசு, வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்தக்கூடாது, கூடுதல் தவணை பஞ்சப்படி எதனையும் ஓர் ஆண்டு காலத்திற்கு மத்திய, மாநில அரசுகள் வழங்கக் கூடாது. ஓராண்டு காலத்திற்கு அரசு ஊழியர்களின் ஊதியங்கள் எக்காரணம் கொண்டும் உயர்த்தப்படக்கூடாது—இந்தப் பரிந்துரைகள் எல்லாம் அறிக்கையிலே சொல்லப் பட்டிருக்கிறது. இவைகள் அனைத்தையும் தேசிய வளர்ச்சிக் குழு ஆராய இருக்கிறது. அதற்குப் பிறகு முடிவு செய்ய இருக்கிறது. என்னென்ன பரிந்துரைகள் செய்திருக்கிறார்கள் என்பதை மட்டும் காதிலே போட்டு வைக்கிறேன்.

பிற்பகல் 1.30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, விதி 189(3)-ல் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது, ஒரு மணிக்கு வாக்கெடுப்பு எடுக்க வேண்டும். 287-ஆம் விதியின்படி பேரவை சில விதிகளைத் தளர்த்தலாம் என்று இருந்தாலும்கூட இந்த விதியைத் தளர்த்த முடியுமா என்று எனக்குப் புரியவில்லை. இதற்கு முன்பு ஏதாவது அப்படி தளர்த்தியிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்—இப்பொழுது 1 1/2 மணி ஆகிவிட்டது. இப்பொழுது மீண்டும் நீட்டிக்கப்படுகிறது என்றால், மீண்டும் ஒரு முறை விதியைத் தளர்த்தியாக வேண்டும். அதையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இடையிலே நான் குறிப்பிட்டது அவர் தீர்மானத்தை முன்மொழிகிறபோது அந்த விதியைத் தளர்த்துவது என்று மட்டும் இருக்கிறது என்று நான் சொன்னேன், விதியைத் தளர்த்துவது என்று சொல்கிறபோது அவர் 1.30 வரை என்று சொன்னார். விதியைத் தளர்த்தியாகிவிட்டது என்றால் பிறகு பழையபடி ஒரு நேரம் வராது என்பதைத்தான் நான் இடையிலே குறிப்பிட்டுச் சொன்னேன்.

திரு. எஸ். ஆர் பாலசுப்ரமணியன் : அவர் அதை முன்மொழிந்தபோதே $1\frac{1}{2}$ மணி வரை என்று முன்மொழிந்து இருக்கிறார். இப்பொழுது 'மேன்டேட்டரி' என்று எடுத்துக் கொண்டால், உதாரணமாக கேள்வி நேரம் ஒரு நாளைக்கு இருக்கவேண்டுமென்ற செக்ஷன் 'shall' என்று ஆரம்பிக்கிறது. ஆனால் அதிலே இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

'The fiist hour of every sitting shall unless the House unanimously resolves otherwise, be available for asking and answering of questions'. அதிலே நீங்கள் தளர்த்தலாம். ஆனால் 189-லே அப்படி விதி விலக்கே கிடையாது.

'At 1 p.m. on the day or the last of the days, as the case may be, allotted under sub-rule (2) all discussions shall terminate and the Speaker shall forthwith put every question necessary to dispose of all the outstanding matters in connection with the demands for supplementary grants.,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த கில்லட்டின் நேரத்தைத் தளர்த்துவதற்குத் தீர்மானம் கொண்டு வரலாம் என்று பாராளுமன்றத்தினுடைய தீர்ப்பிலே கொடுத்திருக்கிறார்கள்.

The Speaker. in consultation with the Leader of the House, allot, days for the discussion and voting of demands for grands. On the last day of the allotted days, at 17-00 hours or at such other hour as the Speaker may fix in advance, he forthwith puts every question necessary to dispose of all the outstanding matters in connection with the demands for grants.

If more time than what was allotted to some groups of demands, is taken and consequently the time-table alrea y published in respect of the remaining groups of demands is revised, the day on which the tast group ot demands for grants is to be disposed of according to the revised time-table is regarded as the last day of the allotted days. If on the last day, the last group of demands for which time has been allotted s disposed of earlier than the fixed hour, the outstanding demands are guillotined only at that hour. The intervening period is devote to some other items included in the List of Business for that day.'

நம்முடைய பேரவையிலே 23—4—1992 அன்று இந்த விதி விலக்கு கொடுத்து, அதற்கு மேலும் விவாதத்தை நீட்டித்திருக் கிறோம். எனவே, அந்தத் தீர்மானத்தில் விதி விலக்கு அளித்து. அந்த விதியைத் தளர்த்த வேண்டுமென்று மட்டும் மாற்றப்படுகிறது என்று அதைத்தான் இடையிலே சொன்



னேன். அவர் அந்த நேரத்தை அதிலே குறிப்பிடாமல் அந்த விதி எண் 189 தளர்த்தப்பட வேண்டும் என்று மட்டும் இருக்கிறது என்று இடையிலே சொன்னேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் வாசித்தபோது 11/2 மணி என்று குறிப்பிட்டேன் என்றாலும் மாண்புமிகு பேரவைத் தலைவர் முடிக்கிறபோது என்றார்கள். அதற்காக உறுப்பினர்கள் எல்லாம் அஞ்ச வேண்டிய அவசியமில்லை. நீண்ட நேரம் பேசுவேன் என்று எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லை. எடுத்துக் குறிப்பிட்டதை மட்டும் சொல்லி முடித்துவிடலாம் என்று நான் கருதுகிறேன். இது தெரிந்திருக்க வேண்டும் என்பதற்காக நான் சொல்கிறேன். இந்தக் கட்டுப்பாட்டைப் பொறுத்த வரை, மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு முன்மாதிரியாக விளங்க வேண்டும். அரசு ஊழியர்களுக்கு போனஸ் என்ற பெயரில் எதுவும் வழங்கக் கூடாது. அரசு ஊழியர்கள் ஈட்டிய விடுப்பை ஒப்படைத்து அதற்குப் பதிலாக பணம் பெறும் முறையை நிறுத்த வேண்டும். ஓய்வுபெறும் காலத்தில் மட்டும் இந்தத் தடைக்கு விதிவிலக்கு அளிக்கலாம். சொந்த ஊருக்கு செல்லும் பயணத்தைத் தவிர மீதமுள்ள எந்தப் பயணத்திற்கும் விடுமுறைப் பயணச் சலுகை அளிக்கக் கூடாது. நியாயமான, தேவையான அளவுக்கு உதவிகள், சலுகைகள் குறைக்கப்பட வேண்டும். உணவுப் பொருள், பொது விநியோகம், மின்சாரக் கட்டணம், நீர்ப்பாசனக் கட்டணம், பேருந்துக் கட்டணம், உயர் கல்வியின் கட்டணங்கள் போன்ற கட்டணங்கள் நியாயமான அளவுக்கு உயர்த்தப்பட வேண்டும். வருமான வரி செலுத்துவோருக்கு பொது உணவு பொருட்கள் விநியோகம் அறவே நிறுத்தப்பட வேண்டும். உயர்நிலைப் பள்ளிகளுக்கு மேற்பட்ட கல்விக் கூடங்களில் கட்டணம் உயர்த்தப்பட வேண்டும். பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கு மட்டும் உயர் கல்விச் சலுகைகள் அளிக்கலாம். வர்த்தக ரீதியில் இயங்கும் பொது நிறுவனங்களுக்குப் பணச் சலுகைகள் அளிப்பதோ, அவற்றின் நட்டங்களை ஈடுகட்டுவதோ கூடாது.

விற்பனை வரிகளை ஒழுங்குபடுத்த வேண்டும். விற்பனை வரிச் சலுகைகளையும், விதிவிலக்குகளையும் அளிக்க வேண்டியதில்லை. நிலவரி வருமானத்தையும், செஸ்-ஐயும் உயர்த்திட வேண்டும். ஆனால் சிறு விவசாயிகள், குறு விவசாயிகளுக்கு மட்டும் சலுகைகள் அளிக்கலாம்.

பிற்பகல் 1–35

மின்சாரத் துறையில் குறைந்தது 3 சதவிகிதம் அளவுக்காவது வருமானம் கிடைக்கத்தக்க அளவுக்கு கட்டணம் அமையவேண்டும்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1992 செப்டம்பர் 24

அரசுப் பேருந்துகளில் நிகர வருமானம் குறைந்தது 5 சதவிகிதமாவது அந்த அளவுக்காவது அமைய வேண்டும். சிறு சேமிப்புகளின் பேரில் வழங்கப்படும் கடன்கள், நிரந்தரக் கடன்களாகக் கருதப்படவேண்டும். நிதி நிர்வாகம் மற்றும் சிக்கன நடவடிக்கைகள் சிறப்பாக மேற்கொள் ளப்படவேண்டும். மாநிலங்களுக்கு ஊக்க அளிப்பு என்ற வகையில் கூடுதல் நிதி வழங்கப்பட வேண்டும். மத்திய மாநில அரசுகளின் வருவாயில் இயங்கும் நிறுவனங்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும், நிதி ஆதாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டும். செலவினங்கள் குறைக்கப்பட வேண்டும் என்ற முக்கியமான பரிந்துரைகள் செய் திருப்பது மத்திய அரசைப் பொறுத்தும் சரி, மாநிலங்களைப் பொறுத்தும் சரி, இந்தியா எங்கே போய்க்கொண்டிருக்கிறது என்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதற் காகத்தான். 4, 5நாட்களுக்கு முன்னாலே பத்திரிகையிலே வந்த செய்தி, இப்படி மத்திய அரசாங்கத்தினுடைய இந்த நாட்டினுடைய தேவைகளை நிறைவேற்றுகிற அளவுக்கு வெளி நாடுகளிலே வாங்கிய கடன் மாத்திரம் 2 லட்சத்து 10 ஆயிரம் கோடி ரூபாய் ஆகும். அதற்கு வட்டியும் சுமையாகி, அந்த சுமையை நாம் சுமந்து கொண்டிருக்கிறோம். என்று இருக்கிறது. இந்த நிலைமையே நீடிக்குமானால் எதிர்காலம் எங்கே போய்ச் சேரும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். ஆனால் இந்த சிக்கன நடவடிக்கை பரிந்துரையாகத்தான் செய்யப்பட்டிருக்கிறது. தேசிய வளர்ச்சிக் கூட்டத்திலே கலந்துகொள்கின்ற முதலமைச்சர்கள் என்னென்ன சொல்கிறார்கள் என்று பார்க்க வேண்டியிருக்கிறது. அதற்குப் பிறகு குழு என்ன முடிவெடுக்கிறது. பிறகு மத்திய அரசு என்ன முடிவு எடுக்கிறது. முடிவெடுத்தற்குப் பிறகு, இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில், இங்கே இருக்கிற சூழ்நிலைகளுக்கு ஏற்ப, இங்கே இருக்கின்ற நாட்டு மக்களுடைய நடைமுறைக்கு ஏற்ப, மக்களுடைய மனப் பான்மைக்கு ஏற்ப எந்த அளவுக்கு நடைமுறைப்படுத்தலாம் என்ற அளவுக்கு நாமும் முடிவு செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை முன் கூட்டியே உங்களுக்கு சொல்லி வைப்பது நல்லது என்பதற்காக தான் அதைப் பற்றிய விளக்கங்களை நான் சொல்கிறேன். அரசே எல்லா பொறுப்பு களையும் ஏற்க வேண்டும். எல்லோருடைய கஷ்டங்களையும் ஏற்க வேண்டும். எல்லா வசதிகளையும் பார்க்கவேண்டும். சலுகைகளை எல்லாம் கூட்ட வேண்டும் என்று. சொல்லிக் கொண்டே போவோமானால், ஒரு பக்கம் சொல்லி விட்டு, மற்றொரு பக்கம் வரிகளை உயர்த்தவே கூடாது, கட்டணங்களை உயர்த்தக்கூடாது, அரிசி விலையை எக்காரணம் கொண்டும் உயர்த்தக் கூடாது. அது என்றைக்கும் மார்க்கண்டேயன் மாதிரி 16 வயது மாதிரியே இருக்க வேண்டும்



[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1992 செப்டம்பர் 24

விலை எக்காரணம் கொண்டும் கூடக் கூடாது. பால் விலையை உயர்த்தக்கூடாது. மின்சாரக் கட்டணம் விதிக்கக் கூடாது. ஏற்றக்கூடாது. பேருந்துக்கட்டணம் ஏற்றக்கூடாது. ஆனால் எல்லா வசதிகளும் எல்லாத் தொகுதிக்கும் வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் தன் தொகுதிக்கு ஒரு கலைக் கல்லூரி வேண்டும். பொறியியல் கல்லூரி வேண்டும். ஒரு மருத்துவக் கல்லூரி வேண்டும். ஒரு பல்கலைக் கழகம் வேண்டும் என்று சொல்லிவிட்டு உட்கார்ந்து விட்டார். இதை சுலபமாகத் தீர்ப்பதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அவர் பேராவூரணியை விட்டு சென்னைக்கு வந்துவிட்டால் என்ன? சென்னயிலே இந்த வசதிகள் எல்லாம் இருக்கின்றன. அவர் கவலைப்பட வேண்டாம் என்பதை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆக செலவினங்களைக் கூட்டிக் கொண்டே போய் வருவாய் வராவிட்டால் எங்கே போய் நாடு சேரும் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

பிளானிங்— திட்டச் செலவுக்கு என்று நமக்கு இருப்பது 9 சதவிகிதம் தான். 91 சதவிகிதம் நான் பிளானிங்-க்கு போய் சேர்ந்து விடுகிறது.

மாண்புமிகு முதலைமச்சர் அவர்கள் சிலநடவடிக்கையை எடுத் தார்கள். அரிசி விலையையும் கொஞ்சம் தூக்கினார்கள். உடனே 'ஆஹா, ஊஹூ' என்றுபலரும் கூச்சலிட்டதால் உடனே நிறுத்திவிட்டோம். அதே மாதிரி மின்சாரக் கட்டணம் ஒரு யூனிட்டு மின்சார உற்பத்திக்காக ரூ. 1.50 ஆகிறது. மத்திய அரசாங்கம் தாக்கீது அனுப்பியிருக்கிறது. ஒரு யூனிட்டுக்கு 51 காசாவது குறைந்தது நிர்ணயிக்க வேண்டும் என்று. இங்கே கட்டணம் ஒன்றுமே இல்லை. இலவச மாக எடுத்துக்கொள். எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துக் கொள். பயிர்களுக்கு எடுத்துக்கொள். இந்த சாக்கிலே தொழிற்சாலைகளுக்கும் எடுத்துக் கொள் மற்றவர்களுக்கும் விற்றுக்கொள் என்று இப்படியெல்லாம் போய்க் கொண் டிருந்தால் எங்கே போய் அந்த நஷ்டம் முடியும். யார் தலையிலே போய் விழுகிறது. பொதுமக்கள் தலையிலேதான் போய் விழுகிறது. ஒரு பள்ளிக் கூடம் கட்டுவதற்கு ஒரு 10 லட்சம் ரூபாய் மிச்சப்படுத்த வேண்டும் என்றால், ஒரு கோடி மிச்சம் ஆகும் என்று வைத்துக் கொண்டால், ஒரு 10 லட்சம் ரூபாய்க்கு கட்டிடம் வீதம் 10 பள்ளிக் கட்டிடம் கட்டினால் கூட 100 வருடத்திற்கு சான்க்கிரீட் கட்டடிமாக நிற்குமே.

நாம் இலவச சோற்றுக்கே கொடுத்துவிட்டு, அவரவர் சாப் பிட்டுவிட்டு, ரேஷன் கடையிலே போய் குறைந்தவிலைக்கு வாங்கி விட்டு, சாப்பிட்டுவிட்டார்கள் என்றால் எப்படி பிளானிங் காண் பிக்க முடியும். வளர்ச்சியைக் காண்பிக்க முடியும்? இதை யெல்லாம் யோசிக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்

கிறேன். இப்போது அதற்கு நேரம் இல்லை. நேரம் இருந்
திருந்தால் இன்னும் அதிகமாக சொல்லியிருக்க முடியும்.
இவற்றிலே எல்லாம் சிந்திப்பது என்றால் கட்டுப்பாட்டோடு
இருக்க வேண்டும். ஏனென்றால் எக்காரணம் கொண்டும்
நிதிநிலை கெடக்கூடாது. ஆகவேதான் மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் மின்சாரக்கட்டணத்தைப் பற்றி ஒரு முடிவெடுத்தார்
கள். அதை நிறைவேற்றுவதற்கு ஆதரவு கிடைக்கவில்லை. அரிசி
விலை ஓரளவுக்கு ஏற்றினார்கள். அப்பொழுதும் நஷ்டம் உண்டு
நமக்கு. மின்சாரக் கட்டணத்தைக் கொஞ்சம் தூக்கினாலும்கூட
அப்பொழுதும் நஷ்டம் உண்டு. அதையும் தாங்கிக்கொள்கின்ற
அளவுக்கு வருகின்றபோது, இந்த மாநிலத்தினுடைய நிதிநிலை
எக்காரணம்கொண்டும் கெடக்கூடாது. ஆகவே, தனி மனிதனை
விட கட்சி பெரிது, கட்சியை விட அரசு பெரிது, அரசை விட
நாடு பெரியது. இந்த ஆட்சி என்றைக்கும் இருக்கும்.

Men may come and men May go but the Government will
go on for ever

என்று Tennyson பாடியமாதிரி.

The Ministerv mav come and the Ministery may go but the
Government will go on for ever the country will go on for the
ever.

என்ற உணர்வு அத்தனை பேருக்கும் இருந்தால்தான் நல்லது.
இந்த முயற்சிகளையெல்லாம் எதற்காக செய்கிறோம்
என்றால், ஒரு நீடித்த, ஒரு நிலையான நிலை தமிழகத்தில்
ஏற்பட வேண்டும் என்பதற்காகத்தான். மாண்புமிகு
உறுப்பினர் பெருமக்கள் அத்தனைபேரும் ஒத்துழைப்பு தந்து
முடிவு எடுத்தால்தான் அதை நடைமுறைப்படுத்த முடியும்
என்று சொல்லி இந்த 161.29 கோடி ரூபாயை இப்பொழுது
ஒதுக்கித் தாருங்கள் என்று நான் கேட்டுவிட்டு, வெட்டுத்
தீர்மானம் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்
களையும் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்
கொண்டு இதனை நிறைவேற்றித் தர வேண்டுமென்று
அத்தனை பேரையும் கேட்டுக்கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது.
இப்பொழுது வாக்கெடுப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்
தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

வெட்டுத் தீர்மானம் எண்கள், 1, 14, 18, 29, 35,
36 மற்றும் 49. திரு. ஆர். சிங்காரம் இந்த வெட்டுத் தீர்மானங்
களை வலியுறுத்துகிறாரா ?

திரு. ஆர். சிங்காரம் : இல்லை.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்
அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதி
யோடு திரும்பப் பெறப்படுகின்றன.

''1992–93 ஆம் ஆண்டிற்கு கூடுதல் செலவிற்கான மானியக்
கோரிக்கைகள் அடங்கிய 21—9—1992 ஆம் தேதியிடப்
பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள துணை மானியக்
கோரிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் எதிரே குறிப்பிட்டுள்ள
தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1992–93 ஆம்
ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற
வேண்டும்" என்றும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின்
தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெற்றது.

## நிறைவேற்றப்பெற்ற 1992–93ஆம் ஆண்டிற்கான கூடுதல் மானியக் கோரிக்கைகள்.

| கோரிக்கை— | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| | **A. வருவாய்க் கணக்கில் செலவு.** | |
| 4 | பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம். | 31,18 |
| 9 | மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். | 37,37 |
| 11 | மாவட்ட நிருவாகம் | 55,01 |
| 12 | தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிருவாகம் | 7,55 |
| 13 | நீதி நிருவாகம் | 1,68 |
| 15 | காவல் துறை | 1,39,52 |
| 17 | கல்வி | 5,00 |

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

| கோரிக்கை. | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| 18 | மருத்துவம் | 30,14 |
| 20 | வேளாண்மை | 5,00 |
| 21 | மீனளம் | 15,26 |
| 23 | கூட்டுறவு | 69,26,54 |
| 24 | தொழில்கள் | 1,96,16 |
| 26 | கைத்தறியும் துணித் தொழிலும் | 45,10,00 |
| 33 | வீட்டு வசதி | 20,00 |
| 36 | பாசனம் | 1,04.00 |
| 38 | பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும் | 8,80 |
| 42 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் | 1,43,44 |
| 43 | பல்வகை | 1,38,00 |
| 48 | ஊரகத் தொழில்கள் | 64,70 |
| 49 | குடிநீர் வழங்கல் | 42,94 |
| 50 | நகராட்சி நிருவாகம் | 7,00,00 |
| | மொத்தம்—A. வருவாய்க் கணக்கில் செலவு | 1,31,82,29 |

B. வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு.

| | | |
|---|---|---|
| 54 | தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 5,26,67 |
| 55 | பாசனம் குறித்த மூலதனச் செலவு | 1,10,00 |
| 56 | பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு | 1,91,20 |



B. வருவாய் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| 57 | சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 55,02 |
| 58 | சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. | 10,33,00 |
| 61 | பல்வகை மூலதனச் செலவு | 3,21,39 |
| | மொத்தம்—B வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு | 22,37,28 |

C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.

| | | |
|---|---|---|
| 62 | மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் | 7,08,94 |
| | பெரு மொத்தம் | 1,61,28,51 |

6. அறிவிப்புகள்— தொடர்ச்சி

(ஆ) நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, 1992 (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

7. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

[1992 செப்டம்பர் 24

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5 சட்டமுனவடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''
எனக் கோருகிறேன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்).

மறுப்போர் '' இல்லை '' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் எள்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 9. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

### (ஆ) விதி 32-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ;: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.

'' சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 25-9-1992 அன்று தளர்த்தி, அந்த நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும் '' என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்).

மறுப்போர் '' இல்லை '' என்க.





மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன். மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன முடிவடைகின்றன. பேரவை மீண்டும் நாளை (25-9-1992) வெள்ளிக் கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-44 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

83. தூத்துக்குடி, திருவாளர்கள் தூத்துக்குடி பலநோக்கு சமூக சேவை சங்கத்தினால் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படும் மீன் ஊறுகாய்களுக்கு விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 13 2-1992 ஆம் நாளிட்ட 62-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

84. கோவை மற்றும் குன்னூர் ஏல நிலையத்தினால் விற்கப் படும் தேயிலைக்கு 1-4-1992 முதல் 31-3-1994 வரை மேலும் இரண்டாண்டு காலத்திற்கு வரிவிகிதம் 6 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக குறைப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 24-4-1992 ஆம் நாளிட்ட 149-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன வைக்கப் பெற்றது].

85. தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு நகர்ப்புற நிலச் (உச்ச வரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின் பிரிவு 20(1) (iii)-இல் சொல்லப்பட்டுள்ள நோக்கங்களுக்காக இந்திய சுற்றுலா நிதிக் கழகத்தை வங்கியாக அறிவிப்பது குறித்து வருவாய்த் துறையின 29-3-1991-ஆம் நாளிட்ட 446-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ் நாடு 1978-ஆம் ஆண்டு நகர்ப்புற நிலச் (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின (தமிழ் நாடு சட்டம் 24/1978) 47(3) பிரிவின கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

86. தமிழ்நாடு சீட்டு கழகத்தின் 1985-86-ஆம் ஆண்டிற்கான இரண்டாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

87. தமிழ்நாடு சீட்டு கழகத்தின் 1986-87-ஆம் ஆண்டிற்கான மூன்றாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு (நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

88. தமிழ் நாடு சீட்டு கழகத்தின் 1987-88-ஆம் ஆண்டிற்கான நானகாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

89. தமிழ்நாடு சீட்டு கழகத்தின் 1988-89-ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1-/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

90. தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்தின் 1990-91-ஆம் ஆண்டிற்கான பதினேழாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1-/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கில்ம்).

91. தமிழ் நாடு கைத்திற தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் 1989 90 ஆம் ஆண்டிற்கான பதினேழாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1?1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

29. பொது நிறுவனங்கள் குழுவின் என்பத்தொன்றாவது அறிக்கை, 1992 93.

30. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்திரெண்டாவது அறிக்கை, 1992 93.

31. அரசு உறுதிமொழிக் குழுவின் ஆறாவது அறிக்கை, 1992-93.

164949
சென்னை-600 009.
V211.31/92
N92:301

LIST OF AGENTS FOR THE SALE OF
TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 55, Nanthi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14
21 Kumaran Book Depot, Booksellers, Erode-
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore 1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

©